

திருப்பூவணப் புராணம்

மதுரைக்கு அருகில் உள்ள திருப்பூவணம் (திருப்புவனம்)
தலபுராணம் (மூலமும் உரையும்)
திருவிளையாடற் புராணம் (மூலமும் உரையும்)

திருப்பூவணப் புராணம்

முனைவர். கி. காளைராசன்

மின்னூல் வெளியீடு :

http://**FreeTamilEbooks**.**com**

உள்ளடக்கம்

- திரணாசனன் முத்திபெற்ற சருக்கம்
- மணிகன்னிகைச் சருக்கம்
- துன்மனன் சருக்கம்
- தருமஞ்ஞன் முத்தி பெற்ற சருக்கம்
- உற்பலாங்கி பதியை யடைந்த சருக்கம்
- பாற்கரபுரச் சருக்கம்
- சர்வபாவமோசனச்சருக்கம்
- பிரமசாபமோசனச் சருக்கம்
- இலக்குமிசாபமோசனச் சருக்கம்
- உமாதேவி திருவவதாரச்சருக்கம்
- திருக்கலியாணச்சருக்கம்
- தக்கன் வேள்வியழித்தசருக்கம்
- உமைவருசருக்கம்
- சுச்சோதிதீர்த்தயாத்திரைச்சருக்கம்
- சுச்சோதிபிதிர்களை முத்தியடைவித்த சருக்கம்

- தீர்த்தச்சருக்கம்
- நளன்கலிமோசனச்சருக்கம்
- திருவிழாச்சருக்கம்
- சிதம்பரவுபதேசச்சருக்கம்
- 6 திருமுறைகளில் திருப்பூவணப் பாடல்கள்
- திருவாசகத்தில் திருப்பூவணம்
- திருப்பூவணம் முருகன் மீது அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ்
- பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற் புராணம்
- தனித் தேவாரப் பாடல்கள்
- நன்றியுரை
- இந்நூலாசிரியரின் பிற கட்டுரைகள்

திருப்பூவணப் புராணம்


திருப்பூவணப் புராணம்
மதுரைக்கு அருகில் உள்ள திருப்பூவணம் (திருப்புவனம்)
தலபுராணம் (மூலமும் உரையும்)
திருவிளையாடற் புராணம் (மூலமும் உரையும்)

மின்னூல் வெளியீடு :

http://FreeTamilEbooks.com

திருப்பூவணப் புராணம்

திருப்பூவணப் புராணம்

மதுரைக்கு அருகில் உள்ள திருப்பூவணம் (திருப்புவனம்)

தலபுராணம் (தமிழ் மூலமும் உரைச் சுருக்கமும்)

திருவிளையாடற் புராணம் (மூலமும் உரைச் சுருக்கமும்)

மற்றும் திருமுறை தேவாரப் பாடல்கள்



பதிப்பு ஆசிரியர் –

முனைவர். கி. காளைராசன், B.Sc., PGDCA., M.A.,. M.Phil., Ph.D.

Bibliography

Title of the Book	:	**Thiruppuv**
Author	:	Dr. K. Kalair M.Phil., Ph.D Assistant Re KARAIKUDI Mobile Phor e-mail : kala
Publisher	:	K. Nithya

10, Gurunatl
(Opp. to Sin
KOTTAIYUR
Sivaganga D

Language	:	Tamil
Font	:	Ananku Clas
Edition/No. of copies	:	First Edition
Book Publication Year	:	Oct. 2008

e-book publication year	:	Mar.2011
Size of Book	:	1/8 demmy (
		A4 size (e-bo
Number of Pages	:	book = xvi +
		e-book = 274
Subject	:	Theology
		Thiruppuva
		translated
		Puranam. Al
		Pandiyas' Ki

Printer : Printech, 7, I
Kuyavarpala

MADURAI –

Phone – 045

Cell – 94435

e- book font encoding : Dr. K. Kalaira

நிதியுதவி

திருப்பதி திருமலை தேவஸ்தான நிதியுதவி பெற்று

இப்புத்தகம் வெளியிடப்படுகிறது.

Printed with Financial Assistance given by the

TIRUPATHI THIRUMALA DEVASTHANAM



வணங்குகிறோம்



கோடி கொடுத்த கொடைஞன் குடியிருந்த

வீடும் கொடுத்த விழுத்தெய்வம் – தேடியும்

அள்ளிக் கொடுத்த அழகன் அறிவூட்டும்

வெள்ளி விளக்கே விளக்கு

(06 – 04 – 2008 அன்று 100வது பிறந்த நாள் விழா)

கல்விக் கொடைவள்ளல் டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறோம்.

– கி. காளைராசன்

– சோ. நாகலெட்சுமி

–கா.நித்யா

உள்ளே

Synopsis

5 திருப்பூவணப் புராணம் – பாடல்கள் –

திருப்பூவணப் புராணச் சருக்கங்கள்

கடவுள் வாழ்த்து–

அவையடக்கம்–

நைமிசாரணியச் சருக்கம்–

சவுநகர் சூதரை வினவிய சருக்கம்–

திருக்கைலாயச் சருக்கம்–

ஆற்றுச் சருக்கம்–

திருநாட்டுச் சருக்கம்–

திருநகரச் சருக்கம்–

பாயிரம்–

1 சூரியன் பூசனைச் சருக்கம்–

2 திரணாசனன் முத்தி பெற்ற சருக்கம்–

3 மணிகன்னிகைச் சருக்கம்–

4 துன்மனன் சருக்கம்–

5 தருமஞ்ஞுன் முத்தி பெற்ற சருக்கம்–

6 உற்பலாங்கி பதியை அடைந்த சருக்கம்–

7 பாற்கரபுரச் சருக்கம்–

8 சர்வ பாவ விமோசனச் சருக்கம்–

9 பிரம சாப விமோசனச் சருக்கம்–

10 இலக்கமி சாப விமோசனச் சருக்கம்–

11 உமாதேவி திருஅவதாரச் சருக்கம்–

12 திருக்கலியாணச் சருக்கம்–

13 தக்கன் வேள்ளியழித்த சருக்கம்–

14 உமைவரு சருக்கம்–

15 சுச்சோதி தீர்த்த யாத்திரைச் சருக்கம்–

16 சுச்சோதி பிதிர்களை முத்தியடைவித்த சருக்கம்–

17 தீர்த்தச் சருக்கம்–

18 நளன் கலிமோசனச் சருக்கம்–

19 திருவிழாச் சருக்கம்–

20 சிதம்பர உபதேசச் சருக்கம்–

6 திருமுறைகளில் திருப்பூவணப் பாடல்கள் –

1 திருஞானசம்பந்தர் பாடல்கள் ஒன்றாம் திருமுறை

2 திருஞானசம்பந்தர் பாடல்கள் மூன்றாம் திருமுறை

3 திருநாவுக்கரசர் பாடல்கள்–

4 சுந்தரர் பாடல்கள்–

5 மாணிக்கவாசகர் பாடல்கள்–

6 கருவூர்த் தேவர் பாடல்கள்–

7 அருணகிரிநாதர் பாடல்கள்–

7 திருவிளையாடற் புராணம் – பாடல்கள்–

8 திருப்பூவணத்தைப் பற்றிய பிற பாடல்கள்–

9 வழிபாட்டுப் பலன்கள்

10 நன்றியுரை–

11 இந்நூலாசிரியர் எழுதி வெளிவந்துள்ள நூல் மற்றும் கட்டுரைகளின் பட்டியல்–

வாழ்த்துரை

ALAGAPPA UNIVERSITY

(Accredited with 'A' Grade by NAAC)

ALAGAPPA NAGAR, KARAIKUDI - 630 003, TAMIL NADU, INDIA

Prof. P. RAMASAMY, M.Sc., Ph.D.,
VICE - CHANCELLOR

Off : (04565) 225205, 225206, 225207
Per : (04565) 225200
Res : (04565) 225201
Fax : (04565) 225202
E-mail : vc_alagappa @ rediffmail.com

வாழ்த்துரை



அழகப்பா பல்கலைக்கழகம் 1985ம் ஆண்டு மே மாதம் ஒன்பதாம் நாள், தமிழ், கணிதம், இயற்பியல், வணிகம் ஆகிய நான்கு முதுகலைத் துறைகளையும் கல்வியியல் கல்லூரி மற்றும் உடற்பயிற்சிக் கல்லூரி

ஆகியவற்றையும் ஒன்றிணைத்துத் தோற்றுவிக்கப் பெற்றது, 1986ம் ஆண்டு தமிழ்த்துறைக்கான புதிய பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டபோது அதில் கோயிற்கலையும் ஓர் பாடமாகச் சேர்க்கப்பட்டது, இதனால் அழகப்பா பல்கலைக்கழகத் தமிழ்த்துறை மாணவர்கள், தமிழகத் திருக்கோயில்கள் பலவற்றையும் ஆய்வு செய்து பட்டங்கள் பெற்றுள்ளனர். அவ்வகையில். திருகி. காளைராசன் அவர்கள், திருப்பூவணத் திருக்கோயிலை ஆய்வு செய்து. ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றுள்ளார். அதன் தொடர்ச்சியாகத் திருப்பூவணப் புராணம்–ஓர் ஆய்வு என்ற தலைப்பில் தற்போது முனைவர் பட்டத்திற்காக ஆய்வு செய்துள்ளார்.

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் முயற்சியால், தமிழ்மொழி. தனிச்செம்மொழியாக அறிவிக்கப் பெற்றுள்ளது, இத்தகைய தருணத்தில். கி.பி.1620ம் ஆண்டு, 1437 பாடல்களால் எழுதப்பெற்ற திருப்பூவணப் புராணத்தை ஆய்வு செய்துள்ளது மிகவும் சிறப்பிற்கு உரியது. முனைவர் பட்ட ஆய்வுடன் இவர் தனது பணியை நிறுத்திக் கொள்ளாமல் ஆய்விற்கான மூலநூற் பிரதி அழிந்துவரும் நிலையில், மக்கள் அனைவரும்

பயனுறும் வகையில் திருப்பூவணப் புராணத்தை நூலாகப் பதிப்பித்து வெளியிடுவது மிகவும் பாராட்டிற்கு உரியது.

அழகப்பா பல்கலைக்கழகத்தின் ஆய்வினால் திருப்பூவணப் பகுதி மக்களும் மற்றும் ஆன்மிக அன்பர்களும் நிறைந்த பயனடைவர் என்பது திண்ணம். இவரது நூல் வெளியீடுகள் பல்கலைக்கழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளன. ஆய்வாளர் திரு.கி.காளைராசன் அவர்கள் அலுவலகப் பணியினிடையே ஆன்மிகப் பணியையும் ஆற்றிவருவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இவர் தனது நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுத வேண்டும் என்று எனது விருப்பத்தினைத்தெரிவித்து, திரு.கி.காளைராசன் அவர்கள் மென்மேலும் பல ஆன்மிக நூல்களை எழுத எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

17.9.2008

துணைவேந்தர்

அணிந்துரை

உ

சிவமயம்

யோகிராம் சுரத்குமார் யோகிராம் சுரத்குமார்

யோகிராம் சுரத்குமார் ஜெயகுருராய

பேராசிரியர் ராம.திண்ணப்பன்,

ஆங்கிலத்துறை முன்னாள் பேராசிரியர்,

சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி,

தேவகோட்டை.

அணிந்துரை



நகரத்தார்கள் கோயில் திருப்பணிக்குத் தங்களை அர்பணித்துக் கொண்டவர்கள், அதிலும் தேவகோட்டை நகரத்தார்கள் தமிழ்நாட்டில் மட்டு மல்லாமல் மற்ற மாநிலங்களிலும் கோயில் திருப்பணி செய்தவர்கள். திருப்பூவணத்தில் நேமங் கோவிலைச் சேர்ந்த தேவகோட்டை உ.மு. வகையறாவினர் தலைமுறை தலைமுறையாகத் திருப்பணிகள் செய்து வருகின்றனர்.

திருப்பூவணம் குரு உபதேசத் தலமாகும். மாத்தியாந்தினி மற்றும் தியான காட்டர் ஆகிய இரு முனிவர்களும் 100 தேவவருடம் தவம் செய்து, சிவபெருமானின் தீட்சை பெற்ற திருத்தலமாகும். சுமார் 37 லட்சம் வருடத்திற்கு முன்பு, அம்பாள் தவம் செய்து அதன் பயனாகப் பாரிஜாதப் பூவால் சிவலிங்கம் தோன்றியது. அதனால் “பூவணநாதர்” என்ற பெயர் பெற்றது.

அம்பாள் ஆடிமாதம் மட்டும் வைகை ஆற்றுக்கு வடகரையில் தவம் செய்துள்ளாள். அந்த இடம்தான்

“ஆடித்தபசு மண்டபம்“. அம்பாள் தவம் செய்த இடம் என்பதால் திருஞானசம்பந்தர் அந்த இடத்திற்குச் சென்று இறைவனை வணங்கி வழிபட்டுள்ளார். அப்போது ஆற்று மணல்களெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்துள்ளன. எனவே அவர் ஆற்றைக் கடந்து திருக்கோயிலுக்குச் செல்லாமல் அங்கிருந்தபடியே ஆற்றின் தென்கரையில் உள்ள சிவலிங்கத்தை வணங்கிப் பாடியுள்ளார். நந்தி விலகிக் காட்சி அளித்துள்ளது.

திருப்பூவணநாதரின் திருவருளைப் பெற்று மதுரை சென்று. சமணர்களை வென்று வைசத்தைத் தழைக்கச் செய்து, அதன்பின்னர் மீண்டும் திருப்பூவணத்திற்கு வந்து திருக்கோயில் சென்று மீண்டும் ஒரு பதிகம் பாடி இறைவனை வணங்கியுள்ளார்.

திருப்பூவணத்தில், பொன்னனையாள் நடத்திய அன்னதானத்தில் மதுரை சொக்கர், சித்தர் வடிவத்தில் தோன்றி இரசவாதம் செய்து, திருப்பூவண உற்சவர் அழகிய நாயகரைப் பொன்னால் செய்வதற்கு வேண்டிய பொன்னை உறுக்கிக் கொடுத்துள்ளார். மதுரையில் இருந்து சொக்கர் வந்து திருப்பணி செய்த திருத்தலமாகும்.

இக்காரணங்களால் மதுரை சொக்கரை வணங்குவதற்கு முன் திருப்பூவணநாதரை வணங்கினால் மிகுந்த பலன் உண்டு.





ஆடித்தபசுமண்டபம் சிதிலமடைந்த நிலையில்

ஆம

நை

ஆடித்தபசு மண்டபம் சிதலமடைந்த நிலையில் இருந்தபோது, திருஞானசம்பந்தப் பெருமான் பாடிய இடம் புதுப்பொலிவுடன் விளங்கவேண்டும் என எந்நேரமும் நினைந்து தன்னை முழுமையாகத் திருப்பூவணநாதருடன் இணைத்து கொண்டவரும், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழத் துணைப்பதிவாளர் திரு,காளைராசன் மற்றும் தேவகோட்டை, ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரி இயற்பியல் பேராசிரியர் டாக்டர் சந்திரமோகன் மற்றும் அடியேன் தலைமையில் இணைந்து ரூபாய்,2,50,000-00 (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம்) செலவில் மற்றபிற அன்பர்கள் உதவியுடனும் திருப்பணியை நிறைவு பெறச் செய்துள்ளோம். 2009ம் ஆண்டு தைமாதம் குடமுழுக்குவிழா செய்ய ஏற்பாடு நடந்து வருகிறது. திருப்பூவணம் “பிதுர் மோட்சத் தலமாகும்“. தருமஞ்ஞன் என்பவருடைய தந்தையாரின் அஸ்திக் கலசத்தில் இருந்த “எலும்பு – பூவாக் மாறிய திருத்தலமாகும்“, “காசிக்கு வீசம்கூட” என்பது மக்கள் வழக்கு.

திருமலை நாயக்கர் காலத்திற்குப் பின்னாள், தொடர்ந்து 300 ஆண்டுகளுக்கும் மேலாக அன்னதாம் நடைபெறாமல் நின்றுவிட்டது. மானாமதுரை அருள்மிகு ஸ்ரீ

பிரித்தியங்கிரா தேவி திருக்கோயில் ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமிகளின் தலைமையில், திருப்புவனம் வழக்குறைஞர் சண்முகநாதன், காளைராசன் மற்றும் சுவாமிகளின் அன்பர்கள் பலரும் இணைந்து சித்திரை மாதம் வளர்பிறை பிரதோச நாளில் (17-4-2008) திருக்கோயிலில் மீண்டும் சிறப்பாக அன்னதானத்தை நடத்தியுள்ளனர். அன்று நடைபெற்ற அன்னதானத்தில் சிவபெருமானே வயோதிகனாக பழுத்த பழமாக சன்னியாசி வேடத்தில் தோன்றி அன்னம் பெற்றார் என்பது உண்மையாகும்.





ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரித்யங்கிரா தேவி கோயில்,
வேததர்மஷேத்ர டிரஸ்ட் ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர சுவாமி
அவர்கள்

இனிமேல் வருடம்தோறும் தொடர்ந்து அன்னதானம் நடைபெற சுவாமிகளின் ஆசியுடன், அடியேன்

தலைமையில் ஒரு கமிட்டி நிறுவப்பட்டுள்ளது. அடியேன் திருப்பூவணத்தில் உணர்ந்ததையும், திரு.காளைராஜாவின் திருப்பூவணப்புராணம் படித்ததையும், கேள்விப்பட்ட எதையும் எழுதத் தவிர்க்க முடியாததால் அணிந்துரை நீண்டதாக அமைந்துள்ளது.

தேவகோட்டை இப்படிக்கு

14-9-2008 பேராசிரியர் ராம,திண்ணப்பன்

ஆய்வுரை

உ

சிவமயம்

முனைவர் நா, வள்ளி, M.A., B.Ed., Ph.D., P.G.Dip.in

Epigraphy & Archacology

முதல்வர்.

இராமசாமி தமிழ்க் கல்லூரி,

காரைக்குடி – 3

ஆய்வுரை

"*வடிவேறு திரி**N**லம் தோன்றும் தோன்றும்*



*வளர்சடை மேல் இளமதியம்
தோன்றும் தோன்றும்“*

எனத் தாண்டக வேந்தராகிய அப்பர் பெருமானடிகள் சிவனைக் கண்ணாரக் கண்டு களித்து வழிபட்ட தலம் திருப்பூவணம். தேவாரப் பாடல் பெற்ற பாண்டிநாட்டுப் பதினான்கு தலங்களுள் இத்தலத்திற்கெனத் தனிச்சிறப்புகள் உண்டு. மதுரை உட்பட மற்றைய தலங்களுக்கு மூவர் முதலிகளில் ஓரிருவர் பாடல்களே கிடைத்திருக்க, இத்தலத்திற்குத்தான் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் பதிகங்களும் கிடைத்துள்ளன. அதுமட்டுமல்ல மணிவாசகப் பெருமானும், கருவூர் தேவரும், அருணகிரிநாதரும் பாடிப்பரவி இருக்கிறார்கள். பொன்னனையாள் என்ற தேவரடியாருக்காக, மதுரைச் சொக்கநாதர் இரசவாதம் செய்தருளியது இத்தலத்தில்தான்.

இத்தலத்து இறைவன் மீது கந்தசாமிப் புலவர் என்பார்

திருப்பூவணப் புராணம், திருப்பூவணநாதர் உலா, புட்பவனநாதர் வண்ணம், திருப்பூவணத் தலவகுப்பு, மூர்த்தி வகுப்பு ஆகிய பல நூல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் திருப்பூவணப் புராணம், திருப்பூவணநாதர் உலா தவிர மற்றைய நூல்கள் கிடைத்தற்கு அருமையாக உள்ளன. இந்த இரண்டு நூல்களையாவது பாதுகாக்க வேண்டும், அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கோடு, அழகப்பா பல்கலைக் கழகத்தில் உதவிப்பதிவாளராகப் பணியாற்றும் திரு.கி. காளைராசன் அவர்கள் திருப்பூவணப் புராணத்தையும், இத்தலத்தோடு தொடர்புடைய திருவிளையாடற் புராணத்தையும் உரைச் சுருக்கத்தோடும் மற்றும் இத்தலத்தோடு தொடர்படைய பிற இலக்கியப் பகுதிகளையும், புராண வரலாற்றுச் செய்திகளையும் செம்மையாகத் தொகுத்து நூலாக்கம் செய்துள்ளார்.

இங்கு, காளைராசனுக்கும் திருப்பூவணத்திற்குமுள்ள தொடர்பைச் சொல்லியே ஆகவேண்டும். ஆன்மீகத்தில் மிகுந்த நாட்டமுடைய அவர் மெய்ஞானத்தை விஞ்ஞானத்தோடு இணைத்துப் பார்ப்பதில் ஆர்வமுடையவர். அவரது இளமைப் பருவம் திருப்பூவணத்தில்தான் கழிந்தது. திருப்பூவணநாதர்

இளமையிலேயே அவரை ஆட்கொண்டு விட்டார்.

“பிறந்து மொழிபயின்ற பின்எல்லாம் காதல்

சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்“

என்று காரைக்காலம்மையார் சொல்வது போல, காளைராசன் அவர்களுக்கு பேச்சு, மூச்சு எல்லாமே திருப்பூவணம்தான். தான் வளர்ந்த மண்ணுக்கு, தன்னை வளர்த்த மண்ணுக்கு ஏதேனும் செய்தே ஆகவேண்டும் என்ற அவரது ஆவலின் விளைவே இந்நூல்.

ஆன்மீக நூல்கள் பல வெளிவருவதற்கு உறுதுணையாக இருக்கின்ற திருமலை திருப்பதி தேவஸ்தானம், இந்நூல் வெளிவரவும் பொருளுதவி செய்துள்ளமை மிக்க மகிழ்ச்சிக்குரியது.

“மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினார்க்கு ஓர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே” என்ற தாயுமானவரின் வாக்குப்படி மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றிய செய்திகளை முறையாகத் தொகுத்து எழுதியுள்ள திரு,கி,காளைராஜன் அவர்களது முயற்சி சிறக்க வாழ்த்துக்கள்,

காரைக்குடி

18-09-2008

அன்புடன்

18/9/08

என் உரை

உ

திருச்சிற்றம்பலம்

என் உரை



அழகப்பா பல்கலைக்கழகம் 1985ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட போது, பல்கலைக் கழகத்தில் முதன் முதலாகப் பணிநியமனம் செய்யப்பட்டவர்களில் நானும் ஒருவன், பல்கலைக்கழகத்தில் 1999ம் ஆண்டு தேர்வுப் பிரிவில் பணியாற்றி வந்தபோது “திசை தெய்வங்களைத் தொழும் திருவள்ளுவர்“, “குறலிலும் சோதிடம்” என்ற தலைப்புகளில் கட்டுரைகளை எழுதினேன்.

அக்கட்டுரைகளை அப்போது காரைக்குடி ராமசாமி தமிழ்க்கல்லூரி முதவராகப் பணியாற்றி வந்த முருகசாமி ஐயா அவர்களிடம் காண்பித்தேன். அவர்கள் என்னைப் பெரிதும் உற்சாகப் படுத்தி அவற்றை இதழ்களில் வெளியிடுமாறு அறிவுறுத்தினார்கள். இதனால் “வள்ளுவரும் வாஸ்துவும்” என்ற எனது கட்டுரை 2000ம் ஆண்டு ஜனவரி முதல் வாரத்தில், முதன் முதலாகத் தினபூமி – ஞாயிறு வார இதழில் வெளியாகியது. கல்வியாளர்கள் மத்தியில் அக்கட்டுரைக்கு நல்ல வரவேற்பு இருந்தது. திருக்குறளின் அதிகார அமைப்பு முறைக்கு யாரும் மறுக்கமுடியாத அளவிற்கு விளக்கம் அளித்ததற்காக அனைவரும் என்னைப் பாராட்டினார்கள். அவ்வாறு பாராட்டியவர்களுள் முனைவர் இரா. பாலசுப்பிரமணியன் ஆவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவர் என்னிடம் ஒருமுறை “நீங்கள் கட்டுரைகள் எழுதினால் மட்டும் சிறப்புடையது ஆகாது, கல்வித் தகுதியையும் வளர்த்துக் கொள்ளுங்கள்” என்று அறிவுரை வழங்கினார். அவரது அறிவுரையை ஏற்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்முதுகலை (M.A. தமிழ்) பயின்றேன்.

பின்னர் அழகப்பா பல்கலைக்கழகத்தில் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.)பயின்றேன். அப்பாடத்திட்டத்தின்

ஒருபகுதியாகத் திருப்பூவணம் திருக்கோயில் பற்றிய ஆய்வினை மேற்கொண்டேன். ஆய்வு தொடர்பாகத் திருமுறைகளையும் மற்றும் பல ஆன்மிக நூல்கனையும் கற்றேன். திருப்பூவணம் தொடர்பான அனைத்து நூல்களையும் சேகரித்துப் படித்தும், திருக்கோயில் அமைப்பை பலவராக ஆராய்ந்தும் எனது ஆய்வினை நிறைவு செய்தேன்.

எனது ஆய்வியல் நிறைஞர் ஆய்வு தொடர்பாகத் திருப்பூவணப் புராணப் புத்தகத்தைத் தேடி அலைந்தேன். எங்குதேடியும் யாரிடம் கேட்டும் கிடைக்கவில்லை. இறுதியாகக் காரைக்குடி ராமசாமி தமிழ்க்கல்லூரியின் அப்போதைய முதல்வர் உயர்திரு. முருகசாமி ஐயா அவர்கள் திருப்பூவணப் புராணப் புத்தகம் ஒன்றைக் கொடுத்து உதவினார்கள். உடனே திருப்பூவணம் சென்று திருப்பூவணநாதரின் திருக்கண் பார்வைக்குப் புத்தகத்தைக் காண்பித்து ஆசி பெற்றேன். புத்தகம் அச்சிடப் பெற்று 100 வருடங்களுக்கும் மேலானதால், தொட்டால் காகிதம் ஒடிந்து விடும் நிலையில் இருந்தது. மிகவும் சிரமம் மேற்கொண்டு புத்தகத்திற்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படாமல் நகல் எடுத்துக் கொண்டு மூலப்புத்தகத்தை ஐயா அவர்களிடம் நன்றியுடன் திரும்பக் கொடுத்தேன்.

ஐயா அவர்கள் செய்த உதவிக்குத் திருப்பூவண மக்கள் அனைவரும் மற்றும் ஆன்மிக அன்பர்கள் அனைவரும் நன்றி உடையோர்களே. புத்தக நகலைக் கொண்டு மீண்டும் புத்தகத்தைப் பதிப்பித்து வெளியிட வேண்டும் என்ற நோக்கில் நேரம் கிடைக்கும் போதெல்லாம் கணினியின் உதவி கொண்டு தட்டச்சு செய்து வந்தேன். தற்போது புத்தகம் முழுமையடைந்துள்ளது. புத்தகத்தைப் பதிப்பித்து வெளியிடத் திருப்பதி திருமலை தேவஸ்தானத்தின் நிதியுதவியும் கிடைத்துள்ளது.

எனது தந்தையார் மானாமதுரைத் தாலுகா மாரநாடு கிராமத்தைச் சேர்ந்த நா.ரா.கிருஷ்ணன் அம்பலம் அவர்கள் காவல்துறையில் காவலராகத் (Police Constable) திருப்பூவணத்தில் 1969-74ம் ஆண்டுகளில் பணியாற்றினார். அப்போது நான் திருப்பூவணம் பள்ளியில் பயிலும் காலத்தில் திருக்கோயிலுக்குச் சென்று வழிபடும் பேறு கிடைக்கப் பெற்றுள்ளேன். கடைநிலையிலிருந்த என்னை, கோயில் தொடர்பான நூல்கள் எழுதும் நிலைக்கு உயர்த்திய திருப்பூவணநாதரின் திருவருளை எங்ஙனம் நான் எடுத்துரைப்பது! திருப்பூவணநாதரின் திருவருளால் சுமார் 16 கட்டுரைகளுக்கும் மேலாக எழுதி வெளியிடும் பெருமை

கிடைக்கப் பெற்றுள்ளேன்.

முனிவர்கள் ஓதிய புராணத்தைத் தமிழில் 388 ஆண்டுகளுக்கு முன்னர் கந்தசாமிப் புலவர் பாடிய இப்புராணப் பாடல்களின் ஒவ்வொரு எழுத்தையும் தட்டச்சு செய்து பிழைத்திருத்தம் பார்த்து அச்சிட்டு வெளியிடும் பெரும்பேறு கிடைக்கப் பெற்றுள்ளேன். இந்நூலில் பிழைகள் ஏதுமிருந்தால் அவற்றைப் “பிழை பொருத்தருளும் பூவணநாதர்” போல், பொறுத்தருளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அறியப்படும் குறைகளை எனக்குத்தெரிவித்துத் திருத்திக் கொள்ள உதவிடுமாறு அன்புடன் வேண்டுகிறேன். இந்நூலை அகம் மகிழ்ந்து வாசிப்போர் அனைவரும், திருப்பூவணநாதரின் திருவருளால், அவர்களது உயர்ந்த உள்ளம் போல உயர்வான வாழ்வு பெற்று வளமுடன் வாழ்ந்திட திருப்பூவணநாதரின் திருவடி அருளை நினைந்து வாழ்த்துகிறேன்.

திருச்சிற்றம்பலம்

அன்புடன்

காப்பு



திகழ்வரைமின்னனைவதனச்
செங்கமலந்தளையவிழ்க்குந்திவாகரஞ்செய்

மகிழொருவெண்மதி மருப்பின் வயிரகிம்புரி
வயங்குமத்தயானை

நிகழுமடியார்க்கன்புநீடுமறம்பொருளின்பம் வீடுநல்கும்

புகழ்தருநற்கற்பகத்தின் பொற்பதத்தையெஞ்ஞான்றும் போற்றல் செய்வாம்

நூற்பயன்

ஒப்பிலாத வுருத்திர சங்கிதை யுற்ற பூவண நற்கதை யோதுவோர்

செப்புமாறு செவிக்கொடு மன்னிய சிட்டராய சிறப்புறு தன்மையோர்

விப்பிராதி பவித்தக மெய்ம் மொழிமிக்க வேத விதத்துயர் மாதவீர்

தப்பிலாத தவத் திரு மன்னவர் தயாபரன் கயிலைக்கிரி வாழ்வரே

பூவணநாதர் வாழ்த்து

பூமாது மகிழ்துளபப்புயல்வண்ண நெடுமாலும்புகழ்வெண்கஞ்ச

நாமாதுநடனமிடு நான்மறைதேர்நான்முகனுநயப்ப நன்னீர்த்

தேமாது செழும்பவளச் சடையிருப்பத்திங்களிருடுரப்பச்சைல

மாமாது வடிவிலங்கமன்னிய பூவணத்தான்றாள் சென்னிசேர்ப்பாம்.

Synopsis

Introduction

Man differs from the animals because of his intellect. A disrobed man is a half a human being. Man is distinguished from animals only through his dress, cooked food, education, science and spirituality. Even as the living creatures are elevated from the fifth sense to the sixth sense an Institution is necessary like wise to elevate man from the sixth sense to a higher stage. Hence the temple act as a social institution to elevate man to God head. That is why people follow a religion and worship God.

Through out the world followers of many religions either worships the apostles of God or Religious heads. But Hindu's worship only the idols of God and lead a Godly life.

Hinduism is not a religion. It is a symbol of the growth of Human civilization. A new dimension of a sixth sense of worship of God is not due to fear, but a realization of the growth of matured intellect. The images of Gods have not been carved into indiscriminately. They have been conceptualized by our Forefathers only after a deep sense of reasoning.

Revamp of Hinduism in Tamil Nadu

Before the 7th century AD in Tamil Nadu, Jainism and Buddhism were the dominated religions. During that period the four great *Saivaite Quartet* restores the pristine glory of *Saivism*. They traveled far and wide in the *Pandya* kingdom extolling and singing the glory of God. There are 14 Shrines where there songs are available. These 14 Shrines in the *Pandiya* Kingdom are known as ***Pandi-14.***

Amongst the 14 Shrines, Madurai, the Capital of the *Pandiya* Kingdom is the most ancient. But the city was ravaged due to the war of Lord **Indra**, the curse

of **Kannagi**, which consumed Madurai, and the spate in the river *Vaigai* was brought back to life again and again but the only Shrine which maintains its ancient glory is Thiruppuvanam. It is said that Goddess *Parvati*, to expiate from her sin, sat under the *Parijatha Tree* for Penance.

Thiruppuvanam is situated nearby the Holy Madurai City. It is in the Madurai-Rameswaram National Highway and 18 k.m. away from Madurai. As like Madurai, this city is also situated in the southern bank of river *Vaigai*.

Thiruppuvanam in Puranas

Indian *Puranas* are classified into 18. Among them, one *purana* is named as ***Prema Kaivartha Puranam***. In it, in twenty episodes, the glories of the Thiruppuvanam are narrated. And it was translated in the Tamil Language and named as "**Thiruppuvanap Puranam"** by *Kandasamy Pulavar*.**It consists of 1437 poems in 20 chapeters.**

In the earlier years, these poems were written in Palmb leafs. Later this was printed in papers during March 1896 (more than 100 years ago) in the Hindu Theological Printing Press at Chennai. The book contained 246 pages in demy size.

More over the glories of Thiruppuvanam are narrated in 3 episodes in **Thiruvillaiyadar Puranam** of ***Paranjothi Munivar***.

History of the Siva Linga

The Goddess Parvati had intended to visit the *Yaga* done by his father for which no invitation was given to her Husband Parameshwara. SHE was banned to attend the *Yaga.* But SHE argued and quarreled with Her Husband and moved to *yaga.* This type of known mistakes (argument and quarreling with husband) became as sin on Her. SHE worshiped the Lord Siva to remove the sin at Thriuappuvanam. There a Siva Lingam emerged beneath of *Parijatha* tree and dispelled the Sin of Parvati and for others

who worhsips Him to dispel from the sins.

Glories of the Lingam

1. It is said by Paranjothi Muniver in Thiruvillaiyadal Puranam that the Siva Lingam in Thriuppuvanam is in the **compressed form of the total Universe**.

2. The **Sun** worshiped this idol to acquire powers to be a Master among all planets.

3. This is the Holy Spot where **Lord Brahma** was rid off his willful sin.

4. **Mahavishnu** acquired the Weapon (*Chakra Ayutham)* to kill **Jalanthran**

5. Goddess **Kali** worshiped the *Sivalinga* in this shrine

6. **Thiranasanan** attained Salvation and the Sinner **Thunmanjyan** likewise was absolved

of his sin in this place.

7. The sacred ash brought in a Urn by the Brahmin **Tharmagnanan** transformed into flowers

8. **Uthpalangi**, a girl was blessed with a good husband and lived as a “*Sumangali*”

9. It is the holy place, where willful commission of all our sins are absolved

10. The sins of **Sengamalan** was absolved in this holy place.

11. The curse of Goddess **Laxmi** was dispelled in this holy place.

12. This is Holy place where **Parvati** did penance to attain the blessings of God.

13. This is the holy place where the ancestors of king **Suchothi** came in person to receive the

rice balls (*Pindam*)

14. A shrine of Holy waters (one river and five ponds)

15. A shrine where a frog named Jalanthiran was transformed into Monarch.

16. The holy shire where adversities of the *Kaliyuga* were transformed to **King Nala** who attains mental peace

17. The Holy place where the Sages **Manthyanthina** and **Thyanakatta** received the holy benediction from Lord Shiva.

18. Kewara *(Thalamboo)* flower (which was in the head of the Lord Siva) worshiped Lord Siva to absolved of the sin for having uttered a lie.

19. The *Chera, Chola* and *Pandya* (The Three Kings of Tamil Nadu) came together and offer

worship in this place.

20. **ThiruGnana Sambandar, Appar**, and **Sundarar** have visited this place, worshiped the lord and offered songs on the glory of HIM.

21. The Holy Shrine where **Manickavasagar** has offered songs on Thiruppuvana Nathar.

22. The Holy Place where **Karur Thever** Sang the *Thiruvisaipa*

23. The Holy Place where a song of **Arunagiri Nathar**'s Thirupugazhal glorifies the shrine.

24. The Holy Place where the Lord Siva came in the form of a **Siddhar** and performed alchemy and displayed His *leela*.

25. Holy place where **Ponnanayal** received the holy blessings

26. The Holy Place where the **Korakka Siddher** and **Kathirikkai Siddhar** still live in *Jeeva Samathi*.

Temple

The Siva Linga is older than the past three eras (three *Ugas*). The *Karuvarai mandapam* was built before 7th Century. *Artha Mandabam* and *Maga Mandapam* were build during 7th to 13th Centuries. The Lord Siva is named as ***Pushpavaneswarar*****.** The Goddess is named as ***Soundara Nayaki.***

A **Perumal Temple** is situated very near to this Siva Temple. The ***Alagiya Manavalap Perumal*** with ***Sri Devi and Poomi Devi*** in a standing posture showering their blessings on the devotees.

Location

The city Thiruppuvanam is situated in the north bank of the Vaigai River and 18 k.m. away from Madurai in Rameswaram National Highway. The

Railway line from Madurai to Rameswaram also passes through this city.

This book has been written for the benefit of the public to visit and receive the blessing at Thiruppuvanam where one of the ancient Shrines where **Lord Siva** and Goddess are the presiding deities who shower the blessings of the devotees.

THIRUCH CHITRAMBALAM

*****

1. திருப்பூவணம் - அறிமுகம்

தமிழகத்தில் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் சமணமும் புத்தமும் தலையெடுத்து வளர்ந்தோங்கி இருந்தன. மதுரை ஆண்ட பாண்டிய மன்னனை மீண்டும் சைவத்திற்கு மாற்றும் பொருட்டு, மங்கையர்க்கரசியார் திருஞானசம்பந்தரை அழைத்து வரச் செய்தார். திருஞானசம்பந்தர் மதுரைக்குச் செல்லும் முன்னர் மதுரையின் கிழக்கு எல்லையான திருப்பூவணத்திற்கு வருகிறார். வைகை ஆற்றின் வடகரையில் திருக்கோயில் உள்ளது. தென் கரையில் அம்பாள் ஆடிமாதம் தவம் செய்த இடம் உள்ளது. இந்த இடத்திற்கு வந்த திருஞானசம்பந்தர் அங்கிருந்து வடகரையில் உள்ள

திருப்பூவணநாதரை வணங்கி வழிபடுகிறார். அப்போது வைகை ஆற்றின் மணல்களெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சி யளித்துள்ளன. எனவே ஆற்றுமணல்களை மிதிக்க அஞ்சிய திருஞான சம்பதர் அங்கிருந்தபடியே பதிகம் பாடி இறைவனை வழி படுகிறார். பாடல் கேட்ட சிவபெருமான், நந்தியைச் சற்றே சாய்ந் திருக்கச் சொல்லி ஆற்றின் மறுகரையில் நின்று பாடிய திருஞான சம்பந்தருக்குக் காட்சியருளியுள்ளார். இதனால் திருப்பூவணத் தில் இன்றும் நந்தி மறைக்காது. ஆற்றின் வடகரையில் உள்ள ஆடித்தபசு மண்டபத்தில் இருந்தபடியே தென்கரையில் உள்ள சிவலிங்கத்தை வழி படலாம்.

திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் பாண்டிய நாட்டில் இறைவனைப் பாடிப் பணிந்த இடங்கள் பலவாகும். அவற்றுள் அவர்களின் பாடல்கள் கிடைக்கப் பெற்ற திருத் தலங்கள் பதினான்கு ஆகும். இந்தப் பதினான்கு திருத்தலங்களையும் பாண்டி பதினான்கு என்று சிறப்பித்துக் கூறுகின்றனர்.

1)மதுரை, 2)திருப்பரங்குன்றம், 3)திருவிராமேச்சுரம், 4)திருவாடானை, 5)திருப்புத்தூர், 6)திரு ஏடகம், 7)

திருநெல்வேலி, 8)குற்றாலம், 9) ஆப்பனூர் (மதுரையின் வடகரையில் உள்ள ஊர்) 10)திருச்சுழியல், 11)திருப்புனவாயில், 12)கொடுங்குன்றம் (பிரான்மலை), 13)காளையார் கோயில், 14) திருப்பூவணம்.

இப்பதினான்கு பதிகளில் மிகவும் பழமையானது பாண்டியநாட்டின் தலைநகராக விளங்கும் மதுரை ஆகும். ஆனால் மதுரை மாநகரம் இந்திரனுடனான போரினாலும், கண்ணகி இட்ட தீயினாலும், வையை ஆற்றுப் பெருக்கினாலும் அழிந்தழிந்து மீண்டும் மீண்டும் உயிர் பெற்றது. ஆனால், திருப்பூவணத் திருத்தலம் தொன்மைக்காலம் முதல் அழிவிற்கு உட்படாமல் அப்படியே பழமையுடன் உள்ளது.

பார்வதி தேவியார் தான் அறிந்து செய்த பாவம் போக்க இத்திருத்தலம் வந்து பாரிசாத மரத்தின் அடியிலிருந்து தவம் செய்தார். அப்போது சிவபெருமான் அம்மரத்தின் அடியில் சிவலிங்கமாய் முளைத்து. உமையம்மையின் பாவத்தை நீக்கியருளினார்.

1) இச்சிவலிங்கத்தைக் கதிரவன் (சூரியன்) வழிபட்டு, நவக்கிரகங்களுக்கும் தலைவனாக இருக்கும் வரம்

பெற்றுள்ளான்.

2) பிரம்ம தேவன் அறிந்து செய்த பாவத்தை நீக்கிய திருத்தலம்

3) மகாவிஷ்ர் சலந்திரனைக் கொல்ல சக்கராயுதம் பெற்ற திருத்தலம்.

4) காளிதேவி, சிவலிங்கம் வைத்து பூசித்த திருத்தலம்

5) திரணாசனன் என்பவன் வீடு பேறு அடைந்துள்ளான். துன்மஞ்ஞன் என்ற மாபாவி நற்கதி அடைந்துள்ளான்.

6) தருமஞ்ஞன் என்ற அந்தணன் கொண்டு வந்த அஸ்திக் கலசத்தில் இருந்த எலும்புகள் பூவாய் மாறிய திருத்தலம்.

7) உற்பலாங்கி என்ற பெண். நல்ல கணவனை அடையப்பெற்று தீர்க்க சுமங்கலியாய் வாழும் வரம் பெற்றுள்ளாள்.

8) அறிந்து செய்த பாவங்களை அகற்றும் திருத்தலம்

9) செங்கமலன் என்பவனின் பாவங்கள் அனைத்தையும் நீக்கிய திருத்தலம்

10) திருமகளின் (இலக்குமி தேவியின்) சாபம் தீர்ந்த இடம்

11) பார்வதி தேவியார் இறைவன் திருவருள் வேண்டித் தவம் செய்த திருத்தலம்

12) சுச்சோதி என்ற அரசனுடைய பிதுர்கள் (இறந்துவிட்ட முன்னோர்கள்) நேரில் வந்து பிண்டம் (இறந்தவர்களுக்குப் படைக்கப்படுவது) பெற்றுக்கொண்டு, அவனை ஆசிர்வதித்த திருத்தலம்

13) தீர்த்தங்கள் பல உள்ள திருத்தலம்

14) சலந்திரன் என்ற தவளைக்குச் சக்கரவர்த்தியாய் இருக்கும் வரம் அருளப்பட்ட திருத்தலம்

15) நள மகாராசாவிடமிருந்த கலிகாலத்தின் கொடுமையை அகற்றி அவனுக்கு மனச்சாந்தி அளித்த திருத்தலம்

16) மாந்தியந்தின முனிவருக்கும் தியானகாட்ட முனிவருக்கும் சிவபெருமான் சிதம்பர நல் உபதேசம் வழங்கிய இடம்

17) தாழம்பூ பொய்சொன்ன பாவம் நீங்க வேண்டி, சிவபெரு மானை வணங்கி வழிபட்ட திருத்தலம்

18) மூவேந்தர்களும் (சேர, சோழ, பாண்டிய மன்னர்கள்) ஒன்றாக வந்து வழிபட்டுத் திறை செலுத்திய திருத்தலம்

19) திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரர் ஆகியோர் வணங்கி வழிபட்டுத் தேவாரம் பாடிய திருத்தலம்

20) மாணிக்கவாசகர் பாடிய திருத்தலம்

21) கருவூர்த் தேவர் திருவிசைப்பா பாடல் பெற்ற திருத்தலம்

22) அருணகிரி நாதர் திருப்புகழ் பாடல் பெற்ற திருத்தலம்

23) மதுரை சிவபெருமான் சித்தர் வடிவில் வந்து இரசவாதம் செய்து திருவிளையாடல் நடத்திய திருத்தலம்.

24) பொன்னனையாளுக்கு அருள் வழங்கிய திருத்தலம்.

25) கோரக்க சித்தர் மற்றும் கத்தரிக்காய் சித்தர் முதலான சித்தர்கள் வாழும் சிவபூமி

இவ்வாறு மிகவும் தொன்மைமிக்கதாகவும், அதிகச் சிறப்புகளுடையதாகவும் திருப்பூவணத் திருத்தலம் விளங்குகிறது. இங்கு சுயம்பாகத் தோன்றிய சிவலிங்கத்தின் அருமை பெருமைகளும். சௌந்தர நாயகித் தாயாரின் அன்பும், அருளும் எடுத்துக் கூறப் பெற்றுள்ளன.

தலத்தின் பெயர்

முன்பு அனைத்து இலக்கியங்களிலும் திருப்பூவணம் என்று வழங்கப்பட்ட இத்திருத்தலம். தற்போது திருப்புவனம் என்று அழைக்கப்படுகிறது.

தலஇருப்பிடம்

வைகையாற்றின் தென்கரையில் மதுரை–இராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில் மதுரையிலிருந்து 18 கி.மீ. தூரத்தில் உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில், மானாமதுரை வட்டத்தில் பேரூராட்சியாக உள்ளது.

திருப்பூவணத்திலிருந்து கிழக்கே 22 கி.மீ. தூரத்தில் சிவகங்கையும், தென்கிழக்கே 20 கி.மீ. தூரத்தில் மானாமதுரையும், மேற்கே 25 கி.மீ. தூரத்தில்,

திருப்பரங்குன்றமும், வடமேற்கே 18 கி.மீ. தூரத்தில் மதுரையும், தெற்கே 35 கி.மீ. தூரத்தில் திருச்சுழியும், வடக்கே 15 கி.மீ. தூரத்தில் (மாணிக்கவாசகர் பிறந்த) திருவாதவூரும் உள்ளன. (திருவாதவூர் அருகில் 108 வைணவத்திருத்தலங்களில் ஒன்றான திருமோகூர் உள்ளது). இவ்விடங்களிலிருந்து பேருந்துகள் வழியாகத் திருப்பூவணத்தை (திருப்புவனத்தை) எளிதில் அடையலாம்.

மதுரை மாட்டுத்தாவணிப் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் அரைமணி நேரத்தில் திருப்பூவணத்தை அடையலாம். மானாமதுரை. பரமக்குடி, கமுதி, இராமநாதபுரம், இராமேசுவரம் செல்லும் அனைத்துப் பேருந்துகளும் திருப்பூவணம் வழியாகச் செல்கின்றன.

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து இவ்வூருக்கு நகரப்பேருந்துகள் அதிகம் உள்ளன. மானாமதுரை, சிவகங்கை, திருவாதவூர் ஆகிய ஊர்களிலிருந்தும் நகரப்பேருந்துகள் உள்ளன. இவ்விடங்களிலிருந்து நகரப்பேருந்தில் திருப்பூவணத்தை அடைந்திடச் சுமார் 1மணி நேரமாகும். திருப்பூவணத்தில் கோட்டை பேருந்து நிறுத்தத்திற்கு மிக அருகில் (சுமார்

200மீ) திருக்கோயில் உள்ளது.

திருப்பூவணத்தின் வடக்கே வைகையாறு ஓடுகிறது. ஆற்றின் வடகரையில் உள்ள மடப்புரம்–காளிஅம்மன் கோயில் தற்போது மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிவருகிறது. இதனால், மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து மடப்புரத்திற்குத் தினமும் அதிகமான எண்ணிக்கையில் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இவற்றில் பயணம் செய்தும் திருப்பூவணத்தை எளிதில் அடையலாம். மடப்புரம் செல்லும் நகரப் பேருந்தில் வருவோர், “திருப்புவனம் சந்தை” பேருந்து நிறுத்தம் எனக்கேட்டு இறங்க வேண்டும். அங்கிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்தில் திருக்கோயில் உள்ளது. அல்லது மடப்புரம் காளிகோயில் நிறுத்தத்திற்கு முன்னால் உள்ள “ஆடித்தபசு” மண்டபத்தில் இறங்கி ஆற்றின் வடகரையிலிருந்தபடியே தென்கரையில் கோயில் கொண்டிருக்கும் பூவணத்து ஈசனை வழிபடலாம்.

இருப்புப் பாதை வழி

மதுரையிலிருந்து இராமேசுவரம் செல்லும் இருப்புப் பாதை திருப்பூவணம் வழியாகச் செல்கிறது. எனவே தொடர்வண்டியில் வருவோர் மதுரையிலிருந்து இராமேசுவரம் செல்லும் வழியில் சுமார் ஒரு மணிநேரப் பயணத்தில் திருப்பூவணத்தை அடையலாம். இராமேசுவரத்திலிருந்து மதுரை செல்வோர். மதுரைக்கு முன்னால் திருப்பூவணத்தில் இறங்கி இறைவனை வழிபட்டுச் செல்லலாம். தொடர்வண்டி நிலையத்திலிருந்து திருக்கோயில் சுமார் அரை கி. மீ. தூரத்தில் உள்ளது.

புவியியல் அமைப்பு

புவியியல் அமைப்பினை அடிப்படையாகக் கொண்ட வாஸ்து இலக்கணப்படி. பாண்டிய நாட்டின் வாஸ்து முகமண்டலமாக விளங்குகிறது திருப்பூவணத் திருத்தலம். தற்போதைய அறிவியல் முறையில். ஓர் இடத்தின் இருப்பிடத்தை பூமத்திய ரேகைக்கு இணையான அட்சரேகைக் கோடுகளாலும். வடதுருவம் மற்றும் தென்துருவம் இரண்டையும் இணைக்கும் தீர்க்கரேகைக் கோடுகளாலும் கணக்கிடுகின்றனர். இதன்படித் திருப்பூவணம் பூமத்திய ரேகையிலிருந்து 9.49பாகை வடஅட்சரேகையிலும். 78.15பாகை கிழக்குத்

தீர்க்கரேகையிலும் **(9°49’19.26″N….78°15’20.55″E)** அமைந்துள்ளது.

1)திருப்பூவணநாதர்(சிவலிங்கம்) பாரிசாதப்பூவால் ஆனது. (The Siva Lingam is a fossil of Parijatha Flower). 2) மதுரை கோயில் அமைப்பைப் போன்றே சிவலிங்கத்திற்கு வலப்புறம் அம்பாள் கோயிலும் (தற்போதைய முருகன் கோயில்) அதன் எதிரே தீர்த்தமும் உள்ளன. 3) மதுரையின் கிழக்கு வாயிலாகத் திருப்பூவணம் உள்ளது. இதனால் திருப்பூவணநாதரை வணங்கிய பின். மதுரை மீனாட்சி சமேத சோமசுந்ரேசுவரரை வணங்குவது மிகுந்த சிறப்புடையது. 4) திருஞானசம்பந்தர் திருப்பூவணநாதரை வணங்கி அருள் பெற்ற பின்னரே மதுரை சென்று சமணர்களை வென்றுள்ளார். 5) அம்பாள் ஆடிமாதம் தவம்செய்த இடத்திலே ஆடித்தபசு மண்டபம் கட்டப்பெற்றுள்ளது. 6) இந்த இடத்திலிருந்துதான் திருஞானசம்பந்தர். ஆற்றின் வடகரையில் உள்ள திருப்பூவணநாதரை வணங்கிப் பதிகம் பாடியுள்ளார். 7)அப்போது ஆற்றின் மணல்கள் எல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்துள்ளன. நந்தியைச் சாய்ந்திருக்கச் சொல்லி சிவபெருமான் காட்சியளித்துள்ளார். 8)திருப்பூவணம் திருக்கோயில்

சிதம்பரத்தைப் பார்த்தபடி அமைக்கப்பட்டுள்ளது. நந்தி மறைக்காத காரணத்தால் திருப்பூவணநாதர் சந்நிதியிலிருந்து வணங்கினால் சிதம்பரத்தை திசைநோக்கி வணங்கியதாகும். 9) இடமிருந்து வலமாக பெருமாள், முருகன், அம்மன், விநாயகர், திருப்பூவணநாதர் ஆகிய ஐந்து சந்நிதிகளும் ஒரே வீதியில் முன்பு இருந்திருக்கின்றன. இதுபோன்ற அமைப்புமுறையானது திருப்பரங்குன்றம் கருவரையில் உள்ள அமைப்புடன் ஒத்துள்ளது.

2

திருப்பூவணப் புராணம்

அறிமுக உரை

அனைத்துத் திருத்தலங்களும் மூர்த்தி, தலம், தீர்த்தம் மற்றும் விருட்சம் ஆகியவற்றால் சிறப்பாகப் பேசப்படுகின்றன. ஆனால். மிகவும் தொன்மையான பல திருத்தலங்கள். தலபுராணத்தாலும் இலக்கியத்தாலும் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. இவ் அனைத்துச் சிறப்புகளையும் ஒருங்கே பெற்ற திருத்தலமாகத் திருப்பூவணம் திகழ்கிறது. இத்தலத்திற்கென்று வடமொழியில் புராணம் ஒன்று உள்ளது. அதனைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்துக் கந்தசாமிப் புலவர்

பாடியுள்ளார்.

கடம்பவனபுராணம். திருவிளையாடற் புராணம் ஆகியவற்றிலும் திருப்பூவணத் திருத்தலத்தின் பெருமைகள் விரிவாகப் பாடப் பெற்றுள்ளன. மூவர் தேவாரம், திருவாசகம். தேவர் திருவிசைப்பா மற்றும் திருப்புகழ் ஆகியவற்றில் திருப்பூவணம் சிறப்பித்துக் கூறப் பெற்றுள்ளது.

திருப்பூவணப் புராணம் இயற்றிய கந்தசாமிப்புலவர் திருப்பூவணநாதர் உலா, திருப்பூவணநாதர் மூர்த்தி வகுப்பு, தலவகுப்பு என்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

திருப்பூவணப் புராணம் (வடமொழி)

துறவியரும். ரிஷிகளும் பிரமனை அணுகி, தவம் மற்றும் வேள்வி செய்வதற்கேற்ற புனித இடத்தைக் காட்டுமாறு வேண்டிக் கொண்டனர். அதற்கேற்பப் பிரமனும் ஒரு சக்கரத்தை உருண்டோடச் செய்து அது நின்று விழும் இடமே தவத்திற்கு ஏற்ற புண்ணிய பூமியாகும் என்றார். அவ்விடம் “நைமிசாரண்யம்” என்று அழைக்கப்படுகிறது. இங்குதான் வியாச முனிவர் புராணங்களையும்

மகாபாரதத்தையும் இயற்றினார். வியாசமுனிவர் சூதமுனிவருக்குக் கூறிய புராணங்கள் பதினெட்டு ஆகும். இப்புராணங்களில் பிரம்மகைவர்த்த புராணம் என்பதும் ஒன்று. இப் புராணத்தின் எழுபதாம் அத்தியாயம் முதல் எண்பத்துநான்காம் அத்தியாயம் வரை திருப்பூவணத்தலபுராணம் பற்றி எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

திருப்பூவணப் புராணம் (வடமொழியில்) தோன்றிய வரலாறு

நைமிச வனத்திலே, மிகுந்த தவமுடைய சௌநகர் முதலான முனிவர்கள் பலர் சிவபிரான் திருவடியை அடைவதற்குக் கூறப்பட்ட வரலாற்றுக் கதைகளை ஆராய்ந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அங்கே சூதமுனிவர் என்பவர் வந்தார். மற்றைய முனிவர்கள், அவரை வணங்கி வரவேற்று அமரச்செய்தனர். பின்பு அவரிடம் நீங்கள் முன்பு ஒருமுறை சுவேதவன (திருவெண்காடு) சேத்திரமான்மியத்தைக் கூறும்போது இடையிலே புட்பவன மான்மியத்தை சுருக்கிச் சொன்னீர்கள். இப்பொழுது அதனை விரிவாக விளக்க வேண்டு மென்று முனிவர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

முனிவர்களின் வேண்டுதலை நிறைவேற்றும் வகையில் திருப்பூவணப் புராணத்தைச் சூதமுனிவர் சொல்லியருளினார். இப் புராணத்தை யார் முதன்முதலில் யாரிடம் கூறினார்கள் என்ற விவரத்தை,

“நந்தி முகன் றம்பியரு ணந்திதனக் குரைப்ப நந்தி சநற்குமாரன். வெந்துயரமற வெடுத்துவிரித்துரைப்பனவன் வேதவியாதற்கோதப். புந்தியுணர்ந்தவன் சூதமுநிக்குரைத்தபுட்பவனபுராணந்தன்னை...“

என்ற பாடலில் கந்தசாமிப் புலவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருப்பூவணப் புராணம் (தமிழ்மொழியில்) தோன்றிய வரலாறு

“அற்றமில்கலையி னுண்ணறிவின் மேலையோர்

பொற்றிருப்பூவணப் புராணமாண்புற

முற்பகவர் வடகலை மொழிபெயர்த்து நீ

நற்றமிழான் முறை நவிற்று கென்னவே”

திருப்பூவணப் புராணம் வடமொழியில் உள்ளது. அதனை

அனைவரும் அறிந்துகொள்ளத் தமிழில் பாடுக, என்று கேட்டுக் கொண்ட காரணத்தினால். தமிழில் மொழிபெயர்த்துப் பாடுவதாகக் கந்தசாமிப்புலவர் தனது அவையடக்கப் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

புத்தகவடிவில் புராணம் – ஏட்டுச்சுவடியில் இருந்த புராணத்தை புத்தகமாக அச்சிட்டு வெளியிட வேண்டுமென. மதுரை திருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் ஆதீனத்து அம்பலவாண சுவாமிகள் விருப்பம் தெரிவித்துள்ளார்கள். அதன்படி. தேவகோட்டை

உ–மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள்,

உ–ராம. சுப்பிரமணியச் செட்டியார் அவர்கள்,

உ–வீர. சொக்கலிங்கச் செட்டியார் அவர்கள்

இம்மூவர்கள் பொருளுதவி பெற்று, மதுராபுரியில் வாசித்த இ.இராமசுவாமிப்பிள்ளை என்று அழைக்கப்பட்ட ஞானசம்பந்தப்பிள்ளையால் அகப்பட்ட பிரதி கொண்டு. சென்னை இந்து தியலாஜிகல் அச்சுக்கூடத்தில் மன்மதவருடம் (1896ம் ஆண்டு) மாசிமாதம் விலை ரூபாய்.கவ (Rs.1 1/4)க்கு அச்சிடப்பெற்றுள்ளது.

இப்புத்தகத்தின் முகவுரையில் “.... .... இப்பாடலடங்கிய ஏட்டுப்பிரதி ஒன்றே கிடைத்தமையால், அதுகொண்டு ஒருவாறு பார்வையிட்டு அச்சிடப்பட்டது” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப்போன்றே. 1993ம் ஆண்டின் இறுதியில். இந்நூலாசிரியர் (கி.காளைராசன்) தனது M.Phil. ஆய்வினை மேற்கொண்டார். ஆய்விற்குத் திருப்பூவணப் புராணப் புத்தகம் தேவைப்பட்டது. ஆனால் திருப்பூவணத்தில் யாரிடமும் இப்புத்தகம் கிடைக்க வில்லை. பல நூலகங்களில் கேட்டும் கிடைக்கப் பெறவில்லை. இறுதியாகக் காரைக்குடியில் உள்ள இராமசாமி தமிழ்க்கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய தமிழாகரர் தெ.முருகசாமி அவர்கள் திருப்பூவணப் புராணப் புத்தகத்தைக் கொடுத்து உதவினார்கள். புத்தகம் அச்சிடப்பெற்று நூறு ஆண்டுகளுக்கும் மேலானதால், காகிதங்கள் மிகவும் பழையதாய் இருந்தன. தொட்டால் ஒடிந்துவிடும் நிலையிலிருந்த, அப்புத்தகத்தை நுணுகிப் படித்தே இந்நூலாசிரியர் திருப்பூவணப் புராணப் பாடல்களை கணிணியில் அச்சேற்றியுள்ளார்.

தமிழில் புராணம் எழுதிய ஆசிரியர் வரலாறு

கந்தசாமிப்புலவரின் ஊர் திருப்பூவணமாகும். இவரைப் பற்றிய வரலாறு ஏதும் தெரியவில்லை. இவர் திருவாப்பனூர் புராணமும். திருப்பூவணநாதர் உலாவும் இயற்றியுள்ளார். இவர் காலத்திலேயே இந்நூல்களுக்கு நன் மதிப்பிருந்துள்ளதற்கு ஆப்பனூர் புராணப் பாயிரச் செய்யுளும், திருப்பூவணநாதர் உலாவின் சிறப்புப் பாயிரச் செய்யுளும் சான்று தருகின்றன.

இவர் திருப்பூவணப் புராணத்தில் பாயிரம் பாடும்போது, சகாத்த வருடம் 1543ல் தமிழில் மொழிபெயர்த்துப் புட்பவனபுராணத்தை இயற்றியதாகக் குறிப்பிடுகிறார். இதனை ஆங்கில வருடத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது சகாப்த வருடம் 1543+78=1620-1621ம் ஆண்டைக் குறிப்பிடுகிறது. இப்புத்தகம் 2008ம் ஆண்டு எழுதப்பெற்றது. இதனால் இவர் இன்றைக்குச் சரியாக (2008-1620=388) 388 ஆண்டுகளுக்கு முன் திருப்பூவணப் புராணத்தை இயற்றியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

இவர், நைமிசாரணியச் சருக்கம், சவுநகர் சூதரை வினவிய சருக்கம், திருக்கைலாயச் சருக்கம், ஆற்றுச் சருக்கம், திருநாட்டுச் சருக்கம், திருநகரச் சருக்கம் ஆகிய

சருக்கங்களைப் பாடிப் பாயிரம் பாடிய பின்னர் இருபது சருக்கங்களில் திருப்பூவணப் புராணத்தைப் பாடியுள்ளார். அவை பின்வருமாறு,

1. சூரியன் பூசனைச் சருக்கம்

2. திரணாசனன் முத்தி பெற்ற சருக்கம்

3. மணிகன்னிகைச் சருக்கம்

4. துன்மனன் சருக்கம்

5. தருமஞ்ஞன் முத்தி பெற்ற சருக்கம்

6. உற்பலாங்கி பதியை யடைந்த சருக்கம்

7. பாற்கரபுரச் சருக்கம்

8. சர்வ பாவ விமோசனச் சருக்கம்

9. பிரம சாப விமோசனச் சருக்கம்

10. இலக்குமி சாபவிமோசனச் சருக்கம்

11. உமாதேவி திருஅவதாரச் சருக்கம்

12. திருக்கலியாணச் சருக்கம்

13. தக்கன் வேள்வியழித்த சருக்கம்

14. உமை வரு சருக்கம்

15. சுச்சோதி தீர்த்த யாத்திரைச் சருக்கம்

16. சுச்சோதி பிதிர்களை முத்தியடைவித்த சருக்கம்

17. தீர்த்தச் சருக்கம்

18. நளன் கலிமோசனச் சருக்கம்

19. திருவிழாச் சருக்கம்

20. சிதம்பரவுபதேசச் சருக்கம்

என இருபது சருக்கங்களாகும்.

திருப்பூவணப் புராணத்தில், மொத்தம் 1437 பாடல்கள் உள்ளன. இப்பாடல்களை விருத்தப் பாவில்

எழுதியுள்ளதாகக் கந்தசாமிப் புலவர். அவையடக்கம் ஐந்தாம் பாடலிலே குறிப்பிட்டுள்ளார்.

✸✸✸✸✸

3

திருப்பூவணப் புராணம் உரைச் சுருக்கம்

1. சூரியன் பூசனைச் சருக்கம்

நவக்கிரகங்களுக்கும் தலைவராகச் சூரிய பகவான் விளங்குகிறார். ஒரு காலத்தில் பேரண்டத்தில் ஒரு பெரிய புரட்சி நிகழ்ந்தது. இதனால் சூரியனுடைய தலைமைப் பதவிக்கு ஆபத்து ஏற்பட்டு, பதவி பறிபோகும் நிலை ஏற்பட்டது.

தனது பதவியை நிலை நிறுத்திக் கொள்வதற்கான வழி வகையை சூரியன் ஆராய்ந்தார். அப்பொழுது

இப்பேரண்டமே சிவலிங்கமாக திருப்பூவணத்தில் எழுந்தருளுகிறது என்பதை அறிந்தார். எனவே தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள திருப்பூவண நாதரை சித்திரை மாதத்திலே சித்திரை நட்சத்திரத்திலே, மணலைச் சிவலிங்கம் போலக் குவித்து, உரிய முறைகளைப் பின்பற்றிப் பூசை செய்தார். அவருக்கு அருள்புரிய உமாதேவி சமேதராகச் சிவபிரான் தோன்றியருளினார். சூரியன் விரும்பியபடி நவக்கிரகங்களுக்கு நாயகனாக என்றும் நிலைத்திருக்கும்படிச் சூரியனுக்கு அருள் வழங்கினார். திருப்பூவணத்தில் வசிப்பவர்க்கு அறமும் பொருளும் இன்பமும் வீடும் கிடைக்குமென்று அருளினார். ஐந்தெழுத்து மந்திரத்தையும் உபதேசம் செய்தருளினார்.

மணிகன்னிகை தீர்த்தம் – இறைவனால் மந்திர தீட்சை கிடைக்கப்பெற்ற ஆதித்தனாகிய சூரியன், தான் கேட்டவுபதேசப் பொருளைச் சிந்தித்துத் தெளிந்து, சிவலிங்கத்துக்குத் தென்கிழக்கே (அக்கினித் திக்கிலே), தனது கையினாலே சதுரமாகக் குளம் தோண்டி, அதில், உற்பலமும் தாமரையும் உண்டாக்கி, ஐந்தெழுத்தைத் தியானித்து முறைப்படி வழிபட்டான். அத்தீர்த்தத்துக்கு மணிகன்னிகை என்னும் பெயரையிட்டான். தேவதச்சனை

அழைத்து ஆலயம் அமைத்து, ஆவரண தேவதைகளையும் பிரதிட்டை செய்து, திருவிழா நடத்தித் தன்னுடைய உலகத்தை அடைந்தான்.

அகத்திய முனிவரும் அம்மணிகன்னிகைத் தீர்த்தத்தில் மூழ்கித் திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரித்து திருப்பூவணநாதரை வணங்கி சமுத்திரத்தைக் குடிக்கும் வல்லமையைப் பெற்றார்.

குறிப்பு இத்தீர்த்தத்தின் சிறப்புகள் பின்வரும் சருக்கங்களிலும் மிகவும் வெகுவாகப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளன. தற்போது இத்தீர்த்தம் எவ்வாறு உள்ளது என்பது பற்றி குறிப்பு நான்காவது சருக்கமாகிய துன்மனன் சருக்க இறுதியிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

பாவநாச தீர்த்தம்

சிவலிங்கத்திற்கு முன்பு வைகைநதியில் ஒரு அம்பு செல்லும் தொலைவரையுள்ள ஆற்றிற்குப் பாவநாசதீர்த்தம் என்று பெயர். அதிலே முழுகினோர் சிவலோகம் பெறுவர். திருப்பூவணத் தலத்தைத் தரிசித்தோர் திருக்கைலாசமடைவர் என்று சிறப்பித்துக்

கூறப்பட்டுள்ளது.

இச்சருக்கத்தில் கூறப்பட்டுள்ள திருத்தலத்தின் வேறு பெயர்கள்

திருப்பூவணத்திற்குக் கிரேதாயுகத்திலே தேவிபுரம், புட்பவனம் என்றும், திரேதாயுகத்திலே இலக்குமிபுரம் என்றும், துவாபர யுகத்திலே பிரமபுரம் என்றும், கலியுகத்திலே பாஸ்கரபுரம், ஆனந்தவனம், முத்தியாச்சிரமம், ரகசியசிதம்பரம், தெட்சிணகாசி, சதுர்வேதபுரம், பிதிர்முத்திபுரம் என்னும் பெயர்கள் உண்டு. இங்கு வசிப்போருக்குச் செல்வத்தை நல்கும். பாவத்தைப் போக்கும். சிவஞானத்தை ஆக்கும். இப்பதியில் வணங்கிய பெருமையாலே விநாயகக்கடவுள் சிவார்ச்சனை செய்து முடித்தார்.

2. திரணாசனன் முத்திபெற்ற சருக்கம்

சைவபுராணம் முதல் பிரமவைவர்த்த புராணம் முடிய உள்ள பதினெட்டுப் புராணங்களிலும் சிறப்புடன் குறிப்பிடப்படுவது திருப்பூவணத் தலமாகும். பிரளயகாலத்தில் தோன்றிய அமிர்தக்கலசம்

மகாவிஷ்ணுவால் மூன்று கூறாக உடைக்கப்பட்டது. முதலாவதைத் திருப்பூவணத்திலும். இரண்டாவது பகுதியைக் கும்பகோணத்திலும். அதன்பின் மூன்றாவது பகுதியை எல்லாத் திருத்தலங்களிலும் வைத்தார். அமிர்தத்தின் முதலாவது பகுதி திருப்பூவணத்திலுள்ள மணிகன்னிகைத் தீர்த்தத்திலே மலராய் வந்து வீழ்ந்தது. அத்தீர்த்தத்திற்கு மாயாதீர்த்தம் என்றும் மணிகன்னிகைத் தீர்த்தம் என்றும் இரண்டு பெயருண்டு. இத்தீர்த்தத்திலே நீராடுவோர்க்குப் பாவங்களெல்லாம் ஒழியும்.

திருப்பூவணத்தில் சிவலிங்கப் பெருமானை முதலிலே தரிசித்துப் பின்னர் தேவியாரைத் தரிசிக்க வேண்டும். இத்தலத்தில் அம்மையை முதலில் வணங்குபவர்கள் நரக உலகு அடைவர். மதுரை உட்பட மற்றபிற தலங்களில் முதன்முதலாக அன்னையை வணங்கியபின்னர்தான் சிவலிங்கத்தை வணங்கி வழிபடுகின்றனர். ஆனால். திருப்பூவணத்தில் மட்டும் அம்மையை முதன்முதலில் வணங்கக் கூடாது. ஏனென்றால். முதலாம் யுகத்திலே. கௌதமி ஆற்றங்கரையில் திரணாசனன் என்பவர் சிவபிரான் திருவடிகளை மனவாக்குக் காயங் களினால் வழிபட்டுவந்தார். அவர் தனது ஆசிரியரை வணங்கி எளிதாக முத்தி கிடைத்திட உபாயத்தைக் கூற

வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். அதற்கு அவரது ஆசிரியரும் பல சிவத்தலங்களுக்கும் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி முறைப்படிச் சிவலிங்க மூர்த்திகளைப் பேரன்போடு வழிபட்டால். பாவங்கள் ஒழிந்து முத்திபெறலாம் என்று கூறி அருளினார். உடனே திரணாசனன் துறவறம் பூண்டு சிவத்தலங்கள் பலவற்றிற்குச் சென்று. திருவாலவாயில் (மதுரையில்) வீற்றிருந்தருளும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரை வணங்கி. திருப்பூவணம் வந்து மணிகன்னிகைத்தீர்த்தத்தில் மூழ்கியெழுந்து உமாதேவியைத் தரிசித்துச் சிவலிங்கப் பெருமானைத் தரிசியாமல் தெற்குத்திசை நோக்கிச் சென்று திருச்சுழி என்னும் திருத்தலத்தை அடைந்து. முறைப்படிச் சிவலிங்கப் பெருமானை வழிபட்டு. மீண்டும் திருப்பூவணம் வந்து மணிகன்னிகைத் தீர்த்தத்தில் மூழ்கினான். அதனால் இராச்சதனாய் மாறிப் பசியினால் வருந்தினான். அப்பொழுது நாரத முனிவர் வந்து. அவனை நோக்கி. “நீ யாரென்று் கேட்டார். அப்பொழுது அவனுக்குச் சிறிது ஞாபகம் வந்தது. அவன். இத்தீர்த்தத்தில் மூழ்கிய அளவிலே நான் மனங்கலங்கியவன் ஆனேன்” இதற்குக் காரணம் என்ன

என்று புலப்படவில்லை என்று கூறினான். அதற்கு நாரதமுனிவர். பூவணநாதரை முதலிலே வழிபடாது தேவியாரை வழிபட்ட காரணத்தால். நீ இவ்வாறு ஆகிவிட்டாய். இனி. முதலிலே புட்பவனேசுவரரை வணங்கிப் பின்பு அம்மையை வணங்கினால் நற்கதி பெறுவாய். மேலும் புட்பவனேசுவரர் சந்நிதியிலே ஐநூறு விற்கிடை அளவுள்ள ஒரு பிரமதீர்த்தமுண்டு. அது முறை பிறழ்ந்த பாவமுதலியவற்றைப் போக்கும். அதிலே கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்திலே நீராடுதல் சிறந்ததாகும். ஆதலால். அத்தீர்த்தத்தில் நீ நீராடி புட்பவனேசுவரரை வழிபடுவாய் என்று கூறி வழிகாட்டினார். மேலும். காசி முதலிய பதிகளில் செய்த பாவங்கள் இப்பதியிற் போம். இத்திருப்பூவணத்திற் செய்த பாவம் இத்திருப்பூவணத்திலே ஒழியு மென்றும் கூறித் திருமால் உலகம் சேர்ந்தார். நாரதமுனிவர் அருளிய வழியே திரணாசனன் புட்பவனேசுவரரையும் தேவியாரையும் வழிபட்டுத் திருக்கைலாசபதவி சேர்ந்தனன். இவ்வாறு பிரமவைவர்த்த புராணத்திலே எழுபத்தோராம் அத்தியாயத்திலே கூறப்பட்டுள்ளது.

3. மணிகன்னிகைச் சருக்கம்

திருப்பூவணத் திருத்தலமானது விராட்புருடனுக்கு முகமண்டலமாகும். அப்பதியிலுள்ள தீர்த்தத்தில். விஷ்ர் முதலாவது வைத்த அமிர்தக்கூறு மணிமயமாய் வீழ்ந்தபடியால். அதற்கு மணிகன்னிகையென்று பெயர். அதிலே நீராடு வோர். பத்துப் பிரமகற்பகாலம் அமிர்தம் உண்டு தேவலோகத்தில் வாழ்வார்கள். இத்தீர்த்தத்திலே எல்லாத் தேவர்களும் இருடிகளும் வசிக்கின்றார்கள். அதிலே மூழ்கிச் சூரியலிங்கத்தைத் தரிசனம் செய்வோர். காலனைக் காணாமல். காலகாலர் கயிலையைக் காண்பர். அத்தீர்த்தமாடுதலும். அச்சிவலிங்க தரிசனம் செய்தலும் அறஞ் செய்வோர்க்கே கைகூடும். இத்தலத்தினைத் தரிசனம் செய்வோரின் அனைத்துப் பாவங்களும் ஒழிந்துவரும்.

சுய அறிவுடனோ அல்லது அறிவின்றியோ ஒரு கணப் பொழுதாவது திருப்பூவணத்தில் வசித்தால் சிவ உருவம் பெறுவர். ஒரு தளிரோ கனியோ புட்பவனேசருக்குப் பக்தியோடு கொடுப்போர் முத்தி அடைவர். மற்றைய தலத்தினின்று வயோதிகத்தைச் சிந்தித்து இத்தலஞ் சேர்ந்து இறந்தவர்களுக்குச் சிவபிரான் தாரகமந்திரமாகிய பிரணவ மந்திரத்தை உபதேசம் செய்தருளுவர்ஃ ஆதலால் இத்தலத்தில் யாவரும் வசித்தல் வேண்டும். காசியின்

தட்பவெப்பத்தினால் பெரிதும் உடல் வருந்தும். திருப்பூவணத்தில் சமநிலையிலான தட்பவெப்பம் நிலவுவதால். உடல் வருத்தமுறாதுஃ ஆதலாற் காசிப்பதியினும் புட்பவனம் ஏற்றதாகும். பஞ்சாமிர்தம். பஞ்சகவ்வியம் முதலியவற்றைச் சூரியலிங்க மூர்த்திக்கு அபிடேகம் செய்தால் சிவனருள் பெறலாம். மணிகன்னிகா தீர்த்தக் கரையினில் பிதிர்சிரார்த்தம் முதலியன செய்தால் நெடுங்காலம் பிதிர்கள் பெரிதும்மகிழ்வார்கள்.

முன்னம் ஒரு காலத்தில் அந்தணனின் இறந்த உடலில் உள்ள ஓர் அங்கத்தைக் கழுகு திருப்பூவணத்தில் இட்டதனால் அவன் நற்கதியடைந்தான். எனவே. பிதிர்கள் முத்தியடையும் வண்ணம் அவர்கள் இறந்த பின்னர். அவர்களது அங்கங்களை இங்கே போடவேண்டும்.

4. துன்மனன் சருக்கம்

மாதா. பிதா. குரு. அந்தணர் இவர்களை இகழ்ந்தவர்களும். மற்றும் இதுபோன்ற மன்னிக்கமுடியாத கொடிய பாவங்களைச் செய்தவர்களும் நரகத்தில் சேர்ந்து பெருந் துன்பங்கட்கு ஆட்படுவர். அகிம்சை. உண்மைகூறல் முதலிய தர்மங்களை உடையவர்

சொர்க்கத்தில் சுகங்களைப் பெறுவர். ஆனால் துன்மனன் என்னும் கள்வன் இப்பிறவியில் செய்யாத பாவங்களேதுமில்லை. செய்த புண்ணியமெதுவும் இல்லை. அவனது பூர்வபுண்ணியத்தினாலே. ஒருசமயம் திருப்பூவணத்திலே பங்குனி உத்திரத் திருவிழா நடைபெறுவதைக் கேள்வியுற்று திருடும் நோக்கத்தோடு இத்தலம் வந்தடைந்தான். தேரில் எழுந்தருளியிருந்த இறைவனைத் தரிசித்து விட்டு. நடுநிசியில் மற்றபிற கள்வர்களுடன் திருடிவரும் போது காவலர்களால் விரட்டியடிக்கப்பட்டான். இரவில் வழிதெரியாமல் ஓடிய திருடர்கள் மணிகன்னிகைத் தீர்த்தத்தில் வீழ்ந்து இறந்தனர். இருப்பினும் தீர்த்தத்தின் சிறப்பினால் அவர்கள் சிவலோகம் சேர்ந்தனர்.

ஐந்து மாபாதகங்களையும் செய்த தீயோர்களுக்கே சிவப்பேறு கிடைத்தது என்றால். நற்புத்தியுடனும் உண்மையான பக்தி நோக்கத்துடனும் இத் தீர்த்தமாடுவோர் சிவலோகம் சேர்வதில் சிறிதும் ஐயமில்லை.

மணிகன்னிகா தீர்த்தம் இருந்த இடம் – இத்தீர்த்தம் தற்போதைய முருகன் கோயிலின் (முன்பு செளந்தரநாயகி

அம்மன் கோயில் கொண்டிருந்த இடம்) முகப்பிலும். பெருமாள் கோயிலின் அருகிலும் இருந்துள்ளது.

தீர்த்தத்தின் இன்றைய நிலைபற்றிய குறிப்பு மணிகன்னிகா தீர்த்தம் பற்றிப் பலவாறாகப் புகழ்ந்து புராணங்களில் கூறப்பட்டுள்ளதால். அந்திமக்காலத்தில் நிர்க்கதியாய் நின்ற பலர் இத்தீர்த்தத்தில் வந்து மூழ்கி உயிரை விட்டனர். இதனால் இத்தீர்த்தத்தில் வீழ்ந்து இறப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே சென்றது. அரசியல் செல்வாக்கு மிகுந்தோர் தீர்த்தம் ஆட வரும்போது அவர்கள் எதிரேயே பிணத்தைத் தூக்கிச் செல்லும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும் தங்களது வீட்டிலிருந்த முதியோர் களும் இவ்வாறு தீர்த்தத்தில் மூழ்கி இறந்துவிட்டனரே என்ற வருத்தங்களும் பொதுமக்களிடம் அதிகம் இருந்தது. இக்காரணங்களால் தீர்த்தம் முழுவதுமாக மூடிமறைக்கப்பட்டுவிட்டது. பின்னர் இவ்விடத்தில் தென்னந்தோப்பு இருந்துள்ளது. தற்போது மக்கள் குடியிருப்புகள் உள்ளன.

திருக்கோயிலின் உள்ளேயே ஆடிவீதியில் அக்கினித்திக்கில் ஒரு கிணறு ஒன்று வெட்டப்பட்டுள்ளது. இக்கிணறே தற்போதைய மணிகன்னிகா தீர்த்தமாகக்

கருதப்படுகிறது. இதிலும் தற்போது தண்ணீர் போதுமான அளவு இல்லை. தற்போது ஆலயத்தின் தண்ணீர்த் தேவைகளுக்காக ஆழ்குழாய்க் கிணறு(bடிசந றநடட) ஒன்று தோண்டப்பெற்று தண்ணீர் வழங்கப்படுகிறது.

5. தருமஞ்ஞன் முத்தி பெற்ற சருக்கம்

தென் திசையில் தாமிரபரணி நதிக்கரையிலே வேர்வனம் என்னும் ஊரின் மேற்குத் திசையிலே கோலாகலமென்னுங் கிராமத்திலே. வேதசர்மா என்னும் பெயருள்ள ஒரு பிராமணன் இருந்தான். அவன் நான்கு வேதங்களையும் ஆறு சாத்திரங்களையும் கலைகளையும் ஓதியுணர்ந்தவன். கடமைகளை வழுவாது செய்து ஐந்தெழுத்து மந்திரத்தை விதிப்படி மெய்யன்பொடு ஓதுபவன். பிள்ளைகள் மற்றும் பேரன் பேத்திகளுடன் குபேரனுக்கு ஒப்பாக வாழ்பவன். அவனுக்கு மூப்புப் பருவம் வந்து இயற்கை மரணமடைந்தான். அவனுடைய புத்திரன் தருமஞ்ஞன் என்னும் பெயருடைய ஒருவன் தந்தையைப் போல வேதம் முதலியவற்றை ஓதியுணர்ந்து ஒழுக்கத்திலே வழுவாதவனாக இருந்தான். தன்னுடைய தந்தைக்கு இறுதிக் கடமைகளை அன்புடன் முடித்துப் பிதாவின் அஸ்தியை ஒரு குடத்திலே அடைத்துத் துணியினாலே

வாயை மூடி அரக்கு முத்திரை வைத்துக் கங்கைநதியிலே இடும் வண்ணம் எண்ணி. அவனது மாணாக்கனோடு வடதிசை நோக்கிச் சென்றான். செல்லும் வழியில் உள்ள சிவத்தலங்களிலே பெரியோர்களுக்குத் தானங்கள் கொடுத்துத் தீர்த்தங்களிலே நீராடி. மதுரையை அடைந்து அங்குள்ள தீர்த்தங்களிலே மூழ்கித் தானங்கள் கொடுத்து மூன்று தினம்தங்கி அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரரைத் தரிசித்துப் பின்னர் திருப்பூவணம் வந்துசேர்ந்தான். சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து. மணிகன்னிகைத் தீர்த்தக்கரையை அடைந்து. வயிரவக் கடவுளை எள்ளு. அருகு. அட்சதை இவைகளினாலே பூசித்து. அஸ்திக் குடத்தை அக்கரையிலே வைத்துவிட்டுத் தீர்த்தத்திலே மூழ்கினான். மூழ்கும்போது பெருமழை பெய்தமையால் விரைந்தெழுந்து கரையேறும் பொழுது. கால் இடறி அஸ்திக் குடம் அத்தீர்த்தத்திலே விழுந்தது. உடனே அக்குடத்தை யெடுத்துப் பார்த்தான். அதனுள்ளே இருந்த எலும்பு முழுவதும் தாமரை மலரும். உற்பல மலருமாக இருக்கக் கண்டு பெரிதும் மகிழ்ந்து பர்ணசாலைகளிலே வசிக்கின்ற முனிவர்களிடம் போய் நிகழ்ந்தவற்றைக் கூறினான். அவர்களும் இத்தலம் காசியைவிடச் சிறப்புடையதாம் என்றனர். உடனே தருமஞ்ஞன்

என்னுடைய பிதாமுதலியோர் நற்கதியடைந்தனர்” என்று கூறிச் சிவாலயஞ் சேர்ந்து. சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்கித் துதித்த பொழுது. சிவபெருமான் இடபாரூடராய்த் தோன்றிக் காட்சி கொடுத்துத் தருமஞ்ஞனுக்கும் நற்கதியை அருளி மறைந்தருளினார். தருமஞ்ஞனைப் புகழ்வோரும் அவன் கதையைப் படிப்போரும் பாவங்கள் நீங்கிச் சுவர்க்கலோகம் சேர்வர்.

6. உற்பலாங்கி பதியை அடைந்த சருக்கம்

துங்க பத்திரை நதிக்கரையில் உள்ள ஒரு புண்ணிய கிராமத்திலே. கோபாலனென்னும் பிராமணனுக்கு உற்பலாங்கி என்ற பேரழகுடைய மகள் ஒருத்தியிருந்தாள். அவளுக்குத் திருமணம் செய்விக்க வேண்டும் என்று அப்பிராமணன் நினைத்துக் கொண்டிருந்தபோது. அவர்கள் வீட்டு வாயிலில் அழகு பொருந்திய ஏழைப் பிராமணன் ஒருவன் வந்து அன்னப்பிச்சை கேட்டு நின்றான். அவனைக்கண்ட கோபாலன். தன் மகளுக்கு ஏற்ற வரன் இவனே என்று முடிவு செய்து. அவனிடம் தன் கருத்தைச் சொல்லி கலந்துரையாடினான். அவனும் அதற்கு இசைந்து உற்பலாங்கியை மணமுடிக்க விருப்புற்றான். கோபாலன் தன் மனைவியிடம் கலந்து ஆராய்ந்த பின்னர்

மணப்பந்தல் அமைத்து. சில சடங்குகளைச் செய்தான். பின்னர் தன் மகளைக் கன்னிகாதானம் செய்யும் முன் மணமகன் மரணமடைந்தான். இவ்வாறு இருபது நபர்கள் கன்னியாகிய உற்பலாங்கியைத் திருமணம் செய்துகொள்ளும் முன் மரணமடைந்தார்கள். இவளுடைய பெற்றோரும் சிறிது காலத்தில் காலமடைந்தனர். அதன் பின் உற்பலாங்கி தனக்கேற்ற நாயகனை அடையும் பொருட்டுப் பல சிவதீர்த்தங்களிலே மூழ்கி இறைவனை வழிபட்டு வந்தாள். இறுதியாகத் திருப்பூவணம் வந்து சேர்ந்தாள். திருப்பூவணத்தில் மணிகன்னிகைத் தீர்த்தத்திலே நீராடினாள். அத்தீர்த்தக் கரையில் காலவமுனிவர் என்பவரைக் கண்டு வணங்கித் தான் வந்த நோக்கத்தைக் கூறினாள். அதனைக் கேட்டறிந்த முனிவர் உற்பலாங்கிக்கு இத்தகைய துன்பங்கள் ஏற்படக்காரணம் முற்பிறவியிலே கௌரிதேவியின் விரதம் மேற்கொண்டு விரதத்தை முறைப்படி முடிக்காமல் விட்டதால் இப்பிறவியிலே இத்துன்பங்கள் நேர்ந்ததெனச் சொன்னார். மணிகன்னிகை தீர்த்தத்தில் நீராடிவிட்டதால் இப்பாவங்கள் நீங்கி மங்களம் உண்டாகும். மேலும் நீ. “இத்தீர்த்தத்தில் மலர்ந்துள்ள தாமரை மலரையும். உற்பல மலரையுங் கொண்டு உமாதேவியாரை விதிப்படி பூசனை

செய்து வழிபட்டால் அம்மை நேரில் எழுந்தருளி மங்களந்தந்தருளுவார்” என்று முனிவர் சொல்லியருளினார். உற்பலாங்கியும் அவ்வாறே செய்து தேவியாரின் திருவருளினாலே நல்ல கணவன் வாய்க்கப் பெற்று. தீர்க்க சுமங்கலியாயிருந்தாள். “இத்தீர்த்தத்திலே இடபராசியில் சந்திரன் இருக்கும் செவ்வாய்க்கிழமைகளில் அமங்கலிகள் நீராடினால் மறுபிறப்பிலே தீர்க்க சுமங்கலிகளாக வாழ்வர்“. சுமங்கலிகள் நீராடினால் பிள்ளைப்பேறு அடைவார்கள். இத்தகைய புண்ணிய தீர்த்தங்கள் உடையது திருப்பூவணத் திருத்தலமாகும்.

7. பாஸ்கரபுரச் சருக்கம்

காசிபமுனிவருக்கும் அதிதிக்கும் மகனாகப் பிறந்த சூரியன். துவட்டாவின் மகளாகிய பிரபையை மணந்து வாழ்ந்துவந்தான். அவள் சூரியனின் வெப்பத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாதவளாய்த் தனது நிழலைத் தன்னைப் போலப் பெண்ணாக மாற்றிச் சூரியனிடத்தில் நிறுத்திவிட்டுப் பெண்குதிரை வடிவமெடுத்து. வட நாட்டிற்குச் சென்று ஒரு வனத்தில் சூரியனின் வெம்மையைப் பொறுக்கும்படிச் சூரியனை நினைத்துத்

தவம் மேற்கொண்டாள். இதனை உணர்ந்த சூரியன் ஆண்குதிரை வடிவமெடுத்து அவள் இருக்குமிடத்தை அடைந்து அவளைக் கலந்தான். பிறகு சூரியனும் பிரபையும் ஆகாய வழியாகச் செல்லும் போது தேவர் முதலியோரைச் சந்தித்துச் சூரியமண்டலத்தினைக் கடைந்து செப்பம் செய்தனர். அப்போது பொறி ஒன்று தோன்றி முதலில் திருப்பூவணத்தில் விழுந்தது. பின்பு மற்றைய தலங்களுக்குப் விரிந்து பரந்தது. இதனால் இவ்வூர் பாஸ்கரபுரம் என்னும் பெயர் பெற்றது என்பர். சூரியனும் பிரபையும் திருப்பூவணக் கோயிலையும். மற்ற கோயில்களையும் தரிசித்தது போன்றே நாமும் உபவாசம். விரதம். ஜபம் ஆகியவற்றை அன்புடன் செய்தால் முத்தி பேறு எய்துவது நிச்சயமாகும் எனக் கூறப்படுகிறது. இத்தகைய சிறப்புக்களை உடையது திருப்பூவணத்திருத்தலமாகும்.

8. சர்வ பாவ விமோசனச் சருக்கம்

இச் சருக்கத்திலே ஒவ்வொரு திங்களிலும் இத் திருப்பூவணத் தீர்த்தமாகிய மணிகன்னிகைத் தீர்த்தத்திலே நீராடி. ஈசனை வழிபடும் முறைகள் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

சித்திரை மாதத்தில். முதலில் வைரவக் கடவுளை வணங்கிப் பின் சிவபெருமானை வழிபட்டுச் சூரியோதயத்திற்கு முன் மணிகன்னிகைத் தீர்த்தத்திலே நீராடினால் கொலை முதலிய பாவங்கள் நீங்கும். குட்ட நோயுடையோர் மற்றும் கொடிய நோயுடையோர் இத்தீர்த்தத்திலே நீராடினால். அந் நோய்கள் ஒழியப் பெறுவர்.

வைகாசி மாதத்தில் புதன்கிழமைகளில். இத் தீர்த்தத்தில் மூழ்கி நீராடினால். பொருட்களவின் பாவம் போகும். இதே திங்களில் இங்கு பொருட்களைத் தானம் செய்வோருக்குப் புத்திரர்கள் எள்.தயிர். பால். உளுந்து மற்றும் வெல்லம் இவைகளுடன் அறுசுவைக் கறியமுது செய்விப்பார்கள். சந்தனம். பொட்டு மற்றும் ஆபரணம் முதலியவற்றைத் தானம் செய்வோர்கள் சுகம் அனுபவிப்பர்.

மாசிமாதத்திலே மாமக காலத்தில் மூழ்குவோர் பாவங்களைப் போக்குவர்.

மார்கழி மாதத்தில் நீராடு வோர். சொர்க்கம் சேர்ந்து 14 இந்திரப் பட்டம் வரை வாழ்ந்து பூலோகத்தில் அரசராவர்

என்று கூறப்படுகிறது

கார்த்திகை மாதத்தில் நீராடுவோர் சிவபுரம்சேர்வர். இவ்வாறாக மணிகன்னிகைத் தீர்த்தத்தின் சிறப்புக்களாக ஒவ்வொரு மாதமும் நீராடினால் கிடைக்கும் பலன்பற்றி இச்சருக்கத்திலே கூறப்பெற்றுள்ளது.

9. பிரமசாப விமோச்சனச் சருக்கம்

திருக்கயிலாய மலையில் உள்ள திருமண்டபத்தில் தேவர் முதலியோர் சூழ்ந்திருக்கச் சிவனும் உமாதேவியாரும் வீற்றிருந்தனர். நந்திதேவர் துதிசெய்து கொண்டு இருந்தார். அரம்பை. மேனகை. ஊர்வசி. திலோத்தமை முதலிய தேவரம்பையர்கள் திருநடனம் புரிந்தார்கள். அவர்களில் ஊர்வசி தனித்தாடியபோது சிவபிரான் மகிழ்ந்திருந்தார். அவ்வேளையில் ஊர்வசியின் இடையில் உடுத்தியிருந்த ஆடை சற்றே ஒதுங்கியது. இதனால் மற்றவர்கள் அனைவரும் அஞ்சித் தலைகவிழ்த்தனர். ஆனால் பிரமன் ஒருவன் மட்டும் அவ்விடத்தை உற்று நோக்கினான். அதனை உணர்ந்த சிவபிரான். சினங்கொண்டு நமது சந்நிதியிலே நிற்க உனக்கு அருகதையில்லை எனக் கூறினார். உடனே பிரமன் சிவனது பாதங்களில் விழுந்து

தொழுதான். அவனது அன்பை உணர்ந்த சிவபிரான் இது போன்று நமது சந்நிதியில் தவறுகளை இழைப்போர் நரகவாசியாவான் என்று கூறித் தவறை உணர்ந்த பிரமனுக்குப் பிராயச் சித்தமாக திருப்பூவணத்திலே தேவியினால் பூசிக்கப்பட்ட மகாலிங்கத்தைப் பூசித்தால் கருணை புரிவதாக அருளிச்செய்தார். பிரமனும் அவ்வாறே திருப்பூவணம் வந்து இறைவனை வழிபட்டான். அங்கே தவஞ் செய்துகொண்டிருந்த விஷ்ர்வைக் கண்டு தான் பூமிக்கு வந்த வரலாற்றைக் கூறி உரையாடினான். பிரமன் தேவகம்மியனை வரவழைத்து புட்பவனேசுவரருக்கு ஆலயம் அமைக்கும்படிச் சொல்ல. அவனும் அவ்வாணைப்படித் திருக்கோயில் அமைத்தான். பிரமன் அத்திருக்கோயிலினுள் புகுந்து சிவலிங்கத்தைப் பூசித்து சிவயோகத்தில் இருந்தான். அதனை உணர்ந்த சிவபிரான் பிரமனுக்குக் காட்சியருளி அவன் செய்த பாவத்தைப் போக்கி இப்பூவணத்தில் வசிப்பவருக்கும் பாவம் தீரும்படி அருளினார். திருப்பூவணத்தில் இறைவன் சுயம்புலிங்கமாய்த் தோன்றியருள. அங்கு பிரமனால் கோயில் கட்டப்பட்ட வரலாற்றைக் கதையாகக் குறிப்பிடுகிறது இச்சருக்கம்.

10. இலக்குமி சாப விமோசனச் சருக்கம்

இச்சருக்கத்தில் வைகுண்டத்தில் இலக்குமி செய்த பாவத்தைப் போக்க இத்தலம் வந்த வரலாறு கூறப்படுகிறது.

வைகுண்டத்தில் ஆடிப்பாடிய அரம்பை. வித்தியாதரன் முதலியோருக்கு வேண்டிய வரங்களை அருளி சயனமண்டபத்தில் இலக்குமிதேவி திருவடிப் பணிசெய்ய. விஷ்ர் நித்திரை புரிந்திருந்தார். அவ்வேளையில் வாலகில்லி என்ற முனிவர் வந்துள்ள செய்தியை. சேடியர் மூலம் கேள்விப்பட்ட இலக்குமி தேவி. அம்முனிவர் குள்ளமானவராய் (குரூபிகளாய்) இருத்தல்பற்றி எள்ளி நகையாடினாள். அதனால் கோபமுற்ற முனிவர் விஷ்ர்வையும் மதியாது வைகுண்டத்தை விட்டு வந்தவழியே திரும்பிச் சென்று விட்டார். அப்பொழுது நித்திரை நீங்கிய விஷ்ர் பெருமான் இதுவரை நான் அந்தணர்களுக்கு அன்பன் என்பதை நீ இப்போது மாற்றி விட்டாய். உயர்ந்த குலமகளாய்க் கணவன் கருத்தின் வழி ஒழுகுபவளாயினும் அந்தணர்களை அவமரியாதை செய்தால் அவள் குலத்திற்குக் கேடு விளைவிப்பவளாவாள் என்று சபித்தார். அச்சாபத்தையடைந்து இலக்குமி தேவி திருப்பூவணம் சேர்ந்து தவம் செய்தாள். விஷ்ர் மூர்த்தி பயந்து விரைந்து

சென்று முனிவரிடம் தன் மனைவி நகைத்ததைப் (கேலியாகச் சிரித்ததைப்) பொறுத்துக் கருணை புரிய வேண்டும் என்று வேண்டினார். அதற்கு அம்முனிவர் இலக்குமியானவள் பன்னிருவருடம் மணிகன்னிகையில் மூழ்கித் தவம் செய்ய. விஷ்ர்வாகிய நீ போய் புட்பவனேசுவரரைப் பூசித்தால் அவமதித்த அபராதமும் சாபமும் நீங்கி வைகுண்டத்தில் வாழ்வாய் எனப் பாவ விமோசனம் கூறினார்.

பிறகு விஷ்ர் பெருமான் முனிவரிடம் அவர் வந்த காரணத்தை வினவினார். அதற்கு வாலகில்லி முனிவரும் நாங்கள் செய்யும் வேள்வியை நீ காத்தல் வேண்டும் எனக்கூறினார். இதனால் அங்ஙனமே முனிவர்கள் வேள்வியைக் காத்தருளினார். பின்பு திருப்பூவணம் சேர்ந்து சிவலிங்கப் பெருமானைப் பூசித்ததினால் இலக்குமிக்கு உண்டான அபராதமும் சாபமும் நீங்கப் பெற்று அவளோடு வைகுண்டம் சேர்ந்து வாழ்ந்தார்.

சித்திரை மாதத்திலே ஆதிவாரத்திலே (ஞாயிற்றுக்கிழமைகளில்) விஷ்ர் தம் பெயரால் உண்டாக்கிய சிவலிங்கத்தை மணிகன்னிகைத் தீர்த்தத்திலே மூழ்கி வழிபட்டால் பாவம் நீங்கி

விஷ்ர்பாதத்தில் முத்தி பெறுவர்.

11. உமாதேவி திருஅவதாரச் சருக்கம்



ஒருசமயம். தட்சன் பிரமாவிடம் முழுமுதற் கடவுள் யார் என வினவினான். அதற்குப் பிரமாவும் சிவன்தான் என்று கூறினார். இப்பதிலைக் கேட்ட தட்சன். படைத்தல். காத்தல். அழித்தல் ஆகிய முத்தொழில்களும் முறையே மூவர்களுக்கும் உரியதாய் இருக்க. சிவனை மட்டும் முதற்கடவுள் எனக் கூறுவது என்பது பொருந்தாது எனக் கூறினான். அதனைக் கேட்ட பிரம்மா என்னையும் விஷ்ர்வையும் உண்டாக்கிப் பின்பு இவ்வுலகத்தைப் படைக்கவும். காக்கவும் சிவபெருமான் அதிகாரம்

கொடுத்தார். ஆதலால் அவரே முழுமுதற் கடவுள்– அவரை நோக்கி நீ தவஞ் செய்வாய்ஸ எனக் கூறியருளினார். அவ்வாறு தட்சனும் தவஞ் செய்ய. சிவபெருமான் எழுந்தருளினார். தட்சனும். சிவபெருமானிடம் அவரை நோக்கி உம்மை வணங்குவோர் அனைவரும் என்னை வணங்கவும். என்பணி செய்யவும். யான் உன்னை மாத்திரம் பணியவும். இந்திரபதம். பிரம்மபதம். விஷ்ர்பதம். அசுரபதம் முதலிய எல்லாம் என்னுடைய ஆணைவழி ஒழுகும்படி நான் தலைவனாய் இருக்கவும் எனக்குப் புதல்வர் புதல்வியரைக் கொடுத்து அவர்கள் இறக்காமல் இருக்கவும். உமாதேவி எனக்கு மகளாகப் பிறக்கவும். நீர் அத்தேவியைத் திருமணம் புரியவும் வரமருள வேண்டும்" என வரங்கள் கேட்டான். சிவபெருமானும் அவ்வாறே வரங்கள் அருளினார். வரம் பெற்ற தட்சன் பிரமாவை அழைத்து "மகாபுரம்" என்னும் நகரை அமைத்தான். அந் நகரிலிருந்து அரசாட்சி செய்து. வேதவல்லியை மணந்து கொண்டான். பின்பு புத்திரர்களைப் பெற்று விவாகம் செய்து கொடுத்து பாக்கியத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தான். அந் நேரத்தில் திருக்கைலாயத்தில் உமா தேவியார் சிவனை வணங்கி உயிர்களுக்கு முத்தியருளும் முறையை அருளிச் செய்ய

வேண்டும் என்று விண்ணப்பம் செய்த போது. சிவபிரான். உமாதேவியாரைப் படைத்து முத்தி கொடுப்பதாகக் கூறினார். பின்பு காளிந்தி நதியிலே தாமரை மலரிலே வலம்புரிச்சங்கு வடிவாய் நீ தவம் புரிந்தால். தட்சன் உன்னைக் குழந்தையாகக் கொண்டு வளர்ப்பான் எனக்கூறி அருளினார். பிறகு நான் வந்து உன்னை மணம் செய்து கொண்டு இக்கயிலைக்கு வருவோம் என்றார்.

உமாதேவியாரும் அந்த ஆணைப்படித் தவஞ் செய்ய. வேதவல்லியோடு தட்சன் நீராடிய போது. கமலமலரிலே தங்கிய சங்கினைக் கண்ர்றுக் கைகளினால் அள்ளிய போது. உமாதேவியார் குழந்தை வடிவாகினார். அக்குழந்தையைத் தங்கள் மகளாக வளர்த்து வந்தனர். உமாதேவியின் ஆறாவது பருவமாகிய (26முதல் 31 முடிய) தெரிவைப் பருவத்தில் கன்னிமாடத்தில் சிவபிரானை நோக்கித் தவஞ் செய்து கொண்டிருந்தாள். சிவனும். பிராமணன் வடிவம் கொண்டு வர. அவரை வணங்கி உபசரித்தாள். பிரமச்சாரிப் பிராமணனாக வந்த சிவபெருமானும். தேவியிடம். உன்னை மணம் செய்யும் பொருட்டு வந்தோம் எனக் கூறினார். அதற்கு அஞ்சிய தேவியார் வஞ்சக வேடம் தாங்கி வந்தாய் போலும் எனச் சினந்து கூறினார். மேலும் நான் சிவனை மணம்

புரியும்பொருட்டுத் தவம் செய்கிறேன் என்றும் கூறினார். அப்போது. “இறைவன் வந்து மணம் புரிதல் அருமை” எனத் தேவியை இகழ்ந்தார். இதனால் தேவியார் மேலும் வருந்தி. அருந்தவம் செய்வேன் எனக் கூறினார். சிவன் தன் உண்மை வடிவை வெளிப்படுத்தத் தேவியார். கண்ணீர் ஒழுக அவரைத் தரிசித்தார். இந்நிகழ்ச்சிகளைக் கண்ர்ற்ற சேடியர் ஓடிச் சென்று தட்சனிடம் சொல்லினர். தட்சனும் சிவனுக்கே தனது மகளை மணம் செய்து கொடுப்பேன் என உறுதிபூண்டான்.

12. திருக் கலியாணச் சருக்கம்

தட்சன் உமா தேவியாருக்குத் திருமணம் செய்விக்கும் பொருட்டு. அனைத்து வேலைகளையும் துவக்கி. புத்திரிகளையும் வரவழைத்தான். விஷ்ர் பிரம்மா ஆகியோரும் வந்தனர். சிவன் உமாதேவியார் தவஞ்செய்யும் இடத்திற்கு எழுந்தருளினார். அப்போது. தட்சன் சிவபெருமானைத் திருமண மண்டபத்திற்கு எழுந்தருள வேண்டுமென வேண்டினான். அவ்வாறே எழுந்தருளிய சிவபிரானுக்கு. வேதவல்லி பசும்பால் வார்த்து பாதபூசை செய்தாள். தேவர்கள் சூழ உமாதேவியார் திருமணக்கோலம் கொண்டு சிவபிரான்

அருகே அமர்ந்தார். பிரம்மா அக்கினி வளர்த்துத் திருமணச் சடங்குகளை முடிக்கும் போது. சிவபிரான் மறைந்தருளினார். பெரிதும் வருந்திய உமாதேவி அருந்தவம் செய்தார். தட்சன் தேவர்களை அனுப்பிவைத்துவிட்டுச் சிவனை நிந்தித்துக் கொண்டிருந்தான். இவ்வாறு இருக்கும் போது. சிவபிரான் உமாதேவியாருக்குக் காட்சியளித்து அவரை இடபவாகனத்திலே அமரச் செய்து கைலாயத்திற்கு அழைத்துச் சென்றார். இவ்வாறு தட்சனுக்குக் காட்சியளிக்காமலேயே உமாதேவியாரைக் கவர்ந்து சென்றதால். தட்சன் தேவர்களை அழைத்து. இன்று முதல் சிவபிரானை நீங்கள் வழிபடக்கூடாது என ஆணையிட்டான்.

13. தட்சன் வேள்வியழித்த சருக்கம்

பார்வதிதேவியின் தந்தையாகிய தட்சன் நடத்திய யாகத்திற்கு அவளது கணவன்–பரமேஸ்வரனுக்கு அழைப்பு இல்லை. இதனால் அழையா விருந்தாளியாக யாகத்திற்குச் செல்லக்கூடாது என்பது ஈசன் விருப்பம். இருப்பினும் தனது தந்தை நடத்தும் யாகத்திற்குச் சென்று தந்தைக்கு முறைப்படி எடுத்துக் கூறி. ஈசனையும்

அழைக்கச் செய்யவேண்டும் என்பது உமையம்மையின் விருப்பம். இதனால் பார்வதி பரமேசுவரருடன் தர்க்கம் செய்தார்.

தட்சன் சிவபிரானை விலக்கி திருமால் முதலிய தேவர்கள் சூழ வேள்வி செய்யத் துவங்கினான். இதனை நாரதர் சிவனிடம் தெரிவித்தார். அப்போது உமாதேவியார். சிவனின் திருஉள்ளம் உணராமல் தட்சனின் யாகசாலையை அடைந்தார். தன் மகள் வேள்விக்கு வந்திருப்பதைக் கண்ட தட்சன் மிகுந்த கோபமுற்று. நீ கயிலைமலைக்குத் திரும்பிச் செல்லலாம் எனக் கூறினான். உமா தேவியார் கடுஞ்சினம் கொண்டு அவ்வேள்வி அழிய உன்னுடைய தலையும் ஒழிந்திடுக எனச் சபித்தார். பின்பு மூலாக்கினியை எழுப்பி அதிலே மூழ்கி தட்சன் வளர்த்த யாககுண்டத்திலே அவதரித்தாள். இந்நிகழ்ச்சிகளை திருநந்தி தேவர் வழியாக அறிந்த சிவபிரான். நெற்றிக் கண்ணிலிருந்து வீரபத்திரக் கடவுளைப் படைத்து தட்சனின் சிரத்தை அறுத்து. அவனது வேள்வியையும் அழித்துவிடு யாமும் வருவோம் என்று திருவாய் மலர்ந்தருளினார். வீரபத்திரக் கடவுளும் அவ்வாணைப்படி. தட்சனது தலையை அறுத்து யாக குண்டத்திலே போட்டார். அப்போது சிவன்

எழுந்தருளினார். உடனே திருமால் வணங்கிப் பிரார்த்தனை செய்தமையால். வீரபத்திரக் கடவுள் முகமாகச் சிவபெருமான் தேவர்களைப் பிழைப்பித்தார். பின் பிரம்மா வணங்கிக் கேட்டுக் கொண்டபடி ஆட்டின் தலையைத் தக்கனுக்கு அமைத்து எழுப்பினார். சிவபிரான் பார்வதி தேவியாருடன் திருக்கயிலாய மலை சேர்ந்து யோகியாய் எழுந்தருளினார். ஈசனின் விருப்பத்திற்கு மாறாகச் சென்றதும். அவரை எதிர்த்துச் சண்டைச் செய்ததும் இறைவி அறிந்து செய்த பாவங்கள் அல்லவா? இப்பாவங்களை இறைவியே செய்துவிட்டாரேஸ இவ்வாறு அறிந்து செய்த பாவத்தைப் போக்க பிராயச்சித்தம் செய்ய வேண்டுமென பார்வதி தேவி விரும்பியிருந்தார்.

14. உமைவரு சருக்கம்

சிவபெருமானும் நீ போய்த் திருப்பூவணத்தலத்தில் தவம் செய். அங்கே ஒரு மூல லிங்கம் தோன்றும். அதனை நீ பூசித்தால். தாம் வெளிப்படுவதாகக் கூறி உமா தேவிக்கு அருள்புரிந்தார். உமா தேவியாரும் அவ்வாறே பாரிசாத மரத்தை வளர்த்து அதன் நிழலிலே தவஞ் செய்தார். அம்மரத்தின் அடியிலே சிவலிங்கம் முளைத்தது.

அதனையறிந்து பூசித்து வழிபட்டார். சிவனும் வார்த்தை கடந்த பாவத்தை மாற்றி அமர்ந்திருந்தார்.

இதுவே திருப்பூவணத்தில் சுயம்புலிங்கமாய்ச் சிவபிரான் தோன்றிய வரலாறு ஆகும். இவ்விடத்தில் தினையளவு தானம் செய்தாலும் அது புண்ணியத்தைச் சேர்க்குமிடமாகும்.

இங்கே வேதம் உணர்ந்த அந்தணன் ஒருவன் சிவார்ச்சனை செய்து உடலினை வெறுத்து. இலைக்கறி மாத்திரம் உண்டு சிவ யோகத்தில் அமர்ந்திருந்தான். பெருமழை பெய்யும் ஒரு நாள் இரவிலே ஒரு பிராமணன் அச்சிவயோகியின் பர்ணசாலையை அடைந்தான். சிவயோகியும் வணங்கி அவரை வரவேற்று தனக்கிருந்த இலைக்கறியில் ஒரு பங்கை அவருக்கும் கொடுத்து உண்பித்தான். பிராமணனும் அவ்விலைக் கறியை உண்டு மகிழ்ந்தார். அதனால். சிவபிரானும் திருஉள்ளம் மகிழ்ந்து அருளினார். இலைக்கறி படைத்த அந்தணர் முன்னே சிவன் தோன்றி பிறவி அறுமாறு அருள் செய்தார். அவனுக்கு மரணம் நேரிட்டபோது வேதாந்த முடிபாகிய சித்தாந்தத்தை உபதேசித்தார். எனவே “இத்திருப்பூவணத் திருத்தலத்திற்கு ஒப்பான எந்த ஒரு தலமும் இல்லை எனக் கூறப்படுகிறது .

15. சுச்சோதி தீர்த்தயாத்திரைச் சருக்கம்

கோதாவிரி நதிக் கரையிலே. போகவதி நகரத்திலே. தேவவன் மாவென்னும் அரசன் ஒருவன் ஆட்சி செய்திருந்தான். அவனுக்குச் சுச்சோதி முதலான நான்கு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களுக்குத் திருமணம் செய்வித்து. மூத்த புத்திரனாகிய சுச்சோதி என்பவனுக்கு முடிசூட்டி முறைப்படி அரசாட்சியை அவனிடம் ஒப்புவித்துவிட்டு தருமசீலையென்னும் மனைவியோடு வனத்தை அடைந்து தவம் செய்தான். பின்னர் அவனும் அவனது மனைவியும் சிவபதமடைந்தனர். அவ்விருவருக்கும் சுச்சோதி கர்ம காரியங்களை முடித்தபின் நாரதமுனிவர் அவனைச் சந்தித்து. “உன் முன்னோர்கள் நீ செய்யுந் தில (எள்) தருப்பணத்தை நேரிலே பெறும்வரை தருப்பணஞ் செய்வாய்” என்று கூறினார். சுச்சோதி அரசனும். தன் சேனைகள் சூழப் புறப்பட்டுப் பிரயாகை. அரித்துவாரம். அவந்தி. மாளவம். காகோலம். நீலகண்டம். திரிகூடவீசம் ஆகிய வடநாட்டுத் தலங்களிலும். காஞ்சீபுரம். தில்லைவனம் ஆகிய தென்நாட்டுத் தலங்களிலும் முறைப்படியாகத் தீர்த்தங்களாடிச் சிவபிரானைத் தரிசித்துப் பிதிர்களை நோக்கித் தில தருப்பணஞ்செய்தான். பின்னர்

பாண்டியநாட்டிலே திருவாலவாய் சேர்ந்து. பொற்றாமரைக் குளத்திலே மூழ்கி அவனது முன்னோர்களுக்குத் திலதருப்பணஞ்செய்து மீனாட்சி சமேத சுந்தரேசுவரரை வழிபட்டு அங்கே தங்கினான். அவ்வாறு தங்கியிருக்கும் போது. ஒரு தினம் இத்தனை தலங்களில் திலதருப்பணம் செய்தும் முன்னோர்கள் நேரில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள வில்லையேஸ ஒருவேளை. “நாரதமுனிவர் கூறிய வார்த்தை விநோதமோ் என்று கருதி மனம் வருந்தியிருந்தான். அப்போது நாரதமுனிவர் அங்கு வந்து இத் திருவாலவாய்க்குக் கிழக்குத் திசையில் திருப்பூவணம் என்னும் தலம் உள்ளது. அத்தலம் சிவபிரானுக்கும். முனிவர்களுக்கும். பிதிர்களுக்கும் திருவுள்ளம் மகிழத்தக்க தலமாக உள்ளது. “நீ அங்கே சென்று உன் பிதிர்களுக்குத் தில தருப்பணம் செய்தால் அதனை அவர்களே நேரில் வந்து பெற்று முத்திடையவார்கள் என்றார். அங்ஙனமே அரசன் திருப்பூவணஞ் சேர்ந்தான்” .

16. சுச்சோதி பிதிர்களை முத்தியடைவித்த சருக்கம்

நாரத முனிவர் அருளியபடித் திருப்பூவணஞ் சேர்ந்த சுச்சோதிராசன். மணிகன்னிகைத் தீர்த்தத்திலே நீராடிச்

சிவலிங்கப் பெருமானை வழிபட்டு வரும் நாளிலே. ஒருநாள். காலவமுனிவரைக் கண்ர்ற்று வணங்கி. அவரது ஆசிர்வாதம் பெற்று. வைகைநதி முதலிய தீர்த்தங்களிலே அமாவாசைதினத்திலே நீராடி. தன்னோடு வந்த மூவாயிரம் முனிவருக்கும் அறுசுவைக் கறியமுதுடன் திருவமுது செய்வித்து. திருப்பூவணேசருக்குப் பூசைகள் நடத்தி. மணிகன்னிகைத் தீர்த்தத்தை அடைந்து நீராடி. சங்கற்பம் பண்ணிப் பிதிர்களை ஆவாகித்து. “என்னுடைய பிதிர். பிதாமகர். பிரபி அனைவரும் எனக்கெதிரிலே தோன்றி நான் கொடுக்கும் எள்ளையும். தண்ணீரையும் பிண்டத்தையும் ஏற்றருளவேண்டும்ஃ ஏற்றருளாவிடின். எனதுயிரை விட்டுவிடுவேன்” என்று அனைவரும் கேட்கும்படியாகச் சொல்லிப் பிண்டம் கொடுத்தான். அப்போது மற்றவர்களுக்குத் தோன்றாமல் அவ்வரசனுக்கு மட்டும் பிதிர்கள் அனைவரும் தேவவடிவங்கொண்டு எதிரிலே தோன்றிப் பிண்டத்தை உண்டு அரசனை ஆசிர்வதித்தனர். இதனால் அரசன் மகிழ்ந்தான். பின்னர் அவனது முன்னோர்கள் சிவபிரான் திருவடிநிழலிற் சேர்ந்தார்கள். சிவபிரான் திருவருளினாலே சுச்சோதிராசன் சீவன் முத்தி பெற்றான். மூவாயிரம் முனிவர்களும் பிதிர்கள் பொருட்டுத் தானஞ் செய்தமையால்

அம்முனிவர்களுடைய பிதிர்களும் நற்கதி பெற்றனர். இக்காரணத்தாலே இத்தலமானது பிதிர்முத்திபுரம் என்று பெயர் பெற்றது. புட்பவனேசர் திருக்கோயிலுக்கு நிருதித்திக்கிலே (தென்மேற்குத்திசை) சுச்சோதிராசன் தன்னுடைய தந்தை தேவவன்மாவின் பெயராலே ஒரு சிவலிங்கத்தை நிறுவினான். பின்பு அவ்வரசன் மூவாயிரம் முனிவர்களோடு போகவதி நகரஞ் சேர்ந்தான்.

"திருப்பூவணத் தலத்திலே பிதிர்களுக்குத் திலதர்பணஞ் செய்வோர் அளவில்லாத பயன் பெறுவர்" என்ற கருத்தும் "பிதுர் முத்திபுரம்" என்ற பெயர் ஏற்பட்டதற்கான காரணமும் இச் சருக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

திதி – தருப்பணம் செய்தல் – திருப்பூவணத்தில் 1) _ கோவிந்தராஜன் ஐயங்கார். 2) _ கிருஷ்ண ஐயங்கார் மற்றும் 3) _ ரெங்கநாத ஐயங்கார் இவர்களது குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாகத் திதி மற்றும் தர்ப்பணங்களைச் செய்து வருகின்றனர். திருக்கோயில் அருகே உள்ள அக்ரகார வீதியில் இவர்களது வீடுகள் உள்ளன.

17. தீர்த்தச் சருக்கம்

கார்த்திகை மாதம் பிறக்கும் புண்ணிய காலத்திலும். ஞாயிற்றுக்கிழமைகளிலும் சூரியோதயத்திற்கு முன்னே. மணிகுண்டத் தீர்த்தத்திலே. சூரிய மந்திரம் உச்சரித்து மூழ்குவோர். அவர்கள் விரும்பியவற்றை அடைந்து. முடிவிலே சிவலோகஞ்சேர்வர். அம்மணிகுண்டத்திலே மூழ்கி அந்தணர்களுக்கு உடல் உழைப்பைத் தானஞ் செய்வோர் குன்ம(குட்டநோய்)முதலிய நோய்கள் நீங்கி. முடிவிலே சூரியஉலகம் அடைவர். அத்தீர்த்தத்திலே. மார்கழி மாதத்தில் செவ்வாய்க்கிழமைகளில் மனைவியுடன் மூழ்குவோர் புத்திரப்பேறு அடைவர். திருவைந்தெழுத்தை உச்சரித்து அசுவதி நட்சத்திரத்திலே மூழ்குவோர் இறுதியிலே சிவலோகம் அடைவர். முழுநிலவு நாட்களில் பிரமதாண்டவ மூர்த்தியைப் (திருப்பூவண நடராசரை) பூசிப்போர் மகேசர் உலகத்திலே ஒரு கர்ப காலம் வரையிலே தங்கிப் பின்பு சிவலோகம் சேர்வர். மக(ஆவணி) மாதத்திலே சூரியோதய காலத்திலே. சூரிய மந்திரம் உச்சரித்துச் சிவபிரான் திருமுன்னர் நாடகஞ் செய்வோர் இறுதியிலே நற்கதி பெறுவர். சூரியோதயத்திற்கு முன் வைகை நதியிலே மூழ்கி. சிவராத்திரியிலே உறக்கமின்றி நான்கு யாமமுஞ் சிவபூசை செய்து. தானங்கள் செய்வோர் இறுதியிலே

சிவலோகம் சேர்ந்து வாழ்வர். மணிகன்னிகைத் தீர்த்தத்தில் இடப(வைகாசி)மாதத்தில் விசாக நட்சத்திரத்திலும். தட்சணாயத்தில் கிரகண காலத்திலும் நீராடுவோர். பல வகையான தானஞ் செய்த பயனைப் பெறுவர். சிவசந்நிதியில் இரண்டம்பு செல்லுந் தூரத்தில் வசிட்ட தீர்த்தத்தில் மூழ்குவோர் இறுதியிலே பிரமபதம் பெறுவர். சூரியோதயத்திலே இந்திரத் தீர்த்தத்திலே. பங்குனி மாசம் உத்தர நட்சத்திரத்தில் மூழ்குவோர் யாகபலத்தை அடைவர். பன்னிரண்டு தினங்கள் மூழ்குவோர் சாகயாகபலனைப் பெறுவர். ஒரு மாதம் மூழ்குவோர் அசுவமேத யாகப் பலனைப் பெறுவர். அத்தீர்த்தத்தைப் பருகுவோர் அக்கினி Πக்ஷாம பலனை அடைவர்.

இவ்வாறு திருப்பூவணத் திருத்தலத்தில் உள்ள தீர்த்தங்களையும். அவற்றில் எந்த நாட்களில் எவ்வாறு நீராட வேண்டும் என்பது பற்றியும். அவ்வாறு நீராடி இறைவனை வணங்குவதால் ஏற்படும் பலன்களை எல்லாம் குறிக்கும் வண்ணம் இச்சருக்கம் அமைந்துள்ளது.

18. நளன் கலிமோசனச் சருக்கம்

நளச்சக்கரவர்த்தி வேட்டையாடி முடித்து வேடரோடு

மதியஉணவு உண்டு மரநிழலிலே நித்திரை செய்தான். அப்பொழுது. மரத்திலிருந்து கீழே வீழ்ந்த பாம்பு தீண்ட. உடல் கருத்ததாகக் கனவு கண்டு விழித்தான். கனவிற்குப் பிராயச்சித்தம் செய்தும் நளராசனுக்கு ஊக்கமுண்டாகவில்லை. பின்பு நளராசன் சூதாடி எல்லாவற்றையுந் தோற்றுத் துன்பமுற்று. மனைவி புத்திரர்களை விட்டு வனம் புகுந்தான். புகுந்தபின்னர் நகுடன் என்பவன் பாம்பாகித் தீண்டினமையால் உடல் முழுவதும் ஒளி மழுங்கிக் கருமையுற்றான். பின்னர் நளராசன் இருதுபன்ன மன்னனிடம் தேர்ப் பாகனாகச் சேர்ந்திருந்தான். அவனுடன் தமயந்தி சுயம்வரத்திற்குச் சென்று அவளை மனைவியாக அடைந்தான். மீண்டும் சூதாடி வென்று. அரசாண்டு. மனைவி மைந்தருடன் நால்வகைச் சேனைசூழத் தீர்த்தயாத்திரைக்குப் புறப்பட்டான். பிறகு கேதாரம் காசி முதலிய தலங்களை அடைந்து. தீர்த்தமாடிச் சிவலிங்க மூர்த்திகளைத் தரிசித்துக் கொண்டு. மதுரையை அடுத்துத் திருப்பூவணம் சேர்ந்து சுவாமியையும் அம்மையையும் தரிசனஞ் செய்து வழிபட்டான். திருப்பூவணத்தின் மகிமையையும் அப்பதிக்குத் தான்வந்த பின்னர்த் தனக்குண்டாகிய மனநிம்மதியையும் உணர்ந்து ஈசனை வணங்கி

இத்திருப்பூவணத்தலத்திலேயே தங்கினான். தானங்கள் கொடுத்து புட்பவனேசருக்கு மகோற்சவம் நடத்தினான்.

19. திருவிழாச் சருக்கம்

நளச்சக்கரவர்த்தி. திருப்பூவணேசருக்குத் திருவிழா நடத்தத் தொடங்கி. வளர்பிறையிலே புனர்பூச நட்சத்திரத்திலே இடபக் கொடியேற்றி இரத உற்சவம் நடத்தித் தீர்த்த விழாவும் செய்வித்தான். பின்பு சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து விடை பெற்றுக் கொண்டு தனது நகரத்தையடைந்து வாழ்ந்திருந்தான்.

அறியாமல் செய்த பாவம் திருப்பூவணத் திருத்தலத்தை வணங்கிய உடனேயே ஒழிந்துவிடும். அறிந்து செய்த பாவங்கள் இத்தலத்தில் ஒருமாத காலம் தங்கி இறைவனை வழிபட்டால் நீங்கும். அந்தணரை நிந்தித்த பாவமுதலியன. அப்பதியில் ஆறுமாத காலம் தங்கி வழிபட்டால் தீரும். சித்திரை மாதத்தில் முழுமதி நாளில் மணிகன்னிகைத் தீர்த்தத்திலே மூழ்கித் திருப்பூவணேசருக்குத் திருப்பூமாலை சாத்தினால். சிந்தித்தன எல்லாஞ் சித்திக்கும். வைகாசி மாதம் முழுமதிநாளில் விசாக நட்சத்திரத்தில் புட்பவனேசருக்குப்

பட்டுப் பரிவட்டங் கொடுத்தவர். பாவங்கள் நீங்கிச் சந்ததியுடன் சக்கரவர்த்தியாய் வாழ்ந்து. சிவலோகஞ் சேர்வர். உத்தராயணம். தட்சிணாயணம். மாதப்பிறப்பு காலம். “கிரகணகாலம் முதலிய புண்ணிய காலங்களிலே மணிகன்னிகை முதலிய தீர்த்தங்களாடித் தானஞ் செய்வோர். பாவங்கள் ஒழிந்து எட்டுவிதமான போகங்களை அனுபவிப்பர்” .

20. சிதம்பர உபதேசச் சருக்கம்

வசிட்டர் முதலாகிய முனிவர்கள். நான்கு வேதங்களையும் ஓதி உணர்ந்து தங்குதற்கிடமானதால். புட்பவனம். சதுர்வேதபுர மெனப் பெயர் பெறும். அப்பதியிலே. வியாச முனிவரிடம் உபதேசம் பெற்ற மாந்தியந்தின முனிவரும். தியானகாட்ட முனிவரும் சிவபிரானை நோக்கித் தேவவருடம் நூறு வரையும் அருந்தவம் புரிந்தனர். (சிங்க சித்தர் மற்றும் குரங்கு சித்தர் திருப்பூவணத்தில் தவம் செய்யும் காட்சி – அம்மன் சந்நிதியின் தீர்த்தத்தொட்டி அருகே உள்ளது). அதற்குச் சிவபிரான் இடபாரூடராகத் தோன்றினார். அம்முனிவர்கள் தரிசித்துத் துதிக்க. அத்துதிக்கு மகிழ்ந்தருளிய சிவபிரான். முனிவர்கள் வேண்டியவரத்தை வினவினார். அம் முனிவர்கள்.



"இத்திருப்பூவணத்திலே ஐந்தெழுத்து மந்திரத்தை எங்களுக்கு உபதேசித்து ஆனந்த தாண்டவஞ் செய்தருள வேண்டும்" என்று வேண்டினர். அதற்குச் சிவபிரான். "கான்மீர நாட்டில் உள்ள முனிவர்கள் பொருட்டுத் தில்லைவனத்திலே திருநடனஞ் செய்வோம் அதை நீங்களும் தரிசிக்கலாம்" என்று அருளினார். இத்தலத்திலே பிரணவமாகிய திருவைந்தெழுத்தை உங்களுக்கு உபதேசித்து. உங்கள் இருதயக்கமலமாகிய அம்பலத்திலே திருநடனஞ் செய்வோம்." என்று கூறிப் பிரணவத்தை உபதேசித்தருளினார். அதனை முனிவர்கள் சிந்தித்து. சிவபிரான் திருநடனத்தையும் அவர்களது இருதயக் கமலத்திலே தரித்துப் பின்பு தில்லைவனஞ் சேர்ந்து சிவபிரானுடைய ஆனந்த தாண்டவத்தைத் தரிசித்தனர்.

(குரங்கு சித்தர். பன்றி சித்தர். சிங்க சித்தர் ஆகியோர் திருப்பூவணத்தில் தவம் இயற்றிய காட்சி – பெரிய நந்திக்கு அருகே உள்ள தூணில் உள்ள சிற்பம்).



இப்புராணக் கருத்தைத் திருநாவுக்கரசர். திருக்கயிலாச நாதர் காட்சிதரும் இடங்களைத் தொகுத்துக் கூறும் திருப்பாசுரத்தில்.

“புலிவலம்புத்தூர் புகலூர் புன்கூர்

புறம்பயம் பூவணம் பொய்கைநல்லூர்“

என்று எடுத்துப் பாடுகிறார். உமாதேவி. விஷ்ர் பிரமன். சூரியன் முதலியோரும் மற்ற முனிவர்கள். இராக்கதர்கள் முதலியோரும் புத்தி முத்தியின் பொருட்டுச் சிவபிரானை அர்ச்சித்துப் பாவங்களைப் போக்கினமையால். இத்திருப்பூவணம் மகாபாபவிமோசனபுரமென்று பெயர் பெறும்.

சிவபிரானோடு காளிதேவி சபதங்கூறி ஆடிய பாவத்தைப் போக்கும் பொருட்டுத் திருப்பூவணத் திருக்கோயிலுக்கு. வடதிசையிலே தன் பெயராலே காளிசுரலிங்கம் என ஒன்று நிறுவிப் பூசித்தாள்.

பனிரெண்டுவருடம் மழையில்லாத காலத்திலே. சலந்தரன் என்னும் தவளை திருப்பூவணத்திலே. அலரியடியில் தங்கியிருந்தது. அவ்வலரியில் பூத்த மலர் சிவபிரான் திருவடியில் ஏறினதால். சிவபிரான் அத்தவளைக்குச் சக்கரவர்த்தியாய் இருக்கும் வரம் அருளினார். வரம் பெற்ற சலந்திரன். பூமியை ஆண்டு தேவர்களை வருத்தினான். அதனால் அவனை அழிக்கச் சிவபிரான் விஷ்ர்வுக்கு இத்தலத்திலே சக்கரப்படையை அருளிச் செய்து. சலந்தரனைக் கொல்வித்தார். எனினும். முன்பு அலரிமலர் சூடுதற்குக் காரணமானதால் சலந்தரனுக்கு

முத்தி அருளினார்.

தாழம்பூ வழிபட்ட திருத்தலம்

ஈசனின் அடிமுடி தேடிய கதையில் ஈசனின் தலையிலிருந்து கீழே விழுந்த தாழம்பூ பிரமனுக்கு ஆதரவாக இறைவனிடம் பொய் சொல்வது தவறு என்று அறிந்தும் பொய் சொன்னது. தான் அறிந்து செய்த பாவம் போக்க திருப்பூவணம் வந்து ஆற்றின் கரையில் ஒதுங்கியிருந்து ஈசனை வணங்கிப் பாவ விமோசனம் பெற்றது. இவ்வாறு அஃறிணை உயிர்களின் வேண்டுதலுக்குக்கூட செவிசாய்த்து அவற்றின் பாவங்களையும் போக்க வல்லவர். அனைத்து உயிர்களின் மீதும் அன்புடையவர். வினை தீர்க்கும் பரிவு உடையவர் திருப்பூவணநாதர்.

இவ்வாறு திருப்பூவணப் புராணம். திருப்பூவணத்தின் பல்வேறு சிறப்புகளையும் பாடியுள்ளது.

✱✱✱✱✱

4

திருப்பூவணம் திருவிளையாடற் புராணம்

திருவிளையாடற்புராணம் என்பது மதுரையில் வீற்றிருக்கும் சோமசுந்தரக் கடவுள் தன்னுடைய அடியவர்களுக்கு அருள்புரிந்த சிறப்புக்களை எடுத்துக் கூறுவது. திருவிளையாடற்புராணக் கதைகளை புலியூர் நம்பி என்பவரும். பரஞ்சோதி முனிவர் என்பவரும் பாடி யுள்ளனர்.

இப்பகுதியில் திருவிளையாடற் புராணங்களில் திருப்பூவணத் துடன் தொடர்புடைய பகுதிகள்

எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

திருவிளையாடற்புராணத்தில் 36 வது படலமாகிய இரசவாதம் செய்த படலத்திலும் 49 வது படலமாகிய திருவாலவாயான படலத்திலும் திருப்பூவணம் தொடர்பான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இரசவாதம் செய்த படலம்

பரஞ்சோதி முனிவர் இயற்றிய திருவிளையாடற் புராணத்தில் முப்பத்தாறாவது படலமாக இரசவாதஞ் செய்த படலம் உள்ளது. இதில் திருப்பூவணத்து இறைவன் திருமேனியைச் செய்திடத் தேவையான தங்கத்தை இரசவாதம் மூலமாகப் பெற்றிடும் முறையை. மதுரை ஈசன் சித்தர் வடிவில் நேரில் வந்து அருளியுள்ளார்.

அன்னமிட்ட கை

முன்பு திருப்பூவணத்தில் பொன்னனையாள் என்ற சிவபக்தை இருந்தாள். இவள் சிறந்த நடன மாது. நாட்டிய இலக்கணப்படித் தினமும் இறைவன் முன் நடனமாடுவது இவளது வழக்கம். தனக்குக் கிடைக்கும் வருமானத்தை எல்லாம் அன்னதானத்திற்குச் செலவு செய்தாள். தினமும்

சிவனடியார் பலரும் வந்து உணவருந்திச் செல்வதைக் கண்டு மகிழ்ந்தாள்.

“திருத்தர் பூவண வாணரைச் சேவித்துச் சுத்த

நிருத்த மாடிவந் தடியரைப் பொருளென நினையுங்

கருத்த ளாயருச் சித்தவர் களிப்பவனி சுவையூண்

அருத்தி யெஞ்சிய தருந்துவா ளஃதவ ணியமம்”

அப்படியிருக்கையில் அவளுக்குத் திருப்பூவணம் கோயிலில் வைத்துப் பூசிப்பதற்கு இறைவனின் திருமேனியைத் தங்கத்தில் செய்து கொடுக்க வேண்டும் என்று பேராவல் பூவணநாதரின் அருளாசியினால் உண்டானது. ஆனால் கிடைக்கும் பொருள் எல்லாம் அன்னதானத் திற்கே செலவானது. தங்கத்திற்கு எங்கே போவது? குலபூடண பாண்டியனுக்கு எடுக்க எடுக்கக் குறையாத பொற்கிழியை வழங்கிய மதுரை சோமசுந்தரக் கடவுளை மனதில் நினைந்து வேண்டினாள்.

சித்தர் வடிவில் சிவபெருமான்

இந்த பக்தையின் விருப்பத்தை அறிந்த மதுரை சோமசுந்தரப் பெருமான். அதனைப் பூர்த்தி செய்ய திருவுள்ளம்கொண்டு சித்தர் வடிவில் திருப்பூவணத்தில். பொன்னனையாள் வீட்டிற்கு எழுந்தருளினார். அன்னதானம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. தாதியர்கள் உணவு உண்ண வாருங்கள் எனச் சித்தரையும் அழைத்தனர். அதற்கு சித்தர் பெருமான். உங்களது தலைவியை இங்கே அழையுங்கள் எனக் கூறினார். பொன்னனையாள் வந்தாள். சித்தரது பாதங்களில் தனது தலை பதியுமாறு பணிந்து உணவு உண்ண அழைத்தாள். அதற்குச் சித்தர். உனது முகம் வாட்டத்துடன் காணப்படுகின்றதேஸ உனது மனக் கவலைதான் என்ன? என்று கேட்டார். பொன்னனையாளும். எங்கள் தலைவனாம் திருப்பூவணத்து இறைவனது திருவுருவினைச் செய்வதற்கு உள்ளத்தில் பெருவிருப்பம் கொண்டு மெழுகினால் கருக்கட்டி வைத்துள்ளேன். அதனைப் பொன்னினால் செய்து முடிக்கக் கருதிய எனக்கு நாள்தோறும் கையில் வரும் பொருள் முழுவதும் அடியார்களுக்கு அன்னம் இடுவதிலேயே செலவாகி விடுகின்றது. நான் என்ன செய்வேன்? என்று தனது கவலையை கூறினாள்.

அதற்குச் சித்தரும். நீ தானத்துள் சிறந்த அன்னதானத்தை நாள்தோறும் செய்து வருகின்றாய். உன் பெயருக்கு ஏற்றவாறு அழிவில்லாத இறைவனின் திருவுருவத்தைத் தங்கத்தினால் செய்யப் பெறுவாயாக என வாழ்த்தினார். பின்னர். அனைத்து உலோகப் பாத்திரங்களையும் கொண்டு வரச்செய்து. திருநீற்றினைத் தூவினார். இவற்றைத் தீயிலிட்டுக் காய்ச்சுங்கள் தங்கம் கிடைக்குமெனக் கூறி அருளினார். பொன்னனையாள் அச்சித்தர் சுவாமியை வணங்கி இன்றைய இரவு இங்கேயே தங்கித் திருவமுது செய்து இரசவாதம் செய்து முடித்தபின்னர் அதிகாலை எழுந்து செல்லலாம் என வேண்டினாள். மீனாட்சி அம்மையைப் பிரியாத சோமசுந்தரரே சித்தர் வடிவில் வந்துள்ளதால் அவர் "யாம் மதுரையில் விளங்கும் சித்தராவோம்" எனக் கூறி மறைந்தார். சித்தர் கூறிய சொற்களும். மறைந்தருளிய தன்மையையும் கண்ட பொன்னனையாள். வந்தவர் மதுரை வெள்ளியம்பலத்தில் கால்மாறி ஆடியருளும் அம்பலவாணரே எனக் கண்டு பக்தியால் நெகிழ்ந்து. தனது கவலையை இறைவனே நேரில் வந்து நீக்கினார் எனக் களிப்புற்றவளாகிச் சித்தர் கூறியபடியே செய்ய உலோகப் பாத்திரங்களைத் தீயிலிட்டுப் புடம் செய்தனள்.

ஆணவமலம் கெட்டு இறைவனின் திருவடியை அடைந்தவர் சிவமாக விளங்குதல் போல உலோகங்களின் களிம்பு நீங்கிப் பொன்னாக மாறின. அப்பொன்னைக் கொண்டு இறைவனுக்குத் திருவுருவம் வார்ப்பித்தாள்.

அச்சோ அழகிய பிரனோ இவன்



கி

டைத்த தங்கத்தைக் கொண்டு வடிவே இல்லாத இறைவனின் திருவுருவத்தைச் செய்திட்டார். இறைவனின் அழகான திருவுருவத்தைக் கண்டு “அச்சோஸ அழகிய பிரனோ இவன்” என்று இறைவனின் கன்னத்தைக் கிள்ளி முத்தமிட்டாள். அதனால் இறைவனின் திருமேனியில்

தழும்பு உண்டானது. இத் திருவுருவத்தை இன்றும் கோயிலில் தரிசித்திடலாம். பொன்னனையாள் இறைவனின் கன்னத்தைக் கிள்ளுவது போன்ற சிற்பம் கோயில் மகா மண்டபத்தில் உள்ள கல்தூணில் செதுக்கப்பட்டுள்ளது.

பொன்னனையாள் இறைவனின் கன்னத்தைக் கிள்ளி முத்தமிடுதல்

“நையுநுண் ணிடையி னாளந் நாயகன் கபோலத் திட்ட

கையுகிர்க் குறியுஞ் சொன்ன காரணக் குறியுங் கொண்டு

வெய்யவெங் கதிர்கால் செம்பொன் மேனிவே றாகிநாலாம்

பொய்யுகத் தவர்க்குத் தக்க பொருந்துரு வாகி மன்னும்”

திருப்பூவணம் கோயில் இறைவனின் திருமேனியைச் செய்திட மதுரை ஈசனே நேரில் சித்தர் வடிவில் வந்து. இரசவாதம் செய்து தங்கம் தயாரித்துக் கொடுத்தது இத்திருத்தலத்தின் தனிச் சிறப்பாகும்.



அழகிய நாயகர் (கன்னத்தில் நகக்குறியுடன் உள்ள இறைவன் திருமேனி)

இறைவனது திருவுள்ளத்தில். அடியவர்களில் அடிமையென்றும் ஆடிப்பிழைப்பவர் என்றும் பேதங்கள் ஏதும் இருப்பதில்லை. இறைவன் மனம் விரும்புவதெல்லாம் அன்பும். தொண்டும் பக்தியும் தான் என்பதை அறியுமாறு கூறப்பட்டுள்ளது. மேலும் சிவனடியார்களுக்கு அன்னதானம் செய்வதால் நமது பாவங்கள் அனைத்தும் ஒழிந்து நமக்கு இறைவன் நேரில் காட்சி தந்து அருளுவான் என்பதும் கூறப்பட்டுள்ளது.

பொன்னனையாள் தங்கத்தினால் ஆன இறைவனது திருவடிவத்தைப் பிரதிட்டை செய்து தேர்த்திருவிழா முதலியன நடத்தி இனிது வாழ்ந்தாள். சிலகாலம் சென்ற பின்னர் வீடுபேறு அடைந்தாள்.

மதுரையில் திருவிளையாடற் புராணக்கதைத் தொடர்பான விழாக்கள் இன்றும் நடைபெற்று வருகின்றன. அவ்வாறாக நடைபெறும்போது இரசவாதம் செய்த படலம் நடைபெறும் நாளில் சோமசுந்தரக் கடவுள் மதுரையிலிருந்து திருப்பூவணத்திற்கு எழுந்தருளி வந்தார். பல ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வாறு திருப்பூவணம் வந்த சோமசுந்தரக் கடவுளைக் குறிப்பிட்ட நேரத்தில் மீண்டும் மதுரை ஆலயத்திற்குக் கொண்டு சேர்ப்பது முடியாததாகிவிட்டது. இக்காரணத்தினால் அதற்கு அடுத்த ஆண்டுகளில் இத்திருவிளையாடற் தொடர்பான விழாவினை மதுரைக் கோயிலிலேயே வைத்து நடத்தி வருகின்றனர். இப்போது வாகன வசதிகளும். நவீன தொலைத்தொடர்பு வசதிகளும் கூடியுள்ளதால் முன்புபோல் இப்போது காலதாமதம் ஏற்பட வாய்ப்பில்லை. எனவே இரசவாதம் செய்த படலம் தொடர்பான திருவிழாவினை மீண்டும் திருப்பூவணத்தில் நடத்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்

பட்டு வருகின்றன. (பக்கம் 69 பார்க்க)

திருவாலவாயான படலம்

திருப்பூவணத்தில் கோட்டை என்ற பகுதியில் தான் திருக்கோயில் அமைந்துள்ளது. இங்கு தொன்மைக்காலங்களில் உயரமான மதில்களாலான கோட்டை இருந்திருக்கிறது. இதனைப் “பொன்மதில் சூழாலயஞ் சேர் பூவணத்தின் வளம் யாவர் புகலற்பாலார்” என்று கந்தசாமிப்புலவர் பாடியுள்ளார். இக்கோட்டை தோன்றிய வரலாறு திருவிளையாடற்புராணத்தில் 49 வது படலமான திருவாலவாயான படலத்தில் விரிவாகக் கூறப்படுகிறது.

இப்படலத்தில் நான்மாடக் கூடலான மதுரையைத் திருவாலவாய் ஆக்கிய திருவிளையாடல் கூறப்பட்டுள்ளது. அதுலகீர்த்திப் பாண்டியனுக்கு மகனான கீர்த்தி பூசண பாண்டியன் மதுரையை ஆட்சி செய்யும்போது ஏழுகடல்களும் தமக்குக் காவலாக விளங்கும் கரையைக் கடந்து பொங்கி எழுந்தது. இதனால் எல்லா உலகங்களும் நீரில் மூழ்கின. ஆயினும் மீனாட்சியம்மை திருக்கோயிலின் இந்திரவிமானம்.

பொற்றாமரைக்குளம் மற்றும் சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடலில் தோன்றிய இடபமலை. பசுமலை. யானைமலை. நாகமலை. பன்றிமலை என்பன அழியாது விளங்கின.

ஈசன். பிரளயம் வற்றிய பின்னர் மீண்டும் உலகங்களும் உயிர்களும் உண்டாகுமாறு செய்தார். அப்போது சந்திரனது குலத்தில் பாண்டியர்களைத் தோற்றுவித்தார். அப் பாண்டியவம்சத்தில் வங்கிய சேகர பாண்டியன் தோன்றினான். ஒருசமயம். வங்கிய சேகர பாண்டிய மன்னன் “மதுரை மக்களெல்லாம் வசிக்கத்தக்க தகுதியுடையதாக நகரினை உண்டாக்க வேண்டுமென விருப்பமுற்று. மதுரை நகரின் பழைய எல்லைகளை வரையறுத்துத் தரவேண்டும்” என இறைவனிடம் வேண்டி நின்றான். மன்னனது விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வானில் இருந்து ஒரு விமானத்தில் இறங்கிய சோமசுந்தரக்கடவுள் ஒரு சித்தமூர்த்தியாகி அற அருட்கடலாகித் தோன்றினார். பாம்பினால் அரைஞார்ம் கோவணமும் அணிந்திருந்தார். பிளவுடைய நாக்கையுடைய பாம்பினையும் குழையும் குண்டலமும். காலில் சதங்கை கோர்த்த கயிறும் கை வளையும் உடையவராகத் திகழ்ந்தார். அவ்வாறு வந்த

சித்தமூர்த்தியானவர் தனது கையில் கட்டியிருந்த நஞ்சுடைய பாம்பை ஏவி நீ. இம் மன்னனுக்கு மதுரையின் எல்லைகளைக் காட்டு எனக் கட்டளையிட்டார்.

பாம்பு எல்லையைக் காட்டுதல் கண்டவர்களுக்கு அச்சத்தினை உண்டாக்கும் படியான அப்பாம்பும் விரைந்து சென்றது. கிழக்குத் திசையில் திருப்பூவணம் சென்று வாலை நீட்டிப் பெரிய அம்மாநகர்க்கு வலமாக நிலத்தில் படிந்து உடலை வளைத்து. வாலைத் தன் வாயில் வைத்துப் பெரிய வளையமாக்கி அதன் உட்புறப் பகுதியே மதுரை நகரின் பழைய எல்லையென பாண்டிய மன்னனுக்குக் காட்டியது. சித்தமூர்த்தியானவர் தம்முடைய திருக்கோயிலில் எழுந்தருளினார். பாண்டிய மன்னன். பாம்பு வளைத்து எல்லையை வரையறுத்துக் காட்டியபடி மதில் சுவர் உண்டாக்க எண்ணினான்.

கோட்டை வாயில் அமைத்தல் கிழக்கு எல்லைகாட்டிய இடத்தில் மன்னன் இவ் எல்லையின் வாயிலில் சக்கரவாள மலையை அடியோடு தோண்டி எடுத்து வைத்தது போன்று முகில் தவழும்படியான பெரிய மதிலை அமைத்தான். மதுரைக்குக் கிழக்கில் சோலைகள் சூழ்ந்த திருப்பூவண நகரானது எல்லையாக இருக்கும்படி அம்மதில்களை

அமைத்தான். அந்த உயரமான. நீண்ட மதிலை ஆலவாய் மதில் என்று கூறுவர். நான்கு பெரிய வாயில்களுக்கும். தெற்கில் திருப்பரங்குன்றமும். வடக்கில் ஆனைமலையும். மேற்கில் திருவேடகமும். கிழக்கில் சோலைகள் சூழ்ந்த பூவண நகரம் எல்லைகளாக இருக்கும்படி அம்மதில்களை அமைத்தான். ஆலத்தை தனது வாயிற் கொண்ட அந்தப் பாம்பு சித்தர் வடிவில் தோன்றிய இறைவனின் பாதங்களை வணங்கி இனி இந்த நகரமானது தன்னுடைய பெயரால் "ஆலவாய்" என்று விளங்கவேண்டுமென விண்ணப்பஞ் செய்தது. சித்தராய்த் தோன்றிய இறைவனும் அவ்வாறே ஆகுக என்று வரமருளினார். இதனால் மதுரை மாநகரம் "திருவாலவாய்" என்ற பெயரில் விளங்குவதாயிற்று . பின்னர் அப்பாம்பானது இறைவனுடைய திருக்கரத்தில் கங்கணம் ஆனது. இவ்வாறு திருப்பூவணத்தில் மதுரைமாநகரக் கிழக்கு வாயிலாகக் கோட்டை அமைக்கப்பட்டது. அன்று கோட்டை இருந்த இடமே இன்று பெயரளவில் கோட்டை என்று அழைக்கப்படுகின்ற பகுதியாகும். இதனால் திருப்பூவணம் என்பது மதுரை நகர் புணர்நிர்மானிக்கப்படுவதற்கு முன்பே சிறப்புடன் விளங்கி வந்துள்ளமை தெளிவாகிறது. இதனால்

திருப்பூவணத்தின் பழைமை நன்கு விளங்கப்பெறுகிறது.

திருவிளையாடற் பயகரமாலை

இரசவாதம் செய்த திருவிளையாடற் புராண வரலாறு. திருவிளையாடற்பயகர மாலையில்.

“மணிதிகழ் மாடமலிமது ராபுரி வாழ்சித்தரேந்

துணிவுட னின்னன்பு கேட்டணைந் தோமென்று சொல்லிப் பின்ன

ரணிதிகழ் பூவணப் பொன்னனை யாளுக்கன் றாணிப் பொன்னைப்

பணிவிடைக் கீந்தசொக் கேபர தேசி பயகரனே”

என்று பாடப்பெற்றுள்ளது.

கடம்பவன புராணம்

பொன்னனையாளுக்கு அருள் புரிந்த திருவிளையாடல் கடம்பவன புராணத்திலும்

“பூவணத்திற் பொன்னனையாள் பதியி லாண்முன்

புனிதனுருக் கும்பிடு வாள் மெழுகு சாத்தி.

மேவணநற் பொருள்பெறாள் சொக்குண டென்று

மிகவருந்துங் காற்சித்த ராச்சென் றாண்டு.

மாவணவல் லிரும்புதரச் சொல்லித் தீயின்

மாட்டென்று பரிசனஞ்செய் தொளிந்தான் றந்து.

பாவணத்தாள் சொலிச் செய்நிறை யுருக்கண்டான்

மெய்ப் பத்தியெழில் கண்டள்ளி முத்தங் கொண்டாள்.”

என்று கூறப்பட்டுள்ளது.

இவ்வாறாக திருப்பூவணத் தலபுராணம். திருவிளையாடற் புராணம். திருவிளையாடற் பயகரமாலை. கடம்பவன புராணம். பெரியபுராணம் ஆகிய புராணங்களில் திருப்பூவணத்திருத் தலத்தின் பெருமைகள் எடுத்துரைக்கப் பெற்றுள்ளன.

✶ ✶ ✶ ✶ ✶

5

திருமுறைகளில் திருப்பூவணம்

திருமுறைத் திரட்டுக்களான மூவர்—தேவாரம். திருவாசகம். திருவிசைப்பா போன்ற பக்தி இலக்கியங்களிலும். திருப்புகழிலும் திருப்பூவணத்து இறைவன் சிறப்பித்துப் பாடப் பெற்றுள்ளார்.

தேவாரத்தில் திருப்பூவணம்

சைவத்தையும் தமிழையும் தழைக்கச் செய்தவர்கள் சமயகுரவர் நால்வராவர். இவர்கள் முறையே திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசர். சுந்தரர். மாணிக்கவாசகர் எனத் திருக்கோயில்களில் வரிசைப் படுத்தப்பட்டுள்ளனர். இவர்களது சிறப்புக்களையும்.



இவர்கள் திருப்பூவணநாதரை வணங்கிய வரலாற்றையும். இவர்களது பாடல்களில் காணப்படும் திருப்பூவணத் திருத்தலத்தின் அழகையும். பூவணநாதரின் அருளையு[ம் தொகுத்து விளக்கும் முயற்சி மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

இந் நால்வருள். திருஞானசம்பந்தர். திருநாவுக்கரசர் மற்றும் சுந்தரர் ஆகிய மூவரும் இறைவனை வணங்கிப் பாடிய பாடல்கள் தேவாரத் திரட்டாக உள்ளன.

தேவாரத்தில் இடம் பெற்றுள்ள பாண்டிய நாட்டுத் திருத்தலங்கள் பதினான்கு ஆகும். தேவாரம் பாடிய சமயகுரவர்களும் வைகை ஆற்றின் வடகரையிலிருந்தே தென்கரையில் உள்ள திருப்பூவண நாதரை வணங்கி வழிபட்டுள்ளனர் என்று “புட்பவனநாதர் வண்ணம்” என்ற நூலில் கந்தசாமிப் புலவர் கூறுகிறார்.

“செப்பு மூவர்சொல் தமிழ்த்துதிக்க விருப்பமொடுவந்து

வையை

மணற்சிவ லிங்கமென மனத்தோணி முன்பு வடகரைக்கவர்

நின்று தமிழ்பாடு பொழுதேயிடப மாமுதுகு சாயும்வகையே

செய்துமுன் மூவர் தரிசிக்க மகிழ்நேசர்.

-(புட்பவனநாதர் வண்ணம்)

திருஞானசம்பந்தர்

சமயகுரவர்களுள் முதல்வராகிய இவ்வருளாளர் சோழநாட்டில் சீர்காழியில் சிவபாத இருதயருக்கு மகனாக அவதரித்தார். தமது மூன்றாவது வயதில் "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகம் பாடித் தமக்குப் பால் கொடுத்தருளிய அம்மையையும் அப்பனையும் சுட்டிக் காட்டினார். அதுமுதல் பல திருத்தலங்களுக்கும் சென்று பதிகம் பாடிப்பரவிப் பல அருட்செயல்கள் புரிந்து சைவத்தைத் தழைக்கச் செய்தார்.

திருஞானசம்பந்தர் திருப்புத்தூரில் ஈசனை வழிபட்டுத் திருப்பூவணத்து வைகையாற்றின் வடகரையை வந்தடைந்தார். ஆற்றினைக் கடக்க எத்தனித்த போது ஆற்றின் மணல்களெல்லாம் சிவலிங்கங்களாகக் காட்சியளித்துள்ளன.

திருஞானசம்பந்தர் நின்று பாடிய இடத்தில் உள்ள ஆடித்தபசு மண்டபம் (கி.பி. 2005ல் எடுக்கப்பட்ட பழைய படம்) இந்நூலாசிரியரது முயற்சியால். அருளாளர்கள் சிலரது உதவியுடன் இம்மண்டபம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுவருகிறது. (செப்டம்பர் 2008ல் எடுக்கப்பட்ட படம்)

எனவே திருஞானசம்பந்தர் ஆற்றின் அக்கரையிலிருந்தே மறுகரையில் உள்ள திருப்பூவணநாதரைப் பதிகம் பாடிப் பணிந்து வணங்கினார். திருஞானசம்பந்தருக்குக் காட்சியளிக்க விரும்பிய ஈசன் நந்தியை மறைக்காமல் இருக்கும்படிக் கட்டளையிட்டார். நந்தி வலதுபுறமாகச் சற்று சாய்ந்துகொள்ள ஞானசம்பந்தர் இறைவனைத் தரிசித்து வழிபட்டார். இதனால் திருப்பூவணம் கோயிலில் நந்தி மறைப்பதில்லை. வைகை ஆற்றின் தென்கரையில் இருந்து திருஞானசம்பந்தர் வழிபட்ட இடத்தை ஆடித்தபசு

மண்டபம் என்று அழைக்கின்றனர். இப்போதும் இம்மண்டபத்திலிருந்து திருப்பூவணநாதரை வழிபடலாம். நந்தி மறைக்காது.



ஈசனை மறைக்காமல் வலதுபுறம் சாய்ந்திருக்கும்நந்திதேவர்

திருஞானசம்பந்தர் திருப்பூவணம் மீது இருபத்திரண்டு பாடல்கள் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய முதல் பதினொரு பாடல்களும் ஒன்றாம் திருமுறையில் தொகுக்கப் பட்டுள்ளன. இப்பாடல்கள் “தென்றிருப்பூவணமே” என்று முடியுமாறு பாடப் பெற்றுள்ளன. அடுத்த பதினொரு பாடல்களும் மூன்றாம் திருமுறையில் தொகுக்கப் பட்டுள்ளன. இப்பதிகத்தில் உள்ள பாடல்களில் ஐந்து பாடல்கள் “அடிதொழ நன்மை யாகுமே” என்று முடியுமாறு பாடப் பெற்றுள்ளன.

ஒன்றாம் திருமுறையில் உள்ள முதல் பத்துப் பாடல்களில் “தென்திருப்பூவணமே” என்று முடியும்படிப் பாடப்பட்டுள்ளன. எனவே. இப்பாடல்கள் ஆற்றின் மறுகரையில் இருந்து பாடப் பெற்றிருக்க வேண்டும். மேலும் மூன்றாம் திருமுறையில் உள்ள பாடல்களில் “அடிதொழ நன்மை யாகுமே” என்றும் “அடிதொழப் பீடை இல்லையே” என்றும் பூவண நாதரின் திருவடியைப் பாடியுள் ளதால். இப்பாடல்கள் அனைத்தும் திருப்பூவணம் திருக்கோயிலில் பாடப்

பெற்றிருக்கவேண்டும்.

✸✸✸✸✸

6

திருப்பூவணப் புராணம்

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

திருப்பூவணப் புராணம்

✸✸✸✸✸

காப்பு

1

திகழ்வரைமின்னனைவதனச் செங்கமலந்தளையவிழ்க்குந்திவாகரஞ்செய்

மகிழொருவெண்மதி மருப்பின் வயிரகிம்புரி வயங்குமத்தயானை

நிகழுமடியார்க்கன்புநீடுமறம்பொருளின்பம் வீடுநல்கும்

புகழ்தருநற்கற்பகத்தின் பொற்பதத்தையெஞ்ஞான்றும் போற்றல் செய்வாம்

நூற்பயன்

2

தந்திமுகன்றம்பியரு ணந்திதனக்குரைப்பநந்தி சநற்குமாரன்

வெந்துயரமறவெடுத்துவிரித்துரைப்பவுவன் வேதவியாதற்கோதப்

புந்தியுணர்ந்தவன்சூதமுநிக்குரைத்த புட்பவனபுராணந்தன்னைச்

சிந்தைமகிழ்வுறப் படிப்போர் கேட்போர் நல்லிகபரங்கள் சேர்வரன்றே

கடவுள் வாழ்த்து

சபாபதி

வேறு

3

பூமேவுதிருமாலும் புண்டரிகத்தயனும்

புரந்தரனும் வானவரும் புங்கவரும் போற்றப்

பாமேவு பண்டருஞ் சொற்பரிவுமையாள் காணப்படர்

தரு செம்பவள நறுஞ் சடை தாழமிலைச்சுந்

தேமேவு செழுங்கொன்றை தேன்றுளிப்ப விருள்

கால்சீக்குமினன் மதிநிலவெண்டிசாமுகஞ் சென்றெறிப்ப

மாமேவு மணிமன்றுணடம்புரியுமெங்கோன்

மன்னுபரிபுரமலர்த்தாள் சென்னிமிசைச் சேர்ப்பாம்

திருப்பூவணநாதர்

வேறு

4

பூமாது மகிழ்துளபப்புயல்வண்ண நெடுமாலும்புகழ்வெண்கஞ்ச

நாமாதுநடனமிடுநான்மறைதேர்நான்முகனுநயப்ப நன்னீர்த்

தேமாது செழும்பவளச் சடையிருப்பத்திங்களிருடுரப்பச்சைல

மாமாது வடிவிலங்கமன்னிய பூவணத்தரன்றாள் சென்னிசேர்ப்பாம்

5

ஒருபொருளாயுயிர்க்குயிரா யுருவநான்கருவநான்குபயமொன்றா

யருள்வடிவாயகண்டிதமாயசஞ்சலமாயாதிநடுவந்தமின்றாய்

கருதரிதாய்ச் செல்கதியாய்க் காண்பரிதாய்க்காரணகாரியங்கடந்த

பொருவில்பரிபூரணமாம் பூவணத்தெம்புனிதனை யாம் போற்றுவாமே

6

மேவியபல்லுயிர்கட்கும்விண்ணவர்க்கு மிக்ககளைகண்ணாயெண்ணில்

பாவியவணடங்களெலாம் படைத்தளித்துத்துடைத்தருளும்பதியாய் மேலாய்த்

தாவிலருட்சச்சிதாநந்தவடிவாய்திகழ்சங்கரனைநாளும்

பூவுலகும்பணிந்தேத்தும் பூவணநாயகனை நித்தம் போற்றல் செய்வாம்

7

புகலரியபுவனமெலாம் பொருந்துயிர்கட் கிரங்கியருள்

பொழிந்துநாளும்

பகர்தருமிப்படர்புவியிற் பலரறியாவகை யொளித்தபரிசு தோன்ற

மகிழுயர்வானெழுபரிதிவானவன் வந்தருச்சித்து வணங்கியேத்துந்

திகழ்தருபூம் பொழில்புடைசூழ் தென்றிருப்பூவணந்தரன்றாள் சிந்தை செய்வாம்

அழகியநாயகர்

8

திங்கடவழ்சடாமௌலித் தென்கூடற் சிவபெருமான் சித்தராகிப்

பங்கமுறு கருந்தாதுபசும்பொன்னாங்குளிகையருள்பான்மையாலே

பொங்கரவவகலல்குற் பொன்னனையாள் கண்டுவந்து போற்றுநீரா

ரங்கர்லகம்புகழுமழகியநாயகர் பாதமகத்துள் வைப்பாம்

மின்னன்னை

9

மன்னுமழைதவழ் குழலுமதி தருநன்முகோதயமுமலர்ப்பூங்கையும்

பன்னுதமிழ்ப்பால் சுரக்கும் பயோதரமுமறைகொழிக்கும் பவளவாயுந்

துன்னுமணிதிகழுடையுந்துடியிடையுந் துலங்குறுமைந் தொழிற் கும் வித்தாய்ப்

பொன்னனையானிடத்தமர்ந்த மின்னனையாள் பொற்பாதம் போற்றல் செய்வாம்

விநாயகக்கடவுள்

10

இகபரந்தந்திடுமிந் நூற்கிலக்கணச் சொல்வழுவாமலிடையூறின்றிப்

பகரவருள் புரிந்தருளப்பனிவரை மின்னனையெனும் பார்ப்பதியைப்பாங்காற்

றிகழ்கலசமுலைமுகட்டிற் றென்றி ருப்பூவணத்தரன்றான் சேர்ந்துநல்கும்

புகர்முகத்துக்கருணை மதம் பொழிகவுட்டுப் போதகத்தைப் போற்றுவாமே

முருகக் கடவுள்

11

தலம்புகழ் வச்சிரத்தடக்கை யிந்திரன் றந்தருள் பாவைதன்னோர்வள்ளி

நலம்புகழ்செவ்வேளரற்கு ஞானவுபதேசமருண்ஞானமைந்தன்.

றுலங்குகிரவுஞ்சகிரி துளைபடவெஞ்சூரனுரங்கிழியவேலை

கலங்கவயில்வேல்விடுத்த கந்தனைப்பந்தனைய கற்றிக்கருத்துள் வைப்பாம்

வயிரவக்கடவுள்

12

அரிபிரமரகந்தைகெட வண்டங்களுடைந்துமிகு மங்கிகொண்டே

யுரியபலவுலகமெலா மொழிந்திடு நாளவர்கடமதுடன் மேல்கொண்டு

குருதிவாய்
கொப்பளிப்பக்கூரயின்மூவிலைச்சூலங்கொண்ட
திண்டோட்

கருவரை நேர்தருவடுகக்கடவுளெமைக் காப்பக் கை கூப்புவாமே

சரசுவதிதேவி

13

அரியசுவைதருமமுதவருவிபாய்ந்தொழுகருணமண்டலஞ்சே

விரிகதிர் வெண்மதிக்கற்றை வெண்மகலபீடிகைமேல்

வீற்றிருந்து

பரவருநற்கலைகளெலாம் பவளவாய்திறந்துரைக்கும் பனுவலாட்டி

திருவடிகடமையெமதுசிரத்தினிலுங்கருத்தினிலுமிருத்துவா

திருநந்திதேவர்

14

திகழ்மகுட சேகரமுஞ்சிறுபிறையுநுதற் கண்ர்ஞ் செங்கைநான்கு

மகிழ்சுரிகைப்பிரம்பினுடன் மான்மழுவும்படைத்தந்திவண்ணநண்ணி

யிகபரநல்கெம்பெருமானிணையடிவீழ்ந்தயன் முதலோரெந்தஞான்றும்

புகழ்கயிலைமலைக்காவல்பூண்ட திருநந்திபதம்புந்தி கொள்வாம்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

15

திருத்தோணிபுரத்தமர்ந்த சிவனருளானுமைகலசத்திருமுலைப்பால்

விருப்போடுமமுதுசெய்துமிகுசைவத்துறைவிளங்கவேதமே

கருக்குழிவீழ்ந்தலறவமண்கையர்கடாங்கழுவேறக்கருதிமாற

னெருப்புறுவெப்பகன்றிடவெண்ணீறெடுத்துச் சாத்தினர் தாணினை தல் செய்வாம்

திருநாவுக்கரசுநாயனார்

16

அருள்பெருகுந்திலகவதி யாரருளாலமண்சமயமகற்றியன்பாற்

கருதரியகற்புணையாற்கடனீந்திக் கருவேலைகடப்பான்போலு

மருவுபுகழ்வாய்மூரில் வைதிகசைவந்தழைப்ப வந்து தோன்றித்

திருவதிகைப் பதிவருஞ் செந்தமிழ் நாவுக்கரையர் பதஞ்சிந்தை செய்வாம்

சுந்தரமூர்த்தி நாயனார்

17

காதலுடன் மிகுமின்பக் கடிமணப்பூம்பந்தரின் கீழ்க்கலைவல்லோர்முன்

மாதவன் போல் வந்திவனம் வழித்தொண்டனென்றிசைக்கும் வழக்கினாலே

பாதிமதிநுதற் பரவையிடையிருளிற் பங்கயப் பொற்பாதஞ்சேப்பச்

சோதிதனைத் தூதுகொண்ட சுந்தரன்றாள் சந்ததமுந் தொழுது வாழ்வாம்

மாணிக்கவாசக சுவாமிகள்

18

மருவார்கடொழுகழற்றென் மதுரைவருதமிழ்வழுதி

மன்னர் கோமான்

பொருவாசிகொணர்கெனச் செம்பொன் கொடுத்துவிடுத்திடவச் செம்பொன்னாலே

பெருவாழ்வை யுறவிரைந்து பெருந்துறையின் மேவியதம்பிரானைக் கொண்ட

திருவாதவூரடிகளிரு பாதகமலங்கள் சென்னிவைப்பாம்

மெய்கண்டதேவர்

19

பொய்கண்டவெவையுமெனப் பொல்லாத கணபதிதான்புகன்றுபின்னர்

மைகண்டத்தடக்குமரன் வழங்குசிவஞானநூல்வகுத்துக் காட்டக்

கைகண்டபின்னருளே கண்ணாகக் கண்ட பெண்ணைப் புனல்சூழ்வெண்ணை

மெய்கண்ட தேவனடிகை கொண்டு கூப்பிமுடிமீது

சேர்ப்பாம்

திருத்தொண்டர்

20

பார்மேவுசைவதப் பாலோராய்ப்பரசமய நிராகரித்துப்

பேர்மேவு பெருமைதரும் பெறாகரிய பேரின்பமுத்தி பெற்றோர்

போர்மேவுமழுவேந்தும் பூவணத்தெம் புண்ணியன் பொற்கோயினண்ர்ஞ்

சீர்மேவு திருத்தொண்டர் சேவடிகடினம் பணிந்து சிந்தை செய்வாம்

கடவுள் வாழ்த்து முற்றியது

ஆகச் செய்யுள் 20

✸✸✸✸✸

அவையடக்கம்

வேறு

21 அற்றமில்கலையினுண்ணறிவின் மேலையோர்

பொற்றிருப்பூவணப் புராணமாண்புற

முற்பகர்வடகலை மொழிபெயர்த்துநீ

நற்றமிழான் முறைநவிற்றுகென்னவே

22 பொங்கு வெங்கதிரவன் பூசையாற்றிய

சங்கரன்கதை சொலத்தமிய னெண்ர்த

றுங்கமாமேருவைச் சுமப்பனின்றெனப்

பங்குடையான் கரம்பற்றல் போலுமால்

23 குற்றமிலிரதநற்குளிகை காக்கலும்

பொற்புறத்தாமிரம்புகரில் பைம்பொனா

முற்றவென்பாடலுமுணர்வின்மேதகு

நற்றமிழ் வாணர்முன்னவையுந்தீருமால்

வேறு

24 விடையுகைத்திடுமின்னனைபாகன்மேற்

றொடைநிரம்புசொல்சூடத் தொடங்கல்யா

னடையிடற்கருநல்லெழின்மைந்தர்சூழ்

கடல்கடக்கக்கருதுவதொக்குமால்

25 திருத்தகும் பொழிற்றென்றிருப்பூவண

நிருத்தமாடியநின்மலன் காதையை

யருத்தியாலுலகம் புகழ்காரிகை

விருத்தயாப்பினெடுத்து விளம்புகேன்

அவையடக்க முற்றியது

ஆகச் செய்யுள் 25

✸✸✸✸✸

நைமிசாரணியச் சருக்கம்

26 பொன்னலந்திகழ்ந்தோங்கிய பூவணக்காதை

தன்னை நான்மறைச்சவுநகாதியமுநிகணங்க

டுன்னுமாதவச் சூதனை வினவிய சூழ

னன்னிலம் புகழ்நைமிசவணிசில நவில்வாம்

27 காரின்மல்கியகந்தரந்தந்த காட்சியினாற்

சீரிணங்கிய சென்னியிற் றிங்கண் மேவுதலா

லேரிணங்கிய மாதவர்க்கின் பமீகையினா

னாரிபாகனை நிகர்ப்பது நைமிசாரணியம்

28 சீரிணங்குறச் சேணிவந்தோங்கலாற் செய்ய

வாரிணங்குநன்மலர்க் கொடிமருவு கண்ர்றலா

லேரிணங்கிய வெண்ணரும்புட் கணண்ர்தலா

னாரணன்றனை யொத்ததுநைமிசாரணியம்

29 நான்முகங்களுநான்மறைநவிற்றுதலானு

நான்முகந்தருநாயகி நண்ர்தலானு

நான்முகங்களுநன்குறப்படைத்திடலானு

நான்முகன்றனை யொத்தது நைமிசாரணியம்

30 பன்னுநான்மறைபயில்பவர் பன்னசாலைகளு

மன்னுகின்ற வட்டாங்கயோகத்தர்வாழிடமு

மின்னருட்கர்ற்றிரண்டற நிற்பவரிடமு

நன்னலம்பெற நிறைந்தது நைமிசாரணியம்

31 வண்ணமேவியபூந்தவிசேந்தியவள்ள

லெண்ணிலாதவர்பிறப்புடனிறப்பெலாந்தங்கள்

கண்ணினாற்கண்டுகழிந்தபல்காலங்கள் கடந்தோர்

நண்ணிமாதவம்பயில்வது நைமிசாரணியம்

32 காலனாணையுங்காமனதாணையுங்கஞ்ச

மேலயன்றிருவாணையுமேகவண்ணஞ்சேர்

கோலமாயவன் குலவிய வாணையுமாக

நாலுநண்ணரிதாயது நைமிசாரணியம்

33 பிரமசர்யம் வானப்பிரத்தம் மெழில் பிறங்கு

மரியநான்மறையறைந்திடுமதிவணாச்சிரமம்

பரவுகின்றனயாவையும் பற்றாத்துறந்த

லுரியவாச்சிரமங்கணான் குடையதவ்வனமே

34 புகழ்வினீடுவெண்பூதிசாதனம் புனைமெய்யர்

திகழ்செழுங்கதிரெறித்திடு செஞ்சடாமகுடர்
மகிழ்சிறந்தநல்வற்கலையுடையினர்மாறா
திகழ்தலின்றியே நாடொறுமிருந்தவமிழைப்போர்
35 எண்ணருந்திறலோர் புகழிருபிறப்பாளர்
நண்ர்முப்பொழுதருச்சனைபுரியுநான்மறையோ
ரண்ணலுண்மகிழைவகைவேள்விகளமைப்போர்
கண்ர்தற்கருமங்கமாறுங்கரைகண்டோர்
36 ஒருமைசேர்ந்த மெய்யுணர்வினரிருவினையொழிந்தோ
ரருமைமும்மலர்நாற்கரணந்தனையயர்த்தோர்
வெருவுமைம்புலப்பகைஞரை வென்றருள்வீரர்
கருதுறாதவெண்ணெண்பெருங்கலைக்கடல்கடந்தோர்
37 சூழ்ந்தவல்வினைத்தொடர்படுகின்ற தொல்பவத்தைப்
போழ்ந்தஞானவாட்படையினர் புரிமுந்நூன்மார்பர்

தாழ்ந்தநல்லுறிதாங்குகுண்டிகைத் தடக்கையர்

வாழ்ந்தவைதிகசைவர்வாழ்நைமிசவனமே

38 பகைகடீர்ந்திடும் பன்னகவயிரியும்பாம்பு

மகிழ்வினோங்கிடும் வாலுளையரியொடுமதமா

மிகுவிலங்கினம் விரும்பியோர் துறையுணீரருந்தி

யிகலதின்றியேயின்புறமருவுமெஞ்ஞான்றும்

வேறு

39 காமாதிகள் விட்டேற்குநர் தண்டோரொருசாரார்

பூமாலை களாற் பூசனை புரிவோரொருசாரா

ரோமாதிகளுக்காவனகொணர்வோரொருசாரார்

பாமாண்புறவே பாடுநராடுநரொருசாரார்

40 யாகாதிகடருமங்களிழைப்போரொரு சாரார்

யோகாதிகள் கருமங்களுழப் போரொரு சாரார்

சாகாமூலபலந்தருகிற்பவரொருசாரார்

மாகாமந்தனை மாற்றிமகிழ்ந்தோரொரு சாரார்

41 வேதாகமநூன்மேதகவோதுநரொருசாரா

ராதாரத்தினடுக்கையறிந்தோரொருசாரார்

நாதாந்தந்தனை நாடிநவிற்றுநரொருசாரா

ரோதாவுண்மைப் பொருளையுணர்ந்தோரொருசாரார்

வேறு

42 உந்தியாரழன்மூளநற்சுழுமுனைதிறந்ததினூடுபோய்

விந்துவாரமுதம்பொழிந்து மெய்விழிசெழுந்துளிவீசவே

யந்தமாதியிலாத செந்தழலண்ட கோளகை மண்டவே

நந்தஞான சுதோதயந்தனை நண்ர்கின்றனர் சிலரரோ

43 தீதினற்றிரி புண்டரத்தொடு செய்ய கண்டிகை மெய்யினர்

காதல்கூர் தருகா மனம் பதுகனவினுந் தெறல் காண்கிலா

ரோதுநற்சுகதுக்கம் வெம்பகையுறவு நன்றொடு தீதிலா

ராதியந்தமிலாதவன்றனையன் பினான் மிக நம்பினோர்

44 நாக்கினான் மறைபோற்று வோரிவர் நண்ர்சாலை கண்முன்னரே

மூக்கினாற் பிணி முகமெடுத்தென முள்ளெயிற்றரவள்ளவே

யாக்குநற்பகுவாய்கள் கக்கிடு மலகில் செம்மணியிலகறான்

றூக்கு சோதி விளக்கினுக்கிணை சொல்லலாமலதில்லையே

45 நித்தமாதவரைத்தினந்தொறு நீங்கிடாதருளோங்கநற்

பத்தியான்மிகு பன்னகத் தொடு பல்பொறிப்புலி சேர்தறான்

சித்திமுத்திகள் சேரநல்குறுதில்லையம்பலவெல்லைசார்ந்

தத்தனாடலருட்கணாடிடவிருதபோதனரமர்தல் போன்ம்

46 தூய மாதவமே பயின்றிடு சுத்தர் நித்தர் சுகோதயர்

நேயநீடநு போகமல்லது நெஞ்சின் வேறு நினைக்கிலார்

மேயநைமிசகானகந்தனின் மேன்மையாவர்விளம்புவா

ராயிரம் பகுவாயனந்தனுநாவிசைத்திடலாவதோ

நைமிசாரணியச் சருக்க முற்றியது

ஆகச்செய்யுள் 46

✦✦✦✦✦

9

சவுநகர்சூதரை வினவியசருக்கம்

47

நவில்கின்ற நைமிசாராணியந்தன்னி னற்றவத்தின் மிக்க சிவஞானவேட்கைச்

சவுநகாதியமுனிவர் கணங்களானோர்தர்க்கமோடுத்தரங்கள் சாற்றித் தாபித்

துவமனிலாமாதவன்றன் மைந்தன் மைந்தரொருமையுடனிருண் மலந்தீர்ந்திருந்தங்கோர்நாட்

சிவனடியை யடையும் வகை தெரிக்குங் காதை சேர்ந்தவர்

கடாந்தம் மிற்றேருங்காலை

வேறு

48 பின்னியபின்னல் பிறங்கவிரித்தோன்

மன்னியநல்லரைவற்கலையாத்தோ

னன்னியமத்தொழினாளுமிழைப்போன்

பன்னியதீவினை பற்றாவிட்டோன்

49 பாயதலம்பெறுபல்லுயிருக்குந்

தாயினுமன்புதழைத்திடுமேலோ

னேயமிகுந்தவநீங்கலிலாதோன்

றூயவெணீறு துதைந்திடுமெய்யோன்

50 புண்டரமீது பொருந்திவிளங்குங்

கண்டிகைகொண்டகவின்றருமார்ப

னெண்டருமெண்கலையாவுமுணர்ந்தோன்

பண்டருவேதபராயணர்சூழல்

51 அங்கணிலம்புகழங்கர்தற்சேர்

சங்கரனன் புதழைத்துறன்மானச்

செங்கைகடாங்கிய சென்னியன்மன்னுந்

துங்கமிகுந்தவசூதனடைந்தான்

52 கட்டமும்வெம்பிணியுங்களைகட்ட

சிட்டர்கடாமெதிர்செங்கைகுவித்துச்

சட்டெனவாயிடைசார்ந்திடநாப்ப

ணிட்டதொராதனமேறியிருந்தான்

53 இருந்தருள்காலையிருந்தவவாணர்

சுரந்தருண்மாதவசூதனை நோக்காப்

பொருந்தியகை நனிகூப்பினர் போற்றித்

திருந்துரையின்னன செப்புதலுற்றார்

54 நாடியகாலையினானில மெங்குந்

தேடியபூடடிசேர்ந்ததையொக்குங்

கேடிலருந்தவகேட்குதியெம்பா

னீடருளாலிவணீவரலாலே

55 மாதவமேபுரிமாதவனான

மேதகுவேதவியாதனவன்பா

லாதரவிற் கொளருங்கலையாவு

மோதியுணர்ந்தவுனக்கிணையுண்டோ

56 உன்னையலாதினியோர் கதியின்றா

னின்னருளைப் பெற நேர்ந்தவன்யானென்

றென்னை முனிட்டவிருந்தவர் முன்னென்

புன்மொழி நன்மை பொருந்தவுணர்ந்தே

57 முன்பொர்தினந்தனின் மூதறிவாலே

மன்பயில்புட்பவனத்தது காதை

மின்பயில்கின்ற சுவேதவனத்தி

னன்கதை நாப்பணவின்றிடுகாலை

58 அப்பரிசங்கணறைந்தசுருக்க

மெய்ப்படநாடிவிளங்கவிரித்துத்

திப்பியமான செழுங்கதை மேன்மை

யிப்பரிசென்னவியம்பிட வேண்டும்

59 என்றிவைசவுநகனேத்தியிசைப்ப

நன்றிதுநன்றிதெனாநனிநாடிப்

பொன்றிகழ்மாமுனிபுங்கவவென்னாத்

துன்றியவன் பொடுசூதனுரைப்பான்

வேறு

60 கந்தநறும்பொகுட்டுடைவெண் கதிர்நிலாக்கற்றைக்

கமலமலர்ப்பீடிகை சேர்கலைமடந்தைதனையு

முந்தமறைநான்கினொடு புராண மூவாறுமுழுதுலகமிறைஞ்சவன்பின் மொழிந்த வியாதனையுஞ்

சுந்தரநற்கவுட்டுமதசலமருவி தூங்குந் தூங்கியகைத் தூங்கன்முகபடாந்துலங்குமொற்றைத்

தந்தமுறுமடிகடிருவடிகளையும் போற்றிச் சந்ததமு மருள் புரிவான்சிந்தனை தான் செய்தே

61 வேதமொடாறங்கமாகமபுராணங்கண் மேதகுநற்கலையாவுமோதியுணர்ந்தவனீ

யாதலதற்கையமிலையாயினுமென்றன்னை யவையகத்துநன்குணர்ந்தோனாக்குதற்குநினைந்தே

யோதுகவிக்காதைதனை யெனவுரைத்தியதனாலுவந்துரைப்பன் சவுநகமாமுனிவரனேயென்னாச்

சூதனருள்வியாதனுரைத்திட்ட வணமோர்ந்து

தொல்கயிலைவளஞ்சிறிது சொல்லலுற்றான்மாதோ

சவுநகர் சூதரை வினவியசருக்க முற்றியது

ஆகச் செய்யுள் 61

✸✸✸✸✸

10

திருக்கைலாயச் சருக்கம்

62 பங்கயன்முகுந்தன் பாகசாதனனே பரவருமிருடிகளுரகர்

புங்கவர்யாரும்புடைபரந்தீண்டிப் போற்றியே நாத்தழும்பேறத்

தங்குறையிரந்து தலைத்தலை சார்ந்து சந்ததமிடைதரத் தயங்குந்

திங்களங்கண்ணி மிலைச்சியசடிலசேகரன் றிருக்கயிலாயம்

63 மன்னியசென்னிவானுறநிமிர்ந்துமருவிய

கொடுமுடிபலவா

யுன்னத நூறாயிரமியோசனை யாயுரைக்கு மவ்வளவைகீழுடைத்தாய்ப்

பன்னருமகலப் பான்மையுமமூதாயப்பயின்று சூழ்படரிருவிசும்பிற்

றுன்னுபொன்மணிகள் சுடர்விடநிவக்குந் தொல்கயிலாயநீள்சிலம்பு

64 மகரகேதனனைமருவு போனகமாய்வாரியுண்கண்ர்தற்பெருமான்

றகுமுலகனைத் துஞ்சார்ந்துயிர்க்குயிராந்தம்பிரானானவெம்பிரான்சேர்

ககனகூடத்தின் முகட்டினுஞ்சென்று கனகமாமணிவெயில்பரப்புஞ்

சிகரகோபுரங்கள் சேண்டிகழ்ந்தோங்குந் திருக்கைலாயநீள்பொருப்பு

65 பிரமன்மான்முதலோர்

பெயர்ந்திடவெழுந்தபிரளயத்தினும்புடைபெயரா

துரியவானந்த
வுருவமாயோங்குமுண்மையாயசலமாயொன்றாக்

கருதருமுயிர்க்குக்களை கணாய்க்
கதியாங்கண்ர்தலண்ணலெஞ்ஞான்றும்

பரிவின்வீற்றிருக்கும் பதியதாய் மேலாய்ப்
பயில்வதுகயிலையஞ்சயிலம்

66 வெங்கதிரவனுமீதுநண்ர்றலால்
வெண்சுடராயினனென்றா

லங்கண்மாஞாலத்தாருயிர்புனிதமாவதையறைதல்வேண்டின்

துங்கமேவியநற்சவுநகமுனிவசொல்லுதிநன்குநீதுணிவாற்

செங்கண்மால்விடையான்றிருவருளுருவாய்த்திகழ்வதுகயிலெ

67 அன்றியும்
வெய்யோனணைதருகாலையலர்தருமருணமண்டலம்போய்

துன்றியகிரணமேற்படவந்தச்சுவேதவண்ணந்துதைந்ததனா

லொன்றியவுணர்வினும்பர்தாங்கீழ்வந்து ற்றிடினவ்வியல்பாவ

ரென்றமூதுணர்த்திநின்றதும்போலாமெழிறிகழ்கயிலை மால்வரையே

68 சந்திரன்றிகழுஞ்சடிலசேகரமுந்தடக்கை கணான்குமரன் மழுவுஞ்

சுந்தரப்பிரம்புஞ்சுரிகையுநுதலிற் றுலங்கியகண்ர்ம் வெண்ணீறு

மந்தவான் மடவார்கண்டமங்கலநாணறாது றவாலமுண்டிருண்ட

கந்தரனருளுநந்தியம்பெருமான் கைக்கொடு காப்பதக்கயிலை

வேறு

69 அடிமுடியறிதலின்றாகிநிற்றலான்

முடிவறமுகிழ்மதிமுடியிற் சேர்தலாற்

படர்புகழ்பரப்பியபால் வெண்ணீறணி

கடவுளை நிகர்ப்பது கயிலை மால்வரை

70 அரியயனமரர்களடிவந்தேத்தலா

லிருமையுமருளியே யென்றுமேவலாற்

பரனுமையொடுகலந்தருளும் பான்மையாற்

கரிமுகனனையது கயிலைமால்வரை

71 சுந்தரக்கண்ர்தறுலங்கிச் சேர்தலால்

வந்திடுஞ்சூருரமாற்றமேவலாற்

சந்ததங்குன்றமாய்த்தயங்குகாட்சியாற்

கந்தவேளனையதுகயிலைமால்வரை

72 உரியவானுறவளர்ந்தோங்கிநிற்றலால்

வரியளிமுரன்றபூமடந்தைமேவலா

லரியநான்மறைவிரித்தருளுநீர்மையாற்

கரியமாலனையது கயிலைமால்வரை

73 தோற்றியே நிற்றலாற் சுருதிபோற்றலா

னாற்றிசைமுகங்களுநண்ர்மாண்பினாற்

போற்றுநற்கலைமகள்பொருந்தலாற் புழற்

காற்சரோருகனிகர்கயிலைமால்வரை

74 தினமிகு செல்வங்கடிளைக்குஞ் செய்கையால்

வனமுறுநெடியமான்மருவுமாண்பினாற்

றனைநிகர்தாமரைத்தாளின்மன்னுகோ

கனதையைநிகர்ப்பது கயிலை மால்வரை

75 அலரும்வெண்டாமரையணைந்தபொற்பினாற்

பலகலையாகமம் பன்னும் பான்மையா

னலமிகுநான்முகனண்ணலாற்செழுங்

கலைமகளனையதுகயிலை மால்வரை

76 எண்டிசாமுகங்களுமிருளைத்தள்ளியே

பண்புறுபாலொளிபரப்புகின்றது

கண்களாலளப்பருங்கவின் கொண்டோங்கிய

வெண்படாம்போர்த்ததாம் வெள்ளியங்கிரி

77 எள்ளதரிதாயபேரின்பமீந்திடுங்

கள்ளவிழ்கடுக்கைநற்கண்ணியஞ்சடை

வள்ளனாடோறுமேல்வதிந்துதோன்றலால்

வெள்ளைமால்விடைநிகர்வெள்ளியங்கிரி

78 நாற்றிசையெங்கர்நன்னிலாத்திர

டோற்றமோடெழுந்துவான்றுருவச்செல்வது

பாற்கடறிரண்டுருப்படைத்துவிண்டொட

மேற்கிளர்ந்தனையது வெள்ளியங்கிரி

79 ஒழுகியநிலாவுலகுந்தியங்கியாற்

சுழுமுனைதிறந்துநற்றுவாதசாந்தத்திற்

பொழிதருமமுதமேபொங்கியெங்கர்ம்

விழுவதுபோன்றது வெள்ளியங்கிரி

80 நிரந்தரமெங்கர்நீடுபேரொளி

கரந்துயிர்க்குயிருமாய்க்கலந்து மேவிய

பரஞ்சுடர்திருவுருக் கொண்டபண்புமேல்

விரிந்தது போன்றது வெள்ளியங்கிரி

81 எண்ணருமகலிருள்விசும்பினெங்கர்ந்

தண்ணருடவழநன்னிலாத்தழைப்பது

கண்ணருமமுதத்தைக் ககனங்கான்றிடும்

வெண்ணிலாத்தாரை நேர் வெள்ளியங்கிரி

82 திக்குடன் விதிக்கெனுந்திசைகளெட்டினு

மிக்குயர்முடியினும் வேறிடத்தினுந்

தக்கநற்கழைசொரிதரளமின்னுதன்

மிக்கதாரகைநிகர்வெள்ளியங்கிரி

83 கண்ர்தலண்ணலைக்காலைமாலையி

ணண்ணியே வானவர் நாளும் போற்றிடப்

பண்ர் கண்ணேணி போற்பாரினின்று நீள்

விண்ணிலவுதலுறும் வெள்ளியங்கிரி

84 துந்துபியோசையுந்தூயநான்மறை

நந்தியதும்புருநாரதாதியர்

கந்தருவத்தவர்கானவோசையும்

விந்துநாதத்தருமிக்கவோசையும்

85 எண்ணரிதாயபாரிடங்களோசையுங்

கண்ணருநந்திமுன்கணங்களோசையும்

விண்ணவரோசையும் வேதவோசையும்

பண்ணவரோசையும் பயிலுமெங்கர்ம்

86 காமரமருச்சுநங்காகதுண்டநீள்

பூமிகுகுங்குமம் புன்னைவன்னிபொற்

றேமருவேலநற்றிகிரிகூவிள

மாமலகங்கடம்பாரமாதுளம்

87 வண்பலவரம்பைமாவகுளந்தாடிமம்

பிண்டிமந்தாரமாம்பிரநற்பிப்பிலஞ்

சண்பகந்தமரநீள்சாலஞ்சந்தனம்

விண்டிகழ்பராரைமாமரங்கண்மேவுமால்

88 பொற்புறுமணிமுடிப்புரந்தராதியர்

செற்றலுநந்திதன்செங்கை தாங்கிய

நற்பிரம்படிபடநண்ர்மாரங்க

ளற்றுதிர்குப்பைகளளப்பிலாதன

89 விரவியமாதவர் வேள்வித்தூமமுஞ்

சுரர்மடவார்கடஞ்சுரியற் சூட்டிய

பொருவருகற்பகப்பூவுமேவிய

பரிமளந்திசைதொறும் பரந்துநாறுமால்

90 காழிருங்கூந்தல் சேர் கௌரிநாயகன்

வாழிருங்கயிலைமால்வரையை மானவே

சூழிருங்கடற்புவிதுதிக்கநீண்டிடு

மேழிருபுவனத்து மெங்குமில்லையே

வேறு

91 அந்தநன்கயிலைதன்னிலன்
புள்ளவரியயனமரர்களவுணர்

சந்திராதித்தர் கின்னரர்வசுக்கள் சாரணரெண்டிசாமுகத்தர்

கந்தருவத்தர் காரிமாகாளிகருடர் வித்தியாதரர்சித்தர்

முந்துறுநிகமாகமமுணர்முனிவர்முறை முறை தொழுதுநின்றேத்த

வேறு

92 சென்னிவான்றொடுசெம்பொற்கடிமதி

றுன்னுமோர் செஞ்சுடர் மணிமண்டபந்

தன்னனல்லரியாசனத்திற்றக

மின்னுவேற்கந்தன் வீற்றிருந்தானரோ

93 அந்தவேலையிலாறுமுகங்கொளுங்

கந்தவேளிருகஞ்சமலர்ப்பதம்

வந்தியாநன்மறைமுறைவாழ்த்தியே

நந்திகேசனவிலுதன்மேயினான்

94 ஈறுறாதநலெண்ணில்சிவாலயங்

கூறுகின்றதிற்கோதிலறம்பொருள்

வீறுசேரின்பவீடருளுந்தல

மாறுமாமுகத்தண்ணலருளென்றான்

95 என்றகாலையெழின்மிகுகந்தவே

ணன்றுநன்றெனநந்தியை நோக்குறா

வொன்றுகாதலினுண்மைப் பொருட்கதை

மன்றகேளெனவாய் மலர்ந்தானரோ

96 கண்ர்தல் பெறவந்தருள் கந்தவேள்

விண்ணவர்க்குவிடை கொடுத்தேகியே

யெண்ர்தற்கருமின்பத்தலத்திருந்

தண்ணறன்னையகத்தினிருத்தியே

97 தனைநிகர்க்குமத்தார்வருளினாற்

புனிதமேவிய பூவணமான்மிய

நினையுமெந்தைநிகழ்த்த நிகழ்த்துகே

னிமகிழ்ந்தருணந்தியந்தேவுகேள்

98 என்றுகந்தனிசைத்திடவந்நந்தி

தன்றனிச் சொல்சநற்குமரன் கொடே

வென்றிவேதவியாதற்குரைக்கவழு

தன்றெனக்கவன் சொன்னதறைகுவேன்

99 ஈதுமுன்னரிசைந்தசோபானமென்

றோதுநீதிச்சவுநகற்கோதியே

காதலாலக்கதையைவிரித்துயர்

சூதமாமுனிசொல்லத் தொடங்கினான்

திருக்கைலாயச்சருக்க முற்றியது

ஆகச்செய்யுள் 99

✸✸✸✸✸

11

ஆற்றுச்சருக்கம்

100 முன்னவனருளினாலேமுக்குறும்போட்டிமேலாந்

தன்னிகரருந்தவத்துச் சவுநகமுனிவகேண்மோ

பன்னுசெந்தமிழ்சேர்சங்கப்பாண்டிநன்னாடுசூழ்ந்த

தொன்மைசால் பொருநைவைகை வளஞ்சில தொகுத்துரைப்பாம்

101 பன்னிறங்களினுஞ் சென்றுபடிகந்தான்பற்றுகின்ற

வந்நிலைபோல்வெண்மேகமார்கலிபடிந்தருந்தித்

துன்னியெம்மருங்குமார்த்துச் சூன்முதிர்ந்திடித்துமின்னி

மைந்நிறங்கவர்ந்து கொண்டுவானகத்தெழுந்ததன்றே

102 இகம்பரமிரண்டுஞ் சேரவெடுத்ததநூற்கடன்மடுத்திட்

டகந்தெளிந்துணர்ந்த மேலாமறிவுடைக்குரவரானோர்

பகர்ந்தமாணாக்கர் தம்பாற் பரிந்து நல்லருந்தமிழ்ச் சொற்

புகன்ற போற்பொதியவெற்பிற் பொழிந்தனபுனலின்றாரை

103 மருவியவரசன்றன் பால்வண்கொடைக்கடலையுண்டு

பரவருமகிழ்விற்றத்தம்பதியிடைப்புலமைமிக்கோர்

விரைவொடுபடர்வதென்னமிகுவனங்கவர்ந்துவிண்டோய்

தருமுயர்மலயவெற்பிற்றண்முகில் பொழிந்தமாதோ

104 கிளர்தருபொதிய வெற்பிற் கேழுறு பொருநை நீத்தந்

தளையவிழ்ந்துயர்பூங்கொம்பர்த்தருக்குலஞ் சாய்த்துருட்டி

யளவில் பல்கால் கடோறுமடைத்தநெட்டணையுடைத்து

நெளிதிரைக்கடலைநாடி நெறிக் கொடு சென்றதன்றே

105 பொருவரும்பொருநைமன்னும் புனிதநீர்குடையுமாதர்

குருமணிக்கலசக் கொங்கைக்குங்குமமளைந்து சேறாங்

கருதுநல்லறிவின் மேலோர் பேதையர்க்கலந்தகாலை

மருவுதன்னிலை கலங்கும் வண்ணமே போலமாதோ

106 மகிழ்சிறந்தியாவர்க்கேனும் வழங்கிடும் வள்ளலேபோன்

மிகுநலமணியும் பொன்னும் வீசுந் தெண்டிரைக்கரத்தா

லகமலர்ந்தங்கண் ஞாலத்தாருயிர்க்கருள வேண்டிப்

புகழ்தருபொருநைநீத்தம் பொருந்து கால் பரந்ததன்றே

107 கொலைகெழுகூர் வேற்றாங்குங் குமரவேள் பதமேல்கொண்டு

கலைவரு கன்னிதாள்கை கூப்பி மால் கழலிறைஞ்சி

வலனைவென்றவன்றாள் கண்டு வருணனை வணங்கி நீத்தம்

பலசமயத்துளோரும் பரவுற வொழுகுமன்றே

108 பருப்பதந்தன்னினோங்கும் பராரைமாமரஞ் சாய்த்தீர்த்துப்

பொருக்கெனப் பொருநைசெல்லப் பொந்தில் வாழ்புட்கள் போத

லுரைக்கரும்பகைஞர் வெம்போர்க்குடைந்திடுமரசனோடு

தருக்கறச் சூழ்ந்து நீங்காத்தானையை மானுமன்றே

109 வான்முகங்கிழிய வோங்குமலயநீர்ப்பொருநைமண்மேற்

றான்முகங்கொடுநடந்துதலைத்தலைமயங்கிமள்ளர்

கான்முகம்பரந்து மிக்ககருங்கடல்படியுந்தன்மை

நான்முகன்படைப்ப நண்ணிநானிலமொடுங்கல்போலும்

110 பொருதிருப்பொருநையோடு புரிசடைப்பெருமான்றன்னான்

மருவியமகிழ்வினீடும் வைகைமாநதியையுந்தான்

றருணவெண்ணிலாக் கொழிக்குந் தரளமாலிகை போற்றாங்குந்

திருமிகுவண்மைசான்றசெந்தமிழ்ப்பாண்டிநாடு

ஆற்றுச் சருக்க முற்றியது

ஆகச் செய்யுள் 110

12

திருநாட்டுச் சருக்கம்

111 பூண்டதண்பொருநையின்சீர்புகன்றன

நீண்டிலகுஞ்சடைநிமலர்மேவிய

வேண்டிகழ்பதிகளேழிரண்டியைந்திடு

பாண்டிநாட்டணிசில பகர்கிற்பாமரோ

வேறு

112 புரங்குன்றச்சிலைகுனித்துப் பொறியரவுநாணாகப் பூட்டி மூவர்

தரங்குன்றக்கருதாதுதழலெழவேநகைசெய்துதரைமேற்றூங்கு

கரங்குன்றம்படைத்தனையகரடமதகரியுரி போர்த்தருளுங்காமர்

பரங்குன்றஞ்சார் கூடற் பரமனருளாலோங்கும் பாண்டிநாடு

113 பன்னுமலயத்துவச பாண்டியன் பண்டிழைத்ததவப்பயத்தினாலே

முன்னொருகாலவதரித்து மும்முலையாண்முடிதுலங்கமுறையிற்காக்கு

மந்நிலையிலமர்புரிந்தங்கவளை மணம்புணர்ந்தருளியங்கணாளன்

மன்னுநற்சுந்தரமாறனெனவரசுபுரிந்துளதுவழுதிநாடு

114 கொண்டலுறழ்மின்கூந்தற் கொண்டமணங்கொங்குதேரென்றெடுத்து

மண்டலமெண்மாகீர்த்தி வழுதி பெற வெழுது திருமுகமாம் வண்டீந்

தண்டமிழின் பொருள் விளங்கச் சங்கத்தின் கீழ் நின்று பரனுஞ் சாற்றும்

பண்டருமத்தமிழ்ச் சங்கப்பாடன் மணங் கொழித்திடுந் தென்பாண்டிநாடு

115

குலவுவடவேங்கடந்தென்குமரியெனத்தமிழெல்லைகூறுகின்

தலமதனிற்றலைமை பெறு தலமீரேழ்தயங்குறுசெந்தமிழ் நாடென்றே

யிலகுமரியயனமரரிந்திரன் வந்திறைஞ்சவருளேற்பநல்கு

மலைமகணல்லரசினறம்வளர்க்கவளஞ்சுரந்தளிக்கும் வைகைநாடு

116 தவலறவேயொருநான்கு தலையிட்டவறுபமூதுதந்தலீலை

சிவபெருமான் செய்தருளிச் செங்கயற்கண் மங்கையொடுஞ் சேர்ந்தநாடு

கவுணியர்தங்குலத்துதித்தகாளையமண்கையர்

தமைக்கழுவிலேற்ற

மவுலிதிகழ் வழுதிமகிழ் வண்டமிழேடெதிரேறும் வைகை நாடு

117

தென்மதுரைபரங்குன்றந்திருவிராமேச்சுரமாடானைபுத்தூர்

பன்னுதமிழேடகநெல்வேலி பகர்குற்றாலமாப்பனூர்பார்

மன்னுபுனற்சுழியல்புனவாயில் கொடுங்குன்றமெழின் மருவுகானை

பொன்மதில் சூழ் பூவணமும் பொருந்துகின்ற புகழ்ப் பொதியப் பொருப்பனாடு

வேறு

118 மண்டுகின்றவன்மள்ளர்தம்மோசையும்

வெண்டிரைப்புனல்வெள்ளத்தினோசையும்

பண்டருங்கிளைப்பாடலினோசையு

மண்டகோளகைக்கப்புறஞ்சாருமால்

119 கொண்டலொன்றைமின்கூறுசெய்தென்னவே

மண்டுமோரிருவன்பகட்டின்பிடர்த்

திண்டிறன்மள்ளர் பொன்னுகஞ் சேர்த்தியே

கண்டுவைரக்கலப்பை தொடுத்தனர்

120 வேண்டுநீர்கொடுமேவநிரப்பியே

கீண்டுழுஞ்சாற்கிளர்மணிக்குப் பையைப்

பூண்டநல்வரம்பின்புறம் போக்குவார்

பாண்டிநாட்டுறும் பண்ணையின் பாங்கெலாம்

121 தக்கநற்றசும்பின்றதியென்னவே

நெக்குநெக்குநிறைநறுஞ்சேற்றின்முன்

றிக்கினிந்திர தெய்வதம் போற்றியே

மிக்கமள்ளர்விதைத்தனர் வித்தையே

122 மறுவிலாதுயர்மாதருமைந்தருஞ்

சிறுவர்தம்மைவளர்த்திடுசெய்கைடோ

லுறுமிகழ்ச்சியனோங்குமுழுநர்தா

நறியசெந்நெலினாறு வளர்த்தனர்

123 பொய்யின்ஞானப்புகலிப்பிரானமண்

கையர்தம் மைக்கழுவினிலேற்றுவான்

கொய்து சேர்த்தகுவான்முடியென்னவே

செய்யநாறுபறித்தவை சேர்த்தினார்

124 வள்ளத்தேயுறவாக்குமதுநுகர்ந்

துள்ளத்தேயுணர்வோடிடவோடிவீழ்ந்

தள்ளற்பள்ளத்தழுந்தினர் மள்ளர்தாங்

கள்ளுண்பார்க்குக்கதியுமுண்டாங்கொலோ

125 மள்ளரானவர் வான்மதிவள்ளத்திற்

றெள்ளிதாநறவுண்டு தெவிட்டியே

யுள்ளநாடியுழந்தியர்க்கூட்டுவார்

கள்ளின்மிக்ககளிப்புமுண்டாங்கொலோ

126 ஓடிமீளுவருண்டிடுகள்ளினைத்

தேடியோடித்தியங்கி மயங்குவார்

பாடியாடுவர் பண்ணைகளெங்கர்ங்

கூடுமள்ளர் குழாத் தொடுங்கூடியே

127 மாறின்மைந்தரைமாதருமைந்தரு

மீறில் செல்வமொடில்லறஞ் சேர்த்தல்போல்

வேறுவேறு விளம்பிக் கடைசியர்

நாறுசேறுநடுவான்றொடங்கினார்

128 கந்தவார்குழற்கள்ளுண்கடைசியர்

சிந்தைநொந்துதியங்கித் தெளிந்துவந்

திந்திரன்றனை யேத்தியிறைஞ்சியே

நந்து நென்முடிநாட்செய்து நாட்டுவார்

129 எண்களோடிய லெண்டிசையெங்கர்ங்

கண்களோடிக்கடைகள் சிவப்பவே

யுண்களோடியுழத்தியருண்டுதாம்

பண்களோடிசைபாடிநடுவரால்

130 உற்ற பண்ணையுலாவுமுழத்தியர்

மற்றையாரொடுமதுவுண்மயக்கினா

லற்றம்யாவையுமங்கைகள் கொட்டியே

குற்றமீதென்று கூறிநகைப்பரே

131 துள்ளுசேலினந்தூம்புடைக்கும்புனல்

வெள்ளமாமருதந்திகழ்வேலிசூழ்

மள்ளர்தந்தவளவயனாறெலாங்

கள்ளுண்காமக்கடைசியர் நாட்டினார்

வேறு

132

மிடைபடுசெஞ்சாலிதிகழ்மிகுந்தபுனற்பண்ணைதொறும்

புடைபெயர்ந்துபுனனிறுவிப்புகழ்பெறு செந்நெற்சாலி

தடைபடுந்தாட்டடங்கமலந்தன்னாலென்றுளந்தளர்ந்து

கடைஞர்கடைக்கண்காட்டக்கடைசியர் பூங்களைகளைவார்

வேறு

133 அங்கர்ழத்திய ரள்ளியகழ்ந்த

செங்கமலங்கள் செழுங்கதிர்கண்டு

பொங்குதணீரிடைப் போந்தனசேரத்

தங்கினை கண்டனர் தம்முகமொக்கும்

134 மங்கையர் தம்முகமானுவவென்றே

செங்கமலங்கடெரிந்து தெரிந்தே

யங்கண்மிகுந்தலமந்தமர்வுற்றே

தங்கவரிற்சிலர் தாங்களையாரால்

135 விட்டிடுகாமன்வியன்கணையொன்றே

யுட்கொடுமேவுமுழத்தியர் சில்லோர்

மட்டவிழ் செங்கமலத்தொடு காவி

கட்டனர்மிக்ககடுங்களையெல்லாம்

136 பந்தவிலங்குபரிந்தவர்தம்பால்

வந்துநன்ஞானம்வளர்ந்திடுமாபோற்

கந்தமலர்க்களை கட்டலினோங்கிற்

றந்தவியன்பணையார்தருபைங்கூழ்

137 செந்நெல்வளர்ந்துசெழுங்கதிர்சாய்தல்

பன்னுதமிழ்ப்புகல்பாலனை முன்னா

னின்னருளானதியேடெதிரேற

மன்னனெழுந்துவணங்குதல் போலாம்

வேறு

138 வரம்பருறுமுழங்கொலிவாய் மருதநிலக்கிணை கறங்க

வரம்பொருதகதிரரிவாணிரைபூட்டியாங்குழவர்

பரம்பியரிந்தரிபரப்பிப்பணிலங்கடருமுத்தஞ்

சொரிந்திடவேயவைதிரட்டிச்
சொன்னமலைபோற்குவித்தார்

139 மேருகிரிசாய்த்திடல்போன்மிகுசெந்நெற்போர் சரித்துக்

காரிணங்குங்கருமேதிக்கணத்தினை நன்குறப்பிணித்துப்

பாருறவேபலகாலுஞ்சூழ்ந்து பலாலந்தெரிந்து

மாருதநேருறத்தூற்றி மன்னியநென்மலை வளர்த்தார்

140 அழகியசீர்ப்புகழ் வேந்தற்காறிலொன்று கொடுத்தைந்தில்

வழிபடுதெய்வம் பிதிரர்வருவிருந்துவான்கிளைகள்

விழைவுறவேயளித்ததற்பின்மிகுமொன்றால் வியன்குடிமை

பழகிய செல்வம் பெருகும் பாண்டிவளநன்னாடே

வேறு

141 கொண்டல்சேர்பொழில்களெங்குங் குலாவுநற்பொழில்களெங்கும்

பண்டைநான்மறைகளெங்கும்பகர்ந்திடுமறைகளெங்குந்

தண்டமிழ்மணங்களெங்குந்தகுகடிமணங்களெங்கு

மண்டராலயங்களெங்குமணிகொளாலயங்களெங்கும்

142 மாதர்தம்பண்ணையெங்குமருதநீர்ப்பண்ணையெங்கு

மேதமில்செல்வமெங்குமிந்திரசெல்வமெங்கு

மோதுமஞ்சுகங்களெங்குமுரைக்குமஞ்சுகங்களெங்கு

மேதகுமுலமெங்கும் விரும்புநல்லுலகமெங்கும்

143 வண்டமிழ்ச்சங்கமெங்கும்வார்புனற்சங்கமெங்குஞ்

சண்பகவனங்களெங்குந்தகுமடவனங்களெங்கும்

விண்படர்வேழமெங்கும் வியன்கழைவேழமெங்கும்

பண்டருபாடலெங்கும் பதமிதிப்பாடலெங்கும்

144 வேதமந்திரங்களெங்குமிக்கதந்திரங்களெங்கும்

போதலர்வாவியெங்கும் புண்ணியதீர்த்தமெங்கு

மோதுபண்ணிசைகளெங்குமுரைக்கும் யாழ்ப்பாணரெங்கு

மாதர்தம்வண்ணமெங்கும் வண்டமிழ்வண்ணமெங்கும்

145 தேமலர்பயில்வசெந்தேன் செவ்வழிபயில்வசெந்தேன்

காமநூல்பயில்வர்மாதர்கமலமாமுகமொண்மாதர்

நாமநூல்பயில்வநாவேநாவலர்பயில்வநாவே

தாமமேபயில்வவன்னந்தாமரைபயில்வவன்னம்

146 முள்ளரைநாளஞ்சேர்ந்தமுண்டகக்கையானீவி

யெளளருங்கருவிபம்பயாழ்நரம்பிசைத்தியார்த்தே

யுள்ளமிக்குவகைகூர்ந்தாங்குரைக்கும் யாழ்ப்பாணர்பாடற்

றெள்ளமுதனையதீஞ்சொற்செவியுறவாங்கின்றாரும்

147 குழலிசைபயிற்றுவாருங்குஞ்சரம்பொருத்துவாரு

மழவர்சொன்மாந்துவாருமனையறம்புரிகிற்பாரும்

விழவணிவிரும்புபவாரும் விருந்தெதிர்கொள்கிற்பாரு

முழவிசைவிரும்புவாருமுற்று மெய்த்தவஞ் செய்வாரும்

148 வாரணப்போர்சேர்ப்போருமைமறிப்போர் காண்போருந்

தேரணியூர்குவோருஞ்சிலைத் தொழில்பயிலுவோருங்

மாரணந்தேர்குவோருமஞ்செழுத்தறைகுவோரு

காரணங்கருதுவோருங்காரியந்தேர்குவோரும்

வேறு

149 கன்னலஞ்சிலைகையேந்துங்காமனூறன்னைத்தாமே

யின்னிசைபாடுவோருமிருசெவிமாந்துவோரும்

பொன்னகர்தன்னின்மன்னும்புலவரிற்பொலிந்துசூழத்

தன்னிகராகியோங்குந்தண்டமிழ்ப்பாண்டிநாடே

வேறு

150 தீதின்மாதவர்சேர்ப்பனசாலையே
சிறப்பின்மல்குந்தினமன்னசாலையே

காதல்கூருங்கடிபொழின்மாலையே
கருதுநீறொடுகண்டிகைமாலையே

மாதர்காதன்மிகுமந்திமாலையேவண்டுகிண்டியுறங்குவமாலை

யாதரம்பெறுமாலெங்குமாலையே
யார்வமோங்குங்கழைக்கரும்பாலையே

151

சேய்கணின்றௌவைக்கீவதுமுத்தமேசிற்றில்கோலிச்சிதைப்ப

பாய்புனற்றிரைசேர்வது
பண்ணையேபாடலெங்கும்பயில்வது பண்ணையே

வாய்திறந்துவழங்குவவள்ளையேமானனார்கடம்வார்காதும்

யோய்மருங்கிலுடுப்பது
சேலையேயுற்றகண்களொப்பாவது சேலையே

152

கோலமாந்தரணிவதுமாரமேகுங்குமக்கொங்கைசேர்ப்பதுமா

சாலவெங்குந்தவம்பயில்வாரமேதரங்கநீர்த்தரளம்புரள்வார

மாலுலாவிவளருமந்தாரமேமன்னுதீஞ்சொல்வழங்குமந்தார

சீலமாதவர்சிந்தையுமாரமேசேர்ந்தபண்ணைமருதமுமாரமே

153 புண்டரீகம் பொருந்துநற் சங்கமே பொங்கி யெங்கம் பொருந்துநற்சங்கமே

பண்டமாறுவபாவையராரமேபயிலுங்காமவிழாவாரவாரமே

வண்டுபாடுமலர்க்கருங்கோதையேமைந்தர்
செங்கைமருவுவகோதையே

யெண்டிசாமுகமுஞ்சிவதானமேயிசைந்திடுந்தருமத்தொடுதா

வேறு

154 சோலையின்மறைசொல்லுவவஞ்சுகங்

கோலவேள்விருதூதுவகோகில

நீலமாடநெருங்குவமேகங்கண்

மாலைசேர்வனவண்டின்குழாமரோ

155 நீடியோங்குநிலாமுற்றமோங்குமே

மாடமூடுங்கலாபமயில்களே

பாடல்சேர்ந்திடும் பண்ர்டனோசையே

யாடுநீர்த்துறையன்னக் குழாங்களே

156 அள்ளல்வேலையகலிடமெங்கர்ந்

தெள்ளுசெந்தமிழ்ச் செல்வந்திளைக்கவே

கொள்பொருள்வெறுகிக்கொள்பவரின்மையால்

வள்ளியோர்கணமண்டலத்தில்லையே

157 செம்மைநல்குறுசெந்தமிழ்சேரலால்

வெம்மைசேர்ந்தவெளிற்றுரையில்லையாம்

டுபாய்ம்மையென்றும்புகன்றறியாமையான்

மெய்ம்மையென்றும்விளம்புவதில்லையே

158 கோதின்மாமணிகுப்பைகொழிப்பன

வோதுதேன்மதுவுண்டுகளிப்பன

பாதமேபயிலும்பரதத்துடன்

மாதரோடுநடிக்குமயிற்குழாம்

159 தென்குலர்வியதேமொழியார்கடம்

பொன்குலாவியபூண்முலைதாங்கலாற்

றுன்பமேவுந்துடியிடையன்றிமற்

றின்பமேயலதேதமங்கில்லையே

160 மேவுகின்றவிலங்குவிலங்குகள்

காவலென்பகடிமதிற்காவலே

யோவில்வன்சிறையுற்றபுனற்சிறை

தேவர்கோன்புகழ்தென்னவனாடெலாம்

161 வங்கவாரிதிசூழ்கின்றவையக

மெங்கர்ம்பகையின்றியிருத்தலாற்

றுங்கமேவுவெஞ்சூரருந்தோன்றிலர்

பங்கமேய்பண்ணைப்பாண்டிநன்னாடெலாம்

வேறு

162 கண்டவளவான்மிகுகலைப்பொருளினாலும்

வண்டவளநாயகிவழுத்தரிடதென்றாற்

கொண்டவளவில்புகழ்குலச்செழியராளு

மண்டவளநாட்டணியையாரறையவல்லார்

திருநாட்டுச் சருக்க முற்றியது

ஆகச் செய்யுள் 162

✸✸✸✸✸

13

திருநகரச் சருக்கம்

163 ஆவணத்தணிதிகழலங்கனாற்றுபூங்

காவணங்கற்பகக்காவினீழல் செய்

தீவணமிலங்குசெஞ்சடிலசேகரன்

பூவணத்தணிசிலபுகலுவாமரோ

வேறு

164 நீடுதிரைக்கடலாடைநிலவேந்தர் நேரிழையார் நெருங்க வெங்குஞ்

சூடகக்கைச்சுரர்மடவார்துணைவரொடும் விமானத்திற்றுவன்றுமூதூ

ரேடலர்தாரிட்டருச்சித்திந்திரன் வந்தனைபுரியுமெழில்கொண்மூதூர்

மாடமலிமறுகுதிகழ்வளமைசாறமிழ்ச் சங்கம் வளருமூதூர்

165 தேவர்களுந்திசை முகனுந் திருமாலுந்திசை யோருஞ் செங்கை கூப்ப

மேவுதிருநடராசர் மீனவன் றன் விழிகளிப்பவெள்ளிமன்றுட்

டாவின்மலாப்பதமாறித்தாண்டவஞ் செய்தருள்கின்றதருமமூதூர்

மூவுலகும் புகழ்மதுரைமிகவிளங்குநிலமகடன் முகமே போல

166 அன்னதிருப்பதிக்கங்கிதிக்கினில் யோசனைக்கப்பாலமர்ந்து தோன்றுஞ்

சின்மயமாஞ் சிவலிங்கஞ் செங்கதிர் வெய்யோன் பூசை

செய்யவைகு

மன்னுநவமணித்தேரூர் மறுகு தொறுமாளிகை சூளிகைநெருங்கும்

பொன்மதில்சூழாலயஞ்சேர் பூவணத்தின் வளம் யாவர் புகலற்பாலார்

வேறு

167 அரியயன்முநிவரயின்முகக் குலிசத்தமரர் கோனளகையம்பதியான்

பரவருமிருள்கால்சீத்திடத்தோன்றும்பல்கதிர்ப்பரிதிவானவன்

தருணநல்லமுதகிரணசந்திரனற்றானவரானவரானோர்

திருமகடினமுமருவிடத்திகழுந் தென்றிருப்பூவணநகரம்

168 மேவியசடிலம் வெண்ணிலாவெறிப்பவிடையுகந்தேறிடும்விமல

னாவலர்புகழ்நான்மாடநீள்கூடனாயகனந்திடுயெம்பெருமான்

பூவுலகேத்தும்
பொன்னனையாடன்பொருவருமனைவருகமலச்

சேவடிமணமெண்டிசாமுகம்வீசுந்தென்றிருப்பூவணநகரம்

169 பகவலன்பூசைபடைத்திடுபலனோ பண்ணவர்பண்ர்நற்றவமோ

இகம்பரம்வீடுமும்மையுமுயிர்கட்கினிதருளெம்பிரானருளே

மிகும்புகழ்சாலுமிவற்றுள் யாதென்று விரித்திடற்கரியதாய் விளங்குஞ்

சிகரகோபுரங்கடிகழ்ந்து சேணோங்குந் தென்றிருப்பூவணநகரம்

வேறு

170 தொலைமாபுகழ்துன்றுஞ்சுராதியர்க்

கெல்லையில்லநலின்பமளித்திடு

மல்லலோங்கிவளர்ந்திடுமந்திரஞ்

செல்வமல்கிய தென்றிருப்பூவணம்

171 குன்றமன்னநற்கொங்கைசுமந்துநேர்

மின்றயங்கிடைமின்னனையாளுடன்

கன்றுமான்கரமேந்திய கண்ர்த

றென்றமிழ் பயிலுந்திருப்பூவணம்

172 அங்கண்வானத்தகடுகிழிபட

மங்குறோய்மணிமாடத்துங்கூடத்தும்

பொங்கரோங்கும் பொழில்களிடத்தும்வெண்

டிங்கண்மேவுறுந் தென்றிருப்பூவணம்

173 பொற்பதந்தனைப்பூசுரர்க்கீதலாற்

சொற்பதங்கடந்தோங்கியசூழ்ச்சியாற்

கற்பகத்தைவளர்த்திடுகாட்சியாற்

சிற்பரன்னிகருந்திருப்பூவணம்

174 எந்தையின்னருண்மேனிகொண்டெய்தலாற்

புந்திகொண்டதளித்திடும் பொற்பினாற்

கந்தமேவுங்கடாம்பொழியுங்கவுட்

சிந்துரந்நிகருந்திருப்பூவணம்

175 ஏய்ந்தவங்கணனங்கணியையதலால்

வாய்ந்தபொய்கையிடத்தில் வளர்தலாற்

போந்தவாறுமுகந்தருபொற்பினாற்

சேந்தன்போன்றது தென்றிருப்பூவணம்

176 பொங்குமாமலர்ப்பூங்கொடிமேவலாற்

சங்கமோங்கத்தடக்கை தரித்தலா

லெங்கணாதனிடத்திலிருத்தலாற்

செங்கண்மானிகருந்திருப்பூவணம்

177 இசையநான்மறையின்னிசை பாடலாற்

கசடறுங்கலைமங்கைகலத்தலா

னசையுடனன்னதானநர்கலாற்

றிசைமுகன்னிகருந்திருப்பூவணம்

178 புந்திகொள்ளும் பொற்பூவிற்பொருந்தலா

லந்தமற்றசெல்வங்களளித்தலால்

வந்தெஞ்ஞான்றுநன்மாலுடன் மேவலாற்

செந்திருந்நிகருந்திருப்பூவணம்

179 நல்லெழில்வளர்நான்முகனண்ணலா

லெல்லையில்கலையாவுமியம்பலா

லல்லிசேர் தவளாம்புயபீடிகைச்

செல்விபோன்றது தென்றிருப்பூவணம்

வேறு

180 ஆரணநான்கு

மங்கமோராறுமளவிடற்கரியபேரொளியாய்

நாரணனவனுநாற்றிசைமுகனுங்கனவினுநண்ர்தற்கொண்ணா

காரணமாயக்காரணவுருவாங்கண்ர்தலன்றுகொண்டருளும்

பூரணஞானச்சுடர்ப்பிழம்பெனவேபொன்மதின் மன்னியதன்றே

181 எண்டருசரியையாதியோர் பயின்றங்கிருத்தலாலிறைபதம்போலும்

பண்டருவேதம்பாடிடுபரிவாற்பன்னுநான்மறையையும்போ

தெண்டிரைக்கடற்பாற்றிசைகளோடுதலாற்றிசைமுகன்றன்னை சிவர்ங்

கொண்டிடுமண்டகோளகைக்கப்பாற்குலவுபொற்கோபுரவாய

182 பல்லுயிரெல்லாம் பரிவுறவோங்கப் படைத்தலாற்பங்கயனொக்குஞ்

செல்வமோங்கிடவேதினந்தொறும் வளர்க்குந் திறத்தினாற் செங்கண்மாலொக்குந்

தொல்பவமனைத்துந்துடைத்தலான் மறைக்குஞ்சூழ்ச்சியா லருள்புரிதொடர்பாற்

சொல்லரும்புகழ்சேருருத்திரன் மகேசன் றொழிலறுசதாசிவனொக்கும்

183 வேலொடுசெறிந்தமிகுபொறிமயிற்கண் விரவலால்வேலனையொக்குங்

கோலமேவியநற்சூல மேல்கொண்டுகுலாவலாற் கொற்றவையொக்குங்

சாலவும் படைகடாங்கலான்மிக்கசமர் பொருநிருதரையொக்கு

மேலுநன்னிதியமீட்டலான்மன்னுமிருநிதிக்கிழவனை யொக்கும்

184 விரவுவானிமிர்ந்துமிக்கபொன்முடிகண்மேவலான்மேருவை

பரவமேற்கண்கள்படைத்தலாலணிசேர்பாகசாதனன்றனையெ

பொருவிகந்தோங்கிப்பூந்தனம்பொருந்துபொற்பினாற்

பூமகளொக்கும்

கருதியேகாண்டற்கருமையான்ஞானக்கண்ர்தலண்ணலையெ

185 நாடுறயார்க்குநனிசிறந்தோங்கு நற்பெறியுடுத்தபொற்புரிசை

மாடுறுசீரார்வாரி சேர்கின்றவண்மையையாதெனவகுப்பா

நீடுபல்லுலகைநிரப்பியுன்னதமாய் நேமிமால்வரையதன்பாங்கர்ப்

பீடுறமன்னும் பெரும்புறக் கடல்போற்பிறங்கு பேரகழிசூழ்ந்திலகும்

186 தண்டரளங்கள்வெண்டிரைகொழிக்குந்தடங்கரைமருங்கினிலு

மண்டியசெல்வப்பெரும்புனற் சீரார்வாரியின் வானவருலகங்

கண்டவருள்ளங்களிமிகத்தூங்கக்காண்டகு மாட்சியின்மிகுமா

லண்டர்நாடதனினண்டர்நாடடைந்ததென்பதுமற்புதமாமோ

187 பள்ளமார்பயத்தாற் பயந்தரும்பரிகப் பாங்குறுபித்திகைப்பளிக்கு

வெள்ளிவான்றகட்டின்விளங்கும் வெண்டாளம் விரிசுடர் வெண்ணிலாவெறிப்பத்

தள்ளருபெருஞ்சீர்த்தபநியப்புரிசைதன்னிறந்தான்றணந்ததன

வள்ளல்சேர்கயிலைமால்வரையென வே மன்னிய தென்னலாமாதோ

188 கோலமாரகழிற்குளித்திடுகுன்றக்குஞ் சரந்தனைத்திமிங்கலந்தான்

சாலும் வெம்பசிதான்றணிந்திடவிழுங்கித் தன்னகட்டடக்கிடுந்தன்மை

வேலைகளேழும்விரவியொன்றாகிமேவிடுமந்தநான்முகுந்த

சேலுருவாகிச்செறிந்தபல்லண்டஞ்சிறுசெலுவடக்கியபோலும்

189

தக்கசீர்க்கப்பறரங்கமாங்கரத்தாற்றண்டரளஞ்சொரிந்தளப்பத்

தொக்கபொற்புரிசைசூழ்ந்திடுஞாயில் சுற்றியபித்திகைதனக்குப்

பக்கமோடிடுநற்பாரெலாமடங்கப்பதித்திடும் பளிங்கின்மேற்பதித்த

மிக்கநல்வயிரவெண்ணிலாக்கற்றை வெண்படாம்போர்த்தது போலும்

190 அன்னபேரகழிகன்னழகொழுகு மங்கண்வானத்துயர்ந்தோங்கு

மன்னியதேரூர் மணிமறுகின்பால்வயிரவான்றூணிரைநிறுவித்

துன்னுசெம்பவளப்போதிகை தாங்குஞ்சுடர் மரகதத்துலாஞ்சேர்த்திப்

பொன்மதிலமைத்துப்புலமணியழுத்திப்பொற்புறச்சித்திரம் பொறித்து

191

தருமொளிபரப்புஞ்சந்திரகாந்தந்தரையெலாஞ்சீர்பெறச் சமைத்துப்

புகழ்பெறமிகு செம்பொன்னினால்வேய்ந்துபொற்சிகரம்பலவமைத்துத்

திகழ்பெறுகமலபீடிகைமருவுதிருமணிவாயில்கடோறு

மகிழ்தருமாடகூடமண்டபங்கண்மாளிகைசூளிகை நெருங்கும்

192 அன்னமென்னடையா ராடுமாடரங்குமணிமணிக்கோபுரநிரையு

மன்னவர்திறைகளளக்குமண்டபமும் வண்டமிழ்க்கழகமண்டபமு

முன்னையாரணங்கண்முழங்கு மண்டபமும் முரசதிருமண்டபமுந்

தன்னிகர்தருநற்றான மணட்பமுஞ் சார்ந்தபல்வீதியு நெருங்கும்

193 மந்திரமொடுநற்றந்திரம்பயிலும்

வைதிகசைவநன்மடமுஞ்

சந்ததம் பயிலுஞ்சதுர்மறைமுனிவோர் சதுக்கமும் வணிகர்சந்திகளுஞ்

சிந்தையின் மகிழ்ச்சி யோங்குபல்பண்டஞ்சேர்ந்திடுங்கோலமார்தெருவு

மந்தமில்குடிகளமர்ந்து வாழ்கின்ற வாவணமெங்கர்நெருங்கும்

வேறு

194 ஆனவைதிகசைவமுமண்ணறன்

பான்மைசேர்ந்தபஞ்சாக்கரமும்பயின்

ஞானமாதவர்நற்கரத்தேந்திய

தானமுந்தவமுந்தழைத்தோங்குமால்

195 நல்லதும்புருநாரதரின்னிசை

வல்லவீணையினோசையுமைம்பலன்

வெல்லுமாதவர்வேதத்தினோசையுஞ்

சொல்லுமாதர்தந்துந்துபியோசையும்

196 வம்பறாநன்மணிமுழுவோசையும்

பம்பியேயெழும்பல்லியவோசையுஞ்

செம்பொன்மாமணித்தேரினதோசையுங்

கம்பமேவுகடாக்களிறோசையும்

197 விந்துநாதம்விளங்கியவோசையுஞ்

சந்தநான்மறைதாமுழந்கோசையு

மிந்திராதியரேத்திடுமோசையு

மந்தவார்கலியோசையடக்குமால்

198 ஓங்குபூங்கமுகும்முயர்வாழையுங்

தூங்குபைங்குலைத்தெங்குந்துருக்கமுங்

கோங்குமாரமுங்குக்குலுவும் மனந்

தாங்குசெஞ்சந்தனமுஞ் சரணமும்

199 புன்னை சம்பகம்பூதவம்பூங்கழை

மன்னுசூதமந்தாரம் வருக்கைமேற்

பன்னுகின்றபராரை மரங்களுந்

துன்னுதண்டலைசூழ்ந்திடுமெங்கர்ம்

200 பற்பகறொறும்பாங்கினிலோங்கிய

நற்பொழிறிகழ்நண்ணியபூவணன்

பொற்பதத்திற் புரந்தரன்போற்றிடுங்

கற்பகச் செழுங்காவுமணக்குமால்

201 கோடரங்கள் குயில்விளையாடலே

நீடரங்கினிலாவிளையாடுவ

மாடமேல்விளையாடுவமஞ்ஞைக

ளாடுநீர்விளையாடுவவன்னங்கள்

202 வாவிநீர்விளையாடுவர்மாதர்கள்

காவிமேல்விளையாடுங்கயற்கண்கள்

பாவின்மேல்விளையாடிடும்பண்ணெலாம்

பூவின் மேல்விளையாடுவள்பூமகள்

வேறு

203 துறுமலர்பொதுளுஞ்சீர்ச்சோலைகண்மேலெங்கு

நிறைபுனலுறுசங்கநீணிலவொளிதங்கு

மறுவறுபுகழ்மன்னும் வாவிகடொறுமேவு

மறுபதமிசைபாடுமாயிதழரவிந்தம்

204 பங்கமதறநாளும் பாயுறைவாய்நீத்தந்

தங்கியபுதுவாசச்சததளமதுமாந்திப்

பொங்களின்பண்பாடும் புண்டரிகக்கோயின்

மங்கையை நிகர்மாதர்மங்கலமிடமெங்கும்

205 பிறைநுதலதுவொக்கும் பிடிநடையதுவொக்குஞ்

சிறுகிடைதுடியொக்குந்திரண்முலைமலையொக்கும்

வெறிமுலைமுகையொக்கு மென்னகையதுநீண்ட

கறைகெழுவேலொக்குங் கண்ணிணையது மாதோ

206 முயலுறுமுதயஞ்சேர்முழுமதிமுகமொக்குங்

குயில்குழலதுவொக்குங் கோகிலமொழியொக்கு

மயிலியலதுவொக்கும் வாய்பவளமதொக்கும்

பயிலரவது வொக்கும் பரவரூமகலல்குல்

207 தங்கியதிருமால்கைச்சங்கதுகளமொக்கும்

பைங்கழையதுவொக்கும்பரவுறுபசுந்தோள்க

ளங்கைகள் செங்காந்தளம்மலரதுவொக்குஞ்

செங்கமலமதொக்குஞ் சேவடியதுதானே

வேறு

208

செல்வந்தான்விளையாடுமனைகளேசேய்கடாம்விளையாடப்

மல்குமம்மனைவாயினற்கோலமேமாதர்வாயின்மணக்குந்தக்

பல்பெருங்கதைபன்னுந்தமிழ்களேபயிலிடங்களும்
பன்னுந்தமிழ்களே

நல்லசெல்வங்கணாடொறுநந்துமேநல்லதல்லது
நாடொறுநந்துமே

209 தலமலிந்துவிளங்குந்தடங்களே
தங்குவாசந்தரும்பூந்தடங்களே

யலகில்வாசமுநிவர்மடங்களேயடைந்தவர்க்கருளன்னமடங்

கொலைபுரிந்திடுங்கும்பகடங்களேகுலாவுமெங்குநிலாவுகட

முலைமுகந்தருமுத்தின்படங்களே
மொழியுமும்பன்முகமும்படங்களே

வேறு

210 அங்கண்மிகவோங்குபுகழந்நகரிதன்னுட்

டுங்கநெடுமாலைநிகர்சொல்லுமிளைஞோருஞ்

செங்கமலமங்கைநிகர்திங்கர்தலாரு

மங்கலவிதத்துடன்மணத்தொழின்முடிப்பார்

211 மோகமிகுமாடமணிமுன்றின்முகமெங்கும்

பூகமொடுபூங்கதலிபொற்பினடுகிற்பார்

நாகரிகமாலிகைகணாலவணிசெய்வார்

மாகமுயர்மாமகரதோரணநிறுப்பார்

212 மேலுறவிதானமணிமேவுறவிரிப்பார்

கோலமணிமன்னுநிறைகும்பநடுவைப்பார்

மாலிலகுமட்டமணமங்கலநிரைப்பார்

பாலிகைகளெண்டிசைமுகத்திடைபதிப்பார்

213 கண்டவர்மனங்களிகொள்காமனனையாருங்

கெண்டைதனையுண்டுவளர்கேழ்கிளர்கண்ணாருங்

கொண்டசதியோடுமகிழ்கூர்ந்துகுலவிச்சேர்

பண்டருவிபஞ்சியிசைபாடிநடமேய்வார்

214 குழையிடறுகன்னியர்கள் கோலமதனன்னார்

மழையகடுகிழியவெழுமாமணிபதித்த

வெழுநிலைநன்மாடமிசையின்புறவிருந்தே

கெழுமிமிகுகின்னரநலொழுகுமிசைகேட்பார்

215 பண்களினொடின்னிசைபயிற்றியிடுகிற்பார்

மண்கணெரியச்சகடவையமதுகைப்பார்

விண்கர்றுகோபுரநல்வீதிகள் விளங்கக்

கண்களிகள்கூரவிடுகாவணநிரைப்பார்

216 திங்கர்தலிற்றிலகமும்புனைதல்செய்வார்

பொங்குதலிணங்கவணிபொற்பினணிகிற்பார்

தங்குகலவைத்தொகுதிதன்னொடுகுழைத்துக்

குங்குமசுகந்தமுலைகொண்டணிதல்செய்வார்

217 மற்றுநிகரற்றிலமுமாடமிசைமுன்றிற்

சிற்றில்களிழைத்துவிளையாடியிடுசேய்க

ளற்றதிருமாமணியனைத்தினையும்வாரிக்

குற்றமெனமுச்சிகொடுகுப்பைகள் கொழிப்பார்

218 கோதைகொடுகோலமிகுகோதையணிசெய்வார்

காதைகளளந்துசெவிகாதலினிறைப்பார்

போதுநியமஞ்செய்துபோதுகள்கழிப்பார்

மாதர்களுமைந்தர்களுமாதருடன்வாழ்வார்

219 விழைவுறுநன்மாடமதின்மிக்கிலகுதீபம்

பழகியசெல்வத்தினுயர்பரிசனநிரைப்பா

ரிழையிழைகொழுகுபுகழிட்டிடையினார்தங்

குழலின்மிகவகிலிடுகொழும்புகைநிறைப்பார்

220 மைக்கரியெனப்பிளிறுமால்களிறிணைப்பார்

தக்கதகரைப்பொருசமர்த்தொழில்விளைப்பார்

மிக்கமணிகுண்டலம்விளங்குகதிர்வீசக்

குக்குடமிசைத்துமிகுகுரவையிடுகிற்பார்

221 விஞ்சியவிண்முகடுதொடுமேருமுலைகண்டே

யஞ்சுமிடைசேர்ந்தமடவன்னநடைமின்னார்

மஞ்சரியின்வண்டுமதுவுண்டினிசைபாடக்

கொஞ்சுகிளிமழலையொடுகுயிலின்மொழிபயில்வார்

222 மருவுமணிமன்றுதொறுமன்னவர்கள் சேர்வர்

தரியலர்கள்வாயிலிடைதகுதிறையளப்ப

ரரிவையாரங்குதொறுமாடல்பயில்கிற்பார்

திருமறுகுதொறுமினியசிலதியர்கடிரிவார்

223 மங்குலைநிகர்க்குமிவர்வார்குழல்களென்பார்

வெங்கடுவிடத்தைநிகர்மேவும்விழியென்பார்

செங்கிடையையொக்குமிவர்செய்யவிதழென்பார்

பங்கயமதொக்குமிவர்பாதமலரென்பார்

224 வெய்யமணிமேவுமுலைமேருமலையென்பார்

கைகளிவையல்லதிகழ்காந்தண்மலரென்பார்

நையுமிடையன்றிமூதுநற்றுடியதென்பார்

பொய்யில்புறவடிபுதியபுத்தகமிதென்பார்

225 இன்னபரிசெங்கர்மியைந்தமுறையாலே

பொன்னகருநாணமிகுபொற்புடனிலங்குந்

துன்னுபொழில்வைகைநதிசூழ்தரவிளங்கு

மந்நகரிதன்னணியையாரறையவல்லார்

226 சுந்தரமிகுந்திடுசுராதியர்விரும்பு

மந்தமில்சிறப்பினளகாபுரியிதென்னச்

சந்ததமுமிம்முறைதயங்குகவின்மூதூ

ரிந்திரசெல்வத்துடனியைந்திடுமெஞான்றும்

வேறு

227 பங்கமற்றமறைவழுத்துபானுகம்பனாயிரஞ்

சங்கவாயினாலுமித்தலத்துமேன்மைதானுரைத்

தங்கையாயிரத்திரட்டிகொண்டுதீட்டவமைகிலா

திங்கொார்நாவில்யான்விரித்தெடுத்தியம்பலாகுமோ

திருநகரச்சருக்க முற்றியது

ஆகச்செய்யுள் 228

✷✷✷✷✷

பாயிரம்

228

செங்கதிர்வெய்யோன்பூசைசெய்தவாறுந்
திகழ்திரணாசனன்வீடுசேர்ந்தவாறும்

பொங்குமணிகன்னிகைநீர்பொருந்துமாறும்புகலருந்துன்மன

தங்குதருமஞ்ஞன் முத்திசார்ந்தவாறுந்
தன்னிகருற்பலாங்கிபதிசார்ந்தவாறும்

பங்கமில்பாற்கரபுரப்பேர்படைத்தவாறும்
பன்னுமெலாப்பவங்களையும்பாற்றுமாறும்

229

செங்கமலன்சாபமுற்றுந்தணந்தவாறுந்
திருமகடன்சாபந்தான்றீர்ந்தவாறு

மங்கையவதாரஞ்செய்தமர்ந்தவாறும்வார்சடையோனவளை

தங்கியதக்கன்வேள்விதகர்த்தவாறுஞ்
சங்கரிபூவணத்தில்வந்தவாறுந்தீர்த்தங்

கொங்கணிசுச்சோதிதானாடுமாறுங்
கோதில்பிதிர்களைமுத்திசேர்த்தவாறும்

230

அருளுடனே தீர்த்தங்களாடுமாறுமருங்கலியின்வலியை
நளனகற்றுமாறுந்

திருவிழாவணிபெறச்செய்வித்தவாறுஞ்
சிதம்பரநல்லுபதேசஞ்செய்தவாறுந்

தருமுலகிற்சகாத்தமாயிரத்தைஞ்ஞூறு
தங்குநாற்பான்மூன்றுதந்தவாண்டிற்

பொருவருநற்புலவோர் சொற்புலமைகாட்டப்
புட்பவனபுராணமெனப் புகலலுற்றேன்

பாயிரமுற்றியது

ஆகச் செய்யுள் 230

*****

15

சூரியன் பூசனைச்சருக்கம்

முதலாவது

சூரியன் பூசனைச்சருக்கம்

231 ஓசைகொளித்தலத்துலகியாவையும்

வீசியகனையிருள்விழுங்குகின்றவான்

றேசுடைத்தினகரன்சிவலிங்கந்தனைப்

பூசனைபுரிந்ததுபுகலுவாமரோ

232 பன்னருமாதவர்படிவமாகியே

மன்னியசவுநகமகிழ்ந்துகேண்மியா

வென்னலுமன்னவனியம்பருந்தவந்

துன்னுநற்சூதனைத்துதித்தன்மேயினான்

233 உன்றனக்கிணையிலையுலகமூன்றினு

முன்றனக்கிணையிலையுரைக்குங்காலையி

லுன்றனக்கிணையுனையுரைக்குமாதலா

லுன்றனக்கொன்றுளதுரைசெய்வாமரோ

234 அங்கண்வானகத்திருளகற்றுமாரழற்

பொங்குவெங்கதிரவன்பூசையாற்றவே

சங்கரன்விரும்பியேதானிலிங்கமா

வங்கவணடைந்தவாறருளுநீர்மையால்

235 ஒன்றியகலையெலாமோதியேயுணர்

வென்றிமேவியபுகழ்வியாதன்றன்னரு

டுன்றியவருந்தவச்சூதமாதவ

வின்றெமக்குரையெனவியம்பினானரோ

வேறு

236

கங்கைதங்கியசெஞ்சடிலசேகரன்முன்கண்ணகன்கதம்பமாவ

கங்கிதிக்கதனிலறைந்திடுகின்றவரைதலையிட்டகாவதத்தின்

மங்குறோய்புட்பவனமதிலென்றுமன்னுமெம்பிரான்மகிழ்ந்த

துங்கமாதவநற்சவுநகவென்றுசூதமாமுனிவரன்சொல்வான்

237

அந்தநல்வனத்தினாதிகாலத்திலரியயன்முதற்கடவுளர்கள்

வந்துபோற்றிசைக்குமாண்பினதாகிமலைமகள்வளர்க்கும்வா

புந்திகொள்பாரிசாதமென்றொருபேர்புனைந்துநீங்காதுபொங்

யிந்திராதியார்சேரெண்டிசாமுகத்துமெங்கர்ம்பரந்துமிக்கிலகு

238 கெழுதருநன்னீர்க்கிருதமாலையெனுங் கேழ்கிளர்வைகையங்கரைமேன்

மொழியுமத்தருவின் மூலத்தினோங்கி முளைத்தெழுசிவலிங்கவடிவாய்

வழிபடுமடியார்மனங்கொளநினைந்தவரந்தனைநினைந்தரு‌ புரிந்து

விழைவினெஞ்ஞான்றும் வீற்றினிதிருப்பன்விண்ணவன்கண்ர்தற்பெருமான்

239 செங்கண்மால்விடையூர்சிவபிரான்றனக்குத்தெக்கிணதிக்கதிர்

மங்கலவிளைவான்மறைமுறைவழாதுமன்னியவத்தலந்தன்

லங்கண்மாஞாலமெங்கர்ம்புகழுமழகியமின்னனையாகி

யெங்கணாயகிதானிருந்தவம்புரிந்தே யியைந்திடுமியல்பினெஞ்ஞான்றும்

240 அன்னதொல்சிறப்பி னருந்தவமிழைக்குமந்தநற்பொற்கொடியான

கன்னிதன்முன்னேகருங்கடற்றோன்
றுங்கதிர்க்குலம்பரப்புமாதவன்றான்

பன்னுமான்மாக்கள்பாவத்தை
யொறுப்பான்பண்புறத்திருமணிகன்னி

யென்னுநற்றீர்த்தமேழுலகேத்த வெழில் பெறத் தொட்ட தொன்றுண்டால்

241

இந்தநற்றீர்த்தந்தன்னையோரொருகாலிசைப்பவருறுபவமொ

வந்ததிற்படிந்தமாத்திரையதனின்வருபிறப்பனைத்தையுமாற்

சந்ததம்பொருந்துசச்சிதாநந்தத்தடங்கடற்றடத்தினிற்படிந்தே

யந்தமாதியிலாவருளுடன்கலந்தேயார்வமாமுத்தியைச்சேர்வ

242 சித்திரவலங்காரத்துடனுயர்வான்சேருமக்கற்பகமூலத்

துத்தமதவங்கட்குறுதவப்பலங்க
ளுதவுமெம்பிரானுவந்திருந்தே

யத்தருமலரா லருச்சனைபுரியுமன்பருக்காயிடையருளால்

வித்தகமிகுநல்வேண்டுருக்கொண்டுவேண்டினார்வேண்டியஅ

243 அன்னதொல்புட்பவனத்ததுநாப்ப ணதிமனோகரமிகவுடைத்தா

யுன்னதமொருநான்கரையதாய்ச்சுற்றும்பாதயோசனையதைய

பன்னுமூவுலகும்பாரிசாதமெனப்பகர்வதாய்ப்பணைபலவுை

மன்னியபறவைவிலங்குகடம்முள்வருபகையொழிந்திடவை

244 அத்தருநிழற்கீழமரிலிங்கத்தினருளினாலாயிரங்கதிரோ

னித்தமாய்த்தனாதுபதம்பெறுகிற்பா னினைந்துநெஞ்சகங்கொண்டே

சித்திரைத்திங்கட்சித்திரைத்தினத்திற்றேசுறப்பூசனை புரிவான்

சுத்தநீராடித் தூயநீறணிந்து துலங்குகண்டிகைமணிபூண்டு

245 பொஞ்குலகேத்தும் பூர்வலிங்கத்திற் பொருந்தவாலுகங்கொடுதிரட்டி

யங்கையினொன்றினமைத்ததினிகழ்த்துமாறு போலங்கணன்றன்னைக்

கங்கைதங்கியசெஞ்சடிலசேகரமுங்கதிர்த்திரணிலவு நான்றொளிருந்

திங்களங்கொழுந்துஞ்செங்கண்வாளரவுந்திருமுகமண்டலமை

246 கண்கண்மூவந்துங் கரங்களீரைந்துங் கவின்றிகழ்படைக்கலங்களுநஞ்

சுண்டிருள்பரந்தகண்டமும்பகுவாயுற்ற நற்பன்னகாபரணங்

கொண்டதிண்டோளுங்கோலமார்பகமுங்குலவுசங்கக்குழைச்

புண்டரிகத்தினுரிபுனையரையும்பொருந்திய பொற்பதாம்புயமும்

247 சுத்தமாமிதயகமலத்தினின்றுஞ்சுழுமுனாமார்க்கத்தினாலே

சித்தநேர்நிறுவித்துவாதசாந்தத்திற்சேர்ந்துறுசிறந்தமந்திரத்தா

லத்தகுபிராணவாயுவால்வாங்கியலர்தருகரத்தினிலமைத்துச்

சத்தியோடுரியசதாசிவமூர்த்திதன்னையே நன்குறநிசித்து

248

வண்ணமேவியநன்மதுமலர்தன்னைவண்கரங்கொண்டுபின்ச

யுண்ணிகழ்சமனையுன்மனைக்கப்பாலோங்கியே நிட்களமாகித்

தண்ணிலாவெறிக்குஞ்சந்திரரநேகர்தந்தநூறாயிரவொளிசே

ரெண்ணருஞானவுருவமாஞ்சிவனையிலிங்கமத்தியத்தினிலி

249 தாபனஞ்செய்தபின்றகுசந்நிதானஞ்சந் நிரோதனந்தந்து

மாபரன்னறக்குச்சுவாகதார்க்கியமும்வழங்கியே காளகன்னிகையுஞ்

சோபனவிலிங்கமுத்திரையுடனேதுலங்குகைகூப்புமுத்திரைய

தூபமுமலிங்குதீபமுங்கொடுத்துச்சுகந்தநன்மஞ்சனமாட்டி

250 திலந்தருதயிலந்தேனுவைந்துவந்து சிந்தைகொள்கின்ற வைந்தமுத

நலந்தருமான்பானண்ணிடுந்ததிநெய்நன்மதுகன்னலின்சாறு

பலங்குளிர்தெங்குசந்தனக்குழம்புபத்தியினாட்டி நீராட்டித்

துலங்கியவைகைத்துறையினீர்சுமந்தசுரிமுகச்சங்கநீராட்டி

251 மகிழ்தருதிருவொற்றாடையுஞ் சாத்திமருவுசெம்பட்டுடன் மன்னு

மகமகிழ்கலவையாரமேலணிந்தேயரவகங்கணங்கரத்தமைத்

பகர்நவமணிகள்படர்வெயிற்கிரணம்பரப்புமாபரணமுமணி

திகழ்மணிமகுடஞ்செங்கதிரெறிப்பத்திருமுடியிலங்குறச் சேர்த்தி

252 பரவிடுநைவேத்தியம்பலவளித்துப் பாத்தியாசமனமுங்கொடுத்துத்

திருமிகுதூபதீபமுங்காட்டித்திருவெழுத்தஞ்சையுஞ்செபித்தா

குரியநற்பூசைப்பலனரற்குதவியோரிருகாலமுஞ்செய்து

குருமலர்கொண்டுபணிந்தெதிர்முக்காற்கும்பிட்டுத்தட்டமுமி

253 நிருத்தனுண்மகிழநிருத்தமுஞ் செய்து நீடுநற்கனவதிலின்னுந்

திருத்தகுமயன்மாறேடியுங்காணாச்சிவலிங்கதரிசனங்கார்உ

வருத்தியாற்கண்களருவிநீர்பொழியவாநந்தபரவசனாகித்

தரித்திடுஞ்
சென்னிக்கரத்தினனாகிச்சதுர்மறைத்துதிபடித்தனனால்

வேறு

254 சுகரன்புடையானேதுதிசொல்வார்புடையானே

யிகல்சார்படையானேகுறளெழுசூழ்படையானே

திகழ்கண்படையானேயுறுசெனனம்படையானே

புகழ்மன்றுடையானேபொருபுலித்தோலுடையானே

255 அண்டங்கரியானேயரியயர்கட்கரியானே

விண்டங்கொளியானேசதுர்வேதத்தொளியானே

பண்டங்கிசையானேயுறுபவமொன்றிசையானே

கண்டங்கரியானேநுதற்கண்டங்கரியானே

256 மேவும் பொருவில்லாய்மகமேருப்பொருவில்லாய்

சேவின்றுவசத்தாயருடினமொன்றுவசத்தா

யோவில்லுயிர்க்குயிராய்திருவுருவம்பரமுயிராய்

தாவில்சிவபதத்தாய்திகழ்தருதாமரைப்பதத்தாய்

257 கதிநல்குசங்கரனேயுலகவைநீக்குசங்கரனே

விதிநல்குகங்கையனேசடைமிசைதாங்குகங்கையனே

கதநல்குமங்கணனேயுமிழ்கடுநாககங்கணனே

திதனானவங்கியனேதிகழ்திருமேனியங்கியனே

258 மனமொன்றுமெம்மானேமழுமானேந்துமெம்மானே

புனல்சேர்சடையானேபுவிபுகழ்மாசடையானே

சினமால்விடையானேயடிசேராவிடையானே

கனலேந்தினகரனேயெனத்துதித்தான்றினகரனே

வேறு

259 அன்னதோர்காலைதன்னிலவ்விலிங்கத்துநாப்பண்

கன்னியாயுலகமீன்றகௌரிமெய்கலந்துதோன்றச்

சென்னியிற்றிகழ்ந்தகற்றைச் செஞ்சடாமகுடவேணி

மன்னியமதிக்கொழுந்தும்வாளராவிலங்குமார்பும்

260 அங்கண்மாஞாலங்காக்குமபயமும்வரதமுஞ்சேர்

பொங்கொளிதிசைவிளங்கும்போர்மழுப்படையுமானும்

வங்கவாரிதியினஞ்சமருவுகந்தரமுமேனி

தங்குவெண்ணீறுமிக்குத் தயங்குகண்டிகைநற்றாரும்

261 கோடிசூரியருங்கோடிகுளிர்மதித்திரளுமொன்றாய்

நீடியவொளியும் வேங்கைநிகழ்பொறியதளுந்தோன்ற

மாடுறுமயன்மால்விண்ணோர்மாதவர்முநிவர்போற்றத்

தேடரும்பொருளையந்தத்தினகரன்றெரியக்கண்டான்

262 நித்தமாயருள்சுரக்குநிருமாலன்றன்னைக்கா௨

வத்திரமின்றியானேயதிபதியாகவேண்டுஞ்

சுத்தமாமென துமிக்கதொல்லிரும்பதத்திற்கென்னாப்

பத்தியாற்சததளச்செம்பங்கயபதத்தில்வீழ்ந்தான்

263 பதந்தனில்வீழ்ந்திறைஞ்சும்பரிதிவானவனைநோக்கிக்

கதங்கொடுகாமற்காய்ந்தகண்ர்தல்யாருங்கேட்ப

விதங்கொளீரேழ்பொழிற்குமிக்கிறையாயிலங்கி

வதிந்துநீவாழ்நாள்காறும்வாழ்கெனவரங்கொடுத்து

264 திக்கிலகொளிப்பரப்புந்தினகரகேளெமக்கிங்

கக்கினிகோணந்தன்னிலரும்பெருந்தீர்த்தமொன்ற

மிக்கபூமுகையவிழ்ந்து வெறிகமழ்தரவிளங்குந்

தக்கநின்னாமந்தன்னாற்சதுரமதாகத்தந்து

265 மலர்தலையுலகம் போற்றமணிகன்னியென்னுநாம

நிலையுறநிறுவிநாளுநீடொளியிலங்கக்காண்டி

குலவிடுநின்னாற்பூசைகொண்டுநல்லருளால்யாமு

மிலகினமித்தலத்திலென்று மிவ்விலிங்கந்தன்னில்

266 வீசியவிருள்கால்சீக்கும் வெஞ்சுடர்ப்பரிதிநின்றன்

பூசனைபுரிந்தமேலாம்புண்ணியபரிபாகத்தா

லாசைகூர்ந்தருளாலிந்தவணிகிளர்பாரிசாதத்

தேசுறுதிருநிழற்கீழ்ச்சேர்ந்துடன் றிகழாநின்றோம்

267 இச்சையாலுருவங்கொண்டேயிருக்கும் நம்மிலிங்கத்திற்குப்

பச்சிமதிக்கினோங்கும் பாரிசாதத்தின்மூல

நிச்சயமுறயாமென்று நிகழ்ந்தினிதிருத்தலாலே

யச்சுரதருமுன்செய்தவருந்தவம்யாதோவென்றான்

268 கருணைகூர்கனலிதெய்வகம்மியன்றனையழைத்து

விரிகடலுலகுக்கெல்லாமேதகுவிழைவுடைத்தாய்த்

திருமிகுகின்றசெம்பொற்சிகரநீள்கோயிலாக்கித்

தரைபுகழ்தீர்த்தமொன்று தன்னிகராகக்காண்டி

269 காண்டிநீயிருந்ததான கண்ணகன்ஞாலந்தன்னில்

வேண்டுபுமிகவுமேலாய்விளங்கிடவென்தஞான்று

நீண்டகலிருவிசும்பினிறையணிகுறைபாடின்றிப்

பூண்டநின்பதத்திற்பின்னர்ப்போதியாலென்புகன்று

270 பன்னரும்புவியின் மேலாம்பான்மைசேர்தானந்தன்னி

லுன்னருந்தவத்தினபேற்றாலுத்தமோத்தமமித்தான

மன்னுமித்தலத்தின் யாவர்மருவியேமகிழ்வின்வாழ்வ

ரன்னவர்க்குண்டாமுத்தியென்பதற்கையமின்றால்

271 சந்ததம்விளங்கியாமித்தலந்தனிலிருத்தலாலே

வந்திவெண்வைகுவோர்க்குமருவுநம்மருளினாலே

யந்தமொன்றின்றிநாளுமறம்பொருளின்பம்வீடென்

றிந்தநால்வகையுமுண்டாமென்றனனெவர்க்கமேலோன்

272 பூதலத்திருள்விலங்கிப்பொங்குவெங்கதிர்பரப்பு

மாதவன்றனக்குநாதனருளுருவாகத்தோன்றி

மேதகுமந்திரத்துண்மிக்கமந்திரமாயுற்ற

வோதருமஞ்செழுத்தைவிதிப்படியுபதேசித்தான்

273 அவ்வுபதேசந்தன்னையங்கணனருளக்கேட்டுக்
கவ்வையொன்றின்றிமிக்ககருத்தினையொருக்கிநேராய்ச்

செவ்விதினுணர்ந்து மேலாந்திருவருள்கண்ணாக்கா்

மிவ்விறையிருந்தவாறிங்கிப்பரிசெனத்தெளிந்து

274 வானந்தத்தருவின்மூலமருவிவெம்பரிதிவானோன்

ஞானந்தானமூதென்றோதுநற்றிருவஞ்செழுத்தான்

மோனந்தானாகியன்பின்மோகித்துமுடியாவின்ப

வானந்தத்தழுந்தியொன்றாயற்புதமடைந்திருந்தான்

275 அருளுடன்கூடியொன்றாயானந்தத்தேனருந்தும்

பரிதிவானவனையெங்கோன்பங்கயச்செங்கைதன்னாற்

கருணையிற்பரிசித்தந்தக்கதிரவன்கண்டாக்காமுன்

றிருவருள்பிரகாசிக்குஞ்சிவலிங்கந்தனின் மறைந்தான்

276 தீதறப்பரிசிக்கின்றசிவகரவிசேடந்தன்னா

லாதரத்துற்ற நேயமதினின்றும்விழித்துப்பாரா

வோதுபுத்தேளிர்தம்மாலொருவராலறியவொண்ணா

நாதனைநேடிக்காணனற்றியானத்தினுற்றான்

277 நீடுமத்தியானநீங்கிநேரில்பஞ்சாக்கரத்தைப்

பீடுறவுபதேசங்கொள்பெருகொளிப்பரிதிப்புத்தேள்

வாடுநுண்ணிடைசேர்கின்றமங்கைபங்கொழித்த

வெங்கோன்

கூடுமன்பினிலெடுத்துக் கூறியதகத்துக் கொண்டான்

வேறு

278 அந்தவாறருளினாலமைப்பனென வண்ணறன்றிருமுனண்ர்சீர்

சுந்தரம்பெறநிறைந் திலங்குகதிர்துன்றுதன்றனது செங்கையாற்

கந்தநீர்மருவவுந்துகாதலொடுகல்வியுற்பலசுகந்தநேர்

சந்தமேவுமரவீந்தமாகமிகுசதுரநன்கொடுசமைத்தரோ

279 நானமேவுநர்தமக்குநன்குமிக நண்ணநெஞ்சகமதெண்ணியே

யூனமில்கருணைஞானதேசிகனுரைத்தமந்திரமதுற்றசீர்

மோனஞானமுடன்மூழ்கியத்துவிதமாகியின்புடன்முயங்கிமே

வானளாவிவருகங்கையாதிதிருமன்னுதீர்த்தமவையுன்னியே

280

தற்பரம்பொருளினாணையாலுரியதாபனஞ்செய்துதருக்கினா

மற்றுமோரிணையிலாதவேதநெறிமந்திரந்தனைமொழிந்துசங்

கற்பபூருவமதாகநெஞ்சினிடைகருணைகூர்ந்துவகைகருதிநன்

குற்றதீர்த்தமடுமூழ்கினானுலகினோங்குபேரொளியினும்பரா

281

மாதிரம்பரவுமாதிபுட்பவனவைபவத்தினதுசெய்தியாற்

சோதிகட்குமிகுசோதியாயிலகுதுங்கமேவுதிரளங்கமா

யோதுயிர்க்குமுதலோனுமாகியுயருத்தமத்துறுவரத்தையேய்

தாதபக்கடவுணாதனுற்றவுலகாதிபத்தியமடைந்தனன்

282

மன்னுநல்விசுவகன்மனைக்கருதிவம்மினென்றுகொடுவல்லை

பொன்னினோங்குவளர்புரிசையைந்தினொடுபொற்பினீடுமு

துன்னுகின்றசிகரங்களோடிலகுசோதிமாமணிகொளாலயம்

பன்னுமாடமிகுமண்டபங்கள்
சிலபண்டுபோற்பரிதிகண்டனன்

283 பொற்பினீடியசதாசிவத்தின்மகிழ் பூவணத்துறைபுராதனர்க்

குற்சவந்தனைநடாத்தவெண்ணிமன்னுவகைபூத்தெழுசுவேச்

வெற்றியானைமுகனாதிவிக்கிரகம்வேறுவேறுமறைவிதியனா

லற்பின்மேதகையசெம்பொனாலுருவமைத்துநன்மணியழுத்

284
கதிரவன்றனதுபெயரினானிலகுகாந்திநாயகனெனும்பெயர்

மதிவயங்கவணிமகுடசேகரநல்வானவன்றனையுமன்றினிற்

சதியினிற்றன்மிகுதாண்டவஞ்செயருடம்பிரான்றனையளித்து

விதிபதிட்டை செய்துவேதபூசையும்விழாவும் மேத்திடவிளக்கினான்

285
வையகத்தின்மலமாயைகன்மமறமாற்றியேவதியுமந்தணீர்

பொய்யிலன்புகொடுபொங்கிலிங்கமதுபோற்றிசெய்துபுரிபூ

றெய்விகந்தருவிமானமீதுகொடுசெஞ்சுடர்ப்பரிதிவானவன்

வெய்யமாமணியின்மிக்கிலங்கணிவிளங்குதன்னுலகின்மே

286 பொருவில்புட்பவனவை பவத்தணிபுகழ்ந்திடும்புவனமெங்கர்

மரியவப்பதியின்மேன்மையீதெனவளந்துரைக்கவெளிதாகு

பரவுமப்பதியின்வைகுநர்க்குரியபரபதம்பகர்தல்சரதமாந்

தருணமிக்கபுகழருண்மனத்திடைதருக்கிவாழ்மிகுதவத்தனீர்

287 யாதொர்புட்பவனவத்தலத்தினரனஞ் செழுத்தையருள்செய்தனன்

யாதொர்செங்கதிர்தனக்குமந்திரவெழுத்தினிற்பலமேய்ந்திடு

யாதொர்நற்றலமதென்பதொன்னறுதற்குநேர்புகலலாவதோ

யாதொர்நற்றலமதுண்டெனப்புகறலாவதோர் தலமுமில்லையே

288

ஞானமீதிலருண்மேனிகொண்டுவருஞானதேசிகனதருளினா

லாலநீழலறநால்வருக்கருளுமண்ணறன்றிருமுனண்ணியே

சீலமோடுதிருவஞ்செழுத்தையெருகால் விதிப்படி செபித்துளோர்க்

கேலுமுத்தியிமூதையமென்பதிலையிருபிறப்பின்வருமிருடிக

289

மண்ர்கின்றமணிகன்னிகைப்புனலில்வந்துமூழ்கியருணந்துசீர்

தொன்மரத்தினுறுநன்னிழற்கண்மகிழ்துன்னுசோதிதிருமுன்ன

பன்னுமன்னதுபதேசம்யாவர்சிலர்பண்ணினோரதுபரித்துளே

ரின்னபான்மைநிகழிருவரும்பொருவிலீசனல்லுருவிசைகுவா

290

இந்தநற்பதியிடத்தினீறணியுமெண்ணிலாருயிர்களுக்கெலா

மந்தமிக்கதிருவஞ்செழுத்தினுபதேசமெய்தலரிதரிதரோ

விந்தநற்கலியுகத்தினிந்தவுபதேசமானதுபலிக்கிலிங்

கிந்திரப்பதவியின்பமுற்றுமிகவுடையவன்கதியடைவரால்

291 வெந்தழற்பொடியையொக்குமித்தலம் விளம்பிலென்றவையுளங்கொளா

வந்துபொற்பின்மணிகன்னிகைக்கமலவாவிமூழ்குபலமேவல

லந்தமற்றதிருவஞ்செழுத்தைவிதியடைவினிற் கொடுசெபித்தருட்

செந்தமிழ்ப்பொதியமுநிவனங்கை கொடுசிந்துவைப்பருகினானரோ

292

பன்னுகின்றவறுபதமுரன்றிசைகொள்பங்கயத்திருமடந்தைசே

பொன்னினீடுமுயர்புரிசைசூழ்ந்திலகுபூவணப்பதியின்மேவி

மன்னுகங்கைமுதலாதிதீர்த்த மனமகிழ்வின்வைகுபுகழ்மாமணி

கன்னிகைப்புனலின்

மூழ்குமன்னவர்கள்கயிலைவெற்பினிடைபயில்வரால்

293 மங்கலங்கொடனுமாகநற்றலை வழங்குகின்றதொருதிங்களிற்

பங்கயத்தினொடுபானல்செங்குவளைபன்மலர்கொண்மணிக

பொங்குநற்புனிததீர்த்தமாடுதல்பொருந்துமாறுகொடுபோதற

றங்கியங்கடையகிற்பரேலவர்கள்சங்கான்றனுருவங்கொள்வ

294 சிவபிரான்றனதுதிருமுன்மேவுநதி தீர்த்தமன்னுமொருசார்பினி

னிவறல்சேர்தருமொரெய்யும்வெங்கணையெழுந்துசென்றுவி

பவமெனும்பரலையெரிகொளுத்துமிகுபாவநாசமதெனும்டெ

நவையிறீர்த்தமதினாடினர்க்குலகநாடுமுத்தியதுகூடுமால்

295 சித்திரைகொள்சித்திரைமெய்திங்கள்கலைசேர்நாள்

வைத்தபுகழாதபனன்மந்திரநவிற்றி

யுய்த்தமணியோடையினினுச்சிதனின்மூழ்கி

நித்தனை வணங்குநர்கணீடுகதிசேர்வார்

296 இந்தநலிரும்பதியிருந்தகையியம்பின்

முந்தையொருநான்மறைமுடிந்தபொருடானாய்

நந்துசிவஞானமதுநன்குறுவதாகி

நிந்தையறுநின்மலமதாய்நிகழ்வதாகி

297 ஏதமிலதோர்பிரணவச்சொருபமேயாய்ப்

பாதகமறுத்திலகுபஞ்சவனமாகி

யாதிநடுவந்தமறியாதபரமாகி

யோதரியவாதிசைவசித்தாந்தவுருவாய்

298 பொருந்தியிடுமின்பமிகுபூவணமதன்கட்

டிருந்துணர்வின்யாவர்சிலர்சென்றுதரிசிக்கி

னருந்தவமிழைத்தருளினங்கிருடிகாளே

யருக்கதியவர்க்கடையுமையமிலையம்மா

299 கிட்டுபெயர்மன்னியகிரேதநலுகத்திற்

சிட்டர்தினமும்பரவுதேவிபுரமென்று

மிட்டமுறுகாமியமியாவுமருள்செய்யும்

புட்பவனமென்றுமுலகம்புகழுமாதோ

300 தேற்றமுறவேதிகழ்திரேதநலுகத்திற்

சாற்றிடுமிலக்குமிதனாதுபுரமென்றே

தோற்றமுறுமன்னியதுவாபரயுகத்தி

னாற்றலைப்பிரானகரமென்றுபெயர்நண்ர்ம்

301 ஈந்றின்வருகின்றதொரிருங்கலியுகத்தி

னாற்றிசைகள் போற்றிசெயுநன்குறுதவத்தோர்

மேற்றிகிழும்வெஞ்சுடரின்மேதகையபேராற்

பாற்கரபுரப்பெயர்படைத்ததுபடிப்பால்

302 பூரணமெய்ஞ்ஞானமதுபுந்திகொடுவஞ்சம்

வேரறவகழ்ந்திடுநல்வேதியர்கண்மன்னோ

வேருறுமானந்தவனமென்றுமெணவொண்ணா

வாருயிர்கண்முத்திபெறுமாச்சிரமமென்றும்

303 திக்குலகெலாம்புகழ்சிதம்பரமதென்றும்

பக்கமுறுதக்கிணகாசிப்பதியதென்றுந்

தக்கசதுர்வேதபுரமென்றுமதுசார்பேர்

மிக்கபிதிர்முத்திபுரமென்றுநனிமேவும்

304 இத்தலநரர்க்குறவிருந்திருவளிக்கு

மித்தலமிரும்பவமியாவையுமொழிக்கு

மித்தலமிலங்குசிவஞானமதுநல்கு

மதிதலமநாதியுளதாயியையுமன்றே

305 தொக்கவுயிர்கட்கிலகுதொன்னகரிதன்னுட்

டக்கவரமிக்குதவுதந்திமுவெந்தை

யிக்குலவுநற்பதியிரும்பெருமையாலே

முக்கணிமலன்றனையருச்சனைமுடித்தான்

306 வென்றிதருமித்தலநன்மேன்மையுறலாலே

யென்றனதுவாய்மையினிசைக்கவெனதன்றே

மன்றவொருநூறுவருடந்தனினுமாதோ

துன்றுகதைவல்லபடிசொல்லமுடியாதே

307 நிகழ்மறையுணர்ந்தசவுநகமுநிவநீடு

புகழுலகெலாம்பரவுபூவணமிகுஞ்சீர்

மகிழ்பிரமகைவர்த்தமாகியபுராணந்

திகழெழுபதென்னுமத்தியாயமிதுசொல்வார்

308 இந்தவகைகந்தனருணந்திபெறவின்பா

லந்தமில்பெருங்கயிலையின்கணருள்செய்தா

னந்துமறையீர்களெனநைமிசவனத்திற்

சுந்தரமிகுந்ததவசூதனுரைசெய்தான்

வேறு

309
இந்தனத்திடைசெந்தழல்வந்தபோலிந்தநற்பதிமுந்தவியந்தே

ரந்தநற்சிவலிங்கம்விளங்கவேயந்தரத்தவர்செங்கதிர்கண்டசீ

தந்தவிக்கதைகண்டுபுகன்றுளோர்தங்குநற்செவிகொண்டுபுக

புந்தியிற்கொடுவந்துபுகழ்ந்துளோர்பொங்குமுத்தியின்வந்து
பொருந்துவார்

சூரியன் பூசனைச்சருக்கமுற்றியது

ஆகச் செய்யுள் 309

✸✸✸✸✸

திரணாசனன் முத்திபெற்ற சருக்கம்

இரண்டாவது

திரணாசனன் முத்திபெற்ற சருக்கம்

310

ஓதரியவுண்மையதாயோங்குபரி
பூரணமாயுவமையின்றாய்ச்

சோதியதாய்ச்சுகவடிவாய்ச் சொல்லரிதாய்ச்
சுருதிகளுந்தொடரொணாதாய்க்

காதலினாலனைவர்களுங்காண்பரிதாய்க்காரணகாரியங்கடந்

வேதமறுபொருளினையாமிதயகமலத்திருத்தியிறைஞ்சுவாமே

வேறு

311 சத்தியஞானமார்சவுநகாதிப

வுத்தமராந்தவத்தோர்கள்சிங்கமே

சித்தநன்குணர்திரணாசனன்றிகழ்

முத்தியையடைந்தது மொழிகுவாமரோ

312 என்னலுமன்னுயிர்க்கிரங்கு...ன்னரு

ணன்னலந்தயங்கிய....கமுகத்தனாய்த்

தன்னிகரரு.... வச்சவுநகன்புகழ்

துன்... சூதனைத்துதித்தன்மேயினான்

(...குறியிட்டுள்ள இடங்களில் எழுத்துக்கள் அழிந்துள்ளன)

வேறு

313 எம்பிரானருளினாலேயாவையுமுணர்தலானு

மம்புவியிடத்துரோமகருடணனெனும் பேரானு

மும்பருமுணரவொண்ணாவொரு பொருளுடைமையானு

மிம்பரினுனக்குநேராமிருந்தவவாணரின்றால்

314 உலகெலாம்பணிந்து போற்று முயர்தவத்தும்பரானே

நிலவுபேரின்பநல்குநீடருட்பெற்றியானே

குலவியநண்பெஞ்ஞான்றுங்கூட்டியகொள்கையானே

கலையுடையோர்கடம்பாற்கழிபெருங்காதலானே

315 சைவமார்க்கண்டங்காந்தந்தங்கியவிலிங்கங்கூர்மம்

வையகம்புகழ்வராகம்வாமனமருவுமச்சம்

பொய்யறுபிரமாண்டஞ்சீர்பொருந்துநற்பவுடிகத்தோ

டெய்தியபிரமம்பாற்பமிசைத்திடுமிவற்றினோடும்

316 காதல்கூர்நாரதீயங்காருடம்வயிணவஞ்சூழ்

மாதிரம்புகழும்பாகவதத்துடன்மருவுமேத

பேதமிலாக்கிநேயம்பிரமகைவர்த்தமியாவு

மோதிடநின்னாற்கேட்டோமொன்பதிற்றிருபுராணம்

317

ஆங்கவைதன்னின்மேலாயறைந்தனையலர்ந்தசெம்பொற்

பூங்கொடிபடர்ந்துநீடும்பூவணமதனைப்பின்னு

மோங்கியகாதைநாப்பர்ரைத்தனைபூருவத்திற்

பாங்கினாற்கும்பகோணமென்றொரு பதியதன்றே

318 மக்களுக்கிழைத்தநீதிமாதவம்பலிப்பதாகித்

தொக்கவெம்பிறப்பிற்சூழுந்தொல்பவந்துடைப்பதாகித்

தக்கசெல்வங்களெல்லாந்தானருள்புரிவதாகித்

திக்குடையுல்கம்போற்றுந் தீர்த்தங்கள் பலவுமாகி

319 கலிவலிதொலைப்பதாகிக்கண்ணகன்ஞாலந்தன்னி

னலகிலாவுயிர்கட்கெல்லாமாநந்தமளிப்பதாகிப்

பலமுநிகணங்களோடுபண்ணவர்பணிவதாகிக்

குலவுமாச்சரியமாகிக்கோதிலாச்சிரமமாகி

320 சோதியாயுலகமெல்லாஞ்சுத்தமாக்குவதாய்மேலா

யாதிதெய்விகத்தினோடுபவுதிகமான்மிகத்தைப்

போதல்செய்பெற்றித்தாயபூவணந்தன்னின்மன்னு

மேதகுதானமுண்டேல்விரித்திவண்விளம்புகென்றான்

321 விளம்புவனென்றுவேதவியாதன்மாணக்கன்சொல்வா

னுளங்கொளுந்தவத்தோரேறேயுற்றநின்பாக்கியத்தாற்

களங்கமின்றாயதோர்நற்காரணந்தன்னான்மாதோ

வளந்தறிவொண்ணாப்புந்தியடைந்தனையன்றோவென்றான்

322 மண்ணிலாயிரம்பிறப்பின்மனமொழிகாயந்தம்மாற்

பண்ணிடுங்கருமத்தாலேபல்பெரும்பதியினென்று

மெண்ர்ம்யாகாதிகன்மமியற்றியேதீர்த்தமாடி

நண்ர்புண்ணியதானத்தினற்றவம்புரிந்துமாதோ

323 சொல்லருமின்பமுற்றுச்சுவர்க்காதிபோகந்துய்த்துப்

பல்பயனருந்திப்பின்னர்ப்பாரிடைநரர்களாகி

யல்லலொன்றின்றிநாளுமரியநற்றருமந்தன்னி

னல்லதொல்குலமுற்றோற்குநண்ணிடும்புந்திதானே

324 புந்திதானுடையதாகப் பொருவிடைப்பாகன்மேவு

மந்தணமானதானமான்மியந்தனைவினாவுஞ்

சிந்தனையுண்டாமீதுதீமையோர்க்கடையலாகா

திந்தநீர்முறைமைநீசெயிருந்தவப்பேறேயன்றோ

325 அந்தணர்தமக்குமேலோயானுநன்கடைந்தேனாக

நந்துநின்னளியென்றோதுநாரினாற்பிணிக்கப்பட்டேன்

முந்துசெல்வத்துச்

செல்வமுழுதொருங்குடையோய்நின்னாற்

புந்திகொள்செல்வம்பெற்றோனாதலாற்புகல்வன்கேண்மோ

326

உலகெலாமொடுங்கும்போதினுததிகளேழுமொன்றாய்த்

தலைதடுமாற்றந்தந்துதாபரசங்கமங்க

ளிலயமதடைந்தகாலையிருந்தரைதனக்குநாளு

மலகில்காரணத்தினோடங்கமைந்தகாரியமுமாகி

327 பெற்றிடுமமுதகும்பம்பிரளயசமுத்திரத்தி

னுற்றதனாப்பணின்றுமுலாவுபுவதியுங்காலை

மற்றையததனைவிண்டுவந்துமுக்கூறுதந்து

சிற்சிலகாலஞ்செல்லத்தெருண்டவானர்கிமாதோ

328 பூவுறைதிருவின்மேலாம்பூவணந்தன்னின்முன்னுந்

தாவில்சீர்க்கும்பகோணந்தன்னிலாங்கதற்குப்பின்னு

மேவியததன்பினாமம்விளங்குநற்றலங்கடோறு

மூவுலகங்கள் போற்றுமுக்கணனருளின்வைத்தான்

329 நாமநீர்வையம்போற்றுநல்லமிர்தாம்மிசத்தொன்

றேமமாம்புட்பமாகியின்னமுதுருவமன்னிப்

பூமகள் பொருந்திவாழும் பொழிறிகழ்பூவணத்தின்

மாமணிகன்னிகைக்கண்வந்ததுவீழ்ந்ததன்றே

330 நிகழ்தருமருளினாலேநிறைந்தநன்னேயத்தோடு

மகிழ்சிறந்தோங்குமாதிவருணகேண்மருவுதீர்த்தந்

திகழ்மாயாதீர்த்தமென்றுஞ்செங்கண்மால்விடையின்பாகன்

புகழ்மணிகன்னியென்றும் பொருந்தியதிரண்டுநாமம்

331 தருமமாம்பொருடனக்குத்தங்கியவங்கிதிக்கிற்

றிருந்தழகியமின்னன்னைதிகழ்திருமுன்னர்ப்பாங்காற்

பொருந்துதெய்வீகமாமப்புநிததீர்த்தம்படிந்தோர்க்

கரும்பிரமகத்தியாதியாம்பவமனைத்துநீங்கும்

332 பொழிறிகழ்புராதனத்தெம்பூவணங்கோயில்கொண்ட

குழகனைத்தொழுமுன்செம்பொற்கொடிதனைக்கும்பிட்டோர்

டொழுதிடுமக்கணத்திற்றொடர்புறுந்தோடந்தன்னால்

விழுவர்களகோரமென்னும்வெங்கொடுநிரயந்தன்னுள்

333 ஆதலினன்புகூர்ந்தேயரும்பெருங்கலைதெரிந்த

மூதறிவுடையோர்முக்கண்மூர்த்தியைத்தொழுகமுன்ன

மாதலினீதியாலேமங்கையையங்கைகூப்பிப்

பாததாமரையிற்பின்னர்ப்பணிந்திடக்கடவரன்றே

334

மெய்முநிகணங்கட்கெல்லாம்விழைவுறுந்தவத்தின்வேந்தே

யெய்தியதெனதுசிந்தையையமொன்றிதனையின்னே

பொய்யறுகேள்வியோய்நீபோக்குவதன்றியிந்த

வையகந்தன்னில்வைகுமாதவரில்லைமாதோ

335

என்னெனிலியம்பக்கோண்மோவிறைவியையிறைஞ்சுமுன்ன

தொன்னெறிசிவலிங்கத்தைத் தொழார்க்குறுந்தோடமென்றி

யன்னதுதான்வந்தெவ்வாறடைந்திடுமீதுபூர்வந்

தன்னில்யான்கேட்டதின்றாற்சாற்றுதிதவத்தோயென்றான்

336 சாற்றுகேன்சநற்குமாரன்றானுமீதையமுற்றே

நாற்றலைப்பெருமான்றன்னைநர்குமுன்னயந்துகேட்ப

வேற்றமாமிதிகாசத்திலெடுத்தவனிசைத்ததொல்சீர்

மாற்றமில்காதையொன்றுமாதவத்தலைவகேண்மோ

வேறு

337 முன்னாதியுகந்தனின்மோதுதிரைத்

தென்னார்ந்தகௌதமிதீரமுறு

மந்நான்மறையோர்குலமாதவனாம்

பன்னாசனன்றன்பரிவின்வருவோன்

338 திருவின்மகிழுந்திரணாசனனென்

றருமந்தபெயரதுதந்துடையோன்

றருமந்திகழ்வைதிகசைவனுளங்

குருவின்சரணங்குடிகொண்டிடுவோன்

339 வழுவாதருளின்வழிநின்றிடுவோன்

பழுதானவையொன்றுபகர்ந்தறியான்

முழுமாதவமென்றுமுடித்திடுவான்

செழுநான்மறைசேர்திருவாயுடையான்

340 மிகுமேதகுநல்விரதந்தருவோன்

றொகுமாதருமத்துறைநின்றிடுவான்

புகல்வேள்விகணன்குபிரிந்திடுவான்

சகவாழ்வுதணந்திடுதன்மையினான்

341 வேதங்கரைகண்டருள்வித்தகனீ

டேதந்தருசெய்கையிசைந்தறியா

னோதும்புவனத்துயிருக்குயிரா

நாதன்புகழன்றிநவின்றறியான்

342 செவ்வான்மதிபோற்றிகழ்நன்னுதலா

ரவ்வாழ்வெனுநீடலையாழியிடைக்

கவ்வாதுயருங்கதிதன்னையினி

யெவ்வாறடைவோமெனவெண்ணினனால்

343 பொய்வாழ்வினையேபொருளென்றுதின

மெய்வாழ்வினையேவிடுகின்றனமா

லைவாய்வருபொருளினவாவினைநீத்

துய்வான்வழியாமுணர்கின்றிலமால்

344 பேராதுறுநற்பொண்ணாசையினா

லாராதுலகத்தடையக்கடவே

னேராருமிலாநிமலன்னருளாற்

சீரார்கதியெவ்வழிசேர்குவனால்

345 விண்ணாடர்களும்மேலானவரும்

பெண்ணாசையினாற்பிழைபெற்றனராற்

பெண்ணாசைவிடப்பெறுகின்றவரே

கண்ணார்நுதலான்கழல்சேர்குவரால்

346 சிறைசேருடலின்செயன்மாண்டிடவோர்

குறிதானருளுங்குருதேசிகனா

லறிவாலறியுமருளாலறியப்

பெறுபேறினியான்பெறுமாறெவனோ

347 கைம்மான்மழுவுங்கனல்சேர்விழியு

நம்மாதரவானனிநாடரிதா

லிம்மானுடர்போலிம்மாநிலமேற்

பெம்மானருளப்பெறுமாறெவனோ

348 என்னாவியைபன்னியிரங்கியெழா

முன்னான்மறையோதியமூதறிவாற்

றன்னாசிரியன்றனை யெய்திடுவா

னன்னாமநவிற்றிநடந்தனனால்

வேறு

349 கோடிவான்மதியமுங்கோடிபாநுவு

நீடியபேரொளிநிறைந்தமெய்யனை

வீடருந்தவத்தினான்மிகச் சொலித்திடும்

பீடுறுதேசினாற்பிறங்குவான்றனை

350 படர்புவியிடத்துயிர்க்கருளும்பான்மைசேர்

நடையனைநான்மறைநவிற்றுவான்றனைத்

தடைபடாதருளினாற்சார்ந்தநெஞ்சனை

யிடருறுமில்லறமிறப்பிப்பான்றனை

351 புண்டரநீற்றணிபொலிந்தமுண்டனை

வெண்டிருநீறதுவிளங்குமெய்னைக்

கண்டிகைகொண்டிடுகவின்கொண்மார்பனைக்

குண்டிகைதாங்கியேகுலவுங்கையனை

352 முருகவிழ்தாமரைமுகத்தினான்றனைப்

புரிமணமிசையினிற் பொருந்துவான்றனைத்

திரிபுரமெரிசெய்தசிவபிரான்றனின்

மருவியதிருவுருவயங்குவான்றனை

353 விட்டிடும்வேணவாவேட்கையான்றனைச்

சிட்டர்கள்பரவிடுந்தேசிகன்றனைக்

கட்டுவார்சடையனைக்கருதருந்தவ

முட்டறுரோமசமுநியைக்கண்டனன்

354 மூண்டெழுகாதலான்முடுகிக்கண்ர்றீஇப்

பூண்டபேரன்பின்மெய்புளகம்போர்த்தனன்

மாண்டகுசிந்தையன்வரம்பின்மாதவங்

காண்டகுமுநிவரன்கழலிறைஞ்சினான்

355 அருள்பெறுமாசையாலடியற்றேவிழு

மரமதுவென்னவேவல்லைவீழ்ந்தெழீஇக்

கருணையங்கடலதாங்கடவுள்கேளெனாக்

குருபரனோடிவைகூறன்மேயினான்

வேறு

356 மங்கையர்மைந்தரென்னும்வங்கவாரிதியின்மூழ்கிப்

பங்கமதுற்றியான்செய்பவத்தினாலழுந்துகின்றே

னங்கதினழுந்தலாலேயறம்பொருளின்பம்வீடென்

றிங்கிவையொன்றுந்தேறேனியம்பிடினிவற்றினென்னாம்

357 இல்லிடையிருந்தலாலேயில்லதேயுண்டாம்பின்னர்ச்

செல்வம்வந்தடையுமந்தச் செல்வமுந்தேயும்பின்ன

ரல்லல்வந்தடையும்பின்னரகமிகழ்வுண்டாம்பின்னர்ப்

புல்லுதற்கரியமேலாம்புத்திரராவரன்றே

358 புத்திரராயகாலைப்பொருந்திடுங்கீர்த்திமிக்கா

மத்தகுமதனானிந்தையடைந்திடுமடைதலாலே

மெய்த்தகுவியாதிவந்துமேவிடுமேவலாலே

நித்தமும்வருத்தநீடுநீடநித்திரையுண்டாகும்

359 நித்திரையான்மூதேவிநிகழுமங்கதனால்வேறோர்

மெய்த்தனம்விருப்புமத்தான்மிக்கிடுந்துன்பமுற்றுச்

சித்தநன்னிலைதிரிந்துதிபங்கிநாடொறுமயங்கி

யத்தமாஞ்சுழியிலாழ்ந்தேயறவுமெய்வருந்துமன்றே

360 வருந்தவேநாளும்பாந்தள்வல்விடவடிவதாகி

யிருந்திடருழக்குமிந்தவில்லிடையியைந்துநாளும்

பெருந்துயர்கொடுகீழ்மேலாய்ப்பிறந்திறந்துழன்றேனானே

யருந்தவமியற்றினெவ்வாறடைந்திடுமின்பமுத்தி

361 குருபரவெனக்குநீயேகூறிடுகதிவேறின்றான்

மருவும்யாகாதிகன்மமாவிரதங்கள்சாந்தி

யரியநற்றவந்தானங்களன்றியேயெளிதிற்சேரு

முரியதோர்கதிக்குபாயமுண்டெனினுரைத்தல்வேண்டும்

362 சுந்தரத்தவத்தாலங்கஞ்சொலித்திடுஞ்சோதியானே

சிந்தையினுணர்ந்துவல்லேதிருவருள்புரிதியென்ன

வுந்துகாதலின்மிக்கோங்குமுரோமசமுநியுவந்தே

யிந்தவாறுரைப்பக்கேட்டியெனத்திருவாய்மலர்ந்தான்

363 நந்துநான்மறைதெரிந்தநற்றிரணாசனப்பேர்

மைந்தனேமதிவயங்குமாட்சிமையுடைமையானே

யிந்தமாநிலத்தெஞ்ஞான்றுமெண்ணிடினரர்களாலே

வந்திடுமுபாயந்தன்னான்மருவியதருமமெல்லாம்

364 மெய்ம்மையதாகியிந்தமேதகுமுலக்குக்கெல்லாஞ்

சம்மதமாகிமுன்னஞ்சாற்றிடுமுபாயமின்றி

யம்மநிற்கறைதல்வேண்டியன்பினேமாய்ப்புகுந்தே

மிம்முறைமையினாற்சேருமென்பதுமதித்தாமன்றே

365 நற்கதிபலவுஞ்சென்றுநான்மறைவிதிவழாம

லற்புதமருவுதீர்த்தமாதடிநீயாங்காங்குற்ற

சிற்பரமாகியோங்குஞ்சிவலிங்கங்கண்டுசூழ்ந்தே

யுற்றபேரன்பினோடுமுவகையினுறப்பணிந்து

366 மதிவலோய்வாரிசூழுமலர்தலையுலகம்போற்ற

விதிமுறைவிசேடித்தன்பின்மிக்கதானங்கணல்கித்

துதிகொடிம்முறையினாற்றிற்றொல்பவமொல்லைநீங்குங்

கதிபெறலாகுமின்றேற்காணலாந்தகையதன்றே

367 எனமுநிகழறியன்போடின்னருள்விடையுந்தந்தே

முநிவனன்றுரைக்குமந்தமுதிர்பழச்சுவையின்சொல்லா

லினிதுடல்புளகம்போர்த்தாங்கில்லறந்துறந்துவல்லே

புனிததீர்த்தங்களாடிப்புந்தியிற்கொண்டுபோந்தான்

வேறு

368 நயிமிசங்கெயைநற்பிரயாகையே

யயர்வில்புட்கரம்ரோமகருடணம்

பயிறருஞ்சுரபாண்டம்பைசாசமே

யியல்கன்மோதகேச்சுரமிராக்கதம்

369 கோதில்கோகன்னங்கோமுகைகட்கமே

நாதனன்குறுஞானகுண்டங்கதை

காதல்கூர்பிரபாசங்கபிலையே

பாதகந்தவிர்க்கும்பாபமோசனம்

370 போருப்பதங்கோவர்த்தனம்புகழ்

சீபருப்பதந்தீர்த்தந்தினந்தரு

மாபுகழ்க்காமசாரமாசற்றசீர்த்

தூபமிக்கெழுந்தூயசோணாசலம்

371 கேடிலாதகிருட்டிணவேணிநல்

வீடுநல்கிடும்வேகவதிம்மிகும்

பீடிலங்குசொற்பேசுப்ரயாணமாஞ்

சேடதீர்த்தந்திகழுந்திருநகர்

372 மிக்ககாஞ்சிகாவேரிவிலாளமே

தக்கசம்புதலமயறீர்த்தங்கள்

பக்கமோடுபடிந்துவிதிமுறை

தொக்கலிங்கங்கள்யாவுந்தொழுதரோ

373 பன்னுசெந்தமிழ்ப்பாண்டிநன்னாட்டினின்

மன்னும்வைகையின்வந்துபடிந்தபி

னன்னமென்னடையங்கயற்கண்ணியோ

டென்னையாளுடையானையிறைஞ்சியே

374 முன்பகர்ந்ததோர்யோசனைமூண்டிடும்

பொன்பயின்றதென்பூவணமேவியே

யின்பமாமணிகன்னிகையிற்படிந்

தன்பினன்னையையஞ்சலிசெய்தரோ

375 மிக்கவூழ்வந்துமேவிடவாயிடை

முக்கணன்றிருமுன்சென்றுதாழ்ந்தெழீஇப்

பக்கமோடுபதம்பணியாமலே

தெக்கிணாவர்த்ததென்றிசைசென்றனன்

376

சென்றுகாவதத்திற்றிகழ்திருச்சுழியற்சிந்துதீர்த்தம்படிந்தியல்பி

பின்றிகழ்பின்னல்பிறங்குவானவனைப்பெரிதருச்சனைமுடித்

பொன்றிகழ்புரிசைப்பூவணத்தடைந்தப்புனிதநீர்படிந்ததன்கன

லொன்றினனாகவோரிராக்கதனாயுழன்றுதன்னலமிழந்தன்றே

377

இருளறவுலகத்திருங்கதிபெறுவானெழில்பெறுபுனிதநீராடி

விரவுநல்லந்தவேதியன்றனக்குவிபரீதமாகவேமேவுங்

கருதருகிரமங்கடந்ததோடத்தாற்கதுமெனக்கலங்கியேயுள்ளம்

பரவழன்றினும்பைசாசமெய்கொடுவெம்பசியினாற்பரிதபித்

378

ஆனதோர்காலையருவினைப்பயத்தாலங்கணனற்பதங்காண்

றேனிவர்வாசந்தினங்கமழ்பொழில்சூழ்தென்றிருப்பூவணந்த

பான்மைசேரிரண்டாம்பரிதிகண்டாங்குப்படர்ந்தபேரொளிநி

நான்மறைபயிலுநல்லிசைவீணைநாரதமுநிவனண்ணினால்

379

ஆயவன்றன்னையந்தமாமுநிகண்டையவென்றமுதமாமொழி

பேயினதங்கம்பெற்றனையாரேபெரும்பசியுற்றனைபோலா

நீயுரைவிளம்புகென்னலுமவன்பினீடுபேருவகையிற்கூடித்

தூயமாதவனைத்தொழுதுகாண்கையினாற்றொல்லுணர்வடை

380

காதல்கூருலகிற்கனைகதிர்ப்பரிதிக்கடவுளையனையநாரதனே

யோதுமில்வாழ்வாமுததியினடர்ப்பட்டுறுகதிபெறுகுவான்வி

தீதறுதீர்த்தம்யாவையும்படிந்தித்திருநகர்மருவுதீர்த்தந்தோய்ந்

தேதமாகியமின்னெனுமனைவாழ்வையெறிந்திடவெண்ணிய

வேறு

381 காதலுடன்மேவுவடுகக்கடவுடன்னைப்

பாதகமலங்கண்மிசைசென்றுபணிவுற்றே

கோதறுநன்னீர்கொண்மணிகுண்டமதின்மூழ்கி

யாதரவினேறினனகன்கரையினம்மா

382 அந்தவமையந்தனினல்லந்தணர்தமன்னா

சிந்தனைகலங்கியமெய்திரிந்தனனியானே

முந்தைவினையோவலதுமூண்டபவமேயோ

விந்தவிதிவந்ததெதுவென்றறிகிலேனே

383 நெருக்கியுதரத்தினுறுநீடுபசியாலே

யிரக்கமறமுன்பினியையாதனபிதற்றி

யரக்கவுருவாயிவணலக்கண்மிகவுற்றேன்

விரிக்கினிதுமுன்விதிவிலக்கிடவொணாதே

384 பரம்புபணைகொண்டெழுபராரைமரநீழல்

விரும்புமொருவன்றலைவிங்கனியையொக்கு

மிரும்புனலியாத்திரையினெண்ணமுறுமென்முன்

புரிந்ததவநீமகிழ்பொருந்திவரலாலே

385 உன்னையலதோர்கதியுரைத்திடவுமுண்டோ

வன்னதினின்முன்னிகழுமாயிரசென்மத்தின்

மன்னுபவநின்னடிவணங்கிடவகன்ற

தின்னினிமகிழ்ந்திவணிரங்கியருளெந்தாய்

386 என்னலுமிரங்கிமிகுமின்னருள்சுரந்தே

யன்னவனைநின்னிலெனவங்கையினமைத்தே

மன்னியசெழுங்கமலவள்ளல்பெறவந்த

நன்மகதிவீணைபயினாரதனிசைப்பான்

387 அந்தணர்குலத்தலைவவஞ்சலினியஞ்சல்

வந்துளதொர்காரணம்வகுத்திடுவனின்னே

புந்திகொண்மெய்பூவணபுரத்தினினிதாக

முந்தியுரைதந்தபரமுத்தியதுவுண்டே

388 நீவிதிவசத்தினவணோர்ந்துமணிநீடும்

பூவணபுரேசனிருபொன்னடிதொழாதே

தேவியிருபாதமலர்சென்றுதரிசித்தே

மேவினைபின்வேறொர்பதிவென்றியுடனன்றே

389 வேதியர்குலாதிபவிளம்பிடுவனீயிப்

போதுமலர்மாதுதிகழ்பூவணபுரஞ்சேர்

நாதனைவணங்கியபினாயகிசெழும்பொற்

பாதமலரன்பொடுபணிந்துபவநீப்பாய்

390 காசிகெயையீசனடிகாமர்புனன்மூழ்கி

நேசமொடிறைஞ்சினர்கணோர்ந்தபலனெல்லாம்

பூசுரர்களாசைதருபூவணமெனும்பே

ராசில்பதிவந்தடையுமையமிலையம்மா

391 ஓர்கவினுமோதிடுவமுண்மையிமுதுண்மை

பூர்வமதுவாகியதொர்பூவணமதன்க

ணோர்தருமெம்மானைமுனிறைஞ்சுதல்செயாரே

லூர்கிருமியார்நிரயமுற்றிடருழப்பார்

392 அவ்வளவதன்றுலகிலாய்வருவர்நாயா

யிவ்வுரைநன்மந்தணமியம்பிடுவதன்றால்

வெவ்வினைகடிந்துதவமேண்மைபெறலாலே

செவ்விதினினக்கிதுசெப்பினமியாமே

393 பன்னுதுமியாமுனதுபாவமறவீடு

முன்னினுலகம்புகழுமோர்புனிததீர்த்த

மின்னதெனவேயறிவதெம்மிறைவனன்றி

யன்னதனின்மேன்மைதனையாரறியகிற்பார்

394 பூர்வமுறுமீசனதுமுன்னமுறுபூர்வத்

தோர்தருமைஞ்ஞூறுவரிவிற்கிடையினுற்ற

தேர்கொள்கடிவாசநனியியற்றியததற்குப்

பேர்பிரமதீர்த்தமெனவேயுலகுபேசும்

395 புத்தியொடபுத்திதருபூர்வகருமங்க

ளித்துயர்வருங்கிரமபங்ககருமங்க

ளுத்தமகுலோத்தமவிழுதுண்மைபடிவுற்றாற்

சித்தமகிழப்பிரமதீர்த்தமதகற்றும்

396 அருந்தவரைநிந்தனையறைந்தவதிதோட

மிருங்குலவொழுக்கமதிகந்தகனதோடம்

பரந்திடுமந்நீர்விழிபரப்புவதனாலே

பொருந்துமரனாணையதனாலிவைகள்போக்கும்

397 கார்த்திகைநன்மாதமுறுகார்த்திகைநன்னாளிற்

றீர்த்தர்தினமும்படிசெழும்பிரமதீர்த்தங்

கூர்த்தவறிவோயதுகுளித்திடுகளித்தே

யார்த்திடுமரக்கவுருவக்கணம்விடுப்பாய்

398 நாடிநவில்கின்றமறைநாலுமுகனன்னீ

ராடியிடினன்றியிவரக்கவுருவந்தான்

வீடலரிதாகுமுயர்மேதினியின்மீதோர்

கோடிசனனங்களவைகூடினும்விடாதே

399 இன்னதொருதீர்த்தமதிளின்னலமியம்பின்

முன்னுரிமைசேருமுகமுற்றுமதினின்றாம்

பின்னுறுமுகத்தில்வருபெற்றியினுமின்றா

மன்னதனின்மூழ்கினெவரும்மதிகராவர்

400 ஆதலினரும்பவமகன்றிடுமதன்க

ணீதகைமையோடமர்திநீடுகதிகூடும்

பூதலமெலாம்பரவுபுட்பவனமேமுன்

னோதுபலநற்பதியினுத்தமமதாகும்

401 பூர்வமதின்மேவிவளர்பூவணமதன்கட்

டேர்வருமருட்குறிச்சேவையதனாலே

பார்மிசைபடர்ந்துவருபாவமவையாவும்

நேர்படுதலாவதொருநிமிடமதினீங்கும்

402 காசிநகரிற் செய்தகடுங்கொடியபாவம்

பூசுரர்தினம்பரவுபூவணமதிற்போ

மோசைதருபூவணமுஞற்றியிடுபாவ

மாசரியபூவணமதன்கணதுதீரும்

403 ஈதுசரதம்மெனவியம்பியருளாலே

போதுவமெனாவினிதினாசிகள்புகன்றே

நாதமுறுவீணைபயினாரதனலங்கூர்

கோதிறிருமாலதுவைகுண்டமதடைந்தான்

404 பொற்சுவருடுத்துலகுபூவணமமர்ந்த

தற்பரனொடுற்றபரைதன்னையடிபேணிப்

பற்பகலுமன்பொடுபணிந்தருளின்வாழ்ந்து

நற்பரமமுத்திதிரணாசனனடைந்தான்

405 காதன்மிகுபிரமகைவர்த்தம்தினொன்று

போதவெழுபமூதெனப்புகலத்தியாயத்

தோதுமிக்காதைசவுநகவுணர்தியென்றான்

சூதனெனும்பேர்பரவுதொல்லுணர்வின்மேலோன்

வேறு

406
மருவுமிந்தநன்மந்தணமானதோர்மிகழ்பெருங்கதைவன்பவப

னெரிபொருந்திடுமென்பர்கண்மேலையோரிணையிகந்துறுமி

பரவுகின்றவர்கள்பண்கொடுபாடினோர்பகரிரும்பொருடந்து

திரமுடன்செவிகொண்டிதுதேர்குவோர்சிவபெரும்பதிசேர்வ

திரணாசனன்முத்திபெற்றசருக்கமுற்றியது

ஆகச்செய்யுள் 406

✸✸✸✸✸

17

மணிகன்னிகைச் சருக்கம்

407 நற்கதிபெறுந்திரணாசனன்கதை

யற்புதங்கேட்டுநெஞ்சமைதிகொண்டிலன்

சொற்றகுமாதவச்சூதயான்புகல்

கிற்பனாலின்னமுங்கேட்குமாசையால்

408 ஓதருமுலகிலாருயிர்கள் செய்திடு

பாதகமனைத்தையும் பாறல்செய்யுமக்

கோதறுமாமணிகுண்டமேன்மையை

யேதுவினோடெடுத்தியம்பல்வேண்டுமால்

409 உற்றமன்பதைக்குபகாரியாவது

மற்றுநீயல்லதிவ்வையத்தில்லையாற்

சொற்றிடென்வாய்மொழிதுணிந்துநாடியே

யிற்றெனவேவிரித்தினிதினாலரோ

410 என்றிவைசவுனகனியம்பக்கேட்டரு

டுன்றியதுகளறுசூதன்சொல்லுவான்

கன்றிடுமறுபகைகடிந்துநாடொறும்

வென்றிகொளந்தணர் வேந்தர் வேந்தனே

411 அத்தலப்பெருமையையாயிரம்பெரும்

பைத்தலையனந்தனும் பங்கயத்தனுஞ்

சித்திரமலர்த்திருமாலுந்தேவரு

மித்திறமெனவுணர்ந்தியம்பலாகுமோ

412 ஆயினெம்மாலிமுதறையப்பாலதோ

தாயினுமுயிர்க்கருள்சவுனகாதிப

தூயவாசான்றனாற் சொல்லுமந்தண

நேயமோடதிற்சிலநிகழ்த்துவாமரோ

413 அண்டமோர்விராட்புருடன்றனங்கமாம்

புண்டரீகத்திருப்பொருந்தும்பூவணங்

கொண்டபேரெழில்குடிகொண்டவன்முக

மண்டலமாகவேமறைந்துவைகுமால்

414 பண்டைநாளமுதகும்பத்திலாரமு

தெண்டகுமணிமயமாகியிப்புனல்

விண்டலநினற்துவீழ்தலான்மணி

குண்டமென்றொருபெயர்கொண்டிலங்குமால்

415 துன்னுதற்கரியவத்தூயதீர்த்தமா

மன்னதினாடினோரமுதருந்தியே

பன்னுபத்தயன்றன்கற்பம்பரிந்துதாம்

பொன்னுலகத்தினிற்பொருந்திவாழ்குவார்

416 அரியயனுருந்திரனமரர்கோன்கடற்

றரைபுகழ்நாரதன்சனகனாதியர்

கருடர்கந்தருவர்நற்கபிலரேனையர்

திருமணிகன்னிகைத்தீர்த்தம்வாழ்வரால்

417 கோலமன்னுதீர்த்தமாடுகுலவுபூர்வமுகமதாய்

வாலுகந்தனான்மிகுந்தவானிலங்குவெய்யவன்

சீலமோடுசெய்யிலிங்கதெரிசனஞ்செய்வோர்கொடுங்

காலன்மேனிதானிரண்டுகண்கள் கொண்டுகண்டிடார்

418 அந்தலிங்கதரிசனத்தினானன்முத்தியடையுமால்

வந்துநாளுநாளுமேவணங்கினோர்கள்யாவரும்

புந்தியாற்செய்பாவமும்புண்ணியம்மதாகுமா

லிந்தநீர்மையுண்மையுண்மையென்பதையமில்லையே

419 எண்ணிறைந்தநன்மணிகனிகையினெய்தியாடுதல்

கண்ணினண்ர்பூவணக்காசிலிங்கதரிசனம்

புண்ணியம்புரிந்துளோர்தமக்குநேர்பொருந்திடும்

பண்ர்பாதகர்க்கொர்காலமும்பலித்திடாதரோ

420 இருடுரந்தருள்சுருக்குமிம்மணிகன்னிகைநதி

யருடவத்தினானதானமதனினாலுமன்புகூர்

கெரிசனத்தினாலுமிக்கசீர்தயங்குகங்கையின்

பரிசனத்தினாலும் வெய்யபாதகங்களழியுமால்

421 தெரியினரியபிரமகத்திதீர்க்குமுரியதரிசனம்

பரவுமமுதநாளுமுண்ணல்பண்ர்மேவுபரிசன

மரியபலமெலாமளிக்குமத்திருத்தநானமே

விரவுமமுதமணிமயங்கொண்மணிகனிகையின்மான்மியம்

422 தந்தைதாய்தமக்கிழைத்ததணிவில்பாதகங்களும்

பந்தமாற்றுகின்றதோர்பராபரன்றுரோகமுஞ்

சுந்தரங்கொள்வேறொர்மாதர்தோளணைந்ததோடமும்

முந்தையோரைநிந்தைசெய்தமுடிவிலாதபாவமும்

423

வேதியர்க்குவெகுளிசெய்தன்மிசைதலல்லமிசைதல்வெம்

பாதகங்கண்மாடபத்தியங்களாதிபாதக

மோதுகோள்களாதிபாவமொழியுமோவிப்பூவணந்

தீதிலன்பினோடுவந்துதெரிசனஞ்செயளவினில்

424 இத்தலத்தில்வைகியேயிடும்பையில்குடும்பியா

யுத்தமகுலத்தனாகியொற்கமிக்குடையனாய்

முத்திகாமனானசீவன்முத்தனங்கையிற்றில

மத்தனைச்செழும்பொனல்கினோர்பலத்தையறைகுவாம்

425 தூயவுலகினேமருவுசுகமெலாமடைந்தவ

ணேயபுத்திரர்புத்திரர்களோடுநீடுவாழ்ந்

தேயநற்சிவவுத்தினேறியின்பமுற்றதின்

மேயநாளிருந்துமேதினிக்குவேந்தராவரால்

426 ஊனநீங்குமையர்கையிலுள்ளொருமையோடுகோ

தானநல்கினோர்கணீடுதரையிலின்பமருவியே

தீனமின்றிவாழ்ந்துபின்றிருந்தருந்தவத்தினா

லானகாமதேனுவின்றனமுகநன்கருந்துவார்

427 பின்னர்நற்றவந்தனிற்பெருங்குலத்துதித்துநேர்

பன்னுபுத்திரர்பவுத்திரர்களோடுபரிவினான்

மன்னுசெல்வமுடன்மகிழ்ந்துவாழ்ந்துமீண்டுமாசிலாச்

சின்மயன்றினம்பொருந்துசிவபுரத்தையடைகுவார்

428 ஓதுமுத்தராயணத்திநோடுதக்கிணாயன

மீதினுற்றகதிர்கடம்மைவெவ்வராவிழுங்குநாண்

மாதவுற்பவத்தினமதிவிரிந்தொடுங்குநா

ளாதிவாரம்பமூதொர்பக்கமவ்வெதிபாதத்தினம்

429 ஏலுமாறுதலையிலிட்டவெண்பமூதுசேர்ந்தநற்

காலமோடுசங்கிராந்திகாலமட்டமீதனின்

வாலசங்குதங்கிநன்குவளருமணிகன்னகையினின்

மாலகந்தைகொன்றசூலவயிரவன்றனருளினால்

வேறு

430 இலகொளிபரப்புமெல்லோனெதிர்முகந்தரவிருந்து

மலருடன்றூர்வைமிக்கவண்கனிதண்டுலங்கொண்

டலகிலாப்பவங்கணாயேற்காடுமித்தீர்த்தந்தன்னாற்

றொலைவுசெய்தருளவேண்டுஞ்சோதியேயெனப்பணிந்து

431 சூரியவிலிங்கந்தன்னைச் சொல்லுமந்திரத்தினாலே

சீர்பெறச்செபித்துத்தேவதேவனைப்பிரார்த்தித்தன்பாற்

பேர்பெறுதீர்த்தமூழ்கிப்பிதிர்களோடிருடிகட்காங்

கேர்பெறுதர்ப்பணங்களிரவிமந்திரத்தினாலே

432

யாவனிம்முறையிற்செய்வானவன்கடலுடுத்தபார்மேற்

றேவர்கண்முனிவர்மிக்கதென்புலத்தவர்கடன்செய்

மேவியபிரமசாரியெனின்விருப்பறுத்தேயொல்லை

மூவுலகங்கள்போற்றமுத்தியையடைவனன்றே

433

அருமணமுடித்தோன்பின்றையைவகைவேள்வியாற்றிக்

கிரியைநூற்கிடக்கையானேகேடில்பூசனையமைத்தே

திருமகள்சுவர்க்கஞ்சேயாற்சேர்வனீதொருவினாலும்

பெருகுமத்தீர்த்தமூழ்கிற்பிதிர்கடன்றரும்பேறுண்டாம்

434 தீதிலாவேள்விசெய்தோன்றேவனாந்தன்மைபோல

வோதுமத்தீரத்தம்பொனுகவுவோனும்பனாவா

னாதலாலத்தலம்போலரும்பிதிர்கடன்கடம்மைப்

போதல்செய்தலங்களிந்தப்பூதலத்தில்லைமாதோ

435 இத்தலமன்றிவேறோரிருங்கதியளிக்குந்தான

மித்தலமதனிலின்றாமியம்பிடினாகையாலே

யித்தலமதிகமாமாயிரங்கோடிநற்றானத்து

ளித்தலங்கண்டாலிம்பரிருங்கதியிரண்டுமுண்டால்

436 கற்றுணர்வுடையோர்கண்டகண்ணிமைகைநொடித்தல்

பெற்றிடலமையுமேலும்பிறங்கிடுஞானந்தன்னா

லுற்றவஞ்ஞானந்தன்னாலோதுபூவணத்தில்வாழ்வோர்

நெற்றியிற்றிகழந்த வொற்றைநேத்திரராவரன்றே

437 நல்லதோர்தளிர்தானாதனவிலொருகனிதானாதல்

வில்லிலங்கியபுரூரமின்னிடையன்னைபாகம்

புல்லியபூவணத்தெம்புனிதனுக்கினிதளிப்போர்

சொல்லுருத்திரனாய்ப்பின்னர்ச்சுத்தமாமுத்திசேர்வார்

438 வோறொருதலத்தினின்று மெய்யுயிர்வியோகமெண்ணி

மாறிலாவித்தலத்தின்வைகுறின்மரணகாலை

கூறரிதாயசெம்பொற்கொடியிடைமடவாளோடும்

தேறிடவந்தவன்றன்றெக்கிணகன்னந்தன்னில்

439 பாரிடைப்பிதாமகற்குப்பயப்பயப்பரிதல்போலச்

சீருடைக்கடவுடன்பொற்றிருமேனிசாத்திக்கொண்டு

பூரணமகிழ்ச்சியோடுபுத்திரன்றன்னைத்தேற்றித்

தாரகப்பிரமந்தன்னைத்தானுபதேசஞ்செய்வான்

440 சாற்றுதுமரன்றனாணைசத்தியமீதுசாற்றி

லாற்றல்சான்முனிவகேண்மோவாதலாலரிதினேனு

நாற்றிசையுலகமேத்துநற்றிருப்பூவணத்திற்

போற்றியேயெவரும்வாழ்கபுந்திகொண்டெந்தஞான்றும்

441 மருவியகாசிவாசமக்கண்மிக்குடல்வருந்தும்

பொருவிறென்பூவணந்தான்பொருந்திடாமெய்வருத்த

மரியனபொருளொன்றில்லையாதலாலைந்தவித்தீர்

கருதிலப்பூவணந்தான்காசியிலதிகமாகும்

442 பவமில்பஞ்சாமுதத்தாற்பஞ்சகவ்வியத்தான்மிக்க

சுவைதருநன்னீர்தன்னாற்சோதியையாட்டுவிப்போன்

சிவனதுவடிவமென்றேசெப்பிடுமுலகமெல்லா

மவனதுபெருமைதன்னையறிகுவனமலன்றானே

443

கதிர்விடுமணிகுண்டத்தின்கரையினிற்கடவுண்முன்னர்ப்

பிதிர்மகிழ்சிசராத்தத்தோடும்பிண்டநற்றிலோதகத்தை

விதிமுறைபிதிர்கட்காற்றின்வெஞ்சுடர்ப்பரிதிவானோ

மதிதருவாழ்நாள்காறுமனமிகமகிழ்ச்சியுண்டால்

444 பொங்குவெங்கதிர்பரப்பும்புனிதமாமணிகுண்டத்திற்

றங்குநீரிடைப்பிதிர்க்கடங்களங்கங்கிடந்தா

லங்கவர்மகிழ்ச்சிகூர்ந்தாங்கக்கணந்தன்னின்முக்க

ணெங்கணாயகனாற்பெற்றேயிடபவாகனத்தராவார்

445 ஆதலாலரியமைந்தரத்தியைப்பத்தியாலே

யோதிடும்பிதிர்கடாம்போயுயர்பதிகதியிற்சேர்வான்

காதலால்வருந்தியேனுங்கடைப்பிடிகருதிமாதோ

கோதிலாமணிகுண்டத்திற்கொண்டிடக்கடவரன்றே

446 முந்தொருகாலந்தன்னின்மொழியினோர்கங்கமங்கந்

தந்திடந்தணனங்கத்தைத்தசையெனநசையிற்கொண்டே

யந்தநற்றீர்த்தத்திட்டாங்ககன்றதக்கணத்தினன்னோ

னிந்தநற்றீர்த்தந்தன்னாலிருங்கதியேறினானால்

447 இந்தநற்றீர்த்தம்வேதத்தியம்பிடுஞ்சாரமாகு

மிந்தநற்பிறப்புக்கீறுசெய்திடுகடவுளாகு

மிந்தநற்கதைச்சுருக்கமியம்பினனீவிருந்தா

மிந்தநன்மாணக்கர்க்கிங்கிசைத்திடுமெந்தஞான்றும்

448 சந்தமாமறைதேர்கின்றசவுனகமுனிவகேண்மோ

வந்தநற்பிரமகைவர்த்தந்தருமத்தியாய

மிந்தவாறடைவிற்றேர்தியெழுபதின்மேலிரண்டாம்

புந்திகொள்புகழ்செறிந்தபூவணக்காதைமாதோ

வேறு

449

சேர்லாவியதிங்கடருங்குடைசேருமாமதன்றன்றணைவென்ற

ரேர்லாவியவின்பசுகம்பெறுமேசிலாவருடந்திடுமந்தணீர்

மார்லாவியமண்டலமெண்டகுமாசிலாமணிகுண்டமடைந்தசீ

பார்லாவியசெஞ்சொல்பகர்ந்தவர்பாகசாதனன்றன்பதிதங்கு

மணிகன்னிகைச் சருக்க முற்றியது

ஆகச் செய்யுள் 449

✶✶✶✶✶

18

துன்மனன் சருக்கம்

நாலாவது

துன்மனன்சருக்கம்

450 தூண்டுகின்றசெஞ்சுடர்கொள்சோதிதாள்

பூண்டவன்புசேர்பொற்பின்மேலையோன்

காண்டகுந்தவச் சூதன்கண்ர்றீஇ

மீண்டுமோர்கதைவிளம்பன்மேயினான்

451 வீரவேடனைவென்றசௌனக

வோர்கநீயிமூதுரைப்பக்கேட்டிடி

லாருயிர்க்கெலாமாயுணல்கிடுஞ்

சேரும்வல்வினையாவுந்தீர்க்குமால்

452 வேதநன்குணர்வியாதன்முன்னரே

யோதிநெஞ்சகத்துவகைகூர்தருங்

கோதிலாமணிகுண்டமான்மிய

மேதுவாற்சிறிதியம்புவாமரோ

453 தருமநன்கதைதஞ்செவிக்கொளார்

நரகவாதிகளாவர்நாளுமே

திருமிகுங்கதைசெவிமடுத்துளோர்

மருவிடுஞ்சுவர்க்கத்தின்வாழ்குவார்

454 நவிற்றுகின்றவெந்நரகமென்றுநற்

சுவர்க்கமென்றுமேற்சூதமாதவ

வௌற்றினாலிவையேயுமாலரோ

வவற்றைநீவிரித்தருளவேண்டுமால்

455 தந்தைதாய்புகழ்தருமதேசிகன்

முந்தைநான்மறைதன்னைமுற்றுண

ரந்தணாளரையறிஞர்தங்களை

நிந்தியார்தமைநிந்தைசெய்துளோர்

456 பொருவினான்மறைபுகலுமந்தண

ரானரும்பொருளபகரித்துளோர்

கருதிவந்துபொய்க்கரிபகர்ந்துளோர்

பரவுகன்னிகைதனைப்பழித்துளோர்

457 மதுநுகர்ந்திடுமங்கையானன

மதனைமோந்தவரவளைமேவினோர்

கதுமெனப்ப்ரமகத்திபண்ணினோர்

விதமுறுவிடர்விரவுகாதலர்

458 நன்குலத்திலாசராநந்திடாத்

தன்குலக்கொடிதனிபுலம்பவே

பொன்பறிப்பவர்தோளைப்புல்குவோர்

மின்குலத்தியைப்பெட்பின்மேவுவோர்

459 கொழுநரைப்பிழைத்தோர்கள்கூடுறா

மழலையின்சொல்வாய்மைந்தர்பூணணி

விழைவின்வவ்வினோர்வெமூகிநன்பொருள்

பழுதிலாதுயர்பசுவைவிற்றுளோர்

460 புண்ணியப்புனல்புண்ணியத்தல

மெண்ணிடும்பதினெண்புராணநூ

றண்மையாகநிந்தனையிசைத்துளோ

ரண்ணலாலயமிலயமாக்குவோர்

461 அண்ணறன்னைநிந்தனையறைந்துளோர்

பண்ணிடுந்தருமம்பழித்துளோர்

திண்ணமாயவைசிதைவுசெய்துளோ

ரெண்ணறம்பொருளெண்ணிவிற்றுளோர்

462 அன்னம்விற்றுளோரதுபழித்துளோர்

முன்னைநூல்வருமுறைதிறம்பினோர்

சொன்னவாசகந்தோமுறுத்துளோர்

பன்னலாக்கொடும்பழிபகர்ந்துளோர்

463 கருதுகின்றதங்காரியத்தினான்

மருவினோர்கடம்மன்னுகாரியம்

பெருகுகாதலிற்பிழைபடுத்தினோர்

பரிவுகூர்ந்துளோரவரைப்பார்த்துளோர்

464 நந்தனவனநறியகூவனீர்

தந்திடேரிதான்றந்திடக்கருத்

துந்துகாதலினுரைத்துளோர்தமை

நிந்தைசேர்ந்தசொன்னிகழ்த்திநின்றுளோர்

465 தந்தைதாய்திவசஞ்செயாதவர்

வந்துநம்பினோர்தமைவதைத்துளோர்

சுந்தரந்துதைந்திலங்கு தொன்மைசால்

வெந்தநீறணியாதமெய்யினோர்

466 சிந்தையின்மகிழ்தந்திடுந்திரு

வைந்தெழுத்தினையவமதித்துளோ

ரெந்தைகண்டிகையினையிகழந்துளோர்

நிந்தைசேரிவர்நிரயவாணரே

467 திருகுசிந்தனைதீர்ந்தமாதவ

மருவுஞாலமேன்மன்பதைக்கெலாம்

பெருகிநாடொறும்பீழைமம்மர்செய்

நரகுறுந்திறநவிலுவாமரோ

வேறு

468 கும்பிபாகங்கராளங்கூடுவிட்டாசனத்தோ

டம்புவியிகழ்லாலாம்புசேவனமறையுங்கீலம்

பம்புவெங்கிருமியுண்டல்பகர்ந்தவிகராளங்கண்டங்

கம்பதப்ரகரங்காலசூத்திரங்கரியகாகம்

469 ஒட்டகம்புலியயத்தோடுறுமயிடத்தின்றுண்டம்

கொட்டிடுதத்தாங்காரங்கொல்லயபாத்திரஞ்சேர்

தட்டல்குட்டனந்தீசேர்ந்தசைகத்தினில்வறுத்தல்

பட்டுருவசிபடைத்தபத்திரமூத்ரபானம்

470 மன்னியரவுரவஞ்சேர்மாரவுரவங்களாதி

தன்மைகளுணருங்காலைத்தருமராசனுந்தயங்குஞ்

சின்மயனருளாற்றேருஞ்சித்திரகுத்தன்றானு

மிந்நிலைதன்னைநாடியிற்றெனக்கிளத்தலாகா

471 ஆதலால்யாவரேனுமரும்பெரும்பாதகங்க

டீதுறமுயலிலிந்தத்தீநரகடைவரன்றே

யாதுகாரணத்தினாலுமிகபரமியையவோர்தீய

பாதகமானவற்றைப்பாற்றிடக்கடவரன்றே

472
சொற்றிடுந்தருமமுந்தான்சுருக்கியேதெரித்துச்சொல்வா

மற்றதுமுனிவகேண்மோவகிஞ்சையேவாய்மைசேர்த

லுற்றிடுகளவுதீர்தலுளமகிழ்கூர்தலோடு

பொற்புறுதேககசுத்திபூசைசன்னியாசிபூசை

473 துறவிகடமதுபூசைசொல்லிடுமதிதிபூசை

வறியரைக்கதியிலோரைமருவுமந்தகரைக்காத்த

லுறுமனச்சழக்குத்தீர்த்தலுற்றிடுசுகன்மம்பேண

லறையகிஞ்சாதியீரேழந்தணர்விதியிற்றந்தோர்

474 சரணடைந்தோர்கடம்மைத்தாங்குதன்மாகமூழ்க

லரனருச்சனையியற்றலதிதியர்க்கனமீவோர்க்குப்

பரவுபகாரம்பேணல்பண்ர்கன்னிகாதானத்தோ

டுரியவான்முதிரையெள்ளோடுயர்பலதானஞ்செய்தோர்

475 தருமகாலங்கடன்னிற்றண்புனற்பந்தர்செய்தோர்

பொருவில்புண்ணியம்பரிந்தோர்புங்கவர்யாரும்பூசை

யுரிமையினிற்றவுள்ளமோர்தருங்காதல்கூர்ந்தே

திருமிகுசுவர்க்கபோகத்தெரிவையர்திரட்சியோடும்

476 நம்பிநாடகநடிப்பநவமணித்துவசமின்னக்

கிங்கிணிமாலைத்தாமங்கெழுமியேயெங்குந்தூங்கக்

கண்கொளாத்துணைவெண்கற்றைக்கவரிக்காலசைப்பமாதர்

விண்குலாவியவிலக்கவிமாத்தினாப்பண்மேவி

477 தெண்டிரைக்கடற்பாற்கொண்டதிசைவிசயஞ்செலுத்தி

வண்டருநீழல்சேர்ந்துபூந்தேன்றுளிப்ப

வெண்டகுமுலகம்போற்றவீரேழிந்திரர்கள்கால

மண்டர்களடிவணங்கவமருலகத்தில்வாழ்வார்

478 முண்டகனனையவேதமுனிவமுன்னிறுத்தவாற்றாற்

கண்டதையன்றிக்கேட்டகாலையிற்பவங்கடீர்க்கு

மண்டலம்பரவுமந்தமாமணிகுண்டமேன்மை

யெண்டொகைபெறவெடுத்தங்கிசைக்குவமின்னுங்கேண்மே

479

நயவுணர்வறியாதானோர்நான்மறைக்குலத்தின்வந்தோ

னெயினரோடிணங்கிவாழுமிழிதொழின்முழுதுணர்ந்தோன்

கயமுறுகபிலைநன்னீர்க்கரையினிற்கருதிவாழ்வோன்

றுயர்தருதுராசாரஞ்சேர்துன்மனனென்னும்பேரோன்

480 சீர்த்திகளகன்றவேதத்திறங்கள்யாவுந்திறம்பி

யார்த்தநல்லறிவிழந்தேயறந்தருஞ்செயன்மறந்து

கூர்த்தவெங்கன்மநோயாற்கொலைபுரியெயினரோடுந்

தூர்த்தர்களோடுங்கூடித்தொன்னெறிமுறைதுறந்தான்

வேறு

481 காதலுடன்மாதர்பயில்காமகலைதன்னை

நாதமொடுபாடிமிகநாடகநடிப்போன்

றீதில்பலதேனுவொடுசெந்தழல்வளர்க்குஞ்

கோதின்மறையோரைநனிகொன்றுயிரையுண்போன்

482 ஏற்புடையபாலகரையிட்டிடையினோரைப்

பாற்படுவாலீசரொடுபண்புடைமையோரைச்

சீற்றமொடுதேசமிசைசென்றுநனிகொன்று

கூற்றுணவிரும்பியுயிர்கொள்ளையிடுகிற்போன்

483 சொற்றகையவின்னபலதொல்லுலகினோரைச்

செற்றமொடுகொன்றவர்கள்செம்பொனவைகொண்டே

வெற்றிமிகுபாதகன்விரும்பியணையாத

கற்புடையமங்கையர்கள்காசினியிலுண்டோ

484 கொன்றுதிரியுங்கொடியகூற்றமனையான்செய்

நன்றிகளிலொன்றறியுநன்றியதுவுண்டோ

சென்றுபடிகின்றதொருதீர்த்தமதுவுண்டோ

வன்றியிவனீந்திடுமரும்பொருளுமுண்டோ

485 எண்டிசைமுகத்தினமரெக்கடவுடன்னைக்

கண்டனனெனப்பரவுகட்டுரையுமுண்டோ

வுண்டலரிதாய்வளர்தலோருயிருமுண்டோ

மண்டனில்வதைக்கரியமன்பதையுமுண்டோ

486 திண்டிறலின்வேட்டைபுரிசிந்தைமிகுதீயோ

னெண்டகவியம்பலுறினின்றுமிவன்முன்னும்

பண்டரொருபாரினிடைபண்ணவருபாவ

முண்டெனவெடுத்தினுமுரைத்திடவுமுண்டோ

487 கட்களவுபொய்மைகொலைகாமமுறுகாமத்

துட்டரெனவேமருவுதூர்த்தர்தொழுமூர்க்கன்

மட்டறுகிராதரெனுமாகுலவரோடு

மிட்டமுறநாளுமுலகெங்குமுழல்கின்றான்

488 சத்தியமொழிச்சவுனகத்தலைவநாளுந்

துய்த்தல்பழுதென்றுபகர்தூய்மதுவுமுண்டே

பத்திதருபன்னகபணாமுடிகிடந்த

வித்தலனவன்செய்பவம்யாதெனவுரைப்பாம்

489 துன்றியமதங்கர்பலதூர்த்தர்புடைசூழ

வென்றிதருவேடருடன்வேட்டைமிகுதீயோன்

மன்றலவிழ்கண்டகவனங்கடொறுநாடிச்

சென்றுபலதேசமவைசிலபகல்கழித்தான்

490 மன்னுமிருவினையொப்புவந்தடைதலானு

மன்னதொர்திரோதமருளாய்வருதலானும்

பன்னருவிழாவணியெனப்பகர்தல்கேட்டுப்

பொன்னுலகெலாம்பரவுபூவணமடைந்தான்

வேறு

491
இடர்ப்பிறப்பிறப்பென்றோதுமிருங்கடற்படிந்துநாளுங்

கடைப்படாதுயிர்க்கிரங்கிக்கதியருள்புரியநீடும்

படித்தலம்போற்றுகின்றபங்குனியுத்தரத்தின்

விடைக்கொடியேற்றிமிக்கவிழாவணிநடந்ததன்றே

492 மதிதொடுசெம்பொற்றேரூர்மாடநீண்மறுகுதோறும்

புதுநறுங்கலவைச்சேறுபொலிதரமெழுகிக்கோலம்

விதிபெறவெழுதும்வாயில்வெண்ணிறப்பளிக்குத்திண்ணை

முதிர்நிலாவெறிப்பத்தூயமுளைகொள்பாலிகைவயங்க

493 சீர்மணிமாடந்தன்னிற்சித்திரகூடந்தன்னி

லேர்பெறுமரமியத்தினெழுநிலைமாடந்தன்னிற்

றோரணவீதிவாயிற்சுடர்மணிமண்டபத்திற்

பூரணகுடநற்றீபம்பொங்குவெங்கதிரிற்பொங்க

494 நீடுகோபுரவாயிற்கணிலாவுமிழ்நிலாமுற்றத்தி

னாடரங்கதனிற்செம்பொனம்பலந்தன்னிற்சோதி

கூடுநற்சதுக்கந்தன்னிற்கொடிமணிச்சித்திரஞ்சேர்

மாடகூடதினட்டமங்கலநின்றிலங்க

495 மிகுபுகழ்வேந்தர்விண்ணோர்மிண்டியவீதியின்கண்

மகுடநன்மணியின்குப்பைவயின்வயினலகிட்டெங்கும்

புகழ்பெறத்தெளித்தவாசப்புனிதநீரொடுபுத்தேளிர்

மகிழ்வொடுபொழிமந்தாரமாமலர்வாசம்வீச

496 மாமணித்தேர்களெங்குமாடமண்டபங்களெங்குந்

தாமநீள்வீதியெங்குந்தக்கபூம்பந்தரெங்கும்

பூமகளுறையுளெங்கும் பூங்கமுகரம்பைநாட்டிக்

காமர்பொன்னகரமென்னக்கடிநகரலங்கரித்தார்

வேறு

497

செங்கமலத்திற்றிசைமுகன்மாயன்றேவர்கள்சித்தர்கண்முனிவ

புங்கவர்யாரும்புடைபரந்தீண்டிப்போற்றிநின்றிசைத்திடப்புக

மங்கலகீதவிதத்துடன்பாடிமலர்தலையுலகமங்கையரோ

டங்கண்வானத்தினழகொழுகியநல்லரம்பையர்நாடகநடிப்ப

498

திண்டிறற்குலவுதிக்குபாலகர்தந்திசைதொறுஞ்சேர்ந்துசேவிப்

தண்டலில்குண்டோதரனகல்வானிற்றயங்குவெண்மதிக்குடை

வெண்டிசைவிளக்குமிருசுடர்மருங்கினிணைமணிச்சாமரையி

விண்டலந்தயங்குவெள்ளிமால்வரைபோல்விடைக்கொடிமீ

499

பண்டருவிபஞ்சிபாடிடுமொலியும்பல்லியந்துவைத்திடுமொ

கொண்டல்சேர்கூந்தற்குங்குமக்கொங்கைக்கொடியிடைப்பிடி

றொண்டையங்கனிவாய்த்தோகையர்நடிக்குந்துணைப்பதாம்

மெண்டிசாமுகத்துமண்டர்வானகத்துமெங்கர்ஞ்சென்றெதிரே

500

திண்டிறற்குலவுதீர்த்தர்களேத்துந்திருவருணந்தியெம்பெருமா

மண்டுகாதலிற்சேர்வானவர்செம்பொன்மணிமுடிதருபிரம்பெ

பண்டருவேதப்பாடலினொலியும்

பன்னுதேவாரத்தினொலியுங்

கொண்டசீர்வானத்தண்டகூடத்தின்கொழுந்துவிட்டதுபடர்ந்தே

501
இன்னனவளஞ்சேரிந்திரசெல்வத்திலங்கியவீதியினலங்கூர்

பொன்னலந்தயங்குமின்னனையிடங்கொள்பூவணமேவியபெ

பன்னருஞ்சிகரபந்தியின்மிக்கபைம்பொன்மால்வரையெனச்

மன்னியவலங்காரந்திகழ்ந்தோங்குமணிநெடுந்தேரினில்வந்த

வேறு

502 இந்தநல்விழாவணியிடத்தெயினர்சூழ

வந்தமலரோர்நெடுமாலுமறியாத

வெந்தைபெருமானுமிகுமின்னருளினாலே

சிந்தைமகிழ்வோடுநனிசென்றுதரிசித்தான்

503 நாதமுயர்விந்துவினுநாடரியநம்பன்

மேதகுவிணோருடனல்வீதிகள்கடந்தே

பூதலமெலாங்குலவுபொற்சுவருடுத்த

கோதின்மணிசோதிவிடுகோயிலிடைபுக்கான்

504 காதலுடன்மேவுகனகங்களவுகொள்வா

னேதுநிகழ்காலமெனவெண்ணிமனனூடே

யோதுமவணீடுதனியூசலெனவந்த

வீதிதனினின்றுவிளையாடல்புரிகின்றான்

505 பண்டறிவருங்கொடியபாதகனைவீதி

கண்டிடுபவத்தையுறுகாதலுடன்வெய்யோன்

றெண்டிரைகொடீர்த்தமதுசென்றொழிவனென்றுட்

கொண்டனனெனக்குடகடற்கிடைகுளித்தான்

506 முண்டகமிலங்குமணிகுண்டமதின்மூழ்கி

யண்டர்தொழுமுத்தியினடைந்திடுவனந்தோ

கண்டிடுவமென்றுவருகாட்சியதுமான

மண்டலம்விளங்குமதிவானவனுதித்தான்

வேறு

507 ஆங்கவனரையிருள்யாமத்தன்னதன்

பாங்குறுகொலைபுரிபரிசனங்களை

யீங்குநீர்வம்மினென்றெடுத்துவல்லைகூய்

நீங்கருகாதலானிகழ்த்தன்மேயினான்

508 நிகழ்த்தலொன்றுடையன்யானீவிர்கேண்மெனா

வுகப்படன்யாமெலாமொருங்குகூடியே

புகழ்ச்சியினீடியபுரவலன்மனை

மிகுத்தநற்றனங்கொடுமீண்டுசெல்குவோம்

509 என்றவனியம்பலுமெயினர்நன்றெனா

வென்றிவேல்வேந்தனன்மனையின்மேவியே

தன்றனியிலக்கநேர்தபனியங்கொடு

மன்றல்சேர்மலர்த்திருவாயினண்ணினார்

510 கடைத்தலைவாயில்காவலர்கள்கண்ர்றீஇ

யடுத்தவர்யாரெனாவையுற்றோர்சில

ரிடிக்குரலெனவதிர்த்தெழுந்துசீறியே

படைத்தலைவீரர்கள்படையின்மூண்டனர்

511 மூண்டனர்முறைமுறைமுடுகிமுன்னரே

மாண்டகுதிறற்படைமானவேடருங்

காண்டகுகனற்பொறிகண்கள்சிந்தவே

யேண்டிகழ்வாயிலினிடைக்கணீண்டினார்

வேறு

512 இடங்கொள்வானகத்தெறிகுவரேற்றுவரீர்ப்பர்

தொடர்ந்துசுற்றுவர்பற்றுவரடுத்துமெய்துளைப்பர்

படர்ந்துசெல்குவர்மீள்குவர்படைக்கலன்வழங்கிக்

கொடுஞ்சமர்த்தொழில்புரிகுவர்குருதிநீர்குளிப்பார்

513 தெரிவருந்திறற்சாரிகைகறங்கெனத்திரிவர்

குருதிவாய்தொறுங்கொப்பளித்திடவுயிர்குறைப்பர்

வெருவியோடுவர்மீள்குவர்வெள்குறாதெதிர்ந்து

பொருவர்மீண்டுமங்கிருவருந்தோள்புடைத்தெதிர்ப்பார்

வேறு

514 எதிர்திருவிசும்பிடையெறிந்திடுவருள்ளங்

கொதித்திடுவர்செங்கைகொடுகுத்திடுவர்வெண்பல்

லுதிர்த்திடுவரென்பினையொடித்திடுவர்நெஞ்சின்

மிதித்துயிர்பதைத்திடவிதத்துடனடிப்பார்

515 தண்டியெதிர்சென்றுசிலர்தாடலைதுணிப்பார்

கண்டமதனைச்சிலர்கள்கண்டமதுசெய்வார்

மண்டமர்புரிந்துசிலர்வன்கரமறுப்பார்

துண்டமதனைச்சிலர்கடுண்டமதுசெய்வார்

516 ஏவரும்வெலற்கரியவீறில்பெருவாயிற்

காவலர்தமிற்சிலரையாயிடைகலந்தே

கூவிளிகொளக்கொலைஞர்கோறல்புரிகின்றார்

மேவும்விதிவந்தணையில்வெல்லவௌர்வல்லார்

வேறு

517 வீடரிதாயவெம்போர்விளைத்தலும்வேந்தன்சேர்ந்த

நீடியமணிமுகப்புநிரைதொறுமிடிந்தநீள்வான்

கூடியமணிசேர்செம்பொற்கோபுரநிலைகுலைந்த

பீடுறுகின்றமாடப்பித்திகைபிறழ்ந்ததன்றே

518

பொருவின்மாளிகையிடத்தும்பூம்பொழிலிடத்தும்பொங்கி

யருவிபாயமுதவெள்ளத்தகலிருவிசும்பிற்றோன்றுந்

தருணவெண்ணிலாக்கொழிக்குஞ்சந்திரகாந்தச்சோதி

பரவியவிடங்களெங்கும்பரந்தனகுருதிநீத்தம்

519 அந்நிலைதன்னின்மிக்கவன்னதொன்னகரினாப்பண்

கன்னவிறடந்தோள்வீரர்கம்பலைசெவிமடுப்ப

மின்னுவெம்படைஞர்யாரும்வெகுண்டனர்விரைவினீண்டி

மன்னியபுரிசைவாயில்வந்தனர்வளைந்துகொண்டார்

520 ஆங்கவர்வெருவியெங்ஙனடைகுவமென்றுகொண்டு

நீங்கரும்வாயினீங்கிநீள்கடைப்புறத்துப்போந்து

தாங்கரும்வெகுளிவீரர்தாந்துரத்திடத்தகைத்துத்

தீங்கறுமணிகுண்டத்திற்சென்றனர்திகைத்துவீழ்ந்தார்

521 இப்பெரும்புனனமக்கிங்கிருங்கதிதருமென்றேயோ

வப்பெரும்பயத்தாலந்தோவந்தநீர்குளித்தோர்யாரு

மெய்ப்படநாடியங்கண்மீண்டெழுந்திலர்களம்மா

தப்பறவக்கணத்திற்றாமுயிர்பரிந்தாரன்றே

வேறு

522 நெற்றிதருகண்ணர்திருநீறிலகுமெய்யர்

நற்சடிலசேகரர்கணான்குதடந்தோளார்

பெற்றமதுகைத்துவருபிஞ்சகனையன்றி

மற்றுமொர்தெய்வந்தனைமனத்தறிகிலாதோர்

523 சோதிவிடுகின்றதிரிசூலர்சிவதூதர்

மாதிரம்விளங்குகதிர்மன்னுமணிதுன்னுங்

கோதில்பல்விமானமவைகொண்டவண்விரைந்து

நாதனருளான்மகிழ்வினண்ணினர்கண்மன்னோ

524 தங்கொளியின்மிக்குயர்தினத்தனிவிமானத்

தங்கவரையந்நிலையினன்பினவைமேல்கொண்

டெங்கள்பெருமானுரியவின்னருளினேயோ

புங்கவர்தொழச்சிவபுரத்தினிடைபுக்கார்

525 செப்புமவரிப்புடவிதேடவருபாவ

மப்புனலொளித்ததினகநற்றினர்களென்னா

வொப்பரியதீர்த்தமெனவோர்ந்துலகமாடி

னெப்பவமுமாற்றுமெனயாமொழிவதென்னோ

526 ஆதலினியாவர்களுமாதரவினென்றும்

வேதியர்தமக்குநிதிவேண்டியதொர்தானங்

கோதறவளித்துமணிகுண்டமதின்மூழ்கிற்

றீதில்சிவலோகமதுசென்றடைவரன்றே

527 பூர்வமுறுபூவணபுராணகதைதன்னைப்

பேர்பெறவழுத்துமுயர்பிரமகைவருத்தத்

தோர்வரியபேருலகுரைக்குமெழுபான்மூன்

றாரறிவளிக்குமத்தியாயமிமூதம்மா

வேறு

528

பரிதிமடுவுறுபான்மையைநாளுமேபரவையுடைதிகழ்பார்தன

ரொருமையுடன்மனனூடதைநாடுவோருரியசெவிநுகரூனமில

கருணையுறுமிகுகாமருசீர்கொடேகருதியறைகுநர்பூசைசெய்க

மருவுமுருவசிமாமுலைமீதரோவருடமொருபதினாயிரம்வா

துன்மனன்சருக்கமுற்றியது

ஆகச்செய்யுள் 528

✸✸✸✸✸

19

தருமஞ்ஞன் முத்தி பெற்ற சருக்கம்

ஐந்தாவது

தருமஞ்ஞன் முத்தி பெற்ற சருக்கம்

529 ஓதுநன்பலமாயுகமுறுவதாய்க்கேட்போர்

பாதகங்கணோய்பற்றாத்துடைப்பதாய்ப்பின்னுங்

காதல்கூர் மணிகன்னிகை மன்னுமோர்காதை

ஃசூதமாதவன்சுவுனககேளெனச் சொல்வான்

530 தெக்கிணந்தருதிக்கினிற்றிரைபுரள்பொருநைத்

தக்கதீரநீடலைமைசேர்தாபதர்நெருங்குந்

தொக்கவஞ்சிறைப்புட்குலந்துதைந்தபூம்பொதும்பர்

மிக்கதோர்தலம்வேர்நல்வனமெனவிளங்கும்

531 குலவுமவ்வனங்கொண்டதோர்குடதிசைமருங்கி

னலகில்பல்புகழடைந்தகோலாகலமெனும்பேர்

நிலவுமக்கிராமத்தினோர்நேரிலந்தணனீ

டுலகம்யாவையுமொருங்குநின்றேத்திடவுதித்தான்

532 அந்தணர்க்கெலாந்தலைமையாயங்கமோராறுந்

தந்திடும்புகழ்திரித்தநற்சதுர்மறையுணர்ந்தோன்

முந்துகின்றவெண்ணெண்கலைமுழுதுணர்மேலோன்

சிந்தையிற்றிருவஞ்செழுந்தடைவினிற்செபிப்போன்

533 நித்தநன்னியமத்தொழினிரப்பிடுநெறியோன்

புத்திரர்தரும்பவுத்திரர்பொருவருகிளைஞர்

மைத்தடங்கண்மங்கையரொடும்வாழுநமென்னுஞ்

சித்தநன்குணர்வேதசன்மாவெனத்திகழ்வோன்

534 செங்கணேறெனத்தினந் தொறுந்தினந்தொறும் வளர்ந்து

கொங்குலாங்குழற்கோதையர்மனங்களிகூர்ந்து

துங்கமேவியகாமனேயெனவெழிறுதைந்து

மங்கலந்தருவடதிசைக்கிறையெனவாழ்நாள்

535 வந்தியாவருமணங்கமழ்மலர்ப்பதமிறைஞ்ச

விந்தமாநிலத்திரும்பொருள் யாவையுநுகர்ந்து

முந்தையூழ்வினைதிறம்பலான்மூப்புவந்தடைய

வந்தநான்மறையந்தணனாருயிர்துறந்தான்

536 அந்தவந்தணன்றறந்தருளருமறைக்குலத்தோ

னிந்துவென்னநாடொறும்வளரெழிற்கலைமதியோன்

முந்தைநான்மறைசந்ததமுழ்கிடும்வாயான்

றந்தையிற்றிகழ்தருமஞ்ஞனென்னுநாமத்தோன்

537 சாற்றுகினறவத்தருமஞ்ஞன்றனைத்தருதந்தைக்

கேற்றநூல்விதியிருக்கடனியாவையுமுடித்தே

நாற்றடந்திசையோடியனானிலமெங்கும்

போற்றுகங்கையிற்போதுவான்புந்தியிற்றுணிந்தான்

538 அத்தன்மெய்த்தருமங்கம்யாவுந்தெரிந்தோர்கும்

பத்தமைத்துநற்படாங்கொடுபுதைத்துவாயரக்கின்

முத்திரைக்குறியிட்டுயர்முத்திதானல்கு

முத்தரத்திசைகொண்டுமாணாக்கனோடுற்றான்

539 வங்கவாரிதிவளாகத்துமருவியாங்காங்குத்

தங்குமாதவர்செங்கையிற்றானநன்கீந்து

பொங்குசீதநற்புண்ணியதீர்த்தங்களாடி

யங்கயற்கண்ணிபங்கன்மேவாலவாயடைந்தான்

540 அடைந்துமாநதியாடியேயருங்குலப்பிதிர்க

ளுடன்கலந்திடுமுனிவர்கடேவர்கட்குற்ற

கடன்கழித்துறுகண்ணிலர்கதியிலர்தரள

வடங்கொள்பூணணிமங்கையர்வனமுலையுண்போர்

541 விருத்தவேதியராதுலர்வேணவாவொழிய

வருத்தமேனியதழகுறவமைத்திடுஞ்சேதாப்

பெருத்தகாதன்மெய்த்தந்தைநற்பெரும்பதம்பெறுவான்

கருத்தனாகியாங்குதவியேகணிப்பருந்தானம்

542 வேணிமேன்மிளிர்வெண்ணிலாமிலைச்சியகூட

லேர்நாயகிதன்னைமுத்தினம்பணிந்தேத்திக்

கார்மாறரிதாகிய கடவுள்செம்பாகம்

பூர்லாமலைமங்கைசேர்பூவணமடைந்தான்

543 புடவிபோற்றுமப்பூவணங்கோயிலாக்கொண்ட

விடையுகைத்திடும் விண்ணவர்கோன்றனைவடுகக்

கடவுடன்பதங்கண்டுபின்கைகுவித்திறைஞ்சி

மடல்விரிந்தபூமாமணியோடையில்வந்தான்

வேறு

544

மண்டலம்புகழ்கொண்டமாமணிகுண்டநீரின்மணங்கமழ்

புண்டரீகமுநனையவிழ்ந்தபொதும்பர்நீடுசெய்பொழில்களு

மண்டராதியர்தானமும்புகலரியவாச்சிரமங்களும்

பண்டைநான்மறைபாடுமந்தணர்பழகிடுந்திகழ்கழகமும்

545 மன்னுமாச்சிரமத்தினிற்குநர்மாதவாம்புரிமாட்சியும்

பன்னுநன்கலைபயிலுமந்தணர்பன்னசாலைகளும்பொறி

துன்னுமாமயிலாலவந்தெழுதூமமுந்தழலோமமுங்

கன்னல்வேடனைவென்றசவுநககண்டுகண்களிகொண்டனன்

546 சித்தநன்குதெவிட்டியாயிடைத்தேசுகால்வடுகேசனைச்

சுத்தமார்திலந்தூருவாக்கதைதுன்னுபூசைமுடித்துவந்

தந்திகும்பமகன்கரைக்கணமைத்தளித்தருளத்தனை

முத்திதானடைவிப்பவெய்துபுமோகமோடதின்மூழ்கினான்

547

மூழ்குமேல்வையினாழ்கடற்புனன்மொண்டுசூன்மழைபொழி

சூழ்தருந்திசைமாறிடும்படிதூவுமாலிகள்சிதறிநல்

வேழ்வியந்தணன்விசையெழுந்துசென்மிகுபதங்கடமிடறவத்

தாழ்தலத்திடைவீழ்தலுற்றதுசங்கரன்றிருவருளினால்

548

மிக்கவத்தடம்வீழ்தல்கண்டுளம்வெருவியோடியெடுத்தன

னக்கடத்தினினிட்டவங்கமனைத்துமக்கணமாய்மலர்

தக்கநற்சதபத்திரத்தொடுசார்ந்தவுற்பலமாகவே

தொக்கவன்பினிறைஞ்சியந்தணர்சூழலுற்றிவைசொல்லுவான்

549

அற்புதந்தனையென்சொல்கேன்மிகுமறவிர்காளரிதரிதரோ

பெற்றதாதைபிறங்கெலும்புபெருங்கடத்திலிருந்துதா

ளெற்றவிந்தவிலஞ்சிநாப்பபெணழுந்துவீழந்தரவிந்தமோ

டுற்றபானலதாகயானொருவேனுமேதிருவுடைமையேன்

550

பாசமோசனதீர்த்தமென்பதுபண்டுகண்டதுகேட்டதாய்க்

காசிமாநகரத்தினும்மிதுகட்டுரைதிடவொண்ர்மோ

பேசின்முன்னமருந்தவஞ்செய்பிதாக்களுங்கதிபெற்றனர்

பூசுராதிபர்போற்றுமிப்பதிபூர்வமாமிதுபுகலிலே

551 ஈதுமுன்னரிழைத்தமாதவமீண்டுகண்டனனாகவிப்

போதெனன்குலவாணரும்புகழ்பொற்பின்வந்துபொருந்தினா

ராதலாலடியேனுமுய்ந்தனனதிகசற்குருவிரதனா

னாதவேதமுனகாடைந்தனனென்றுநின்றுநடித்தனன்

552
இன்னதன்மையனிந்நிலத்தினினென்னின்மேலவரின்றெனா

வன்னவந்தணர்தம்மைநீங்கினனாலயந்தனையண்மியே

துன்னுநாகர்தலத்ததுநின்றுமொர்சோதிலிங்தாகியே

முன்னைநாளின்முளைத்தெழுந்தருண்மூர்த்தியைத்
தொழுதேத்தினான்

வேறு

553
அருண்மேனிதரித்தருள்வாய்சரணமறிவுக்கறிவாமானேசரண

முரகாபரணாசரணஞ்சரணமொருமூவிலைவேற்கரனேசரணப்

பொருளேயடியார்புகலேசரணம்பூதப்படையாய்சரணஞ்சரண

திருமாலயனறிவரியாய்சரணந்திகழ்பாற்கரபுரவசிவனேசரண

554

கழைவேளையெரித்தருள்வாய்சரணங்கனகாசலவிற்கரனேசர

பொழில்சேரநிறைந்தருள்வாய்சரணம்பூர்வந்தருபுண்ணியனே

மொழியாவுலகமொளிப்பாய்சரணமொருவெஞ்சமனையுதை

செழுநான்மறையின்முடிவேசரணந்திகழ்பாற்கரபுரசிவனேசர

555

ஒருமானிலகோருருவாய்சரணமோதுந்தொழிலைந்துடையா

புரமூன்றெரிசெய்தருள்வாய்சரணம்பொருமால்விடைமேல்

பெருகாதரலேபிரியாய்சரணம்பிறைவேணியனேசரணஞ்சரண

திரையார்புனல்சேர்சடையாய்சரணந்திகழ்பாற்கரபுரசிவனேச

556

அடைவார்வினைதிர்த்தருள்வாய்சரணமருளாலறியும்பொரு

கடல்சேர்விடமுண்டவனேசரணங்கமலன்றருகங்கையனேசர

சுடர்சேர்சுடலைப்பொடிபூசிடுநற்சுகரூபமதையுடையாய்சரண

செடிசூழ்மிகுகற்பகநன்னிழலிற்றிகழ்பாற்கரபுரசிவனேசரணப்

557

மாயாவுருவாரமலாசரணமாலானவர்பாலேலாய்சரணந்

தாயாயுலகந்தருவாய்சரணந்தன்னடியார்கட்கருள்வாய்சரண

பேயோடாடும்பெருமான்சரணம்பிரிவருதிவ்வியவுருவாசரெ

தியேந்திய செங்கரனே சரணந்திகழ்பாற்கரபுரசிவனே சரணம்

558

பொருமதகரியுரிபோர்த்தாய்சரணம்பொதுவினிடமிடுபுனி

வெருவரல்விடவருள்விகிர்தாசரணம்வேதபராயணநாதாசரெ

மரியயனடிபரவமலாசரணமடல்விடைதருகொடியரனேசரண

திருமணியுமிழ்கட்செவியணிமகுடந்திகழ்பாற்கரபுரசிவனேச

559

பத்தர்விரும்புவரத்தினைநித்தம்பரிவான்மிகவுந்தருவாய்சரஎ

புத்திகொளுத்தமர்புந்திபுகுந்தவர்பூசனைகொண்டருளீசாசரஎ

தத்துவஞானமளிப்பாய்சரணஞ்சஞ்சிதபாசமறுப்பாய்சரணஞ்

சித்தியுமுத்தியுமிக்கருள்புரியுந்திகழ்பாற்கரபுரசிவனேசரணம்

560

அட்டகுணஞ்சேரமலாசரணமாதுலர்தம்மையளிப்பாய்சரண

மெட்டுருவாகியவிறைவாசரணமெங்குநிறைந்தருளெந்தாய்ச

கட்டமுநோயுங்கவர்வாய்சரணங்கதியருள்பாபதமானாய்சரஎ

சிட்டந்தினந்தொழுந்தேவேசரணந்திகழ்பாற்கரபுரசிவனேசரஎ

561

என்றின்னனபன்னியிறைஞ்சுதலுமிமவானருளுமுமையாளிட

பின்றங்கியசெஞ்சடையெம்பெருமான்பெரிதுந்திருவுள்ளமல

நின்றன்புமனத்துறுதருமஞ்ஞனேர்கண்டிடநல்விழிநல்கியரே

வன்றங்கலராசனன்மாலறியாவத்தன்பரமுத்தியளித்தனனே

562

அந்தன்பரமுத்தியளித்தருளியமரும்பொழுதினருடங்கியநற்

சித்தங்களிகூர்செழுநான்மறைதேர்திகழ்ஞானசுகோதயமாதவ

முத்தந்திரைதத்தியதன்கரையின்மோதுங்கடல்சூழ்முதுபாருல

மித்தன்மையையுனித்தர்மஞ்ஞனேத்துந்துதிபன்னிவியந்தன

563

தருமஞ்ஞனைச்சந்ததமும்புகழ்வோர்சாமீபமதிற்றானெய்திடு

ரிருதஞ்செவிகொண்டிடுவோர்கையினல்லிலகும்பரமுத்தியை

பரவுந்தரையிற்படர்கின்றிடுவோர்பரிவாலிவைபன்னினரேல

முரைதங்குடல்வீடுறுகாலரன்வந்துறுதாரகமந்திரமோதுவனா

வேறு

564

அங்கவருபதேசந்தனையுற்றேயரியவிமானத்துரிமையினேறி

சங்கரனருள்கூர்கிங்கரராவார்சரதமிதருள்வழிசெவியினிறைட்

வெங்கனலாயிரம்
வேள்வியர்வேள்விமேயநல்வாசபேயம்மோர்நூறு

பொங்குலகஞ்செய்தபுண்ணியநண்ர்வர்பொழில்புரிபாவமுெ

வேறு

565 பிரமகைவர்த்தமாம்பெரும்புராணத்திற்

றருமஞ்ஞன்காதையத்தியாயஞ்சாற்றிடி

னருமையிங்கெழுபமூதந்தநாலதிற்

கரைதருசவுனககருத்திற்காண்டியால்

வேறு

566
தருணமெய்ச்செழுந்தழல்வளர்த்ததர்மஞ்ஞனுக்குநற்கதியளிந

பரிதிதொட்டபைந்தடமதுற்றசீர்ப்பரவைசுற்றிடும்படியிடத்தெ

கருதியிற்பெருங்கதைபடித்துளோர்கருணையிற்றினஞ்செவிற

ரருணலத்தினங்கணனுருக்கொடேயரனிடத்துவந்தருகிருப்ப

தருமஞ்ஞன் முத்தி பெற்ற சருக்க முற்றியது

ஆகச் செய்யுள் 566

✸✸✸✸✸

உற்பலாங்கி பதியை யடைந்த சருக்கம்

ஆறாவது

உற்பலாங்கி பதியை யடைந்த சருக்கம்

567 தற்பரத்துடன் றிகழ்சவுனகப்பெயர்

முற்றுணரருந்தவமுநிவகேட்டியாற்

சொற்றிடற்கரும்பரிசுத்தமேவிய

நற்கதைதன்னையாநவிற்றுவாமரோ

568 இம்மைநற்றவமுழந்தெம்பிரானிடத்

தம்மைதன்னடியிணையருச்சித்தேத்தியோர்

கொம்மைசேர்வரிமுலைக்கோதில்கொம்பனாள்

கைம்மைநீக்கியமணிகன்னிகைப்புனல்

569 முன்னருந்தவம்பலமுற்றியன்னனைதன்

பொன்னடிக்கமலத்திற்பூசையாற்றிய

வன்னவள்காதையையறைதிசூதநீ

யென்னலுங்கேண்மினோவென்றியம்புவான்

570 துங்கபத்திரையெனுந்தூநதிக்கரை

தங்கியபுண்ணியகிராமந்தன்னில்வாழ்

பங்கயனனையகோபாலனென்றொரு

துங்கவேதியன்மறைக்குலத்திற்றோன்றினாள்

571 அன்னவன்றன்னிடத்தவதரித்ததோர்

கன்னிமான்கன்னல்வேள்கணைக்கிலக்கனாள்

பொன்னுலகத்தினிற்புலவர்போற்றிட

மன்னியவுலகினில்வந்துதோன்றினாள்

572 முந்தைநாளிவளூறின்முகில்வணன்கடற்

செந்திருமாதினைச் சிந்தைகொண்டிடா

னந்துநான்முகனுநாமாதைநண்ணிடா

னிந்திரன்வேண்டிலனிந்திராணியை

573 கற்பகஞ்சேர்தருகாமவல்லியோ

கொற்றவில்வேளையாட்கொள்ளுந்தெய்வமோ

வெற்றியந்தணன்புரிமெய்த்தவங்கொலோ

மற்றவடன்னையான்மதிக்கற்பாலதோ

574 நிறையிருட்சைவலநீலமாமுகில்

குறைவில்சீர்க்கொன்றையின்கோலந்தாங்கியே

பிறையொடுபெருந்திருப்பிறங்கன்மேலணிந்

தறல்விரிபாளைசேரளகபந்தியாள்

575 கொம்மைசேரமுதநற்கோதிலாக்குளிர்

செம்மதிபோன்றொளிர்திருமுகத்தினாள்

வெம்மைநீடியபுகழ்வேனில்வேடிருக்

கைம்மிகுஞ்சிலைநுதற்கவினிலங்குவாள்

576 தாமநற்றாழ்குழைதந்தபொற்புறு

மாமணியூசல்போல்வயங்குகாதினாள்

காமசங்கீதமேகலந்தகாமனூற்

பாமணமொழுகுசெம்பவளவாயினாள்

577 சேயுயர்விசும்புறுதிங்கள்போன்றொளிர்

வேயுறுநித்திலம்விளங்குமூரலாண்

மாயவனேந்தியவண்ணவால்வளை

யாயகந்தரத்தினிலமைந்தபூணினாள்

578 இனமிகுகயற்கண்மூண்டிகல்செய்யாமலே

துனிவழியடைத்துநேர்துலங்குதுண்டத்தாள்

புனமுறுபசுக்கழைபொருந்துகின்றதோட்

கொண்டன்புறுஞ்செய்யகோடீரபாரம்மதின்வீழ்குவேய

னெண்டங்குகைநாற்பதின்னாயிரஞ்சதுர்யுகம்மெய்தினேன்

1399
விடுவிடிங்கெனையென்னவிடையுகைத்தேவரும்விமலன்சட

முடிநின்றுமதுதவறிவீழ்தரலினுயிர்பெற்றுமொழியுமதனா

லிடர்நின்றெமைக்காக்கவிமூதிங்ஙனினைகின்றதெனநெஞ்சி

படிறொன்றுரைத்திடப்பங்கயப்பகவனிப்பரிசுன்னினான்

1400 கண்டாதரிக்கவருகைதையேதாழையேகண்டலேநீ

பண்டாருமறிவரியபையுளையகற்றவருபான்மையாலே

விண்டாரணிக்கணெற்குன்போலுயிர்த்துணைவிளம்பிடின்வே

றுண்டோவதற்கையமின்றாகுமுரைசெய்வலொன்றுகேண்மே

வேறு

1401 ஆணையானன்மறையவனாகுமித்

தார்வாமழற்றம்பத்தடிமுடி

நார்றாதந்தநாரணனோடியான்

கார்மாறுகருத்தினிற்கொண்டனன்

1402 அற்புதத்தினிரும்புவிகீண்டுகாண்

கிற்பனாலெனக்கேழலுருக்கொடு

சொற்கடந்தவிச்சோதிலிங்கந்திகழ்

பொற்பதந்தனைத்தேடிமுன்போயினான்

வேறு

1403 கூடியபல்லுகங்கொண்டநாண்முத

னாடிவந்திச்சிவலிங்கநன்முடி

தேடியுமின்னும்யான்றெரிசிக்கின்றிலேன்

வாடினனீயருள்வழங்கல்வேண்டுமால்

1404 கரியமாலாகியகடவுளானுட

னருளினிற்பொருந்தியிவ்வன்னமாயினோன்

குருமிகுதழலுருக்கொண்டவெம்பிரான்

றிருமுடிகண்டனனென்றுசெப்புவாய்

1405 நஞ்சடவருதலுநாரிபாகனுண்

டஞ்சலென்றமரரையளித்ததோர்தியாற்

றுஞ்சிடவந்தநாட்சொல்லரும்பெரு

வஞ்சகம்பொய்யுரைவழங்கலாகுமால்

1406 நறுமடற்றாழைதன்னம்பினோற்குநண்

புறுவதிவ்வுடற்கணேயுதவல்வேண்டுமாற்

பெறுவதுகருதிநண்புறுதிபோற்றியே

மறுமையினுஞ்செயவரம்புண்டாகுமோ

1407 என்னலுநன்றெனவெழுந்துதுன்னியே

மன்னியவண்டிமிர்மடற்பெய்தாழையோ

டுன்னரும்வானெலாமொருவிப்பூதலத்

தன்னவாகனனும்வந்திரியைக்கண்டனன்

வேறு

1408

வரையொன்றெடுத்துநிரைவருமாரிகாத்தநெடுமழைவண்ண

கருதுங்கணத்தரையினாயிரங்கொண்டதோர்காதங்கடந்துவி

பொருதெண்டிரைக்கங்கைநதிசென்றுவட்டெடுத்தொளிர்செ

முருகொன்றுமுட்பொதியு
நெட்டிலைமுடங்கலின்முகிழ்மடலின்முடிகண்டனன்

1409

கருகாமல்விடமுண்டுகண்டங்கறுத்ததோர்காமாரிகற்றைச்ச

தருகைகதையும்மீண்டுனக்காகயான்சென்றசான்றுரையெனச்

றிருமேவுசெந்தாமரைக்கண்ணவின்னவைதேர்கிற்றியாலென்

யருளாழியாய்கண்டதையமின்றேயென்றதந்தவெண்டாழை

1410

தருணமுறுபகிரண்டமுகடிடிபடக்கொடியதண்டவடவங்கிமன

திரிசுடர்கடிசைமாறியலமரத்தெரிவரியதிரிபுவனமிகநடுங்க

வருணசந்திரமதியுமரியகங்காநதியுமமுதவலைதிவலைவீசச்

சுருதியினமுந்தொடர்ந்தறிவரியசெஞ்சுடர்ச்சோதிப்பிரான்றே

1411

அமையாதவன்பருக்காநந்தமேதினமுமருள்கருணைமொழி

மிமையாதமுக்கண்ர்மீரிருகரங்களுமெடுத்தேத்துமழுவுமானு

முமையாளொடுடனாயவொருமேனியும்விடையுறக்காண்ட

நமையாண்டுகொண்டருளவந்ததொருநம்பனிவனெனவஞ்சி

வேறு

1412 அலைகடலன்றெழுந்தவந்தநஞ்சுண்டகண்ட

னிலவுதோன்றிடநகைத்துநீண்மறைபாடுவாயான்

மலரவநம்முன்பொய்த்துமாற்றநீவழங்கலாலே

நிலவலயத்திற்பூசைநினக்கிலதாகவென்றே

1413 திரள்செழும்பரிதியென்னச்செம்மணிகிடந்தமார்ப

சரதநீவழங்கலாலேதராதலத்துலகோரெல்லாம்

பரவியேநின்னைப்பூசைபண்ணிடக்கடவரென்று

வரமருள்புரிந்துபின்னும்வாய்மைகளளந்துமன்னோ

1414 மண்டியவாசந்தோய்ந்துவண்டிமிர்தாழைநீயிப்

புண்டரீகன்றன்னோடும்பொய்த்துரைபுகறலானந்

தெண்டிரைக்கங்கைநிர்பாய்செஞ்சடைசேரலென்னப்

பண்டருவேதன்செம்பொற்பதம்பணிந்திவைபடித்தான்

வேறு

1415 இத்தலமுமேத்தவேவந்தருளியெங்கட்

கத்தனுடனன்னையெனவன்புடைமையானே

சுத்தவநுபோகமதுதுய்க்கவருள்வானே

முத்திதருநித்தகுருமூர்த்தமுடையானே

1416 மெய்யுணர்வின்மேலவர்தமக்குரியமெய்யாய்

பொய்யுரையினின்றவர்பொருந்தரியபொய்யாய்

பையிலகுபாந்தளூறுபழுறலைபடுத்த

வையகமதுய்யவிவண்வந்தருளும்வள்ளால்

1417 பாலனையளித்தவொருபார்வைதருபாலா

நாலுமுநிவர்க்கறநவிற்றுமறைநாவா

காலனுயிருண்டுசுவைகண்டுமகிழ்காலா

சூலியுடன்வாதுநடமாடுதிரிசூலா

1418 நாதமொடுவந்துவருநாதமுறுகீதா

வோதரியநான்மறையுரைத்தருள்விநோதா

காதன்மிகமேவுகுழைகாணவணிகாதா

பாதகமனைத்தையுமறுத்தருள்செய்பாதா

1419 கற்பனையில்வந்துபொருகாமனையெரித்தோய்

சொற்பரவுநான்மறைதுதித்திடுதுரங்கா

பொற்புறவணிந்திலகுபூடணபுயங்கா

சிற்பரமஞானிகடினம்பருகுதேறால்

1420 மிக்கதொருதக்கனதுவேள்வியையழித்தோ

யக்கடலினின்றுவருமாலவிடமுண்டோய்

மொக்குளினியங்கவுணர்முப்புரமெரித்தோய்

திக்குலகெலாம்புரவுதிங்களைமுடித்தோய்

வேறு

1421

என்றுபுனைந்துரைபலகொண்டேத்திடலுமெம்பெருமானிரங்

மன்றன்மிகுநறுஞ்செந்தேன்வாய்ததும்பிவழிந்தொழுகுமலர்

பொன்றிகழும்பொற்பொகுட்டுப்புங்கவநின்பொய்த்துரையி

மொன்றியபன்மகம்புரியினுயர்ந்தகந்தமாதனத்தினொழியு

1422

ஆங்கதுகாலையிற்கைதையடியேனையஞ்சலெனவருள்வா

தேங்கியவத்திறனறிந்துதிரிந்தமுகந்தெரிந்துதிருவுளந்துணிந்

பாங்கின்மலர்ப்பரமேட்டிதனக்காநீபொய்யுரைத்தபாவம்பாற

பூங்கமலத்திருமருவுபூவணத்தினமைப்பூசைபுரிதியன்றே

1423

அப்பிரமன்றனைத்தேசுமிக்கபிரானிருந்தவிடத்தடைதியென்ற

செப்பிவிடைகொடுத்ததற்பின்றிண்டிறன்மால்வைகுண்டஞ்செ

பொய்ப்பகர்தறருமுடங்கற்பூவினையப்பூவணத்திற்போதியெ

துப்புறமுஞ்செஞ்சடிலச்சோதியிலிங்கங்கரந்தான்றொன்மைே

1424

தேவர்பிரானிம்மாற்றஞ்செப்பியுருக்கரந்ததற்பின்றிருமடந்தை

மேவுமுகந்தொறுநிறுவிளையாடு
ம்பூவணத்தின்விரைந்துபோந்து

தாவருஞ்சீர்தருபாரிசாதநிழற்றங்குசிவலிங்கம்பூசித்

கோவில்புகழுறுகைதையுரைத்திடும்பொய்ப்பவத்தினுநின்றெ

வேறு

1425 நித்தமாய்மேலாயென்றுநீடுயிர்க்கறிவாய்ப்போக

முத்தியையளிக்குமுக்கண்மூர்த்திதன்வடிவமாய

சததியமோனஞானசவுநகமுநிவமேலா

மித்தலப்பெருமையெம்மாலெடுத்துரைசெய்யலாமோ

1426
முத்தியோருருவமாகிமுளைக்குமிவ்விலிங்கத்திற்குப்
பத்தியான்மூன்றுதூணிபசுவினன்பால்வடித்துப்

புத்தியினிடபத்தங்கட்பூரணைபொருந்துகின்ற

வித்தகவிசாகந்தன்னிலவெய்யனொடுங்கும்வேலை

1427 நீதியின்வழாதுமுன்னநிகழ்தருபூசையாற்றிக்

காதலினிருந்துதாஞ்சங்கற்பமும்பண்ணிச்சங்கின்

வேதமந்திரத்தினாலேவிரைகொண்மஞ்சனம்பூரித்துத்

தீதறத்தாபித்தன்பிற்றிருந்தபிடேகஞ்செய்து

1428 அந்தநல்லமுகந்தன்னையன்புடனபிடேகித்தே

யந்தநற்புகழ்சேர்கின்றவர்த்தநாரீசற்காண்பா

ரந்தநற்றரிசனத்தாலரசராயனைத்துஞ்சேர்ந்தாங்

கந்தமிலாதமூர்த்தியான்கழலடைவரன்றே

1429

கூடியபேரன்புள்ளங்கொண்டமார்க்கண்டனென்போன்

நீடுமச்சிவலிங்கத்தினிகழ்த்துமான்பான்முன்னாட்டித்

தேடருமர்த்தநாரீசன்றனைத்தெரிசித்தங்க

ணாடருஞ்சீவன்முத்திநண்ணினனறிகமாதோ

1430 ஆதலினிந்தக்காதையறைந்திடினறிதறேற்றார்க்

கோதலைவைதிகத்தோர்க்குரைத்திநீயெனவியாதன்

காதலினுரைக்கப்பான்மைகட்டுரைத்தனன்யானன்றி

யேதமின்முநிவிர்காளீதெவராலுமியம்பலாமோ

1431
கொலைபழுத்தொழுகும்வைவேற்குமரவேணந்திக்கோதத்

தலமலிபுகழ்சேர்நந்திசநற்குமாரற்குரைப்ப

வுலகெலாம்பரவவன்னோனுயர்வியாதற்குரைப்ப

வலைவறவவன்பால்யான்கோட்டறைந்தனனுமக்கின்றன்பா

1432 என்னலுமுநிவரந்தவேதமில்சூதன்றன்னை

மன்னியதருப்பைசீரைவண்கனிமூலந்தன்னாற்

பன்னரும்பூசையாற்றிப்பன்முறைதழீஇக்கொண்டன்பா

லந்நிலையாசிகூறியானந்தடைந்தாரன்றே

1433
பன்னுமிப்புராணந்தன்னைப்படிக்குநர்தம்மையன்பான்

மன்னியவாசனத்தன்வைத்தருச்சனைசெய்வோர்க்குப்

பொன்னுலகேத்துந்தொல்சீர்ப்பூவணத்தரனைப்பூசை

தன்னைநன்கியற்றினோர்கடாம்பெறும்பலன்களுண்டாம்

1434 தேடரும்பலன்கணல்குந்தென்றிருப்பூவணத்து

நீடுசேர்புராணந்தன்னைநிகழ்த்திடுஞ்செவிநிறைத்து

நாடியபொருள்கள்யாவுநண்ணலானவிற்றுஞ்செஞ்சொற்

பாடலைவருந்தியேனும்புரிவுடன்கேட்கப்பண்ணே

1435 புவனமெங்கர்ஞ்சீர்போற்றும்பூவணமான்மியத்தை

நவிலுறச்செவிக்குநாளுநல்விருந்தளிக்குநர்க்குச்

சிவபிரானருளினாலேதேடுபேருவகைகூடுஞ்

சவுநகமுநிவவீதுசத்தியஞ்சத்தியங்காண்

வேறு

1436

ஒப்பிலாதவுருத்திரசங்கிதையுற்றபூவணநற்கதையோதுவோர்

செப்புமாறுசெவிக்கொடுமன்னியசிட்டராயசிறப்புறுதன்மை

விப்பிராதிபவித்தகமெய்ம்மொழிமிக்கவேதவிதத்துயர்மாத

தப்பிலாததவத்திருமன்னவர்தயாபரன்கயிலைக்கிரிவாழ்வ

வேறு

1437 வாழ்கமன்னவன்செங்கோன்மழைமுகில்

வாழ்கநான்மறைவாணவர்கணானிலம்

வாழ்கவைதிகசைவமலர்த்திரு

வாழ்கவஞ்செழுத்துண்மைநன்மந்திரம்

சிதம்பரவுபதேசச்சருக்கமுற்றியது

ஆகச்செய்யுள் 1437

✸✸✸✸✸

திருப்பூவணப்புராண முற்றியது

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவர் திருவடிவாழ்க

சிவஞானயோகிகள் திருவடிவாழ்க

கந்தசாமிப் புலவர் திருவடி வாழ்க.

சுபம்

35

6 திருமுறைகளில் திருப்பூவணப் பாடல்கள்

(குறிப்பு[– தேவாரப் பாடல் வரிகள் திருப்பூவணப் புராணப் புத்தகத்திலிருந்தபடியே இங்கு அச்சிடப்பட்டுள்ளன)

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியது

(1-ம் திருமுறை)

பண் தக்கேசி

திருச்சிற்றம்பலம்

அறையார் புனலு மாமலரு மாடர வார்சடைமேற்

குறையார் மதியஞ் சூடி மாதோர் கூறுடை யானிடமா

முறையான் முடிசேர் தென்னர் சேரர் சோழர் கடாம் வணங்குந்

திறையா ரொளிசேர் செம்மை யோங்கு தென்றிருப்பூவணமே (1)

மருவார் மதின்மூன் றொன்ற வெய்து மாமலை யான்மடந்தை

யொருபால் பாக மாகச் செய்த வும்பர் பிரானவனூர்

கருவார் சாலியாலை மல்கிக் கழன்மன்னர் காத்தளித்த

திருவான் மலிந்த சேடர் வாழுந் தென்றிருப்பூவணமே (2)

போரார் மதமா வுரிவை போர்த்துப் பொடியணி மேனியனாய்க்

காரார் கடலி னஞ்ச முண்ட கண்ர்தல் விண்ணவனூர்

பாரார் வைகைப் புனல்வாய் பரப்பிப் பன்மணி பொன் கொழித்துச் சீரார் வாரி சேர நின்ற தென்றிருப் பூவணமே(3)

கடியா ரலங்கற் கொன்றை சூடிக் காதிலொர் வார் குழையன்

கொடியார் வெள்ளை யேறு கந்த கோவண வன்னிடமாம்

படியார் கூடி நீடி யோங்கு பல்புக ழாற் பரவச்

செடியார் வைகை சூழ நின்ற தென்றிருப் பூவணமே (4)

கூரார் வாளி சிலையிற் கோத்துக் கொடிமதில் கூட்டழித்த

போரார் வில்லி மெல்லிய லாளோர் பால் மகிழ்ந் தானிடமா

மாரா வன்பிற் றென்னர் சேரர் சோழர்கள் போற்றிசைப்பத்

தேரார் வீதி மாட நீடு தென்றிருப் பூவணமே(5)

நன்று தீதென் றொன்றி லாத நான்மறை யோன்கழலே

சென்று பேணி யேத்த நின்ற தேவர் பிரானிடமாங்

குன்றி லொன்றி யோங்க மல்கு குளிர்பொழில் சூழ் மலர்மேற்

றென்ற லொன்றி முன்றி லாருந் தென்றிருப் பூவணமே(6)

பைவா யரவ மரையிற் சாத்திப் பாரிடம் போற்றிசைப்ப

மெய்வாய் மேனி நீறு பூசி யேறுகந் தானிடமாங்

கைவாழ் வளையார் மைந்த ரோடுங் கலவியினா னெருங்கிச்

செய்வார் தொழிலின் பாட லோவாத் தென்றிருப்பூவணமே(7)

மாட வீதி மன்னிலங்கை மன்னனை மாண்பழித்துக்

கூட வென்றி வாள்கொ டுத்தான் கொள்கையி னார்க் கிடமாம்

பாட லோடு மாட லோங்கிப் பன்மணி பொன் கொழித்து

வோடி நீரால் வைகை சூழு முயர்திருப் பூவணமே(8)

பொய்யா வேத நாவி னானும் பூமகள் காதலனுங்

கையாற் றொழுது கழல்கள் போற்றக் கனலெரி யானவனூர்

மையார் பொழிலின் வண்டு பாட வைகை மணி கொழித்துச்

செய்யார் கமலந் தேன ரும்புந் தென்றிருப் பூவணமே(9)

அலையார் புனலை நீத்த வருந்தே ரருமன் புசெய்யா

நிலையா வண்ண மாய வைத்த நின்மலன் றன்னிடமா

மலைபோற் றுன்னி வென்றி யோங்கு மாளிகை சூழ்ந்தயலே

சிலையார் புரிசை பரிசு பண்ர்ந் தென்றிருப்பூவணமே(10)

திண்ணார் புரிசை மாட மோங்கு தென்றிருப் பூவணத்துப்

பெண்ணார் மேனி யெம்மி றையைப் பேரிய லின் றமிழா

னண்ணா ருட்கக் காழி மல்கு ஞானசம் பந்தன்சொன்ன

பண்ணார் பாடல் பத்தும் வல்லார் பயில்வது வானிடையே(11)

திருச்சிற்றம்பலம்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியது

(3-ம் திருமுறை)

பண் – காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மாதமர் மேனிய னாகி வண்டொடு

போதமர் பொழிலணி பூவணத்துறை

வேதனை விரவல ரரண மூன்றெய்த

நாதனை யடிதொழ நன்மை யாகுமே(1)

வானணி மதிபுல்கு சென்னி வண்டொடு

தேனணிபொழிற்றிருப் பூவ ணத்துறை

யானநல் லருமறை யங்க மோதிய

ஞானனை யடிதொழ நன்மை யாகுமே(2)

வெந்துய ருறுபிணி வினைக டீர்வதோர்

புந்தியர் தொழுதெழு பூவ ணத்துறை

யந்திவெண் பிறையினோ டாறு சூடிய

நந்தியை யடிதொழ நன்மை யாகுமே(3)

வாசநன் மலர்மலி மார்பில் வெண்பொடிப்

பூசனைப் பொழி றிகழ் பூவ ணத்துறை

யீசனை மலர்புனைந் தேத்து வார்வினை

நாசனை யடிதொழ நன்மை யாகுமே(4)

குருந்தொடு மாதவி கோங்கு மல்லிகை

பொருந்திய பொழிற் றிருப் பூவணத்துறை

யருந்திற லவுணர்த மரண மூன்றெய்த

பெருந்தகை யடிதொழப் பீடை யில்லையே(5)

வெறிகமழ் புன்னைபொன் ஞாழல் விம்மிய

பொறியர வணி பொழிற் பூவ ணத்துறை

கிறிபடு முடையினன் கேடில் கொள்கைய

னறுமல ரடி தொழ நன்மை யாகுமே(6)

பறைமல்கு முழவொடு பாட லாடலன்

பொறைமல்கு பொழிலணி பூவ ணத்துறை

மறைமல்கு பாடலன் மாதொர் கூறின

னறைமல்கு கழ றொழ வல்ல லில்லையே(7)

வரைதனை யெடுத்தவல் லரக்க னீண்முடி

விரற னி லடர்த்தவன் வெள்ளை நீற்றினன்

பொருபுனல் புடையணி பூவ ணந்தனைப்

பரவிய வடியவர்க் கில்லை பாவமே(8)

நீர்மல்கு மலருறை வானு மாலுமாய்ச்

சீர்மல்கு திருந்தடி சேர கிற்கிலர்

போர்மல்கு மழுவினன் மேய பூவண

மேர்மல்கு மலர்புனைந் தேத்த லின்பமே(9)

மண்டை கொண் டுழிதரு மதியி றேரருங்

குண்டருங் குணம்பல பேசுங் கோலத்தர்

வண்டமர் வளர்பொழின் மல்கு பூவணங்

கண்டவ ரடி தொழு தேத்தல் கன்மமே(10)

புண்ணியர் தொழுதெழு பூவ ணத்துறை

யண்ணலை யடிதொழு தந்தண் காழியு

ணண்ணிய வருமறை ஞான சம்பந்தன்

பண்ணிய தமிழ்சொலப் பறையும் பாவமே(11)

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியது

திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்

வளர்சடைமே லிளமதியந் தோன்றுந் தோன்றுங்

கடியேறு கமழ் கொன்றைக் கண்ணி தோன்றுங்

காதில்வெண் குழைதோடு கலந்து தோன்று

மிடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்று

மெழி றிகழுந் திருமுடியு மிலங்கித் தோன்றும்

பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்

பொழி றிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே(1)

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்று

மடியவர்கட் காரமுத மாகித் தோன்று

மூணாகி யூர் திரிவா னாகித் தோன்று

மொற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேற்

சேணாக வரைவில்லா லெரித்த றோன்றுஞ்

செத்தவர்த மெலும்பினாற்செ றியச் செய்த

பூணார் மரைநார்ம் பொலிந்து தோன்றும்

பொழி றிகழும் பூவணத் தெம் புனித னார்க்கே. (2)

கல்லாலின் னீழற்க லந்து தோன்றுங்

கவின்மறையோர் நால்வர்க்கு நெறிக ளன்று

சொல்லாகச் சொல்லியவா தோன்றுந் தோன்றுஞ்

சூழரவு மான்மறியுந் தோன்றுந் தோன்று

மல்லாத காலனைமுன் னடர்த்த றோன்று

மைவகையா னினைவார்பா லமர்ந்து தோன்றும்

பொல்லாத புலாலெலும்பு பூணாய்த் தோன்றும்

பொழி றிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே. (3)

படைமலிந்த மழுவாளு மானுந் தோன்றும்

பன்னிரண்டு கண்ர்டைய பிள்ளை தோன்று

நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்று

நான்மறையி னொலி தோன்று நயனந் தோன்று

முடைமலிந்த கோவணமுங் கீழுந் தோன்று

மூரல்வெண் சிரமாலை யுலாவித் தோன்றும்

புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்

பொழி றிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே(4)

மயலாகுந் தன்னடியார்க் கருளுந் தோன்று

மாசிலாப் புன்சடைமேன் மதியந் தோன்று

மியல்பாக விடுபிச்சை யேற்ற றோன்று

மிருங்கட னஞ் சுண்டிருண்ட கண்டந் தோன்றுங்

கயல்பாயக் கடுங்கலுழிக் கங்கை நங்கை

யாயிரமா முகத்தினொடு வானிற் றோன்றும்

புயல் பாயச் சடைவிரித்த பொற்புத் தோன்றும்

பொழி றிகழும் பூவணத் தெம் புனித னார்க்கே(5)

பாராழி வட்டத்தார் பரவி யிட்ட

பன்மலரு நறும்புகையும் பரந்து தோன்றுஞ்

சீராழித் தாமரையின் மலர்க ளன்ன

திருந்தியமா நிறத்தசே வடிக டோன்று

மோராழித் தேருடைய விலங்கை வேந்த

னுடல் றுணித்த விடர்பாவங் கெடுப்பித் தன்று

போராழி முன்னீந்த பொற்புத் தோன்றும்

பொழி றிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே(6)

தன்னடியார்க் கருள் புரிந்த தகவு தோன்றுஞ்

சதுர்முகனைத் தலையரிந்த தன்மை தோன்று

மின்னனைய நுண்ணிடையாள் பாகந் தோன்றும்

வேழத்தி னுரிவிரும்பிப் போர்த்த றோன்றுந்

துன்னியசெஞ் சடைமேலோர் புனலும் பாம்புந்

தூயமா மதியுடனே வைத்த றோன்றும்

பொன்னனைய திருமேனி பொலிந்து தோன்றும்

பொழி றிகழும் பூவணத் தெம் புனித னார்க்கே(7)

செறிகழலுந் திருவடியுந் தோன்றுந் தோன்றுந்

திரிபுரத்தை யெரிசெய்த சிலையுந் தோன்று

நெறியதனை விரித்துரைத்த நேர்மை தோன்று

நெற்றிமேற் கண்டோன்றும் பெற்றந் தோன்று

மறுபிறவி யறுத்தருளும் வகையுந் தோன்று

மலைமகளுஞ் சலமகளு மலிந்து தோன்றும்

பொறியரவு மிளமதியும் பொலிந்து தோன்றும்

பொழி றிகழும் பூவணத் தெம் புனித னார்க்கே(8)

அருப்போட்டு முலைமடவாள் பாகந் தோன்றும்

மணிகிளரு முருமென்ன அடர்க்குங் கேழன்

மருப்போட்டு மணிவயிரக் கோவை தோன்று

மணமலிந்த நடந்தோன்று மணியார் வைகைத்

திருக்கோட்டி னின்றதோர் திறமுந் தோன்றுஞ்

செக்கர்வா னொளிமிக்குத் திகழ்ந்த சோதிப்

பொருப்போட்டி நின்றதிண் புயமுந் தோன்றும்

பொழி றிகழும் பூவணத் தெம் புனித னார்க்கே(9)

ஆங்கணைந்த சண்டிக்கு மருளி யன்று

தன்முடிமேல லர்மாலை யளித்தல் தோன்றும்

பாங்கணைந்து பணிசெய்வார்க் கருளி யன்று

பலபிறவி யறுத்தருளும் பரிசுந் தோன்றுங்

கோங்கணைந்த கூவிளமு மதமத் தம்முங்

குழற்கணிந்த கொள்கையொடு கோலந் தோன்றும்

பூங்கணைவே ளுருவழித்த பொற்புத் தோன்றும்

பொழி றிகழும் பூவணத் தெம் புனித னார்க்கே(10)

ஆருவ வுள்குவா ருள்ளத் துள்ளே

யவ்வுருவாய் நின்கின்ற வருளுந் தோன்றும்

வாருருவப் பூண்முலைநன் மங்கை தன்னை

மகிழ்ந் தொருபால் வைத்து கந்த வடிவுந் தோன்றும்

நீருருவக் கடலிலங்கை யரக்கர் கோனை

நெறுநெறென வடர்த்திட்ட நிலையுந் தோன்றும்

போருருவக் கூற்றுதைத்த பொற்புத் தோன்றும்

பொழி றிகழும் பூவணத் தெம் புனித னார்க்கே(11)

திருச்சிற்றம்பலம்

(இத் திருப்பதிகம் அகத்திய முனிவர் திரட்டியருளிய தேவாரத் திரட்டிற் சேர்ந்த சிறப்புடையது)

சுந்தரர் பாடியது

பண் – இந்தளம்

திருச்சிற்றம்பலம்

திருவுடை யார்திரு மால ய னாலு

முருவுடை யாருமை யாளையொர் பாகம்

பரிவுடை யா ரடை வார்வினை தீர்க்கும்

புரிவுடை யாருறை பூவண மீதோ. (1)

எண்ணி யிருந்து கிடந்து நடந்து

மண்ண லெனாநினை வார்வினை தீர்ப்பார்

பண்ணிசை யார்மொழி யார்பலர் பாடப்

புண்ணிய னாருறை பூவண மீதோ. (2)

தெள்ளிய பேய்பல பூதம வற்றோடு

நள்ளிரு ணட்டம தாட ந வின்றோர்

புள்ளுவ ராகு மவர்க்கவர் தாமும்

புள்ளுவ னாருறை பூவண மீதோ. (3)

நிலனுடை மான்மறி கையது தெய்வக்

கனலுடை மாமழு வேந்தியோர் கையி

லனலுடை யா ரழ கார்தரு சென்னிப்

புனலுடை யாருறை பூவண மீதோ. (4)

நடையுடை நல்லெரு தேறுவர் நல்லார்

கடைகடை தோறிடு மின்பலி யென்பார்

துடியிடை நன்மட வாளொடு மார்பிற்

பொடியணி வாருறை பூவண மீதோ. (5)

மின்னனை யாடிரு மேனிவி ளங்கவொர்

தன்னமர் பாகம தாகிய சங்கரன்

முன்னினை யார்புர மூன்றெரி யூட்டிய

பொன்னனை யானுறை பூவண மீதோ(6)

மிக்கிறை யேயவ றுன்மதியால் விட

நக்கிறை யேவிர லாலிற வூன்றி

நெக்கிறை யேநினை வார்தனி நெஞ்சம்

புக்குறை வானுறை பூவண மீதோ(7)

(பாடல் 8-9 கிடைக்கப்பெறவில்லை)

சீரின் மிகப்பொலி யுந்திருப் பூவண

மாரவி ருப்பிட மாவுறை வானை

யூர னுரைத்த சொன்மாலைகள் பத்திவை

பாரி லுறைப்பவர் பாவ மறுப்பரே(10)

திருச்சிற்றம்பலம்

திருவாசகத்தில் திருப்பூவணம்

திருப்பூவணத்திற்கு வடக்கே சுமார் 18 கி.மீ. தூரத்தில் உள்ளது திருவாதவூர். இவ்வூரில் பிறந்தவர் மாணிக்கவாசகர். அதனால் அவருக்குத் திருவாதவூரர் என்னும் பெயர் அமைந்தது. அவருடைய கல்வி. கேள்வி. ஒழுக்கம். அறிவு. ஆற்றல் ஆகிய சிறப்புக்களைப் பற்றிக் கேள்வியுற்ற பாண்டிய மன்னன் அவரைத் தனது தலைமை மந்திரியாக நியமனம் செய்தான். அவரது ஆட்சித் திறமையைக் கண்டு “தென்னவன் பிரமராயன்” என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கினான்.

மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் நேரில் எழுந்தருளி

நரிகளைப் பரிகளாக்கியும். பின்னர் பரிகளை நரிகளாக்கியும் திருவிளையாடற் புரிந்தருளினார்.

(1) மாணிக்கவாசகப் பெருமான் கீர்த்தித் திருவகவலில்

“இந்திர ஞாலம் காட்டிய இயல்பினாய் போற்றி

உத்தரகோச மங்கை வித்தக வேடா போற்றி

பூவண மதனிற் தூவண மேனி காட்டிய தொன்மையோய் போற்றி

வாதவூரில் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பா போற்றி

திருவார் பெருந்துறை செல்வா போற்றீ

என்று திருப்பூவணநாதரின் தொன்மைகளையும் அருளும் தன்மையையும் பாடியுள்ளார்.

(2) “அரனே போற்றி. அந்தணர்தம் சிந்தையானே போற்றீ – என்று ஆரம்பிக்கும் திருமுறைத்திரட்டில்.

“… …

வெண்காட்டில் உறைவா போற்றி

விடைகாட்டும் கொடியா போற்றி

சக்கரம் மாலுக்கு ஈந்தாய் போற்றி

சலந்தரனைப் பிளந்தாய் போற்றி

பாலொடு நெய்தயிர் பலவும் ஆடுவாய் போற்றி

… …”

“தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி

திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற்றி

சாவாமே காத்து என்னை ஆண்டாய் போற்றி

“மைசேர்ந்த கண்டம் உடையாய் போற்றி

மாலுக்கும் ஓர் ஆழி ஈந்தாய் போற்றி

பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றீ

“விண்ர்லகம் ஈந்தவிறல் போற்றி

மண்ணின்மேல் காளத்தி போற்றி கயிலைமலை போற்றி

சதுர்முகன் தந்தைக்குக் கதிர்விடு கடவுள்

ஆழி கொடுத்த பேரருள் போற்றீ

சலந்தரன் தடிந்த தண்டம் போற்றி

தாதையை எறிந்த வேதியச் சிறுவற்குப் பரிகலம்

கொடுத்த திருவுளம் போற்றீ

“சிறுவனுக்கு அழியா வாழ்நாள் அளித்து அருள் செய்தி போற்றி

சலந்தரன் உடல் கீண்ட சக்கரப் படையாய் போற்றி

வலம்தரு அதனை மாயோன் வழிபடக் கொடுத்தாய் போற்றி

அலர்ந்த செங்கமலப் புத்தேள் நடுச் சிரம் அரிந்தாய் போற்றீ

என்று திருப்பூவணநாதர் பெருமாளுக்குச் சக்கராயுதம்

வழங்கிய செய்தியைப் பாடியுள்ளார். இச்செய்தி. திருப்பூவணப் புராணத்திலே. சிதம்பர உபதேச சருக்கத்திலே விரிவாக எடுத்துக் கூறப் பெற்றுள்ளது.

(3) போற்றித் திருவகவலில்.

“… … …

திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றிஸ

பொருப்பமர் பூவணத்தரனே போற்றிஸ

அருவமும் உருவமும் ஆனாய் போற்றிஸ

… … … ” என்று திருப்பூவணநாதரைப் போற்றி வணங்கியுள்ளார்.

✸✸✸✸✸

கருவூர்த் தேவர் பாடியது

ஒன்பதாம் திருமுறை

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

திருவருள் புரிந்தா ளாண்டு கொண் டிங்ஙன்

சிறியனுக் கினயது காட்டிப்

பெரிதருள் புரிந்தா னந்தமே தருநின்

பெருமையிற் பெரியதொன் றுளதே

மருதர சிருங்கோங் ககின்மரஞ் சாடி

வரைவளங் கவர்ந்திழி வைகைப்

பொருதிரை மருங்கோங் காவண வீதிப்

பூவணங் கோயில்கொண் டாயே. (பாடல் – 144)

பாம்பணைத் துயின்றோ னயன்முதற் றேவர்

பன்னெடுங் காலநிற் காண்பா

னேம்பலித் திருக்க வென்னுளம் புகுந்த

வெளிமையை யென்றுநான் மறக்கேன்

தேம்புனற் பொய்கை வானளவாய் மடுப்பத்

தெளிதரு தேறல்பாய்ந் தொழுகும்

பூம்பணைச் சோலை யாவண வீதிப்

பூவணங் கோயில்கொண் டாயே. (பாடல் – 145)

கரைகட லொலியிற் றமருகத் தரையிற்

கையினிற் கட்டிய கயிற்றா

லிருதலை யொருநா வியங்கவந் தொருநா

ளிருந்திடா யெங்கள்கண் முகப்பே

விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்

வேட்கையின் வீழ்ந்தபோ தவிழ்ந்த

புரிசடை துகுக்கு மாவணவீதிப்

பூவணங் கோயில்கொண் டாயே. (பாடல் – 146)

கண்ணியன் மணியின் குழல்புக் கங்கே

கலந்துபுக் கொடுங்கினேற் கங்ங

னுண்ணியை யெனினு நம்ப நின்பெருமை

நுண்ணிமை யிறந்தமை யறிவன்

மண்ணியன் மரபிற் றங்கிருண் மொழுப்பின்

வண்டினம் பாடநின் றாடும்

புண்ணிய மகளி ராவண வீதிப்

பூவணங் கோயில் கொண் டாயே. (பாடல் – 147)

கடுவினைப் பாசக் கடல்கடந் தைவர்

கள்ளரைமெள்ளவே துரந்து

னடியிணை யிரண்டு மடையுமா றடைந்தே

னருள்செய்வா யருள்செயா தொழிவாய்

நெடுநிலை மாடத் திரவிருள் கிழிக்க

நிலைவிளக் கலகில்சா லேகம்

புடைகிடந் திலங்கு மாவண வீதிப்

பூவணங் கோயில்கொண் டாயே. (பாடல் – 148)

செம்மனக் கிழவோ ரன்பு தாஎன்றுன்

சேவடி பார்த்திருந் தலச

வெம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானா

ரென்னுடை யடிமைதானி யாதே

யம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள

வரிவைய ரவிழ்குழற் சுரும்பு

பொம்மென முரலு மாவண வீதிப்

பூவணங் கோயில் கொண் டாயே. (பாடல் – 149)

சொன்னவின் முறைநான் காரண மு ணராச்

சூழல்புக் கொளித்தநீ யின்று

கன்னவின் மனத்தென் கண்வலைப் படுமிக்

கருணையிற் பெரியதொன் றுளதே

மின்னவில் கனக மாளிகை வாய்தல்

விளங்கிளம் பிறைதவழ் மாடம்

பொன்னவில் புரிசை யாவண வீதிப்

பூவணங் கோயில்கொண் டாயே. (பாடல் – 150)

பூவணங் கோயில் கொண்டெனை யாண்ட

புனிதனை வனிதை பாகனை வெண்

கோவணங் கொண்டு வெண்டலை யேந்தும்

குழகனை யழகெலா நிறைந்த

தீவணன் றன்னைச் செழுமறை தெரியு

திகழ்கரு வூரனே னுரைத்த

பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்

பரமன துருவமா குவரே. (பாடல் – 151)

திருச்சிற்றம்பலம்

37

திருப்பூவணம் முருகன் மீது

அருணகிரி நாதர் பாடிய திருப்புகழ்

திருப்புகழ் பாடல் எண். 550

தனத்தான தத்தத் தனதானா

தனத்தான தத்தத் தனதானா

அறப்பாவை அத்தற் கருள்பாலா

அளித்தாது வெட்சித் திருமார்பா

குறப்பாவை அற்பிற் புணர்வோனே

குலத்தேவ வர்க்கப் பரிபாலா

மறப்பாத கத்துற் றுழல்வேனோ

மலர்த்தாள்வ ழுத்தக் க்ருபையீவாய்

சிறப்பான முத்திக் கொருவாழ்வே

திருப்பூவ ணத்திற் பெருமாளே

திருப்புகழ் பாடல் எண். 551

தானனதான தானனதான தானனதான தனதான

வானவராதி யோர்சிறைமேவ மாவலியேசெய் திடுசூரன்

மார்பிருகூற தாய்விடவாரி வாய்விடவேலை விடுதீரா

கானவர்பாவை காதலனான காசணிபார தனமார்பா

காலனைமோது காலகபால காளகளேசர் தருபாலா

தேனமர்நீப மாலைவிடாத சேவகஞான முதல்வோனே

தீயகுணாதி பாவிநினாது சேவடிகாண அருள்வாயே

போனகசாலை யாதுலர்வாழ வீதிகடோறும் நனிமேவு

பூவணமான மாநகர்வாழு நாதகுகேச பெருமாளே

(காளகளேசர் ழூ விசத்தைக் கண்டத்திலுடையவர்

போனகம் ழூ அன்னம்)

திருப்புகழ் பாடல் எண். 552

தந்தத்தத் தானன தானன

தந்தத்தத் தானன தானன

தந்தத்தத் தானன தானன தனதானா

பந்தப்பொற் பாரப யோதர

முந்தச்சிற் றாடைசெய் மேகலை

பண்புற்றுத் தாளொடு வீசிய துகிலோடே

பண்டைச்சிற் சேறியில் வீதியில்

கண்டிச்சித் தாரொடு மேவிடு

பங்குக்கைக் காசுகொள் வேசையர் பனிநீர்தோய்

கொந்துச்சிப் பூவணி தோகையர்

கந்தக்கைத் தாமரை யாலடி

கும்பிட்டுப் பாடிசை வீணையர் அநுராகங்

கொண்டுற்றுப் பாயலின் மூழ்கிய

சண்டிச்சிச் சீயென வாழ்துயர்

குன்றப்பொற் பாதக்ரு பாநிதி அருள்வாயே

அந்தத்துக் காதியு மாகியு

மந்திக்குட் டானவ னானவ

னண்டத்தப் பாலுற மாமணி ஒளிவீசும்

அங்கத்தைப் பாவைசெய் தேயுயர்

சங்கத்திற் றேர்தமி ழோதிட

அண்டிக்கிட் டார்கழு வேறினர் ஒருகோடி

சந்தத்திக் காளுநி சாசரர்

வெந்துட்கத் தூளிப டாமெழ

சண்டைச்சொற் றார்பட வேவயில் விடுவோனே

தங்கச்சக் ராயுதர் வானவர்

வந்திக்கப் பேரரு ளேதிகழ்

தம்பப்பொற் பூவண மேவிய பெருமாளே

✸✸✸✸✸

பரஞ்சோதி முனிவர் அருளிய

திருவிளையாடற் புராணம்

36. இரசவாதஞ் செய்த படலம்

(கலி நிலைத்துறை)

திருப்பூவணத் தலத்தின் பெருமை

1856 வரதன் மீனவன் படையிடை வந்துநீர்ப் பந்தர்

விரத னாகிநீ ரருத்திய வினையுரை செய்தும்

பரத நூலிய னாடகப் பாவையா ளொருத்திக்

கிரத வாதஞ்செய் தருளிய வாடலை யிசைப்பாம்.

1857 பருங்கை மால்வரைப் பூழியன் பைந்தமிழ் நாட்டின்

இரங்கு தெண்டிரைக் கரங்களா லீர்ம்புனல் வையை

மருங்கின னந்தன மலர்ந்தபன் மலர்க?ய்ப் பணியப்

புரங்க டந்தவ னிருப்பது பூவண நகரம்

1858 எண்ணி லங்குறை சராசர மிலிங்கமென் றெண்ணி

விண்ணி னாள்களும் கோள்களும் விலங்குவ தியாக்கைக்

கண்ணி னான்கதிர் முதற்பல கடவுளர் பூசை

பண்ணி வேண்டிய நல்வர மடைந்தகப் பதியில்

பொன்னனையாளின் தன்மை

1859 கிளியு ளார்பொழிற் பூவணக் கிழவர்தங் கோயில்

றளியு ளார்தவப் பேறனா டாதுகு பூந்தார்

அளியு ளார்குழ லணங்கனா ளந்தரத் தவர்க்குங்

களியு ளார்தர மயக்குறூஉங் கடலமு தனையாள்

1860 நரம்பி னேழிசை யாழிசைப் பாடலு நடநூல்

நிரம்பு மாடலும் பெண்ணல நீர்மையும் பிறவும்

அரம்பை மாதரை யொத்தன ளறனெறி யொழுகும்

வரம்பி னாலவர் தமக்குமே லாயினாண் மன்னோ

1861 ஆய மாதர்பேர் பொன்னனை யாளென்ப வவடன்

நேய வாயமோ டிரவிரு ணீங்குமு னெழுந்து

தூய நீர்குடைந் துயிர்புரை சுடர்மதிக் கண்ணி

நாய னாரடி யருச்சனை நியமமு நடாத்தி

1862 திருத்தர் பூவண வாணவரைச் சேவித்துச் சுத்த

நிருத்த மாடிவந் தடியரைப் பொருளென நினையுங்

கருத்த ளாயருச் சித்தவர் களிப்பவின் சுவையூண்

அருத்தி யெஞ்சிய தருந்துவா ளமுதவ ணியமம்

1863 மாத ரிந்நெறி வழங்குநாண் மற்றவ ளன்பைப்

பூத லத்திடைத் தெருட்டுவான் பொன்மலை வல்லி

காத னாயகன் றிருவுருக் காணிய வுள்ளத்

தாத ரங்கொடுத் தருளினார் பூவணத் தையர்

1864 ஐயர் தந்தபே ரன்புரு வாயினாண் மழுமான்

கையர் தந்திரு வுருவினைக் கருவினாற் கண்டு

மைய கண்ணினாள் வைகலும் வருபொரு ளெல்லாம்

பொய்யி லன்புகொண் டன்பர்தம் பூசையி னேர்வாள்

1865 அடியர் பூசனைக் கன்றியெஞ் சாமையா லடிகள்

வடிவு காண்பதெப் படியென்று மடியிலச் செழியற்

கொடிவில் பொற்கிழி நல்கிய வள்ளலை யுன்னிப்

பிடிய னாளிருந் தாளமூ தறிந்தனன் பெருமான்

சிவபெருமான் சித்தர் வடிவம் கொண்டு வருதல்

1866 துய்ய நீறணி மெய்யினர் கட்டங்கந் தொட்ட

கையர் யோகபட் டத்திடைக் கட்டினர் பூதிப்

பையர் கோவண மிசையசை யுடையினர் பவளச்

செய்ய வேணிய ரங்கொரு சித்தராய் வருவார்

1867 வந்து பொன்னனை யாண்மணி மாளிகை குறுகி

அந்த மின்றிவந் தமுதுசெய் வாரொடு மர்கிச்

சிந்தை வேறுகொண் டடைந்தவர் திருவமு தருந்தா

துந்து மாளிகைப் புறங்கடை யொருசிறை யிருந்தார்

1868 அமுது செய்தருந் தவரெல்லா மகலவே றிருந்த

அமுத வாரியை யடிபணிந் தடிச்சிய ரைய

அமுது செய்வதற் குள்ளெழுந் தருள்கென வுங்கள்

அமுத னாளையிங் கழைமினென் றருளலு மனையார்

1869 முத்த ராமுகிழ் வாணகை யல்குலாய் முக்கண்

அத்த ரானவர் தமரெலா மமுசெய் தகன்றார்

சித்த ராயொரு தம்பிரான் சிறுநகை யினராய்

இத்த ராதலத் தரியரா யிருக்கின்றா ரென்றார்

சித்தமூர்த்தி பொன்னனையாளை மெலிந்த காரணம் யாதெனல்

1870 நவம ணிக்கலன் பூத்தபூங் கொம்பரி னடந்து

துவரி தழ்க்கனி வாயினாள் சுவாகதங் கிலாவன்

றுவமை யற்றவர்க் கருக்கிய மாசன முதவிப்

பவம கற்றிய வடிமலர் முடியுறப் பணிந்தாள்

1871 எத்த வஞ்செய்தே னிங்கெழுந் தருளுதற் கென்னாச்

சித்தர் மேனியும் படிவெழிற் செல்வமு நோக்கி

முத்த வாணகை யரும்பநின் றஞ்சலி முகிழ்ப்ப

அத்தர் நோக்கினா ரருட்கணா லருள்வலைப் பட்டாள்

1872 ஐய உள்ளெழுந் தருளுக வடிகணீர் ரடியேன்

உய்ய வேண்டிய பணிதிரு வுளத்தினுக் கிசையச்

செய்ய வல்லனென் றஞ்சலி செய்யவுண் ணகையா

மைய னோக்கியை நோக்கிமீ னோக்கிதன் மணாளன்

1873 வடியை நேர்விழி யாய்பெரு வனப்பினை சிறிதுன்

கொடியை நேரிடை யெனவிளைத் தனையெனக் கொன்றை

முடியி னானடி யாரமென் முகிழ்முலைக் கொடிதாழ்ந்

தடிய னேற்குவே றாயொரு மெலிவிலை யையா

1874 எங்க ணாயகர் திருவுருக் காண்பதற் கிதயந்

தங்கு மாசையாற் கருவுருச் சமைத்தனன் முடிப்பேற்கு

கிங்கு நாடொறு மென்கையில் வரும்பொரு ளெல்லாம்

உங்கள் பூசைக்கே யல்லதை யொழிந்தில வென்றாள்

சித்த மூர்த்திகள் சிவனடியார் பெருமை கூறல்

1875 அருந்து நல்லமு தனையவ ளன்புதித் திக்கத்

திருந்து தேனென விரங்குசொற் செவிமடுத் தையர்

முருந்து மூரலாய் செல்வமெய் யிளமைநீர் மொக்குள்

இருந்த வெல்லையு நிலையில வென்பது துணிந்தாய்

1876 அதிக நல்லற நிற்பதென் றறிந்தனை யறத்துள்

அதிக மாஞ்சிவ புண்ணியஞ் சிவார்ச்சனை யவற்றுள்

அதிக மாஞ்சிவ பூசையு ளடியவர் பூசை

அதிக மென்றறிந் தன்பரை யருச்சனை செய்வாய்

1877 உறுதி யெய்தினை யிருமையு முன்பெயர்க் கேற்ப

இறுதி யில்லவன் றிருவுரு வீகையாற் காணப்

பெறுதி யாகநின் மனைக்கிடைப் பித்தளை யீயம்

அறுதி யானபல் கலன்களுங் கொணர்தியென் றறைந்தார்

1878 ஈயஞ் செம்பிரும் பிரசிதங் மென்பவும் புணர்ப்பாற்

றோயம் பித்தளை வெண்கலந் தராமுதற் றொடக்கத்

தாயும் பல்வகை யுலோகமுங் கல்லென வலம்பத்

தேயுஞ் சிற்றிடை கொண்டுபோய்ச் சித்தர்முன் வைத்தாள்

சித்தமூர்த்திகள் இரசவாதம் புரிதல்

1879 வைத்த வேறுவே றுலோகமு மழுவுழை கரந்த

சித்த சாமிக ணீற்றினைச் சிதறினர் பாவித்

தித்தை நீயிரா வெரியிலிட் டெடுக்கினன் பொன்னாம்

அத்தை நாயகன் றிருவுருக் கொள்கென வறைந்தார்

1880 மங்கை பாகரை மடந்தையு மிங்குநீர் வதிந்து

கங்குல் வாயமு தருந்தியிக் காரிய முடித்துப்

பொங்கு காரிருள் புலருமுன் போமெனப் புகன்றாள்

அங்க யற்கணா டனைப்பிரி யாரதற் கிசையார்

1881 சிறந்த மாடநீண் மதுரையிற் சித்தர்யா மென்று

மறைந்து போயினார் மறைந்தபின் சித்தராய் வந்தார்

அறைந்த வார்கழ லலம்பிட வெள்ளிமன் றாடி

நிறைந்த பேரொளி யாயுறை நிருத்தரென்று அறிந்தாள்

பொன்னனையாள் உலோகங்களைத் தீயிலிட்டுப் பொன்னாதல்

1882 மறைந்து போயினா ரெனச்சிறி தயர்ச்சியு மனத்தில்

நிறைந்த தோர்பெருங் கவற்சியை நீக்கினா ரென்னச்

சிறந்த தோர்பெரு மகிழ்ச்சியு முடையளாய்ச் சித்தர்

அறைந்த வாறுதீப் பெய்தன ளுலோகங்க ளனைத்தும்

1883 அழல டைந்தபி னிருண்மல வலிதிரிந் தரன்றாள்

நிழல டைந்தவர் காட்சிபோ னீப்பருங் களங்கங்

கழல வாடக மானதா லதுகொண்டு கனிந்த

மழலை யீர்ஞ்சொலாள் கண்டனள் வடிவிலான் வடிவம்

(அறுசீரடி ஆசிரிய விருத்தம்)

1884 மழவிடை யுடையான் மேனி வனப்பினை நோக்கி யச்சோ

அழகிய பிரானோ வென்னா வள்ளிமுத் தங்கொண் டன்பிற்

பழகிய பிரானை யானாப் பரிவினாற் பதிட்டை செய்து

விழவுதேர் நடாத்திச் சின்னாள் கழிந்தபின் வீடு பெற்றாள்

1885 நையநு[ண் ணிடையி னாளந் நாயகன் கபோலத் திட்ட

கையுகிர்க் குறியுஞ் சொன்ன காரணக் குறியுங் கொண்டு

வெய்யவெங் கதிர்கால் செம்பொன் மேனிவே றாகி நாலாம்

பொய்யுகத் தவர்க்குத் தக்க பொருந்துரு வாகி மன்னும்

இரசவாதம் செய்த படலம் முற்றிற்று.

49.திருவாலவாய்க் காண்டம்

(வங்கிய சேகர மன்னனுக்கு மதுரையின் எல்லைகளைக் காட்டுதல்)

சித்தரை மன்னன் பணிந்து வேண்டுதல்

2338 கறையணி கண்டனைத் தாழ்ந்து கைதொழு

திறையவ நின்னருள் வலியி னிந்நிலப்

பொறையது வாற்றுவேற்கு ஈண்டிப் போதொரு

குறையதுண் டாயினது என்று கூறுவான்

2339 இத்தனை மாக்களும் இருக்கத் தக்கதாப்

பத்தனங் காணவிப் பதிக்க ணாதியே

வைத்தறை செய்திடும் வரம்பு காண்கிலேன்

அத்தமற் றதனையின் றறியக் காட்டென்றான்

2340 நுண்ணிய பொருளினு நுண்ணி தாயவர்

விண்ணிழி விமானநின் றெழுந்து மீனவன்

திண்ணிய வன்பினுக் கெளிய சித்தராய்ப்

புண்ணிய அருட்கடல் ஆகிப் போதுவார்

சித்தர் வடிவில் சிவபெருமான் அருள் செய்தல்

2341 பாம்பி னாற்கடி சூத்திரங் கோவணம் பசுந்தாட்

பாம்பி னாற்புரி நூல்சன்ன வீரம்வெம் பகுவாய்ப்

பாம்பி னாற்குழை குண்டலம் பாதகிண் கிணிநாண்

பாம்பி னாற்கர கங்கணம் பரிந்தனர் வந்தார்

2342 வந்த யோகர்மா மண்டப மருங்குநின் றங்கைப்

பந்த வாலவா யரவினைப் பார்த்துநீ யிவனுக்

கிந்த மாநக ரெல்லையை யளந்துகாட்டு என்றார்

அந்த வாளரா வடிபணிந் தடிகளை வேண்டும்

2343 பெரும விந்நகர் அடியனேன் பெயரினால் விளங்கக்

கருணை செய்தியென் றிரந்திடக் கருணையங் கடலும்

அருண யந்துநேர்ந்து அனையதே யாகெனப் பணித்தான்

உருகெ ழுஞ்சின வுரகமும் ஒல்லெனச் செல்லா

பாம்பு எல்லையைக் காட்டுதல்

2344 கீட்டி சைத்தலைச் சென்றுதன் கேழ்கிளர் வாலை

நீட்டி மாநகர் வலம்பட நிலம்படிந் துடலைக்

கோட்டி வாலைவாய் வைத்துவேற் கொற்றவற்கு எல்லை

காட்டி மீண்டரன் கங்கண் மானது கரத்தில்

மதில் அமைத்தல்

2345 சித்தர் தஞ்சின கரத்தெழுந் தருளினார் செழியன்

பைத்த வாலவாய் கோலிய படிசுவர் எடுத்துச்

சுத்த நேமிமால் வரையினைத் தொட்டகழ்ந் தெடுத்து

வைத்த தாமென வகுத்தனன் மஞ்சுசூ ழிஞ்சி

2346 தென்றி சைப்பரங் குன்றமும் வடதிசை இடபக்

குன்ற முங்குடக்கு ஏடக நகரமுங் குணபாற்

பொன்ற லங்கிழித் தெழுபொழிற் பூவண நகரும்

என்ற நாற்பெரு வாயில்கட்கு எல்லையா வகுத்தான்

2347 அனைய நீண்மதில் ஆலவாய் மதிலென அறைவர்

நனைய வார்பொழில் நகரமு மாலவாய் நாமம்

புனைய லாயதெப் போதுமப் பொன்னகர் தன்னைக்

கனைய வார்கழற் காலினான் பண்டுபோற் கண்டான்

2348 கொடிகள் நீண்மதின் மண்டபங் கோபுரம் வீதி

கடிகொள் பூம்பொழில் இன்னவும் புதியவாக் கண்டு

நெடிய கோளகை கிரீடம்வா ணிழன்மணி யாற்செய்

தடிகள் சாத்திய கலன்களும் வேறுவே றமைத்தான்

2349 பல்வ கைப்பெருங் குடிகளின் பரப்பெலா நிரப்பிச்

செல்வ வானவர் புரந்தரன் புரத்தினுஞ் சிறப்ப

மல்லல் மாநகர் பெருவளந் துளும்பிட வளர்த்தான்

தொல்லை நாட்குல சேகரன் போல்வரு தோன்றல்

திருவாலவாயான படலம் முற்றிற்று.

திருவிளையாடற் புராணம். கழுவேறிய திருவிளையாடல்

வேசமுற விருந்த கழு திரைமுடிந்த வடமின்றும்

பூசுரர்கள் பணிந்தேத்தும் பூவணநன்னகர் மருங்கிற்

காசின் மேல் விளங்கியது கழுவர் படைவீடெனவே

– செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பி. திருவாலவாயுடையார் – பாடல் எண்.50

இத்தலத்தைப் பற்றி வேறு தலங்களில் வழங்கும் தேவாரப்

பாடல்கள்

பூவண மேவும் பூவண நாதர்

பூவண நாயகி புந்திகூர் வைகை (சிவ.)

பூவணமும் புறம்பயமும் பொருந்தினானை

– ஆலம் பொழில் . திரு நா.

பூவணத்தவன் புண்ணியன் – குடமூக்கு – திருநா.

பூவணமோ புறம்பயமோ வன்றாயிற்றால் – ஆரூர். திருநா.

புகலூரும் பூவணமும் பொருந்தினான்காண் – ஆருர். திருநா.

பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தினானை – வெண்ணியூர். திருநா.

புகலூரும் பூவணமும் பொருந்தினாரும் – வெண்ணியூர். திருநா.

திருச்செம்பொன்பள்ளி திருப்பூவணம் – அதிகை. திருநா

புத்தூருறையும் புனிதனைப் பூவணத் தெம் போரேற்றை – பொது. திருநா

புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர் – பொது. திருநா

39

தனித் தேவாரப் பாடல்கள்

பொதியிலானே பூவணத்தாய் பொன்றிகழுங் கயிலைப்

பதியிலானே பத்தர் சித்தம் பற்றுவிடா தவனே

விதியிலாதார் வெஞ்சமணர் சாக்கியரென் றிவர்கள்

மதியலாதா ரென் செய்வாரோ வலிவலமே யவனே

– வலிவலம். திருஞானசம்பந்தர்

குலாவுதிங்கட்சடையான் குளிரும் பரிதிநியமம்

போற்றூரடி யார்வழி பாடொழியாத் தென்

புறம்பயம் பூவணம் பூழியூரும்

காற்றூர்வரை யன்றெடுத் தான்முடிதோ

ணெரித்தானுறை கோயிலென் றென்றுநீகருதே

– பொது. திருஞானசம்பந்தர்

கோவணமுடுத்தவாறுங் கோளர வசைத்தவாறும்

தீவணச் சாம்பர்பூசித் திருவுரு விருந்தவாறும்

பூவணக் கிழவனாரைப் புலியுரி யரையனாரை

ஏவணச் சிலையினாரை யாவரே யெழுதுவாரே

– பொது. திருநாவுக்கரசர்

பூவ ணத்தவன் புண்ணிய னண்ணியங்

காவ ணத்துடை யானடி யார்களைத்

தீவ ணத்திரு நீறுமெய் பூசியோர்

கோவ ணத்துடை யான்குட முக்கிலே

தேனார் புனற்கெடில வீரட்டமும்

திருச்செம்பொன் பள்ளி திருப்பூவணம்

வானோர் வணங்கும் மணஞ்சேரியும்

மதிலுஞ்சை மாகாளம் வரா ணாசி

ஏனோர்க ளேத்தும் வெகு ளீச்சரம்

இலங்கார் பருப்பதத்தோ டேணார் சோலைக்

கானார் மயிலார் கருமாரியும்

கறைமிடற்றார் தம்முடைய காப்புக்களே

கோவணமோ தோலோ உடையாவது

கொல்லேறோ வேழமோ ஊர்வதுதான்

பூவணமோ புறம்பயமோ அன்றா யிற்றான்

பொருந்தாதார் வாழ்க்கை திருந்தாமையே

தீவணத்த செஞ்சடைமேல் திங்கள் சூடித்

திசைநான்கும் வைத்துகந்த செந்தீ வண்ணர்

ஆவணமோ ஒற்றியோ அம்மா னார்தாம்

அறியேன்மற் றூராமா றாரூர் தானே

பொன்நலத்த நறுங் கொன்றைச் சடையி னான்காண்

புகலூரும் பூவணமும் பொருந்தி னான்காண்

மின்நலத்த நுண்ணிடையாள் பாகத் தான்காண்

வேதியன்காண் வெண்புரிநூல்மார்பி னான்காண்

கொன்னலத்த மூவிலைவேல் ஏந்தி னான்காண்

கோலமா நீறணிந்த மேனி யான்காண்

செந்நலத்த வயல்புடைசூழ் திருவா ரூரில்

திருமூலட் டானத்தெஞ் செல்வன் தானே

பொருங்கைமத கரியுரிவைப் போர்வை யானைப்

பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தி னானைக்

கரும்புதரு கட்டியையயின் னமிர்தைத் தேனைக்

காண்பரிய செழுஞ்சுடரைக் கனகக் குன்றை

இருங்கனக மதிலாரூ ரூலட் டானத்

தெழுந்தருளி யிருந்தானை யிமையோ ரேத்ததும்

அருந்தவனை அரநெறியி லப்பன் தன்னை

அடைந்தடியேன் அருவினைநோய் அறுத்தவாறே

புன்கூரார் புறம்பயத்தார் புத்தூ ருள்ளார்

பூவணத்தார் புலிவலத்தார் வலியின் மிக்க

தன்கூர்மை கருதிவரை யெடுக்க லுற்றான்

தலைகளொடு மலைகளன்ன தாளுந் தோளும்

பொன்கூருங் கழலடியோர் விரலா லூன்றிப்

பொருப்பதன்கீழ் நெரித்தருள் செய் புவனநாதர்

மின்கூருஞ் சடைமுடியார் விடையின் பாகர்

வீழி மிழலையே மேவினாரே

பொன்னிலங்கு கொன்றையந்தார் மாலை சூடிப்

புகலூரும் பூவணமும் பொருந்தி னாருங்

கொன்னிலங்கு மூவிலைவே லேந்தி னாருங்

குளிராந்த செஞ்சடை யெங் குழக னாருந்

தென்னிலங்கை மன்னவர்கோன் சிரங்கள் பத்துத்

திருவிரலா லடத்தவனுக் கருள்செய் தாரும்

மின்னலங்கு நுண்ணிடையாள் பாகத் தாரும்

வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே

புலிவலம் புத்தூர் புகலூர் புன்கூர்

புறம்பயம் பூவணம் பொய்கை நல்லூர்

வலிவலம் மாற்பேறு வாய்மூர் வைகல்

வலஞ்சுழி வாஞ்சியம் மருகல் வன்னி

நிலமலிநெய்த் தானத்தோ டெத்தானத்தும்

நிலவு பெருங் கோயில்பல கண்டால் தொண்டீர்

கலிவலிமிக் கோனைக்கால் விரலாற் செற்ற

கயிலாய நாதனையே காண லாமே

ஐந்தலைய நாகவணைக் கிடந்த மாலோ

டயன்தேடி நாடரிய அம்மான் தன்னைப்

பந்தணவு மெல்விரலாள் பாகத் தானைப்

பராய்த்துறையும் வெண் காடும்பயின்றான் தன்னைப்

பொந்துடைய வெண்டலையிற் பலிகொள் வானைப்

பூவணமும் புறம்பயமும் பொருந்தி னானைச்

சிந்தியவெந் தீவினைகள் தீர்ப்பான தன்னைத்

திருவாலம் பொழிலானைச் சிந்தி நெஞ்சே

பெரியபுராணம்

நீடுதிருப் பூவணத்துக் கணித்தாக நேர்செல்ல

மாடுவருந் திருத்தொண்டர் மன்னியஅப் பதிகாட்டத்

தேடுமறைக் கரியாரைத் திருவுடையார் என்றெடுத்துப்

பாடிசையிற் பூவணமீ தோஎன்று பணிந்தணைவார்–சுந்தரர்

மீனட்சியம்மை குறம்

கூடல்புன வாயில்கொடுங் குன்றுபரங் குன்று

குற்றாலம் ஆப்பனூர் பூவணநெல் வேலி

ஏடகமா டானைதிருக் கானப்பேர் சுழியல்

இராமேசந் திருப்புத்தூ ரிவைமுதலாந் தலங்கள்

நாடியெங்க ளங்கயற்கண் ணாண்டதமிழ்ப் பாண்டி

நன்னாடும் பிறநாடும் என்னாடதாகக்

காடுமலையுந் திரிந்து குறி சொல்லிக் காலங்

கழித்தேனென் குறவனுக்குங் கஞ்சிவாரம்மே

– குமரகுருபரசுவாமிகள்

தனிப்பாடல்

தலையி லிரந் துண்பான் தன்னுடலிற் பாதி

மலைம களுக் கீந்து மகிழ்வான்

உலையில் இருப்புவண மேனியனார் என்றாலோ

ஆம் ஆம் திருப்பூவணநாதர் திறம்

ஜமீன்தார் ஒருவர் (பெயர் குறிப்பிடப்பெறவில்லை) இப்பாடலின் முதல் இரண்டு அடிகளை மட்டும் பாடிவிட்டுப் பாடலை முடிக்காமல் நிறுத்தி விட்டார். அப்போது அவர் வீட்டில் களவு செய்யச் சில கள்வர்கள் வந்திருக்கின்றனர். வருமையின் காரணமாகப் பொருள் வேண்டிய “புலவர் மருதூரந்தாதி தலைமலைகண்டதேவர்” என்பவர் கள்வர்களுக்குத் துணையாக வந்திருக்கிறார். ஜமீன்தாரின் பாடல் பாதியில் நின்றதைக் கேட்ட புலவர். மூன்றாவது வரியைப் பாடியுள்ளார். உடனே ஜமீன்தார்

நான்காவது வரியைப் பாடிப் பாட்டை முடித்துள்ளார். இவ்வகையில் கள்வர்களைக் களவு செய்யவிடாமல் தடுக்கும் வகையிலும். ஜமீன்தாரின் பாடல் நிறைவு பெறும் வகையிலும். புலவர் செயலாற்றியுள்ளார். இதனைப் பாராட்டிய ஜமீன்தார் அவருக்குப் பரிசுகள் வழங்கி வழியனுப்பி வைத்துள்ளார். – அடிகளாசிரியர். சரசுவதி மகால் வெளியீடு. எண் 126. தஞ்சாவூர். 1968.

நன்றியுரை

இந்நூலாக்கத்திற்கு என்னை நெறிப்படுத்திய எனது ஆசான் அமரர் முனைவர் இரா.பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும். நல்லாசிகள் வழங்கி என்னை அருள்நெறிப்படுத்திய சென்னை “குமுதம்Пஜாதிடம்” ஆசிரியர் உயர்திரு.A.ஆ.ராஜகோபாலன் அவர்களுக்கும். நான் கார்ம் போதெல்லாம் என்கையில் ஆன்மிகம் தொடர்பான புத்தகங்களைக் கொடுத்து படிக்கச் செய்து என்னை நல்லாற்றுப்படுத்திய காரைக்குடி பேராசிரியர். தே.சொக்கலிங்கம் அவர்களுக்கும். இப்புத்தகம் சிறப்பாக வெளிவர தேவையான தகவல்களைத் தந்து உதவிய ஸ்தானிகர்கள் திரு.தெய்வசிகாமணி பட்டர்.

திரு.சுப்பிரமணியன் பட்டர். திரு.செண்பகப் பட்டர் அவர்களுக்கும். புகைப்படங்கள் எடுப்பதில் உதவிய என்தங்கை திருமதி.மு.கலையரசி அவர்களுக்கும். தட்டச்சு செய்வதில் உதவிய என் உடன்பிறவாச் சகோதரி சபா.கீதா (கண்காணிப்பாளர். அழகப்பா பல்கலைக்கழகம்) அவர்களுக்கும். பிழைத் திருத்தத்தில் உதவிய பேராசிரியர்



முனைவர்.ஞ.இராசாராம் மற்றும் பல்கலைக்கழக உதவிப்பதிவாளர் திரு.க.பழனியப்பன் அவர்களுக்கும். நூலை அச்சிட்டு வெளியிடப் பணஉதவி வழங்கிய திருப்பதி தேவஸ்தானத்திற்கும். நூலை வெளியிடத் துணைசெய்த சிவகங்கை தேவஸ்தான மேலாளர் திரு.பா.இளங்கோ மற்றும் தேவஸ்தான அலுவலர்கள் அனைவருக்கும். இந்நூலை வெளியிடப் பெரிதும் உதவி செய்த பேராசிரியர். முனைவர். ரெ.சந்திரமோகன் அவர்களுக்கும். திரு.சுப.லெட்சுமணன். திரு.தி.கண்ணன் மற்றும் பல்கலைக்கழகத் தொலைபேசி இணைப்பாளர் திரு.செ.கருணாநிதி அவர்களுக்கும். எனக்குப் பலவகையிலும் உதவியாய் இருந்த என்னுடன்

பணியாற்றும் அனைத்து சகோதர சகோதரிகளுக்கும். எனது உடன்பிறந்த தம்பி திரு.கா.சுந்தரபாண்டியன் (காவல்துறை) அவர்களுக்கும். இந்நூலை அச்சிடத்தேவையான தொகையைக் கடனாக வழங்கி உதவிய அழகப்பா பல்கலைக்கழக வளாக இந்தியன்வங்கி நிர்வாகத்தினருக்கும். இந்நூலைச் சிறப்பான முறையில் அச்சிட்டு உதவிய காரைக்குடி _ லெட்சுமி அச்சகத்தாருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலை வெளியிடுவதற்கான என் உழைப்பில் சரிபாதி எனது மனைவி நாகலெட்சுமியையும் மறுபாதி என்மகள் நித்யாவையும் சேரும்.

இவர்கள் அனைவரும் திருப்பூவணநாதர் திருவருளால் அனைத்து நலன்களையும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

(கி. காளைராசன்)

41

இந்நூலாசிரியரின் பிற கட்டுரைகள்

இந்நூல் ஆசிரியர் கி. காளைராசன் அவர்களது படைப்புகளை ஆன்மிகம். ஆன்மிக அறிவியல் மற்றும் திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இவரது முதல் நூல் திருப்பதி தேவஸ்தானத்தின் நிதியுதவி பெற்று அச்சிடப்பட்டு 24-09-2007 அன்று தவத்திரு குன்றக்குடிப் பொன்னம்பல அடிகளார் அவர்களால் திருப்பூவணநாதர் திருக்கோயிலில் வைத்து வெளியிடப்பெற்றது.

நூல் தலைப்பு

திருப்பூவணக் காசி– திருப்பூவணம் திருக்கோயில் அமைப்பும் சிறப்பும். திருக்கோயில் தொடர்பான பாடல்கள். பொருள் மற்றும் திருப்பூவணமானது எவ்வாறு. காசியிலும் சிறந்தது என்பதற்கான விளக்கங்கள் உள்ளன.

இக் கட்டுரைகள் தினபூமி. தினமலர். மஞ்சரி. தமிழ் மாருதம். செந்தமிழ்ச் செல்வி. ஓம்சக்தி. மெய்கண்டார். கண்ணியம் ஆகிய இதழ்களில் வெளிவந்துள்ளன.

வரிசை எண் கட்டுரைத் தலைப்பு கட்டுரையின் பொருள்

ஆன்மிகக் கட்டுரைகள்

1 ஐயாவிடம் சொல்லிவிட்டேன் அவர் பார்த்துக்கொள்வார் காரைக்குடி–கோட்டையூர் அருகில் உள்ள வேலங்குடி கிராமத்தில் வீற்றிருந்து அருளும் _ சொற்கேட்ட விநாயகரின் திருவருள் பற்றியது

2 என்பிழை பொறுப்பாய் எம்மானே திருப்பூவணத்தில் சிவபெருமான் பார்வதி தேவிக்கு வரம் அருளியது

3 பாவம் போக்கும் பூவணம் திருப்பூவணத்திருத்தலத்தின் பெருமைகள் குறித்து

4 சித்தர் வடிவில் சிவபெருமான்36வது திருவிளையாடற் புராணம் – சித்தர் வடிவில் சிவபெருமான் திருப்பூவணத்தில் எழுந்தருளி இரசவாதம் செய்தருளியது

5 ஆற்றின் குறுக்கே 1008 லிங்கம் திருப்பூவணத்தில் திருக்கோயில் எதிரே ஓடும் வைகை ஆற்றில் லிங்கங்கள் புதையுண்டிருப்பது பற்றிய கட்டுரை

6 கல்லா? கடவுளா? கல்லால் ஆன வடிவங்கள் எப்படிக் கடவுள் போன்று செயல்பட முடியும் என்பதற்கான விளக்கம்

7 சாமி என்ன சாப்பிடவா செய்கிறார்? கடவுளுக்குப் படைக்கப்படுபவை அவரை எவ்வாறு சென்றடைகின்றன என்பதற்கான விளக்கம்

ஆன்மிக அறிவியல் கட்டுரைகள்

8 சிவனும் பெருமாளும் ACயும் DCயும் இறைவடிவங்களும் மின்சாரத்தின் வடிவங்களும் ஒன்றாய் உள்ளன என்று விளக்கும் கட்டுரை

9 ஆடல்வல்லானே அறிவியல் இறைவன் தனி ஊசல்

விதிகளுக்கு ஏற்ப ஆடல்வல்லானின் (நடராசரின்) ஆட்டம் உள்ளது என்ற விளக்கக் கட்டுரை

10 விஞ்ஞானத் தொலைகாட்சிப்பெட்டியும் மெய்ஞ்ஞானக் கோயில்களும்

தொலைக்காட்சிப் பெட்டியில் உள்ள காட்சிக் குழாயின் (Picture Tube) வடிவமும் செயலும். நடராசரின் வடிவத்துடனும் செயலுடனும் ஒற்றுமையாய் இருப்பதை விளக்கும் கட்டுரை

திருக்குறள் ஆய்வுக் கட்டுரைகள்

11 வள்ளுவரும் வாஸ்துவும் திருக்குறளின் பாயிர அதிகார அமைப்பு முறையானது வாஸ்து இலக்கணப்படி உள்ளது என்பதை விளக்கும் கட்டுரை

12 திசைதெய்வங்களைத் தொழும் திருவள்ளுவர் திருக்குறளின் முதல் நான்கு அதிகாரங்களும் திசை தெய்வங்களை வணங்கி எழுதப்பெற்றுள்ளன என்பதை விளக்கும் கட்டுரை.

13 ஆனை முகத்தானே(னோ) ஆதிபகவன் முதற் குறளில்

குறிப்பிடப்பெற்றுள்ள "ஆதிபகவன்" என்பது விநாயகப் பெருமானையே குறிக்கும் என்பது பற்றியது

14 குறளிலும் சோதிடம் இராகு. கேது இவற்றின் சோதிட அமைப்பில் ஐந்தாவது குறள் எழுதப்பட்டுள்ளது என்பதை விளக்கும் கட்டுரை

15 திருக்குறளில் சனீஸ்வரர் வழிபாடு வேண்டுதல் வேண்டாமை இல்லாதவர் யார்? என்பது பற்றிய விளக்கம்

16 குறள் கூறும் இறைவன் பத்தாவது குறளில் கூறப்பெற்றுள்ள இறைவன் அனந்த சயனப் பெருமாளாகும்.



பொன்னையாள் கிள்ளியதால் கன்னத்தில் உண்டான நகக்குறியுடன்

அருள்மிகு

மின்னம்மை சமேத அழகிய நாயகர்

“பூமிக்கும் முந்தியவர் பூவணநாதர்

ஆற்றுக்கும் முந்தியவ அழகுமீனா“